# மலேசிய முழக்கம்

முனைவர் மு.தமிழ்க்குடிமகன்



தமிழ்மண் பதிப்பகம்

# மலேசிய முழக்கம்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
(மேனாள் சட்டப்பேரவைத் தலைவர்,
மேனாள் தமிழ் ஆட்சிமொழி அமைச்சர்)

தமிழ்மண் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **மலேசிய முழக்கம்** |
| ஆசிரியர் | : | **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** |
| முதற் பதிப்பு | : | 2003 |
| மொழி | : | தமிழ் |
| மொத்தப் பக்கங்கள் | : | 184 + 8 = 192 |
| நூல் அளவு | : | 1/8 தெம்மி |
| தாளின் தன்மை | : | 18.6 கி. மேப்லித்தோ தாள் |
| பொருள் | : | சொற்பொழிவுகள் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளிகள் |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 90/- |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | பிரேம் |
| அச்சிட்டோர் | : | Prompt Offset Printers<br>34, திப்புத் தெரு,<br>சென்னை - 600 014 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | **கீழையியல் ஆய்வு நிறுவனக் கல்வி அறக்கட்டளை சார்ந்த தமிழ்மண் பதிப்பகம்,**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர்,<br>சென்னை - 600 017,<br>தொலைபேசி : 24 33 9030. |

# சுவடிச் சுவை

## (புலவர் இரா. இளங்குமரன்)

**'மலேசிய முழக்கம்'** என்னும் இச் சுவடி பொழிவுச் சுவடி. நுவன்று நுவன்று வரப் பெற்ற வளமே நூல் (நுவல் > நூல்). அவ்வகையில் முனைவர் திருமிகு **தமிழ்க்குடிமகனார்** மலையகத்தில் ஆற்றிய பொழிவுகள் ஒன்பதை உள்ளடக்கியது இச் சுவடி. 26.11.02 முதல் 6.12.02 வரை அவரால் பொழியப்பட்டவை.

தமிழ்க்குடிமகனார், தம் பெயர் **'சாத்தையா'** என்னும் தனித்தமிழ்ப் பெயராக இருந்தும், தமிழுணர்வை வெளிப்பட உணர்த்தும் வகையில் பெயர் மாற்றம் செய்து கொண்டவர். தம் பெயர் போலவே தம் உணர்வு குன்றாமல் வாழ்ந்து வருபவர்.

பயிலும் காலத்திலேயே **பாவாணர்** மேல் பற்றுமை கொண்டு தம் மொத்த உணர்வாளரொடு தமிழியக்கமாக இயங்கி, **உ.த.க. அமைப்பு** உருவாகிய நாளில், அதன் பொறுப்பில் சிறந்து உ.த.க. வரலாற்றில் முத்துப் பதித்த முதல் மாநாட்டை அரசியல் மாநாடும் கொள்ளாப் பொலிவுடன் நடத்திக் காட்டி, பாவாணரால், 'இவர் எதிர்கால அமைச்சர்' என்னும் புகழ்ப் பட்டயம் பெற்றவர்.

பேராசிரிய நிலை, முதல்வர் நிலை, அமைச்சர் நிலை, சட்டமன்றத் தலைவர் நிலை என, எந்நிலையாயினும் தமிழ்நிலையில் ஒருநிலை கொண்டு திகழ்பவர்.

பாவாணர் நூல் வெளியீட்டு அறிமுக வகையால் சென்றவர் 'வினையால் வினையாக்கிக்' கொண்ட வகையால் பொழிந்தவை இவை.

தமிழ்க்குடிமகனாரைத் தெரிந்தவர் நெருங்கியவர் பொழிவு கேட்டவர் ஆயோரெல்லாம், அவர், தம் முன்நின்று பொழிவு செய்வதாகவும், தாம் கேட்பதாகவும் உணர்வு கொள்ளும் வகையில் அமைந்த பொழி வுரைகள் இவை.

இலக்கிய வல்லார் எய்துதற்கரிய வாய்ப்பு, தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ் - கலை - பண்பாட்டுத்துறை, அறநிலையத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன, பாவாணர் அகர முதலி இயக்ககத் துறைகள் ஆகியவற்றின் ஆளுமையால் பெற்றவையாகிய பட்டறிவு ஆகும். அது, இப் பொழிவுகளில் செய்திகளாகவும் புள்ளி விளக்கங்களாகவும்

பொலிவுறுகின்றன. அவர் ஆழங்கால் பட்ட பட்டிமன்றப் பாணியும் ஆங்காங்குப் பளிச்சிடுகின்றன.

பாவாணர் நூல்கள் வெளியீட்டு அறிமுகம், பாவாணர் வரலாற்றொடு இணைத்துப் போற்றத் தக்கது. செயற்கரிய செய்த செம்மல் **இளவழகனார்** பணிநலப் பட்டயம் ஆவது.

**பாவாணர், பாவேந்தர், பாரதியார்** ஆகிய மூவரும் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் இணையிலா இடம் பெறுபவர்கள். இவர்களை இணைத்து நோக்கல் எதிரது போற்ற உதவும்.

நெஞ்சை யள்ளும் **சிலம்பும், இலக்கிய இன்பங்களும்** சுவை நலப் பொழிவுகள்.

**தமிழன் எப்படிக் கெட்டான்** - 'பாவாணர் கண்டது, கொண்ட' தாகிய பொழிவு. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில், ஆசிரியப் பணி குறித்த பொழிவு, இடத்தொடு தகவு. இலக்கிய ஒப்பீடு, குடும்ப விளக்கு, உவமை, புதுக் கவிதை, நூலகம், பயிற்றுமொழி இன்னவை எல்லாம் எண்ணியமை செவ்விது.

**'போகிற போக்கில்'** என்னும் பொழிவில் வரும், இணையச் செய்தி, இசுரேலியர் தம் மொழி மீட்டெடுப்பு என்பவை எண்ணிப் பார்த்துச் செயல்பட ஏவும் நயத்தக்கவை.

கட்டுரைத் தொகுப்பு பொழிவுத் தொகுப்பு என்பவற்றில் தவிர்க்க முடியாத ஒன்று கூறியது கூறல். தனிமையில் இனிமையாகத் தோன்றும் அம் மீட்சி, தொகைப்படும் போது ஓரிடத்து ஒரு நேரத்துத் தோற்றம் தருதலால் 'மீளல்' தெரிகின்றது. அஃது இயற்கை.

எளிமை, இனிமை, அருமை, ஆய்வு என்பவை, தமிழ்ம்மையாய்த் திகழும் பொழிவுத் தொகை இது. இன்பமே சூழ்க.

திருவள்ளுவர் தவச்சாலை,
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிமாவட்டம் - 620 101.

**இரா. இளங்குமரன்,**

# நூலாசிரியர் முன்னுரை

1977ஆம் ஆண்டு முதல் மலேசிய நாட்டுக்குப் பலமுறை சென்று வந்துள்ளேன். என் தந்தையாரும் ஈப்போவில் இருந்தவர். இப்போதும் என் ஊர்க்காரர்கள் பலரும் மலேசிய நாடு முழுவதிலும் பல இடங்களில் பணிபுரிகின்றார்கள் என்றாலும் உறவுகளுக்கு அப்பால் நட்பு நிலையிலும் தமிழ் சார்ந்த உணர்வு நிலையிலும் சிறப்பான வாய்ப்புகளை அண்மைக் காலங்களில் நான் பெற்றேன் என்பது பெருமைக்குரியது; மகிழ்ச்சிக்குரியது.

கடந்த ஆண்டில் மலேசிய நாட்டின் ம.இ.கா.வின் தேசியத் தலைவரும், தமிழ்மக்களின் தலைவரும், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சருமான **டத்தோஸ்ரீ சாமிவேலு** அவர்கள் மலேசியாவுக்கு வரவழைத்து, என்னால் எழுதப்பட்ட **'பாவாணரும் தனித்தமிழும்'**, **'காலமெனும் காட்டாறு'** எனும் இருநூல்களையும் வெளியிட்டுச் சிறப்புச் செய்தார்கள். என் வாழ்நாளில் என் நூல்களுக்காக இவ்வளவு பெரிய சிறப்பினை நான் என்றும் பெற்றதில்லை. வாழ்நாளில் மறக்கப்பட முடியாத மாமனிதராக டத்தோஸ்ரீ அவர்கள் என்றும் நெஞ்சில் நிலைத்து வாழ்கிறார்.

அந்த நேரத்திலேயே டத்தோ சோமசுந்தரம் அவர்களும் டத்தோ சிவலிங்கம் அவர்களும் கோலாலம்பூரிலும், கிள்ளானிலும் சிறப்புரை யாற்ற வைத்துச் சிறப்புச் சேர்த்தனர்.

1977, 1981, 1985 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு முறையும் கோடை விடுமுறையில் சென்று 25க்கு மேற்பட்ட இடங்களில் இலக்கிய உரை ஆற்றியதுண்டு. 1987இல் உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் தலைமை யேற்றும், நாட்டில் சில இடங்களில் பேசியும் மகிழ்ந்ததுண்டு.

ஆனால் 2002ஆம் ஆண்டில் டத்தோஸ்ரீ தந்த வாய்ப்பு எல்லா வற்றையும் விஞ்சி நின்றது. சில மாதங்கள் சென்றபின் பாவாணரது நூல் களை வெளியிட டத்தோஸ்ரீ நாள் கொடுத்திருந்தார். பாவாணரால் எழுதப் பட்டு இதுவரை வெளிவாராதவற்றைத் தொகுத்து 15 நூல்களாக நண்பர் இளவழகன் வெளியிட்டிருந்தார். இதுவரை யாரும் செய்யாத பணியினை இவர் செய்துவிட்டார். தமிழ்நெறிக் கழகத்தின் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட தோழர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். அந்த விழாவில் நான் சிறப்புரையாற்ற வேண்டும் என விரும்பினர். மேலும், கோலாலம்பூரில் மட்டுமின்றி, மலேசியாவின் பிற ஊர்களிலும் கூட்டங்கள் நடத்தி, பாவாணர் நூல்களை வெளியிட வேண்டும் என்றும் விரும்பினர்.

அத்தகைய இடங்களில் யாராவது ஒருவர் வெவ்வேறு தலைப்புகளில் சிறப்புரையாற்றுவதே தகும் என்று முடிவு செய்தனர். டத்தோஸ்ரீ அவர்களின் ஒப்புதலோடு திருமாவளவன் அணியினர் என்னை வரவழைக்க விரும்பினர். அதனை ஏற்று நானும் இளவழகனும் நவம்பர்-திசம்பர் (2002) மாதங்களில் மலேசியா சென்றோம். அங்கே பேசிய பேச்சுகளை அப்படியே ஒலிநாடாச் செய்து இங்கே வந்து நூலாக்கித் தந்த பெருமை மறுபடியும் இளவழகனுக்குத் தான் சேரும்.

எனக்கு ஒரே ஒரு வருத்தம்: ஆழ்ந்த துயரம் என்று கூடச் சொல்லலாம். இந்த நூல்களை வெளியிட ஈப்போ நகரம் முன்வரவில்லை. **'பாவாணர் தமிழ் மன்றம்'** இருந்து வெள்ளி விழாக் கொண்டாடிய ஈப்போவில் இந்த நிலை. பாவலர் குறிஞ்சிக் குமரனும், புரவலர் வேதநாயகமும் மறைந்து போன பின் மன்றமும் காணாமல் போய்விட்டது. அ.கி. டேவிட் போன்றவர்கள் இருந்தும் இந்த நிலை. அந்த இரண்டு பேரும் இருந்திருந்தால்......? பெருமூச்சு விட்டுக் கொண்டேன். ஆனால் திருமாவளவனும், பழ.வீரன், தமிழ்வாணன் ஆகியோரும் மற்ற இடங்களில் அக்குறையில்லாமல் பார்த்துக் கொண்டனர்.

குரோவில் இருந்தபோது எதிர்பாராமல் தாய்லாந்து நாட்டுக்குள் சென்று வந்தது மகிழ்வாக இருந்தது. ஆனால் குரோவில் ஓர் இடரும் நேர்ந்தது. அது குறித்து என் பேச்சிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். என்ன செய்வது! பொறுமையுடன் நடந்து கொள்ள நேர்ந்தது. மற்றோர் நாடு. அங்குள்ள நண்பர்கட்கும் இடர் வந்துவிடக்கூடாதே!

பல இடங்களில் தமிழர்களின் பொதுவான வரலாற்றினை எடுத்துக் கூறியுள்ளேன். தமிழன் எப்படிக் கெட்டான் என்பதனைச் சூடு பறக்க எடுத்துரைக்க முடிந்தது. வெவ்வேறு ஊர்களில் பேசியதாலும், சுவையான சில செய்திகள் சொல்லப்பட வேண்டும் என்பதாலும் ஒரு சில செய்திகள் மட்டும் திரும்ப வந்துள்ளன. அன்பர்கள் பொறுத்தருள வேண்டும். பாவேந்தரின் குடும்பவிளக்கு, புரட்சிக்கவி, சிலம்பில் சில இடங்கள், புறநானூற்றில் ஒன்றிரண்டு இடங்கள் திரும்ப வந்திருக்கும்.

இந்த நூல் எழுத்து நடையில் இல்லாமல், பேச்சு நடையில் அமைந்திருப்பதைக் காணலாம். 'நூலைப் படிக்கிறோம்' என்று எண்ணாமல் 'பேச்சைக் கேட்கிறோம்' என்ற எண்ணத்தோடு புரட்டுங்கள். வேகமாகப் பேசுவதால் சில இடங்களில் முழுவிளக்கமும் அளிக்க முடியாமல், செய்தி தாண்டிச் சென்றிருக்கும்.

பாவாணர் நூல்கள் விற்பனையாவதற்கு என் 'உரை' ஏற்பாடு பெரிதும் பயன்பட்டது என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். கூட்டங்களை ஏற்பாடு செய்த தமிழ்நெறிக் கழகம் எந்த அளவுக்கு வேரூன்றியுள்ளது என்பதனை, கோலாலம்பூர், செலாமா, குரோ, சோகூர்பாரு போன்ற இடங்களில் பார்த்தபோது 'தமிழ் உணர்வு' மேலோங்கி நிற்பதை எண்ணிப் பெருமை கொண்டேன். அவர்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

வழக்கம் போல் இந்த நூலை உருவாக்கி, தமிழ் மக்களுக்குத் தந்த நண்பர் இளவழகனுக்கும், அவர் தம்பி அரங்கராசனுக்கும் உருவாக்கிய **தமிழ்மண்** பதிப்பகத் தோழர்கட்கும் முகப்போவியம் உருவாக்கிய தம்பி பிரேமுக்கும் என் நன்றி உரியது.

மலேசியாவுக்குச் சென்றுவந்த ஒருவர், பாவாணர் மீது பற்றுடைய ஒருவர் என்னை உணர்ந்த ஒருவர் இந்த நூலுக்கு அணிந்துரை எழுத வேண்டும் என்று கருதினோம். திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவி, உண்மையில் ஒரு துறவியாக, தவமுனிவராக, என்றும் தமிழுணர்வை மட்டும் துறக்காதவராக விளங்கும் புலவர் இரா. இளங்குமரன் அவர்கள் இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியிருப்பது சாலப் பொருத்தமாகும். அவர்க்கு என் நன்றி

தி.பி. 2034, ஆடவை, 24 அன்பன்
(8.7.2003) **மு. தமிழ்க்குடிமகன்**

---

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | ...... | i |
| நூற்குறிப்பு | ...... | ii |
| சுவடிச் சுவை | ...... | iii |
| நூலாசிரியர் முன்னுரை | ...... | v |
| பதிப்புரை | ...... | viii |
| **நூல்** | | |
| 1. பாவாணர் நூல்கள் வெளியீடு - அறிமுக உரை | ...... | 1 |
| 2. நெஞ்சையள்ளும் சிலம்பு | ...... | 21 |
| 3. பாவாணரும் பாவேந்தரும் | ...... | 41 |
| 4. நமது இலக்கியம் | ...... | 67 |
| 5. தமிழன் எப்படிக் கெட்டான்? | ...... | 88 |
| 6. ஆசிரியப் பணி | ...... | 113 |
| 7. பாரதியும் பாவேந்தரும் | ...... | 126 |
| 8. போகிற போக்கில் | ...... | 145 |
| 9. இலக்கிய இன்பம் | ...... | 169 |

# பதிப்புரை

சோழப் பெருவேந்தன் இராசேந்திர சோழன் கொடியூன்றிய மண்ணில், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு மன்றம் கண்ட மண்ணில், திரைகடல் ஓடியும் திரவியம் தேடச் சென்ற மண்ணில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழர் தலைவராகவும் அமைச்சராகவும் இருக்கின்ற பெருமகன் **டத்தோஸ்ரீ சாமிவேலு** அவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் இக்கால வேளையில், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் பேரறிஞர் பாவாணர் நூற்றாண்டு நினைவாக நூல்கள் வெளியிட்டமையால் மலையக மண்ணில் காலடி வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தின் தேசியத் தலைவர் அருமை இளவல் **திருமாவளவன்** உள்ளிட்ட இயக்கப் பொறுப்பாளர்களை சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் வாய்ப்பும் கிடைத்தது என் வாழ்நாளில் என்றும் பசுமையான நினைவுகளாகும். பாவாணர் நூல்கள் வெளியீட்டு விழாவில், தமிழ்நெறிக் கழகத்தின் தேசியத் தலைவர் திருமாவளவன், பழ.வீரன், தமிழ்வாணன், தமிழழகன், இளம்பாரி, கணலன், வீ. பூங்குன்றன், முகிலன், தமிழ்ப் பண்பகத்தின் தலைவர் மணி. வெள்ளையனார் உள்ளிட்ட பலரும் மலையகத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்கள் மேன்மையடைவதற்கு தங்களின் முழுப் பொழுதையும் செலவிட்டு உழைப்பது கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து போனேன்.

தமிழ் நாகரிகத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க் கலையையும், தமிழ் இசையையும் உயிரென ஓம்பும் இத் தமிழ் நெஞ்சங்களை என்றும் மறவேன். பாவாணர் நூல்கள் வெளியிட்டதற்காக அவர்கள் தங்கள் குடும்பத்தில் ஒரு தலைவராக என்னை ஏற்றுக் கொண்டு எனக்குக் காட்டிய அன்புக்கும் செய்த உதவிக்கும் எப்படி நன்றிக் காட்டப் போகிறேனோ?

பாவாணர் நூல்களின் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு டத்தோ அவர்கள் விழா மேடையிலேயே எனக்கு நிதியுதவி அளித்து என்னை நெகிழச் செய்ததற்கு நன்றியுடையேன். இந் நூலாசிரியரும் யானும் மலேசிய மண்ணில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டோம். தொலைநோக்குப் பார்வையும், கொள்கையில் தெளிவும், செயலாற்றும் வேகமும் மிக்க இப் பெருமகனோடு பலநாள்கள் ஒன்றாக இருப்பதற்குக் கிடைத்த வாய்ப்பு என் வாழ்நாளில் பெறற்கரிய பேறாகக் கருதுகிறேன்.

நூலாசிரியர் பல்வேறு நிகழ்வுகளில் எந்தத் தயாரிப்புமின்றி தமிழ்மொழியின் ஆழ அகலங்களையும் தமிழ் இனத்தின் பண்டைய பெருமையையும் கேட்டவர்கள் நெகிழும் வண்ணம் ஆற்றிய உரையை நூலாக்கி எம் **தமிழ்மண் பதிப்பகம்** வெளியிட்டுள்ளது. தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்க்கும் இந் நூலினைத் தமிழர்கள் படிப்பார்களாக!

**கோ. இளவழகன்**

# 1

# பாவாணர் நூல்கள் வெளியீடு

## அறிமுக உரை

## கோலாலம்பூர் - 26.11.2002

இந்த இனிய நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருக்கும் அருமை நண்பர் திருமாவளவன் அவர்களே! நூல்களை வெளியிட்டுச் சிறப்புரையாற்று வதற்காக வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர், வணக்கத்திற்கும், பெரு மதிப்புக்கும், பாராட்டுதலுக்கும் உரிய டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களே! இங்கே வருகை தந்திருக்கின்ற அருமைக்குரிய வீரசிங்கம் அவர்களே! அன்புக்குரிய சரவணன் அவர்களே! பாவாணருடைய நூல்கள் தொடக்க காலத்தில் வெளி வருவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்த சிங்கப்பூரைச் சார்ந்த அருமை நண்பர் கோவலங்கண்ணன் அவர்களே! முன்னிலை ஏற்றிருக்கின்ற இளம்பாரி அவர்களே! மணி வண்ணன் அவர்களே! மற்றும் இங்கே பங்கு பெற்றிருக்கின்ற வீரன் அவர்களே! தமிழ்வாணன் அவர்களே! மற்றும் வருகை தந்திருக்கின்ற பெருமக்களே!

கடந்த முறையும் இங்கே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த போது அப்போது "பாவாணரும் தனித்தமிழும்" என்ற என்னால் எழுதப்பட்ட நூலையொட்டி என்னுடைய கருத்துகள் அமைந்திருந்தன. இப்போது பாவாணருடைய நூல்கள் மட்டும் வெளியிடப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில், அதிலும் அவர்கள் சொன்னதைப் போல, இந்த வலதுகைப் பக்கம் இருக்கின்ற நூல்கள் அனைத்தும் சிறிய விலையிலும் பெரிய விலையிலும் - சிறிய நிலையிலும் பெரிய நிலையிலும், இடைவெளி விட்டு விட்டும் - இடர்களைத் தொட்டுத் தொட்டும் பாவாணரால் வெளியிடப் பட்டவை. எனவே, அவருடைய வறுமைக்கும் வாழ்வுக்கும் இடையிலே திண்டாடித் திண்டாடி - திணறிப்போய் வெளிவந்த நூல்கள் இவை யெல்லாம். (இவையல்ல - முன் பதிப்பெல்லாம்) அவருடைய மறைவுக்குப் பின்னால் அவருக்குப் பலரும் சிறப்புச் சேர்த்தார்கள். இதிலே எந்த அரசும் பின்வாங்கவில்லை. மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கியது மட்டுமல்லாமல், அவர்களுடைய பெயரிலேயே "தேவநேயப் பாவாணர் நூலகம்" என்பதை மைய நூலகத்திற்கு வைத்தார்கள். 1981 இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்புரையாற்றுவதற்கு இவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

முதல்வராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் நான் அமைச்ச ராக இருந்த நேரத்தில் பாவாணருடைய நூல்களை நாட்டுடைமையாக்கி

னார். அதுமட்டுமன்று 8.5.1974 இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்ற அமைப்பைத் தொடங்கி, அதற்குப் பாவாணரை இயக்குநராக்கினார்.

தற்போது முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பாவாணருடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவித்து - அவர் பிறந்த சங்கரன் கோயிலிலும், சென்னையிலும் மிகச்சிறப்பாக விழாக்களைக் கொண்டாடினார்கள் என்பது மட்டுமல்லாமல், முதன்முறையாக, என்னைக் கேட்டால் தமிழகத்தில் நூலகங்கள் தொடங்கப்பட்ட பிறகு, ஒருவருடைய நூல்கள் ஒரே நேரத்தில் 1500 படிகள் வாங்கப்பட்டன என்பது பாவாணருடைய நூல்களுக்கு மட்டும் தான். இதை இந்த அரசு செய்திருக்கிறது. அதற்காக நம்முடைய இளவழகன் அவர்களுக்கு ரூ20 இலட்சம் வரைக்கும் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, யாரும் யாருக்கும் குறைவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள் என்பதுதான் பாவாணருக்குரிய சிறப்பு.

இங்கே இருக்கின்ற அமைச்சர் டத்தோ அவர்களுக்கு மிகவும் நெருக்கம் பாவாணர். எங்களுக்குள் நெருக்கமிருந்தது தெரிந்த ஒன்று. காரணம், அவர் இறந்துபோனபிறகு அவருடைய இறுதிக் கடன் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பெருமைப் படுத்தியவர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள். தமிழில் ஈடுபாடு கொண்டவர் என்பது மட்டுமன்று; தமிழினுடைய மேம்பாடு கருதி உழைக்கின்ற - இந்த மண்ணில் உழைத்த தலைவராக விளங்குகிற டத்தோஸ்ரீ அவர்கள் இந்த நூல்களை வெளியிடுவது என்பதைவிடச் சிறப்பு பாவாணருக்கு வேறு எதுவும் இருக்காது. அப்படிப்பட்ட நிலையில் பாவாணருடைய நூல்களை இன்றைக்கு இளவழகன் வெளியிடுகிறார் என்று சொன்னால், ஒப்பிட்டுப் பார்த்துச் சொன்னால் தான் அதனுடைய பெருமை உங்களுக்குத் தெரியும்.

1969 இல் நாம் உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் பரமக்குடியில் மாநாடு நடத்தியபோது, நம்முடைய நண்பர் திருமாவளவன் சுட்டிச் சொன்னதைப்போல் அப்போது பேச்சாளர்களுக்கே வழிச் செலவுத் தொகை ரூ50/- தான் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அந்தக் காலகட்டத்தில் ரூ.5,500/- செலவில் 63 பேச்சாளர்கள் பேசியிருக்கின்றார்கள். 5500 ரூபாயில் 63 பேச்சாளர்கள். அப்படியானால் நாங்கள் வெளியிட்ட நூல்களின் நிலை எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் உய்த்துணரலாம். இவைதான் அப்போது வெளியிடப்பட்ட நூல்கள். அதாவது 35 காசு விலையில் ஒன்று; 50 காசு விலையில் ஒன்று. இதுதான் என்னால் முடிந்தது. காரணம். அப்போது இருந்த சூழலில் இது பெரிது. ஏனென்றால் பாவாணருடைய நூல்கள் பரப்பப்படவில்லை என்பதற்காக அதை எடுத்துச் செய்தோம். "தமிழ் கடன் கொண்டு தழைக்குமா"? என்பது 35 காசு "இசையரங்கு இன்னிசைக் கோவை" என்பது 50 காசு. இவை பரமக்குடியில் வெளியிடப்பட்டன. ஆனால், அத்தனையையும் முறியடிக்கின்ற வகையில் ஏற்கெனவே பாவாணர் பல

இதழ்களில் செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் போன்ற தரமுள்ள இதழ்களில் அன்றைக்குக் கண்ணதாசன் போன்றவர்கள் பாவாணரைப் பெரிதும் விரும்பிப் போற்றிய காலத்தில் தென்றல் போன்ற இதழ்களில்கூட நிறையக் கட்டுரைகளை எழுதி - பாவாணரை முழுமையாகப் பரப்பக்கூடிய அந்த வாய்ப்பிருந்த காலத்தில் அவர் எழுதிய கட்டுரைகள், எழுதித் தொகுத்து வெளியிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டவை யெல்லாம் சேர்ந்து இந்த மேடையில் இருக்கின்றவை 15 நூல்களாகும். இனி பாவாணரைப் பற்றி வெளியிடுவதற்கு எதுவும் இல்லை; அப்படி யிருந்தால் கூடச் சேர்த்துத் தனியே வெளியிடலாம். அந்த அளவுக்கு, தமிழ்க்குடிமகன் செய்தது இந்த அளவுக்குரிய பணி என்றால் இளவழகன் செய்ததுதான் இந்த மாபெரும் பணி. எனவே, ஒரு சிறிய நூலை வெளியிட்ட தமிழ்க்குடிமகன் பெரிய அளவில் நூல்களை வெளியிட்ட இளவழகனைப் பாராட்டுவது என்பதில் அதுவும் மலேசியத் தமிழ் மக்களின் முன்னிலையில் மாண்புமிகு டத்தோஸ்ரீ அவர்களுடைய தலைமையில் இதைப் பாராட்டுவது என்பதில் நான் உள்ளபடியே மெத்த மகிழ்ச்சி யடைகிறேன்.

இதைவிட அவருக்கு வேறு சிறப்பிருக்க முடியாது என்று தான் கருதுகிறேன். வாழ்நாளில் யாருக்கும் வேறு எந்த அறிஞருக்கும் இல்லாத சிறப்பு; எந்த அறிஞருடைய நூல்களும் முதலில் 38; அடுத்து 15 என்று யாருக்கும் வந்திருக்க முடியாது. அதுவும் பாவாணருக்கு மட்டுமே வந்திருக்கிறது. எனவே, பாவாணருக்குச் செய்கின்ற சிறப்பு அன்று; தமிழுக்குச் செய்கின்ற சிறப்பு; தனித்தமிழுக்குச் செய்கின்ற சிறப்பு என்று நான் கருதுகிறேன்.

இப்போது நான் பாவாணரைப்பற்றி மட்டுமே பேசப் போவ தில்லை. பொதுவான செய்திகளைப்பற்றியும் பேசப் போகிறேன். போனமுறையும் நண்பர்கள் அப்படி விரும்பினார்கள். எல்லோருமே பாவாணரைப் பற்றியே பேசிவிட்டீர்களே பொதுவாகச் சில செய்திகளை யும் கூடச் சொல்லி யிருக்கலாமே என்று. உண்மைதான், நமக்குத் தமிழக வரலாற்றில் அல்லது தமிழிலக்கிய வரலாற்றில் பெருமிதத்திற்குரிய நிகழ்வுகள் எத்தனையோ உண்டு. ஏனென்றால் பொற்காலங்களை ஒருமுறையன்று இருமுறை நாம் பார்த்திருக்கிறோம். சங்க காலத்தை ஒரு பொற்காலமாகவும், பிற்காலச் சோழர் காலத்தை ஒரு பொற்காலமாகவும் நாம் பார்த்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்த மண்ணில் மலேசிய மக்களும், சீன மக்களும், இந்திய மக்களும் குறிப்பாகத் தமிழ் மக்களும் இணைந்து நின்று ஓர் ஆட்சியை நடத்தி, அவர்களுடைய மொழியைப் பேணி, அவற்றிற்குரிய சிறப்புகளை வளர்த்து வருகின்ற சூழலை எண்ணி நான் உள்ளபடியே பெருமிதமடைகிறேன். ஏனென்று கேட்டால், சிங்கப்பூரில் தமிழுக்கு ஆட்சிமொழிக்குரிய உரிமை கொடுக்கப் பட்டிருக் கிறது. அதுவும் பெருமிதத்திற்குரியது. சிங்கப்பூரில் கொடுக்கப்பட்டிருக் கின்ற அந்த உரிமையை - ஈழத்திலிருக்கின்ற சிங்களவர்கள் ஒரு கணம் சிந்தித்து இருந்தால் இந்த நிலை நேர்ந்திருக்காது. அவர்கள் சிந்திக்காமல் ஸ்ரீ என்ற எழுத்தைப் பரப்பிய தொடக்க காலத்திலிருந்து (1955-56 இல்)

விளைவுகள் இன்றைக்கு மோசமாகிவிட்டன. ஆனால், இன்றைக்கு மீண்டும் நல்ல உறவுகள் வந்துள்ளன. அதை நாம் வரவேற்றுப் பெருமிதப்படுகிறோம்.

பொதுவாகவே தமிழ் மக்களுடைய எண்ணிக்கை தமிழ் நாட்டில் 6,21,00,000 (ஆறு கோடியே இருபத்தோர் இலட்சம்) ஈழத்துக்கு அடுத்து தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது மலேசிய நாட்டில்தான். பிற நாடுகளில் ஏறத்தாழ ஒருகோடி. ஆக நம்முடைய எண்ணிக்கை 7,21,00,000 இது உண்மையான கணக்கு. சிலபேர் மேடையிலே தாராளமாகப் பேசுவார்கள். உலகமெங்கும் வாழுகின்ற 21 கோடி மக்கள் (எவன் கேட்கப் போகிறான்) என்று எல்லாம் பேசுவதுண்டு. நான் அந்தத் துறையில் இருந்தவன் என்ற முறையில் தெரிவிக்க முடிகிறது. இதுதான் உண்மையான கணக்கு. ஆனாலும், 6,21,00,000 பேர் இருக்கின்ற தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களின் தமிழ்ப்பற்றைவிட அங்கே இருக்கின்ற தமிழுணர்வை விட - தமிழுணர்ச்சியைவிட இந்த மலேசிய மண்ணிலும், சிங்கப்பூரிலும், யாழ்ப்பாணத்திலும் நீங்கள் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் உண்மையாகவும் இருக்கிறீர்கள். ஏனென்றால் தமிழ்நாட்டில் போலிகள் அதிகம்; அதையும் மறந்துவிடக் கூடாது. உண்மையாகவும் இருக்கின்றீர்கள் என்பதை நான் உள்ளபடியாக எண்ணிப் பெருமைப்படுகிறேன். அது மட்டுமன்று; நீங்கள் பெருமைப்படுகிற அளவுக்குத் தமிழும் வளர்ந்திருக்கிறது; அதற்காக அது ஒன்றும் தாழ்ந்து போய்விட வில்லை. முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாய் விளங்குவது தமிழ் என்றால் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையாகவும் விளங்குகிறது. இணைய மாநாடு இங்கேயும் நடந்திருக்கிறது; சிங்கப்பூரிலும் நடந்தது. அந்த மாநாடுகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன் அரசின் சார்பில். பிறகு தமிழ்நாட்டிலும் நடைபெற்ற அந்த மாநாட்டில் தமிழ் விசைப் பலகையைத் தரப்படுத்தியபிறகு, அந்தத் தமிழ் மென்பொருள்கள் அதற்கு முன்னாலிருந்த ஏற்றுமதி ரூ.12 கோடி என்றால், இன்றைக்கு அதனுடைய ஏற்றுமதி - தமிழ் மென்பொருள்களின் ஏற்றுமதி ரூ.5,223 கோடி என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, அந்த அளவுக்கு உலகமெங்கும் இருப்பவர்கள் அதை வாங்கிப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்குப் பெரிய எடுத்துக்காட்டு இது. எனவே, இந்தியாவில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடி இணையத்தில் மின்னஞ்சலில் முற்றிலும் கணினித் தமிழாக வந்து ஓர் இணையப் பல்கலைக்கழகத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு மொழி தமிழ் மட்டும்தான் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. எனவே, நாங்களும் பின்னடைந்து விடவில்லை. அதையும் செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமன்று, உள்ளபடியே தமிழர்கள் பழைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பெரிய வீரர்கள்தான். எவனோ ஒருவன் தமிழைப் பழித்தான் என்பதற்காக ‘அருந்தமிழாற்றல் காண்குதும்’ என்று சொல்லிச் சென்ற சேரன் செங்குட்டுவன் கனக விசயர் தலையிலே கல்லெடுத்து வந்து சிலம்புக் கண்ணகிக்குச் சிலை எடுத்துப் பெருமைப் படுத்தியவன்; காவிரியில் நீராட்டி மகிழ்ந்தவன். அதுமட்டுமன்று வேற்று நாட்டு மறவர்களை வளைத்துப் பிடித்து வந்து காவிரியில் கரையோரத்தைச் செம்மைப்படுத்

தியது மட்டுமன்றி கல்லணையும் கட்டிப் பெருமைப்பட்டவன் கரிகாலன். பிறகு அடைமொழியிலேயே தங்களுடைய வெற்றிகளைக் காட்டிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் என இப்படிப் பலர்.

எனவே, சங்ககாலம் பொற்காலமாக இருந்தது. ஆனால் இந்த வீரர்களின் வெற்றியால் மட்டுமன்றி; அன்று உருவாக்கப்பட்ட இலக்கியங்களாலும் தான். அந்த இலக்கியங்கள் நமக்குக் கற்பித்த பண்பாடுகளால்... இன்னும் சொல்லப்போனால் எட்டுத் தொகையாக இருந்தாலும், பத்துப் பாட்டாக இருந்தாலும், அதற்குப் பிற்காலத்தில் பிறந்த பதினெண்கீழ்க் கணக்காக இருந்தாலும் அதில் எத்தகைய பண்பாடுகளை எத்தனை இலக்கியச் சுவைகளை - எத்தகைய நயங்களை - குறிப்பாக காதலைப் பற்றியும், வீரத்தைப் பற்றியும் இந்த இரண்டையும் பற்றி அதிகமாகப் பாடுகிற பொருளாக - content of the poetry என்பார்களே! அந்த இலக்கியங்களை எண்ணிப் பார்க்கிறோம். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அந்தக் காதல் இன்றைக்கும் இருக்கிறது. மாறாமல் இருக்கிறது. மாறாமல் 2000, 3000 ஆண்டுகளாக - பாகுபாடு இன்றி எல்லாக் கவிஞர்களாலும் அன்றைக்கும் இன்றைக்கும் பாடப்படுவது எல்லாமே நம்முடைய காதல் ஒன்றுதான். அன்றைக்கே அவன் வெவ்வேறு வகையிலே பாடினான். ஒரு நூலில் சொல்லுகிறான். தமிழ்ப் பண்பாடு இப்படியெல்லாம் இருந்தது என்று. அதாவது ஒரு செவிலி இங்கே போகிறாள். என்னுடைய மகளையும் அவளுடைய காதலனையும் கண்டீர்களா என்று ஒரு காதலன் காதலியைப் பார்த்துக் கேட்கிறாள். அவர்கள் எதிரே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆடவன் சொல்கிறான். ஆம். நான் ஒரு ஆடவனைக் கண்டேன் என்றான். பக்கத்திலிருந்த தலைவி சொல்கிறாள். ஆம். நான்கூட அவன் கூடச் சென்ற ஒரு பெண்ணைக் கண்டேன் என்று. இந்த ஆடவன் ஆடவனைத்தான் பார்த்திருக்கிறான். அந்தப் பெண் பெண்ணைத்தான் பார்த்திருக்கிறாள். இது தமிழ்நாட்டில் தமிழில் இருக்கின்ற ஒரு பாடல். மறந்துவிடக் கூடாது. இது கதையன்று. எவ்வளவு அரிய பண்பாடு இது. ஆனால் இன்றைக்கு அது பெரிய கலையாகவே வளர்ந்திருக்கிறது - பண்பாடாக அன்று - ஆம். சிதைக்கின்ற கலையாக.

கல்லூரி மாணவர்களுக்கு என்று சொன்னால், அவர்களுக்கு முக்கியமான வேலை கல்லூரியில் படிப்பது மட்டுமன்று; மகளிர் கல்லூரிக்கு முன்னால் மணிக்கணக்காகக் காத்திருப்பதும் ஒரு கலைதான். (பிறகு இன்னும் எவ்வளவோ இருக்கிறது ... சொல்ல நேரமிருக்காது) எனவே எதுவாக இருந்தாலும், நம்முடன் தொடர்ந்து வரவேண்டும் அதுதான் சிறப்பு. அன்றைக்கு இருந்தது. ஒருவன் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமானால் முல்லைக்கலி சொல்கிறது. 'ஏறு தழுவுதல்' என்ற பண்பாட்டைச் சொல்கிறது. அந்த வீட்டில் இருக்கின்ற காளையை - காளை மாட்டை அடக்கினால்தான் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள முடியும். அப்படி அவன் அடக்கத் தவறி விட்டால் அவன் தோல்வி அடைந்து விடுகிறான் (அல்லது) மடிந்து போகிறான் அல்லது ஊனமாகி விடுகிறான். அவனை அந்தப்பெண்

மணந்துகொள்வ தில்லை. அது அன்றைய மரபு. எனவே, "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆய மகள்" என்று முல்லைக்கலி சொல்கிறது. இந்தக் காளை மாட்டுக் கொம்புகளைக் கண்டு அஞ்சுபவனை இந்தப் பிறவியில் மட்டுமன்று; அடுத்த பிறவியிலும் மணந்து கொள்ள மாட்டேன் என்று சொன்ன தலைவியும் உண்டு. ஆனால், காலப்போக்கில் அது மாறிவிட்டது. மாறவேண்டும். உள்ளபடியே ஒரு காளை மாட்டை அடக்கித்தான் திருமணமாக வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால் எனக்குத் திருமணமாகியிருக்கும் என்று நினைக்கிறீர்களா? நான் எப்போது போவது ... காளை மாட்டை அடக்குவது ... நடக்காது. அதனால் தான் அண்ணா அவர்கள் சொன்னார். இப்படித் திருப்பிப் போட்டார். அந்தப் பண்பாடு இருந்ததை நான் மறுக்கவில்லை. இன்றைக்கும் அலங்காநல்லூர் சல்லிக்கட்டில் காளை மாட்டை அடக்க 30 பேர் இருக்கிறார்கள். வீரம் செத்துப் போகவில்லை. அது பரவலாக இல்லை. ஒரு காலத்தில் அது ஒரு வரைமுறையானது. அது முக்கியம். எனவே, அண்ணா சொல்வார் இந்தப் பெண் - இதில் தோல்வி அடையும் வீரனைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லும் பெண் சங்க காலத்துப் பெண். ஆனால், அண்ணா சொல்வார். இந்தக் காலத்துப் பெண் என்ன நினைப்பாள்? அடேயப்பா இந்தக் காளை மாட்டையே இவன் இந்தப் பாடுபடுத்து கிறானே நம்மை என்ன பாடுபடுத்துவானோ! என்று நினைப்பாள். இது அண்ணாவினுடைய அணுகுமுறை. காலம் மாறிவிட்டது; மாறவேண்டும். நான் மாற்றங்களை ஏற்க மறுப்பவனல்லன். மாற்றங்கள் வேண்டியது தான். ஆனால், என்னவாகி விட்டது என்று சொன்னால், அந்தச் சங்க இலக்கியத்திலே கூட நமக்கு வருத்தம்; சேரன் சோழனை வென்றான் என்று தான் இருக்கிறதே தவிர சோழன் பாண்டியனை அழித்தான் என்று தான் இருக்கிறதே தவிர - ஆதித்திய கரிகால்சோழன் வீரபாண்டியனுடைய தலையைத் தான் துண்டித்திருக்கிறான். அது மட்டுமன்று நெடுஞ்செழிய னுக்கு என்ன பெயர்? "எழுவர் நல் வலம் அடங்க ஒரு தானாகிப் பொருது களத்தடலே" இது புறநானூறு. ஏழுபேருடைய வலிமையை அடக்கித் தனியொருவனாக நின்று வென்றான். பாராட்டுதலுக்குரியது தான். வீரன்தான். ஆனால், அந்த 7 பேர் யாரென்றால் சேரன், சோழன், 5 வேளிர். எனவே, 7 பேரும் தமிழர்கள்தாம். நாங்கள் அந்தக் கோணத்தில் பார்த்தால் தான் அடடா இவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள் என்பது புரியும். இதற்காக அவர்கள் ஒரு பொது விதியை வைத்துக் கொண்டார்கள். "ஒருவரை ஒருவர் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று உலகத்து இயற்கை" என்று சொல்லிவிட்டான். இலக்கணம் வேறு வைத்துவிட்டார்கள். ஆனால், பிற்காலச்சோழர் காலத்தில் இராசராச சோழன் இராசேந்திர சோழன் போன்றோர் இங்கே வரைக்கும் வந்து சென்ற முத்திரைகள் பதிந்திருக் கின்றன அல்லவா? அந்த இரோசேந்திரன், இராசராச சோழன் காலத்தில் தான் எதிரிகளை வென்றிருக்கிறார்கள். பிற மொழியாளர்களை பிற இனத்தார்களை பிற நாட்டினர்களை வென்று நிலைநாட்டியது அந்தக்கால கட்டத்தில் தான். ஆனாலும், சேரன் செங்குட்டுவனும் செய்த தப்பு; இராசேந்திர சோழனும் செய்த தப்பு

இவர்கள் சென்றவிடத்தெல்லாம் கொடியை நாட்டிவிட்டு வந்திருக்கிறார்களே தவிரச் சிலபேரைக் குடியமர்த்தி விட்டு வரவில்லை. ஒரு பாதுகாப்புக்காக 100 பேரை வைத்திருந்தால் அது இன்றைக்குக் கோடிப்பேராகப் பெருகி இருக்கக்கூடும். நூற்றுக்கணக்கான வர்களை வென்றான் சேரன் செங்குட்டுவன் என்பது வரலாறு. 'சதகர்ணிகள்' என்பவரை வென்றபிறகு இவனும் 100 பேர்களை அங்கு வைத்திருக்க வேண்டும். அவனும் சென்றான் வென்றான் (நாம் எப்போதுமே சென்றான் வென்றான் கொடியை நட்டான் என்று தானே பேசுவோம்) இப்போது சில பேர் அதே இமயமலை அடிவாரத்தில் பிச்சை எடுக்கிறார்கள். நம்மாளுங்க எடுக்கும் போது கேட்கிறான். என்னங்க இமயமலை வரைக்கும் பிச்சை எடுக்க வந்திருக்கீங்களே! நம்ம ஊரில் இடம் கிடைக்க வில்லையா? என்று. அவன் சொல்கிறான் 'பிச்சை எல்லாம் எடுக்கவில்லை; அந்தக் காலத்தில் நடப்பட்ட வில், கயல் போன்ற கொடிகளை எவனும் பிடுங்கிவிடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்று. இப்படிச் சொல்வதற்குத் தான் நாம் வளர்ந்திருக்கிறோமே தவிர கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். நமக்கு எவ்வளவு பெரிய வீழ்ச்சி என்று. நாம் இன்றைக்கு இவ்வளவு பெரிய நாட்டை - என்னைக் கேட்டால் இராசராசசோழன் காலத்தில் இராசேந்திரசோழன் காலத்தில் தான் மிகப்பெரிய தமிழ் நாட்டைக் கண்டோம் - கலிங்கம் வரை - இந்தப்பக்கம் கர்நாடகத்திலுள்ள மங்களூர் வரை ஆட்சி செலுத்தினோம். அவனுடைய மாபெரும் படைகள் - அவனுடைய படைகளில் 90,000 யானைகள். 90,000 யானைகளும் போர்க்களத்தில் வந்தால் எதிரி மிரண்டு ஓடிவிடமாட்டானா? அவ்வளவு பெரிய படை இருந்தது; எல்லாம் இருந்தன. ஆனால் என்னவாயிற்று! தங்களை நிலைப்படுத்திக் கொள்ளத் தவறி விட்டார்கள். பெருந்தன்மை யான முறையில் வேறு வழியில் திசைமாறிச் சென்று விட்டார்கள்.

தமிழில் ஒலியே இல்லை; ஒலியே வராது. 'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டிற்கும் இறைவா போற்றி! என்றால் சப்தம் வராதாம். அடிவயிற்றிலிருந்து கக்கினால் தான் வரும் என்கிறான். புரியாமலிருந்தால் தான் உங்களுக்கு விளங்கும் என்கிறான். ஒருத்தன் நீதிமன்றத்திலே வழக்குப் போடுகிறான். Devanagari is supposed to be the language to be heard by the Goddesses or God என்று. தேவநாகரிதான் கடவுளால் கேட்கப்படும் மொழி என்று நீதிமன்றத்திலே வழக்குப் போடுவதற்கு ஒருத்தனுக்குத் தெம்பு வருகிறது தமிழ் நாட்டில், இதற்கெல்லாம் அவர்கள் இட்டுக்கட்டிய காரணங்கள்தான் அடிப்படை. அங்கே கிராமங்களில் பார்த்தால் சோழ் நாட்டிலுள்ள வேளாண் ஊர்கள் என்றிருக்கிறது. அதுதான் உழவர் களுடைய ஊர்கள். பிறகு பிராமணர் தேயங்கள் என்று வருகிறது அவை பிரம்ம தேயங்கள். அவை பூராவும் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊர்கள் என்று வந்தவுடன் அவன் ஒட்டுமொத்தமாக வளைத்துவிடுகிறான். அந்தத் தொடர்ச்சியினுடைய விளைவுகளைத் தான் இன்று பார்க்கிறோம். இன்றைக்குத் தமிழ் வழி பாட்டைக் கொண்டு வருவதற்காகக் கடும் முயற்சி எடுத்துச் செய்தோம் என்று சொன்னால் அது 10 நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட கறை - குறை. எனவே, பாவாணர் அடிக்கடி சொல்வார்.

இன்றைக்கும் பலபேர் என்ன சொல்கிறான். சமற்கிருதம் தேவமொழி என்கிறான். "எது தேவமொழி?" என்ற தலைப்பில் பாவாணர் சொல்வார். 'தேவமொழி என்பதற்கு ஓர் இலக்கணம் வேண்டுமென்றால் அது தமிழுக்கு மட்டும்தான் பொருந்தும்' என்று. இளமை, வளமை, இனிமை, தனிமை, தாய்மை, தூய்மை என்று இப்படி 16 பண்புகள். இந்தப் பண்புகளைக் கொண்ட தமிழுக்கு மட்டும் தான் பொருந்தும். ஆனாலும், அதையும் தேவமொழி என்று சொல்வது பொருத்த மற்றது. ஏனென்று கேட்டால் தேவமொழி என்பது எதுவும் இல்லை. பாரதி சொன்னானே ஆதிசிவன் பெற்று விட்டான் (அப்படியென்றால் 10 மாதம் சுழித்து முக்கியா பெற்றான் ஆதிசிவன்) இருக்க முடியாது. ஆதிசிவனுக்கும் தமிழுக்கும் முடிச்சுப்போடுவது வேறு. அதைத்தான் சிவன் பெற்றான் என்பது வேறு. ஆனால் ஆட்டோ ஜெஸ்பர்சன் (Otto Jesperson) என்ற மேனாட்டறிஞன் தெளிவாகச் சொல்லிவிட்டான் Language is purely the invention of the human race முழுக்க முழுக்க மனிதனால் உருவாக்கப்பட்டது தான் மொழி. முதலில் சைகை; அதற்குப் பிறகு ஓரெழுத்து ஒரு மொழி, வா, போ, நீ ... அதற்குப்பிறகுதான் மெல்ல மெல்ல ஒலிகள் காலப்போக்கில் வருகின்றன. அப்படித் தான் மொழி வந்திருக்கிறது. அப்படித்தான் வந்திருக்க முடியும். எனவே, தேவமொழி என்று எதுவும் கிடையாது. அதை வைத்துக் கொண்டே இன்னும் சிலபேர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக் கிறார்கள். எனவே, அதை முறியடித்த பெருமை பாவாணருடைய ஆய்வுக்கு உண்டு. அதை மறந்துவிடக்கூடாது. அவர் எழுதுகிறார். எது தேவமொழி? என்ற கட்டுரையை எழுதியிருக்கிறார். அதெல்லாம் இந்த நூலில் வந்திருக்கின்றன.

அதுமட்டுமன்று; நிறைய வருத்தங்கள் எனக்கு உண்டு! தமிழர் களிடையில். நான் சொல்வது முன்பே இருந்த இராசராசசோழன், இராசேந்திர சோழன் காலத்தைய வருத்தம் அன்று. இந்த 20 ஆம் நூற்றாண்டிலேயே பல வருத்தங்கள் உண்டு. ஓர் எடுத்துக்காட்டுக்குச் சொல்ல விரும்புகிறேன். இங்கே வணிகச் சொற்பட்டியல் என்ற நூலிலிருந்து எடுத்துக்காட்டிப் பல சொல்லாராய்ச்சிகளைப் பலரும் சொன்னார்கள்.

வணிகச் சொற்பட்டியல்களை எல்லாம் உருவாக்கிக் கொடுத்திருக் கிறோம். அப்போது உருவாக்கிக் கொடுத்த 515 சொற்களைக் கொண்ட நூல் வந்திருக்கிறது. இரண்டாவது பதிப்பும் வந்து இங்கே நிறையப் பேரிடம் இருக்கிறது. அண்மையில் நான் சீனாவுக்குப் போனபோது பீகிங் வானொலி நிலையத்தைப் பார்த்தேன். அதாவது அ.சிதம்பரநாத செட்டியாரும் அப்பாத் துரையாரும் சேர்ந்து உருவாக்கிய "ஆங்கிலத் தமிழ் அகராதி" இருக்கிறது. அடுத்து அவர்கள் பயன்படுத்துவது நாம் வெளியிட்ட வணிகச்சொற் பட்டியல்தான். இங்கே வெளியிடப்பட்டது தான் அங்கே பீகிங் வானொலி நிலையத்தில் இருக்கிறது. வேடிக்கை என்ன வென்றால். பீகிங் வானொலி நிலையத்தில் 10 சீனர்கள் பணியாற்று கிறார்கள்; 10 பேருமே தமிழில் அருமையாகப் பேசுகிறார்கள். பீகிங் வானொலியில் தமிழ் ஒலிபரப்பு 39 ஆண்டுகளாக இருக்கிறது. ஆனால்,

அவர்களுக்குத் திருத்திக் கொடுக்கிற வல்லுநர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்ட முனைவர் கடிகாசலம். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் இந்த நூலின் வரலாறு தெரியுமா? உங்களுக்கு. பேரவைத்தலைவராக இருந்த காலத்திலேயே இந்த நூலைக் கொண்டு வருவதற்கு ஒரு குழுவை நியமித்தோம். அப்போதிருந்த பண்பாட்டுத் துறைச் செயலாளர் ஔவை நடராசன், சிலம்பொலி செல்லப்பன், மெ.சுந்தரம் ஆகிய 3 பேரும் உறுப்பினர்கள். அவர்கள் விரைவில் நூலை உருவாக்கித்தர வேண்டும் என்று ஆணையே பிறப்பித்தோம். ஆனால், ஆட்சி போய்விட்டது. பின்னர் அதுவும் அப்படியே நின்றுபோய் விட்டது. அதற்குப்பின்னால் வந்த அமைச்சர் (நான் அந்த அமைச்சரின் பெயரைச் சொல்லி அசிங்கப்படுத்தக் கூடாது; நாகரிகமாகச் சொல் கிறேன்) என்ன எழுதியிருக்கிறார். மீண்டும் அந்தக் கோப்பு அவரிடத்தில் கொண்டு போகப்படுகிறது. 'இது அவசியமில்லை' என்று எழுதிவிட்டார். அந்தக் கோப்பை எடுத்துச்சென்ற அந்தப் பண்பாட்டுத்துறைச் செயலாளர். "ரொம்ப" ஒழுங்காக அமைச்சர் அவசியமில்லை என்று கருதியதால், இந்தக் கோப்பு முற்றாக்கப் பட்டது என்று கூறி மூடிவிட்டார். பிறகு 1996 இல் நான் அமைச்சராக வந்தபிறகு மீண்டும் அந்தக் கோப்பைப் புதுப்பித்து, அதற்குப்பிறகு குழு உறுப்பினர்களைப் போட்டு - அதே சிலம்பொலி செல்லப்பனையும், இலெனின் தங்கப்பாவையும் போட்டு உருவாக்கப்பட்டதுதான் இந்த வணிகச் சொற்பட்டியல். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் ஒன்றை உருவாக்கித்தந்தால் அல்லவா மக்கள் பயன்படுத்துவார்கள். உருவாக்கித் தருவதே கூட 'அவசிய மில்லை' என்று சொல்வதற்கு ஒரு பண்பாட்டுத்துறை அமைச்சர் - தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர். 515 சொற்களை உருவாக்குவது பெரிய வேலையே அல்ல. நூலின் விலையே ரூ.5/- தான். பெரிய தொல்லை அல்ல.

ஏன் இதைச் சொல்கிறேன்; இப்படியெல்லாம் பல இடங்களில் சாண் ஏறினால் முழம் வழுக்குவதைப் பார்க்கிறோம். நாம் ஒரு பணியைச் செய்திருப்போம். அதை ஒன்றுமில்லாமல் ஆக்குகின்ற ஒரு பழக்கத்தை நீண்டகாலமாகத் தமிழக அரசில் பார்க்கிறோம். அந்த வருத்தங்கள் எல்லாம் எனக்கு உண்டு. எனவே, நான் உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்வது இப்போது நாம் வேறு நிலையிலே வந்துவிட்டோம். சேரர்களாக - சோழர்களாக பாண்டியர்களாக - தமிழர்களாக - தமிழினத் தின் தூண்களாக தமிழினத்தின் உறுப்பினர்களாக அதில் நாம் பிறந்த வர்கள் என்ற முறையில் அந்த உரிமையோடு ஒருங்கிணைந்து அந்த உணர்ச்சியைத்தான் கடைசி வரை கொள்ள வேண்டும். ஆனால், இந்த இனம் என்பதையே நாம் கொச்சைப்படுத்தி வைத்திருக்கிறோம். இரண்டு பேரைப் பார்க்கும் போது ஐயா என்ன இனம்? அப்படின்னு கேட்கிறவர் களும் இன்னும் இருக்கிறார்கள். அவன் வீம்புக்குச் சொல்லுவான் நான் ஆண் இனம். நான் அதைக் கேட்கவில்லை நீங்க என்ன இனம் (சாதி)? சாதியையே இனமாக்கி விட்டார்கள். என்னைக் கேட்டால் மலேசியாவில் இருக்கின்ற வேறுபாடற்ற சூழ்நிலை தமிழ்நாட்டில் இல்லை. இன்றைக்கு மீண்டும் தமிழ்நாட்டில் ஒரு வர்ணாசிரம சண்டை கிளப்பப்பட்டு நடந்து

கொண்டிருக்கிறது. செய்தித்தாள்களில் பார்த்திருப்பீர்கள். அந்தப் பிரிவினை ஏற்பட்டதால்தான் தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய வீழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஓர் அலுவலகத்தில் புதியதாக ஒருவர் வந்து சேருகிறார் என்று சொன்னால், அவன் என்ன படித்திருக்கிறான்; எதில் ஆர்வம் படைத்திருக்கிறான் என்றெல்லாம் பார்ப்பது கிடையாது; எப்படியாவது யார் என்று கண்டுபிடித்து விட வேண்டும். கண்டுபிடித்து அடுத்த நாளே அணிசேர்த்து விடுகிறான். 'ஓ நீங்க நம்ம ஆளு' என்று தெரியாமலே போய்விட்டது என்கிறான். 'நம்ம ஆளுங்க' என்றால் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. அப்படி ஒரு நிலைமை வருமானால், மேலும் மேலும் மேலும் நாம் பின்னோக்கிப் போகிறோம் என்றுதான் பொருள்.

ஆங்கிலேயர்கள் இப்போது ஆட்சியில் இல்லை; ஆனால், ஆங்கிலம் நம்மைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது; பயன்படுகின்றது என்பது வேறு. நான் அந்தக்கோணத்தில் பேசவில்லை. ஆனால், அதிகப்படியாகவே தமிழைக் காலி பண்ணக்கூடிய சூழ்நிலையும் வந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஆங்கில வழிக் கல்விதான் அதிகம். தமிழ் வழிக் கல்விக்கு எதிர்ப்பு. அதிலும் நீதிமன்றம் வரைக்கும் போய் அடிபடுகிறது என்ற சூழ்நிலை வந்துவிட்டதல்லவா? எப்படி வந்தது? நாம் கொடுத்த இடத்தினால் வந்தது. சீன நாட்டில் பொறியியல், மருத்துவம், சட்டம் என அனைத்துமே சீனமொழியில் மட்டும்தான்; இன்னும் சொல்லப் போனால் ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு என்னோடு ஆங்கிலத்தில் பேச முடியவில்லை. பல்கலைக்கழகத் துணைவேந்தர் - 24,000 மாணவர்களைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகத் துணை வேந்தரால் என்னோடு எளிய ஆங்கிலத்தில் கூடப் பேச முடியவில்லை என்று சொன்னால் அவருடைய நிலை என்ன? உண்மையைச் சொன்னால் தொன்மை மொழிகள் 6 என்றால் அதில் சீனமும் ஒன்று. தமிழும் ஒன்று. நான் இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்லுகிறேன். ஈப்ரு மொழி கிட்டத்தட்ட இறந்துபோன மொழி. முதலில் பைபிள் (விவிலியம்) ஈப்ரு மொழியில்தான் எழுதப் பட்டது. அராமிக் மொழி முதலில் பேசப்பட்டது என்றால் எழுதியது ஈப்ரு மொழியில். பிறகு இலத்தீன், பிறகு ஆங்கிலம். ஆனால், இறந்துபோன ஈப்ரு மொழிக்குரிய யூதர்கள் மீண்டும் இசுரேல் நாட்டை உருவாக்கிக் கொண்டு, அந்த இறந்துபோன மொழியை மீண்டும் மீட்டுருவாக்கி - இன்றைக்கு உயர்கல்வி வரை பயிற்று மொழியாக்கி விட்டார்களே! எல்லா இடத்திலும் ஆட்சி மொழியாக்கி விட்டார்களே. இறந்து போன மொழியை - மறந்துவிடக்கூடாது. சமற்கிருதத்தை அப்படிக் கொண்டுவர முடியாது. ஏனென்றால் அவர்களுக்கென நாடு ஒன்று இல்லாத காரணத்தினாலேயே அந்தச் சிக்கல் இல்லை. இருந்திருந்தால் நடக்கிறதே வேறு. பாவாணர் "கி.மு.1200 இல் தமிழ்நாட்டில் ஆரியர்கள் வருகை" என்று சொல்கிறார். ஆகக் கிட்டத்தட்ட ஆரியர்கள் நம்மோடு ஒருங்கிணைந்து 3200 ஆண்டுகள். எனவே, அவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கிற போதெல்லாம் ஏதாவது ஒன்றைக் காலி செய்துவிடுவார்கள். இப்போது நிலைமை மாறி இருக்கிறது. நான் மறுக்கவில்லை. பாவாணரே பாராட்டியிருக்கிறார்.

பி.டி.சீனிவாச அய்யங்காருக்கு ஒரு சிலை வையுங்கள். வி.ஆர்,இராமச் சந்திர தீட்சிதருக்கு ஒரு சிலை வையுங்கள். மறைமலையடிகளுக்கு ஒரு சிலை வையுங்கள் என்கிறார். ஏனென்றால் நம்மைப்பற்றிய செய்திகளை உலகம் அறியாத காலத்தில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் கொல்கத்தா வில் ஆட்சிபீடம் வைத்திருந்த காலத்தில் அங்கேயிருந்து செய்திகளை வாங்கி வாங்கிச் சென்று மொழிபெயர்த்த காரணத்தினால் பெரும்பாலும் சமற்கிருதம் சார்ந்த இலக்கணமும் இலக்கியமும் அவர்களுக்கு அறிமுக மாகியிருந்தன ஆங்கிலத்தில். நம்முடைய தமிழ்ச் செய்திகள் அவர்களுக்கு அறிமுகமாகாமல் போய்விட்டன. எனவே, பிடி. சீனிவாச அய்யங்கார் தான் History of the Tamils என்ற பெயரில் எழுதி உலகத்திற்குப் பரப்பிய பெருமை படைத்தவர். அதிலே சங்க இலக்கியத்தில் உள்ள பெருமைகள் எல்லாம் பேசப்படுகின்றன. வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் "Origin and the spread of the Tamils" என்று எழுதி உலகுக்குப் பரப்பினார். அதனால்தான் பாவாணரும் அவர்களுக்குச் சிலை வைக்க வேண்டுமென்று சொல்கிறார். எனவே, அவர்கள் மீது நமக்கு வெறுப்பில்லை. அந்தக்கோணத்தில் நீங்கள் பார்க்கக் கூடாது. அவர்கள்மீது தமிழ்க்குடிமகன் பாவாணர் - வெறுப் போடு இருக்கிறார்கள் என்று பொருள் அன்று. அவர்களில் நல்ல பணி களைச் செய்தவர்களை யெல்லாம் பாராட்டத்தான் செய்கிறோம். ஆனால், அதே நேரத்தில் தீங்குகள் விளைகிறபோது, சுட்டிக் காட்டித்தானே ஆக வேண்டும். மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை அவர்கள், எளியமுறையில் கீர்த்தனைகளைப் பாடியவர். அவர் சொல்லுவார். "ஈசனை நினைக்க விரும்புகிறேன்" எவன் ஐயா என்னை நினைக்கவிடுகிறான் என்று பாடுவார். அவர் நீதிபதியல்லவா. சுற்றிலும் வழக்கறிஞர்கள் சண்டை. அதைக் கேட்டுக் கேட்டு ஈசனை நினைப்பதற்கு அவருக்கு நேரம் இல்லையாம்.

"தொண்டை கிழித்துக் கொண்டு சண்டை செய்யும் வக்கீல்கள் அண்டையிலிருந்து நம் மண்டையை உடைத்தால் நினைப்பது எப்போது நெஞ்சே ஈசன் பதத்தை நினைப்பது எப்போது நெஞ்சே!"

எனவே, அப்படிப்பட்டவர் என்ன எழுதுகிறார். இந்த நாட்டில் ஒருவன் ஆங்கிலம்தான் பேச வேண்டுமென்று முடிவெடுத்தால், அவனை ஆங்கில நாட்டிற்கு அனுப்புங்கள்; தமிழ்க்குடிமகன் சொல்லவில்லை; மறந்துவிடக்கூடாது. மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை சொன்னது. நீங்க பாட்டுக்கு மாற்றிப் போட்டுவிடக்கூடாது. இந்த நாட்டில் ஆங்கிலம் தான் ஒருவன் பேச நினைத்தால், அவனை ஆங்கில நாட்டிற்கு அனுப்பி விடுங்கள். இந்த நாட்டில் பிரெஞ்சு மொழியில் பேச நினைத்தால் அவனைப் பிரெஞ்சு நாட்டுக்கு அனுப்பிவிடுங்கள். இங்கே சமற்கிருதம் தான் பேச நினைத்தால், அவனுக்கு எந்த நாடும் இல்லாத காரணத்தினால் அவர் சொல்கிறார் - அவனை அனாமதேயத் தீவுக்கு அனுப்பிவிடுங்கள் என்று. இப்போது நான் சொல்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்னடா இவன் தேவையில்லாத கிளர்ச்சியை உண்டாக்குகிறான் என்பீர்கள்; எழுதியது வேதநாயகம் பிள்ளை. அப்போது அவருக்கு எவ்வளவு எண்ணம் இருந்திருக்கும்; எண்ணிப் பாருங்கள். அதையும் நீங்கள் எண்ணிப்பார்த்தால்தான், எந்த அளவுக்கு நாம் புறத்தாக்குதலால்

பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரியும். நான் உள்ளபடியே பெரு மிதத்தோடு சொல்கிறேன். அரசியல் துறையில் அறிஞர் அண்ணா அவர்களும், மொழியியல் துறையில் மறைமலை அடிகளாரும் அவர்களைப் பின்பற்றிய பாவாணர் போன்றவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகளினால்தான் நாம் இந்த அளவுக்கு நிமிர்ந்திருக்கிறோம். நான் கூட நண்பர்களிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தேன். 1957 இல் முதுகுளத்தூர் கலவரம் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் அதையெல்லாம் விரிவுபடுத்த வரவில்லை. அந்தக் கலவரம்பற்றி சட்டப்பேரவையில் பேசவேண்டும். அப்போது காமராசர் முதலமைச்சர். சி. சுப்பிரமணியம் அமைச்சர். அறிஞர் அண்ணா ஒவ்வொரு வரியையும் அளந்து பேசுவார். எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கிற ஒருவரை இவர் தாக்கிவிடக் கூடாது; ஒருவரைத் தாங்கவும் கூடாது; ஒரு சார்பாகிவிடக் கூடாது; அதே சமயத்தில் இவர் எதிர்க் கட்சிக்காரர். அறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் கவனமுடன் மிக அழகாக எடுத்துச் சொன்னார். "நல்ல வேளையாக என் கட்சி பரமக் குடிக்கு அந்தப் பக்கம் பரவவில்லை. (எப்படி மாற்றி இருக்கிறார் பாருங்கள்) பரவியிருந்தால் நாங்கள் இதைத் தூண்டிவிட்டோம் என்று காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் சொல்லுவீர்கள். அதற்கான வாய்ப்பே இல்லை. ஏனென்றால் கட்சி அங்கே வளரவில்லையாம் - முதுகுளத்தூரில்." எனவே, பரமக்குடியோட நாங்கள் நின்றுவிட்டோம். ரொம்ப எச்சரிக்கை யாக - நிறைய செய்திகள் - உள்ளபடியே சொல்லுகிறேன். அவருடைய நூல்களையெல்லாம் பேச்சுகளை எல்லாம் படித்தபிறகு இப்படி ஒரு தலைவனா? என்று வியந்த அற்புதம். எத்தனையோ ஆங்கில அறிக்கை களை நாம் படிக்கிறோம். ஆனால், சட்ட மன்றத்தில் அவர் காட்டியிருக் கிற ஆங்கில மேற்கோள்கள்; வேறு எவரும் எனக்குத் தெரிந்த வரையில் சட்டமன்றத்தில் இவ்வளவு அழுத்தமாகப் பேசியதில்லை. அவ்வளவு ஆற்றல் மிக்கவை. எனவே, அண்ணா அவர்கள் வழியில் வந்த நம்மிடம் இன்றைக்குப் பல சிதைவுகள் இருக்கின்றன. நான் அதையெல்லாம் மறுக்க வில்லை. ஆனாலும், கூட அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நிமிர்ந்து நிற்கக் கூடிய தெம்பையாவது நாம் பெற்றிருக்கிறோம்.

அதேபோல மறைமலை அடிகள் நினைத்து அந்த மணிப் பிரவாள நடையை - நம்மைக் கவ்விய நடையை ஒழித்தார். மணிப்பிரவாளம் என்பது ஒரு தமிழ் ஒரு வடமொழி; ஒரு தமிழ் ஒரு வடமொழி எனப் பின்னிப் பிணைந்து கிடக்கின்ற அந்த மணிப்பிரவாளத்தைத் தூக்கி எறிந்து, தனித்தமிழில் பேசலாம்; பேசமுடியும் என்று சொன்னவர் கால்டுவெல். தமிழுக்குத் தனித்தியங்கும் தன்மை உண்டு என்று அவர்தான் சொன்னார். பிறமொழிச் சொல் இன்றியே தமிழ் தனித்தியங்கும் தனித் தன்மை படைத்தது என்று அவர்தான் முதலில் ஆராய்ந்து சொன்னார். அதைப் பயன்படுத்தித் தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திக் கொண்டு பிறமொழிச் சொற்களை நீக்கிக் காட்டியவர் மறைமலை யடிகள்.

அதைப் பேரியக்கமாக ஆக்கிக் காட்டியவர் பாவாணர். அந்த இயக்கத்தில் ஒரு துரும்புதான் தமிழ்க்குடிமகன். அந்த இயக்கத்தின் ஒரு துரும்புதான் இளவழகன். இன்றைக்கும் திருமாவளவன் போன்றவர்கள்

இங்கே தமிழ்நெறிக் கழகத்தை நடத்துவது அதனுடைய தாக்கங்கள். எனவே, இன்றைக்கு ஒருமணிநேரம் பேசுகிற போது கூட எந்த ஒரு பிறமொழிச் சொல்லையும் கலக்காமல் இவ்வளவு விறுவிறுப்போடு பேசமுடியும். அதற்கு எந்த ஒரு தடையும் கிடையாது.

நான் சட்டமன்றத்தில் ஒரு முறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, 'தினகரன்' இதழ் எழுதியது. அமைச்சர் 58 மணித்துளிகள் பேசினார்; அமைச்சர் 58 மணித்துளிகளிலும் எந்த ஒரு பிறமொழிச் சொல்லையும் கலக்காமல் நல்ல தமிழிலேயே பேசினார் என்று கட்டம் கட்டி வெளியிட்டது. ஏனென்றால், செய்தியாளர் 58 மணித்துளிகளும் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். எனவே, முடியும். எல்லோரும் என்ன சொன்னாங்க "முடியாதுங்க; வந்துடுதே". என்று தான் சொன் னார்கள். நாங்களும் அப்படித்தான் இருந்தோம். எனக்கும் ஓர் அறியாமை இருந்தது. பாவாணருடைய நூலை - ஒப்பியன் மொழி நூலை 1957 இல் வாங்கிப் படிப்பதற்கு முன்னால் எனக்கும் அறியாமை இருந்தது. சங்கடம், சம்பவம், சந்தேகம் எல்லாமே தமிழ்தான் என்று நானும் நினைத்துக் கொண்டி ருந்தேன். என்னுடைய அறிவு அது. 'அறிதொறும் அறியாமை காண்பது' இதுதான். பிறகு நூலை வாங்கிப் படித்தபிறகு 57 ஆவது பக்கத்தில் வீண் வடசொல் என்று பட்டியல் இருந்தது. அடடா இதெல்லாம் வட சொல்லா என்ற அறிவு வந்தது. பிறகு பிரித்தோம். பிரித்து விலக்கிவிட்டு தமிழில் பேசத் தொடங்கினோம். அந்த நேரத்தில் பாவாணர் கிடைத்தார். அந்த நேரத்தில் தென்மொழி கிடைத்தது. பிறகு நாங்கள் அவர்களுக்குக் கிடைத்தோம். அவ்வளவு தான். தமிழ்க்குடிமகன் மட்டுமே முழு அறிவாளியாக இருந்துவிடமுடியாது. அதற்காக அறிவாளி ஆகமுடியாது என்று பொருளன்று. இருந்துவிட முடியாது என்பது வேறு; ஆகமுடியாது என்பது வேறு. எனவே, மெல்ல, மெல்ல இன்றைக்கு நூற்றுக்கு நூறு தனித்தமிழில் பேசுபவர்கள் எத்தனை பேர். நூற்றுக் கணக்கான பேர்கள் வளர்ந்து விட வில்லையா? அவர்களுக்குப் பாவாணர் போன்றவர்களின் நூல்கள் வழிகாட்டி இல்லையா? வடமொழி கிட்டத் தட்ட தமிழ்ச்சொல் போலவே தான் இருக்கிறது. தோற்றம் அப்படித்தான் இருக்கமுடியும். ஆங்கிலச் சொல்லைக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் வடமொழிச் சொல்லைக் கண்டுபிடித்து விட முடியாது. காரணம் நீண்டகாலம் - ஏனென்றால் 3200 ஆண்டுகள். இடைக்காலத்தில் பார்த்தீர் களேயானால் நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்றவற்றை எழுதியவர்கள் இந்தக் கேட்டைச் செய்தார்கள். ஈடு என்ற உரை இருக்கும். அது முழுக்க மணிப்பிரவாளம் தான். எனக்கு அந்த நடையைச் சொல்ல வரவில்லை. இல்லையென்றால் நான் சொல்லிக் காட்டுவேன். ஓதுகிறபோது - பிறமொழியில் ஓதுகிறபோது என்ன ஓதுகிறான் என்று எனக்குத் தெரியவில்லை. சோமசுந்தர பாரதியார் திருமணத்தின் போது ஒருத்தன், கருமாதிக்கு ஓதுவதை அங்கே ஓதிக் கொண்டிருந்தான். அவரோ முற்போக்கானவர்; வடமொழியை ஏற்கெனவே படித்தவர். உடனே அவர் கையைப் பிடித்துக் கொண்டு 'என்ன ஐயா ஓதுகிறீர்கள்?' - எந்த வீட்டில் ஓதுவதை இங்கே ஓதுகிறீர்கள் என்று பிடித்தாரே? எனக்குப் படிக்கத்

தெரிந்தால் தானே பிடிக்கத் தெரியும். அதற்காகப் பாவாணர் போன்றவர்கள், பெரியார் போன்றவர்கள் அறிஞர் அண்ணா போன்றவர்கள் என்ன கேட்கிறார்கள்? எதற்காக வடமொழியில் ஓதுகிறீர்கள்! தமிழில் ஓதி விட்டுப் போக வேண்டியதுதானே! என்றார்கள். பிறகுதானே சுயமரியாதைத் திருமணத்தை நம்பி ஏற்றுக் கொண்டார்கள். முதலில் உன்னுடைய மனைவி அக்கினிக்கு மனைவியாவாள்; பிறகு கந்தர்வர்களுக்கு மனைவி யாவாள்; பிறகு இன்னொருத்தனுக்கு மனைவியாவாள்; நான்காவதாக உனக்கு மனைவியாவாள். இது என்ன "ரொட்டீன் டைம் டேபிளா"? கண்ட இடமெல்லாம் போய் வருவதற்கு! எவ்வளவு கேவலம் இது. இது மேடையிலே கணவன் மனைவிக்கு முன்னால் ஓதப்படுகிறது; எவ்வளவு பெரிய கேவலம்! இதை எப்படி நாம் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, அண்ணா போன்றவர்கள் பெரியார் போன்றவர்களால் நடத்தப் பட்ட சுய மரியாதைத் திருமணத்தை சட்டமாக்கிய பிறகு - பரவலாக ஏற்றுக் கொண்டார்கள்; வந்த பிறகு தெளிவு இருக்கிறது. ஒவ்வொன் றையும் தள்ளி நீக்கிக் கொண்டு வருவதற்கு எவ்வளவு இடர்ப்பட்டிருக் கிறோம் மறந்து விடக்கூடாது. இன்றைக்குத் தமிழ்க்குடிமகன் பேசினால் யாரும் கல்லெறிவதில்லை. வேண்டுமென்றால் இவன் பேசுவது பிடிக்க வில்லை என்றால் 'போவோம்' என்று சொல்லலாமே தவிர கல்லெறிப வர்கள் இல்லை. என்னைப் போன்றவர்கள் கோழைகள். நாங்களே துணிச்சலாகப் பேசுகிறோம். நானே கோழை என்றால் மற்றவர்கள் ... ஆமாம்! நான் நெளிவு சுளிவுக்கேற்ப, அவையறிந்து பேச விரும்புகிறேன். உங்கள் மனம் எதுவும் புண்பட்டுவிடக் கூடாது என்று நினைக்கிறேன். அதிலே தப்பு ஒன்றும் இல்லை. அது ஒரு கலை. நான் மறுக்கவில்லை. அது கலை - பண்பாடு. ஆனாலும், அதைப் பற்றியெல்லாம் பெரியாரும் கவலைப் படவில்லை; எனவே, பாவாணர் போன்றவர்கள் அதை யொட்டியே ஓரளவுக்குத் தன் கருத்துகளைத் துணிச்சலாக எடுத்துச் சொன்னார்கள். மறந்து விடக்கூடாது. அவர்களுக்குப் பல இடர்கள் ஏற்பட்டன.

நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் என்ன ஆகிப்போய்விட்டது. ஒரு கால கட்டத்தில் மனு தர்மத்தின் அடிப்படையிலேயே அதைச் சொல்கிறோம்; செய்கிறோம் என்பதைப் பல இடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது! சுந்தர சோழனுடைய மகன் ஆதித்திய கரிகாலன்; அவன்தான் முதல் மகன்; இரண்டாவது மகன் அருள்மொழித் தேவன்; அவன் தான் இராசராசசோழன். அவனுடைய மகன் தான் இராசேந்திர சோழன். ஆதித்திய கரிகாலன். ஆற்றலோடு இருந்தான். அவன்தான் பாண்டிய நாட்டிலே போய் வீரபாண்டியனுடைய தலையைக் கொய்தான். ஆனால், தலையைக் கொய்த ஆதித்திய கரிகாலனை 5 பேர் சேர்ந்து கொன்றுவிட்டார்களே! 5 பேரும் சேர்ந்து தனிப்பட்ட முறையில் ஓர் அறையில் ஆதித்திய கரிகாலனைக் கொன்று விட்டார்கள். மறந்து விடக்கூடாது. ஓர் அரசனை - அரசன் மகனை. மூத்த இளவரசனை 5 பேர் சேர்ந்து கொல்ல முடிந்தது. சோழர் காலத்தில். அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்தது சுந்தரசோழன். அடுத்தது பிறங்கடையாக இருக்கின்ற

உத்தம சோழன். ஆனால், உத்தம சோழன் ஆட்சியிலிருந்த வரைக்கும் இந்த 5 பேருக்கும் எந்தத் தண்டனையும் வழங்கவில்லை. மறந்து விடக்கூடாது. நாம் எப்படியெல்லாம் வழுவி இருக்கிறோம். எந்தத் தண்டனையும் வழங்கவில்லை இந்த 5 பேருக்கும். என்ன காரணம் அவர்கூட இருப்பவர்கள் தண்டனை வழங்க வேண்டாம் என்கிறார்கள். கூட இருப்பவர்கள் இராச குருக்கள். உங்களுக்கு விளங்கி யிருக்கும் என்று நினைக்கிறேன். அந்த 5 பேருக்கும் தண்டனை வழங்க வில்லை. பிறகு இராசராசசோழன் ஆட்சிக்கு வந்தபிறகு. தன் அண்ணனைக் கொன்றவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறான். தண்டனை என்ன தெரியுமா? அந்த மண்ணிலே! ஒரு சூத்திரன் ஒருவனைக் கொன்றால், அவனுக்கு மரண தண்டனை. ஆனால், ஒரு பிராமணன் ஒருவனைக் கொன்றால் அவனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்து அடுத்த ஊருக்கு அனுப்பி வைப்பது. சொத்துகளைப் பறிமுதல் செய்வதுதான் தண்டனையே தவிர, மரண தண்டனை அன்று. இது இராசராச சோழன் காலத்திலேயே நடந்திருக்கிறது!

அண்ணா அவர்கள் "தஞ்சையின் வீழ்ச்சி" என்ற கதை எழுதியிருக்கிறார். படித்துப் பாருங்கள்! அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு ஆழமாகச் சிந்தித்து எழுதியிருக்கக் கூடும். 1646 இல் மராட்டியர்கள் இந்த நாட்டை ஆளக்கூடிய வாய்ப்பே கிடையாது. ஆனாலும் வெங்கண்ணா என்பவன் வேலை மெனக்கெட்டுப் போய், வெங்காஜி என்பவனைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து, இருக்கிறவனைக் காலி பண்ணி விட்டு, ஆட்சியில் அமர்த்தினான். பிறகு மராட்டியர் ஆட்சி வருகிறது. எனவே, ஒவ்வொரு முறையும், யாராவது கவிழுவதற்கும், இன்னொரு பிற மொழியாளர் வருவதற்கும் யாரோ ஒருத்தர் தூண்டுதலாக இடையிலே இருந்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய ஆற்றல் படைத்த மன்னர்கள் அந்த இடத்தைக் கவனிக்கத் தவறி விட்டார்கள். இவன் தவறு செய்கிறான் என்றால் - உடனே தண்டித்து இருந்தால், அந்தச் சிக்கல் தீர்ந்திருக்கும். தண்டிக்காமல் சொத்து பறிமுதல் செய்து, அடுத்த ஊருக்கு அனுப்பி இருந்தால், அடுத்த ஊரிலும் அதே வேலையைப் பார்த்துக் கொண்டேயிருப்பான். எனவே, இப்படிப் பட்ட பல நிலைகளில், அவ்வளவு கேவலங்கள் நடந்திருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. நாம் எத்தனையோ முறைகள் வீழ்ச்சியடைந்திருக்கிறோம். நான் சொல்வது, இந்த 21 ஆம் நூற்றாண்டிலாவது நாம் மொழியால் இனத்தால் நமக்குக் கிடைத்திருக்கின்ற அறிவியல் ஏந்துகளால் ஒருங்கிணைந்து நின்று, ஓரினமாக வாழவேண்டும். இந்த நாட்டுச் சூழலுக்கேற்ப, நீங்கள் முடிவெடுக்கிறீர்கள் என்பதற்காக, தமிழ்நாட்டுக்காரர்கள் அதைப் போல முடிவு எடுக்க முடியாது. தமிழ் நாட்டுக்காரர்களைப் போல நீங்களும் எடுக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் இங்கு 3 ஆவது இடத்தில் இருக்கின்றீர்கள். அதிலே தமிழர் தலைவர் இருக்கிறார்; நம்முடைய அமைச்சராக இருக்கிறார்; நீங்கள் சொல்லுகின்ற முடிவுகளை அவர் ஏற்றுக்கொள்பவர்; அவர் எடுக்கும் முடிவுகளை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். இங்கே இருக்கின்ற நிலைமைகள் வேறு. ஆனால், ஒட்டு மொத்தமாக, தமிழ் இனம் என்பது ஒருங்கிணைந்து இருக்க முடியும் என்று சொன்னால், இது போன்ற அறிஞர்களால்,

அறிஞர்களின் எழுத்துகளால் தான் ஒருங்கிணைந்து இருக்க முடியும். அதை முன் நிறுத்துவது தமிழ். அதனுடைய பழைய பெருமைகள்; புதிய சிறப்புகள் எதை எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியுமோ அதையெல்லாம் ஏற்று இப்படிச் செய்யுங்கள் என்ற புதிய வழிகாட்டிகள் - புதிய அகராதிகள் - அந்த அகராதியில் புதிய சொற்களை உருவாக்குங்கள்! இத்தனையும் பயன்படுத்துகிற போது அது உங்களுக்கு வந்து சேருகிறது; எங்களுக்கும் வந்து சேருகிறது. நீங்கள் ஒரு புதுச் சொல்லை உருவாக்கினால், அதை நான் பயன்படுத்துகிறேன். மலேசியாவில் இப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நானே மேடையில் சொல்வேன். சிங்கப்பூரில் "அணிமணிப் பொற்சாலை" என்று சொல்வார்கள். நானே அதை மேடையில் சொல்கிறேன். பிறகு அங்கே, 4 பேர் "அணி மணிப் பொற்சாலை" என்று எழுதுகிறார்கள். எனவே, இங்கே இருப்பதை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம். அங்கே இருப்பதை நீங்கள் வாங்கிக் கொள்கிறீர்கள். இந்த உறவுதான் தேவை. இது வலிமைப்பட வேண்டும். இது வலிமைப்பட வேண்டுமென்றால், பாவாணருடைய அறிவாற்றல் நமக்குத் தேவைப் படுகிறது.

தமிழ்நாட்டில் பல பொய் முகங்கள் உண்டு. அதை மெல்ல மெல்ல நீக்குவதற்கு முயலுவோம்; செய்வோம்! ஓர் எடுத்துக் காட்டுக்கு மட்டும் சொல்கிறேன். தமிழ் ஆட்சிமொழி என்பதற்குச் சட்டம் போடுகிறோம். அதை எப்படி நாங்கள் செயற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்கிறேன். 1956 இல் சி. சுப்பிரமணியம் சட்டம் போடுகிறார் - காமராசர் காலத்தில். ஆனால், பேச்சில் காமராசர் 4 வரிகள் பேசியதாக எங்கேயும் கிடையாது. அதை விட்டுவிடுவோம்! அது அவருடைய இயல்பு! சி. சுப்பிரமணியம் பேசுகிறார்! இது வாழ்நாளில் பெருமைக்குரியது என்று பேசுகிறார்! ஆனால், 1957 இல் (19.1.1957) அரசாணை முதலில் பிறப்பிக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் அப்போதுதான் கையொப்பமிட்டார் - ஏற்றுக் கொண்டார் சட்டத்தை. அங்கேதான் அரசாணை பிறப்பிக்க வேண்டும்; இந்தத் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு ஒரு குழு போடப்படுகிறது. இத்துறைக்கு இவ்வளவு தட்டச்சுப் பொறிகள் வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இது தானுங்க செய்தி! பெரிய செய்திகள் எல்லாம் இல்லை. சின்னச் சின்னச் செய்திகளாகத்தான் இருக்கும். ஆனால், இந்தச் செய்திகளையே ஆங்கிலத்தில்தான் வெளியிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் தலைமையில், தமிழ்க்குடிமகனும் காரைக்கிழாரும், கோவலங் கண்ணனாரும் உறுப்பினர்களாக இருந்து. இதைச் செயற்படுத்துவார்கள் என்று சொல்வதற்குத் தமிழில் திறமை இல்லையா? அதை ஆங்கிலத்தில் பிறப்பிக்கிறார்கள். எத்தனை ஆண்டுகள் 1966 வரைக்கும். நான் என்ன கேட்பேன்! சி. சுப்பிரமணியம் இதைக் கவனிக்க வில்லையா? ஏன் சி. சுப்பிரமணியம் அவர்களின் கவனத்திற்கு வரவில்லை. நான் இருக்கும் போது மாற்றம் நடந்தது. அரசாணைகளைத் தமிழில் பிறப்பிப்பதற்குக் கடுமையாகச் செய்தோம். நிதித்துறையில் எப்போதும் அரசாணைகளைத் தமிழில் வெளியிட மாட்டார்கள்! நிதித்துறை எவனைப் பற்றியும் கவலைப்படாத ஒரு துறை! ஆங்கிலத்தில் வெளியிடுவார்கள்! நான் சொல்லி விட்டேன்! ஒழுங்காக

வெளியிட வில்லை என்றால் நடக்கிறதே வேறு! என்று சொன்ன பிறகு பல பக்கங்களைக் கொண்ட ஓர் அரசாணையைத் தமிழில் முதலில் வெளி யிட்டார்கள் இதழில் போட்டான்! "தமிழ் நாட்டிலேயே நிதித் துறையில் முதன் முறையாகத் தமிழில் ஓர் அரசாணை வெளிவந்தது!" என்று. முயன்றால்தான் முடியும், நான் 100 க்கு 100 வெற்றி அடையாமல் இருந்திருக் கலாம். ஆனால், கடும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமன்று. கடுமையான மாற்றங்களைச் செய்திருக்கிறோம். இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஓடுகின்ற பேருந்துகளில் தமிழில் எழுதியிருக்கிறோம். பாருங்கள் த.நா. என்று இது. கேரளத்தில் இல்லை. தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. ஆனால் என்னால் கட்டாயப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் நடுவணரசுச் சட்டம்! Central Act. அதில், வாகன ஓட்டிகள் விரும்பினால் என்று ஒரு வரியைப் போட்டதுதான் தொய்வு. If the owner desires என்று நடுவண் அரசு ஆணையில் உள்ளது. ஏனென்றால் நான் கட்டாயப்படுத்த முடியாது. கட்டாயப்படுத்த வேண்டும் என்றால் நடுவணரசு சட்டத்தைத் திருத்த வேண்டும்! நாங்கள் அதிலுமல்லவா மாட்டிக் கொண்டிருக்கிறோம். இங்கேயிருந்து நடுவணரசுக்குப் போகிறவர்களாவது தமிழுக்கு ஏதாவது செய்கிறார்களா? நான் ஒட்டுமொத்தமாகவே, குற்றஞ்சாட்டுகிறேன். இங்கேயிருந்து போனதோடு சரி! அவர்கள் பெயரை எல்லாம் சொல்லிக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் மேடையிலே பேசுவதோடு சரி! தீர்மானம் நிறைவேற்றுவதோடு சரி! அங்கே போன உடனே அதை ஒட்டு மொத்தமாகத் தூக்கி விடுவது; ஆனால் கர்நாடக மாநிலத்திலிருந்து ஓர் ஆனந்தகுமார் இருந்து, அந்தக் கருநாடக மாநிலத்திற்கு எல்லா நன்மைகளையும் தொடர்ந்து செய்வதற்கான வாய்ப்பை அவர் பெற்றிருக்கிறார். நாம் 9 பேர் இருந்தும் இந்தத் தமிழுக் கான பணிகளில் செம்மொழி ஆக்குவது பற்றி மத்தியில் ஆட்சி மொழி யாக்குவது பற்றி எனப் பல பணிகள் இருந்தும் எந்தப் பணியையும் நிறைவேற்றவில்லை. அதிலேயும் எங்களுக்கு வருத்தங்கள் உண்டு. எல்லாத் தரப்பிலிருந்தும் எல்லாக் கட்சியிலிருந்தும் என்ன ஆயிற்று என்றால் எனக்கு வாய்ப்புக் கிடைக்கிற வரைக்கும் நான் வானளாவப் பேசுகிறேன். எனக்கு மட்டும் வாய்ப்புக் கிடைத்தால் - என்று அறை கூவலே விடுகிறேன். நீங்கள் கூடச் சில பேர் நினைப்பீர்கள். என்ன ஐயா பேசுகிறான்! நம்ம கிட்டே விட்டாலல்லவா தெரியும்! அப்படி என்று சில பேர் கீழே இருந்து கொண்டு நினைப்பீர்கள். கீழே இருந்து பாதுகாப்பாக உட்கார்ந்து கொண்டு நினைக்கிறது தானே! அப்புறம் மேடையிலே விட்ட பிறகு தானே தெரியும்! இப்படிப் பார்த்தால் இந்த ஒலிவாங்கி லொட லொட என்று ஆடும். அது ஆடவில்லை. உங்கள் கை ஆடுகிற ஆட்டம், அது ஆடுகிறது. எனவே, கீழே இருந்து நினைப்பது வேறு; சொல்வது வேறு; அங்கே அரங்கத்திற்கு வந்த பிறகு தானே உண்மை தெரியும்! வாயைத் திறந்தால் தானே வருவது தெரியும். எனவே, பாவாணர் போன்றவர்கள் இதிலே நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்றால், அருள் கூர்ந்து அவர் சொன்னதை, அப்படியே படித்துச் சொல்ல விரும்புகிறேன்! 'பிராமணர்

அன்றும் இன்றும் சிறுபான்மையராதலின் - அவர்கள் சிறுபான்மையர்கள் தான். நீங்கள் ஏன் போய் அவர்களையே திட்டிக் கொண்டிருக்க வேண்டும்? நீங்கள் சரியாக இருந்தால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அதுதான் உண்மை! அவர்கள் ஒன்றும் செய்ய நினைக்கவில்லை. நீங்கள் இடம் கொடுக்கிறீர்கள்! வந்து விடுகிறது; பிராமணர்கள் அன்றும் இன்றும் சிறுபான்மையராதலால் அவர்களால் தனிப் பட்ட ஒரு கேடும் இல்லை. தமிழ் கெட்டதற்கும். தமிழர் தாழ்ந்ததற்கும் தமிழனே காரணம்!' பாவாணருடைய கருத்து என்னவென்று தெரிய வேண்டும் பாருங்கள்! இந்த இரண்டுக்கும் இவன் தான் காரணம்! நான் கேட்கிறேன்! ஏன்! பாவேந்தர் கேட்டாரே ஏன் ஒரு கூட்டம் போய்க் கோயிலில் நின்று பிறமொழிக் கூச்சலைத் தடுத்து நிறுத்தக் கூடாது; ஏன் ஒரு கூட்டம் தெருக்களில் சென்று விளம்பரப்பலகை களைத் தமிழில் மாற்றியமைக்கச் சொல்லி வற்புறுத்தக் கூடாது. அதுதான் தமிழியக்க நூல் "கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க! கடல் போலும் எழுக! கடல் முழக்கம் போல் கழறிடுக தமிழ் வாழ்க" என்று சொன்னவர் அவர். "வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்? மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச் சொல்ல வேண்டும்!!" சொன்னானா இவன்! இப்போது பெரும்பாலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், தொடக்கத்தில் அப்படி எண்ணம் வரவில்லை; கேட்கப்படவில்லை! சொல்லப்படவில்லை; அரசு வந்த பிறகு, ஆணையில் கை வைப்போம்; உரிமத்தில் கை வைப்போம் என்று சொன்ன பிறகுதான் அவனும் பலகையில் கை வைத்தான். அது உண்மை. ஏனென்றால் அச்சமே கீழ்களது ஆசாரம் அதனால் அடித்தால் தான் நடக்கும்!

தமிழ் நெறிக் கழகத்திலுள்ள பிள்ளைகளுக்கெல்லாம் பெயரைத் தமிழில் வைத்திருக்கிறோம். வந்த உடனே டத்தோஸ்ரீ பின்னாலுள்ள எல்லாப் பிள்ளைகளின் பெயர்களையும் கேட்டார். இயல்பாக, அவர்கள் பெயர்களைச் சொன்னவுடன், அவருக்கு எவ்வளவோ மகிழ்ச்சி; எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி! இதற்கு நாங்கள் அரசாங்கத்தில் சட்டம் போட்டால்தான் வைப்பீர்களா? சட்டம் போட்டுத்தான் வைக்க வேண்டுமென்றால் அது நடக்குமா? இப்போதும் சிலபேர் பெயர்களை மாற்றுகிறார்கள்! இருளப்பன் என்றிருக்கும். அதிலே இரண்டு 'ஞ' போட்டிருப்பார்கள். அது வாஸ்துப்படி ஜோசியப்படி சரியில்லையாம். அதிலே 4 'ஞ' போடுவான். இருளப்பன் அவ்வளவு அழுத்தமாக வந்து பணியாற்றுகிறானே! அதற்குத் தான் பெயர் மாற்றுகிறானே தவிர வடமொழிப் பெயருக்குப் பதில் தமிழ்ப் பெயராக மாற்ற வேண்டும் என்பது போய் விட்டது. அதனால் "தமிழ் நலமும், தமிழர் நலமும் கருதாது தன்னலமே கருதும் கோடரிக் காம்புகளும்" எனத் தமிழர்களைப் பற்றிச் சொன்னது அது தான். தமிழ் நலமும் தமிழர் நலமும் கருதாது தன்னலமே கருதும் கோடரிக் காம்புகளும் இருதலை மணியன்களும் சுவர்ப் பூனைகளாயிருந்து பாழ்செய்யும் முத்திற உட்பகையை முதலில் விலக்க வேண்டும். எனவே, உட்பகையை நீக்கி, நாம் உள்ளத்தில் தமிழை இயக்கி

வைக்க வேண்டும். ஏனென்றால், உள்ளபடியாக நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. என்னுடைய தாய்மொழி என்பதற்காகச் சொல்ல வில்லை, உங்களுடைய தாய்மொழி என்பதற்காகச் சொல்லவில்லை. எத்தனை சங்க இலக்கியங்களை எல்லாம் படிக்கும்போது எவ்வளவு ஆழமாகச் சிந்தித்திருக்கிறார்கள். சிலப்பதிகாரத்தைப் பார்க்கும்போது எத்தனை அற்புதமான வரிகள்! மாதவி கடற்கரையில் இருந்தபோது கானல் வரி பாடப்படுகிறது. அதெல்லாம் முடிந்து, கதை எல்லாம் முடிந்து விடுகிறது. பிறகு கனக விசயர் தலைக்குக்கல் செல்கிறது. ஆனால் எப்படி இணைக்கிறார் பாருங்கள்!

"எங்கோ மாதவி பாடிய கானற்பாணி
கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது"

கதையை இரண்டே வரிகளில் சொல்லி விட்டான். இவள் பாடிய கானல்வரிப் பாடலால் ஏற்பட்ட விளைவுதான் கனக விசயர் தலைக்குக்கல் வந்ததற்குக் காரணம்! இடையிலே கதை எல்லாம் நிறைய நடக்கிறது. ஆனால், இரண்டு வரிகளில் கதையைச் சொல்ல முடிகிறது. அதனாலேயே பாரதியாரும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றார். பாரதியினுடைய உள்ளம் என்று சொல்கிற போது பாவேந்தரே என்ன சொல்கிறார். பாரதியாரை அந்த இடத்தில் பார்க்க வேண்டும். உள்ளபடியே நான் சொல் கிறேன். எந்தத் தன்னலமும் அற்று, நாங்களெல்லாம் நூல்கள் போடுகிறோம் என்று சொன்னால், இளவழகனையே சொல்கிறேன். நூல்கள் போடவேண்டும் என்றால் அவை விற்கவேண்டும். ஏனென்றால் விற்பனைக்கான களத்தையும் அவர் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், பாரதியார் காலத்தில் அப்படி அன்று. அவர் எழுதித் தள்ளினார். நமக்குச் செய்தி சொன்னாரே தவிரப் பிழைக்கத் தெரியவில்லை. உள்ளபடியே நான் நினைத்து வியப்படைவேன்! எந்த வகையிலும் பிழைக்கத் தெரியாதவர்! ஆனால் அவருடைய உணர்ச்சி ... இன்றைக்குச் செய்தித்தாளில் பார்க்கிறோம். சண்டையை விலக்கப் போனவர் குத்துப்பட்டுச் சாவு என்று; சண்டையில் இருந்தவன் குத்துப்பட்டுச் சாகவில்லையாம்! சண்டையை விலக்கப் போனவர் சாவு ! அடுத்த தடவை விலக்கப் போவானா இனிமேல் ! இடையே நம்ம வீட்டிலே "இந்த வம்புச் சண்டைக்குப் போனேன்; அங்கே போனேன் என்றெல்லாம் வரக்கூடாது. ஒழுங்கா போனீங்களா! வந்தீங்களா, மரியாதையாக வந்திடுங்க" என்று தான் சொல்வார்கள் வீட்டில்! அப்போது அவர்களுடைய அறிவுரை தானே சரி! உங்களைப் போய் வா மகனே போர்க்களத்திற்கு அப்படீன்னு சொல்கிறமாதிரியா இருக்கிறது! அது அப்போது; இப்போது சொல்ல முடியாது! நிலைமை அப்படி செய்திகள் வரும்போது. நாம் என்ன நினைக் கிறோம்! சரி! எது எக்கேடு கெட்டாலும் நாம் அதில் ஒரு தெளிவாக இருக்க வேண்டும். முன்பின் எது என்பதுதான் குழப்பமே. ஒரு பெண்ணைப் பார்த்து ஒருவன் கேட்கிறான். ஏங்க உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? இரண்டு குழந்தைகள். அப்படியா திருமணமாகிவிட்டதா? ரொம்ப மென்மையாகத் தான் கேட்கிறான். ஆனால் கேட்பதை இப்படியா கேட்பது? முதலில் அதைக் கேட்டு விட்டுத்தானே இதைக் கேட்க

வேண்டும். நீ முதலில் அதைக் கேட்டுவிட்டு இதைக் கேட்டிருந்தால் சரி. இது முரண் இல்லையா உங்களுக்கு? அப்போது அந்தப் பெண்ணின் அடிப்படைப் பண்புகளைப் பாதிக்கிறதல்லவா? ஒரு கேள்வியிலேயே பாதிப்பு இருக்கிறது! எனவே, எல்லாவற்றையும் பார்த்துப் பழகுகிற நிலையில் நாம் தமிழர்களாக நிற்கிறோம். அதற்கான கருவி நூல்கள் தான் இவை. எனவே, இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு செயலாற்றுவீர்கள் என்று சொன்னால், உள்ளபடியே இன்னும் 20-30 ஆண்டுகளில் கணினித் துறையில் இணையத் துறையில் - மின்னஞ்சல் துறையில் - இன்னும் பல்வேறு துறைகளில் - பாடநூல் துறையில் எல்லா வற்றிலும் நாம் மேலோங்கி நின்று, மீண்டும் தமிழ் உலகத்திற்கு வழிகாட்டும் என்பதை நாம் நம்பிக்கையோடு ஏற்கலாம். அப்படி வழிகாட்டுகிறபோது; என்னைக் கேட்டால், தமிழ்நாடு வழி காட்டியது என்பதைவிட மலேசிய நாடு வழிகாட்டியது; சிங்கப்பூர் வழிகாட்டியது; ஈழம் வழிகாட்டியது என்ற பேரை நீங்கள் பெற வேண்டும். அதிலே எங்களுக்கு வருத்தம் கிடையாது. ஏதோ என்னால முடியா விட்டாலும், அவனாவது ... அப்படித்தான் நான் நினைப்பேன்! அங்கேயுள்ள பல்வேறு குழப்பங்களுக்கிடையில் நீங்கள் நினைத்தால் முடியும். உங்களுக்கு என்று முழு வாய்ப்பு இருக்கிறது. சூழல் இருக்கிறது. எனவே, இந்த மலேசிய மண்ணில் விதைக்கப்படுகின்ற இந்த விதை மிகப்பெரிய ஆல மரமாக வளர்ந்து, காலங்காலத்திற்கு எல்லோர்க்கும் நிழல் தரவேண்டும்.

**"இன்றேனும் கலையட்டும் தூக்கம்; நாட்டில்
இனியேனும் பெருகட்டும் ஆக்கம். வாழ்வில்
ஒன்றேனும் நல்லதையே செய்வோம். தாயாம்
ஒண்டமிழ்க்குப் பகைவர் தலை கொய்வோம். அன்னை
என்றேனும் அரியணையில் ஏறும்; காட்சி
எப்படியும் வந்தேதான் தீரும்! நாமே
நன்றாய்ந்து தீதகற்றிச் செல்வோம்; எந்த
நாள்வரினும் கொள்கைதனில் வெல்வோம்! வாழ்க!"**

**நன்றி!! வணக்கம்!!!**



மாண்புமிகு டத்தோஸ்ரீ சாமிவேலுவுடன்....

2

# நெஞ்சையள்ளும் சிலம்பு

## கிள்ளான் - 28.11.2002

தமிழகத்தில் இதுவரைக்கும் சாதிக்க முடியாத அளவிற்கு, ஒரே நேரத்தில் 53 நூல்களையும் தமிழகத்திற்கும் தமிழ் பேசுகின்ற 39 நாடுகளுக் கும் வாரி வழங்கிய அருமை நண்பர் இளவழகன் அவர்களே! வருகை தந்திருக்கின்ற பெருமக்களே! உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும் சில செய்திகளை நீங்களும் நானும் சேர்ந்து சிந்திப்பதிலும் நான் மகிழ்ச்சி யடைகிறேன். பொதுவாகவே, இது போன்ற நிகழ்வுகளில் தலைப்பில்லா மல் பேசுவது தான் எப்போதுமே நல்லது. அது தான் பாதுகாப்பானதும் கூட. காரணம், உங்களுக்குச் சொல்ல வேண்டிய சில செய்திகளை நான் ஒரு குறிப்பிட்ட தலைப்புக்குள் மட்டும் நின்றால், சொல்ல முடியாமல் போய் விடும். அதிலும் குறிப்பாக, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகிறபோது, தமிழைப் பற்றிச் சொல்லுகிறபோது முன்னம் பிறந்த மொழி என்று சொன்னான். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி; இன்றைக்கு எத்தனையோ மொழிகள் உலகத்தில் இருக்கின்றன. மலேசியாவில் பல மொழிகள் இருக்கின்றன. அதிலும் இந்தியாவில் தான் அதிக மொழி களைப் பார்க்கலாம். எவ்வளவு என்றால் 28 க்கும் மேற்பட்ட மாநிலங்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மொழி என்ற அந்த அளவிற்குப் பல்வேறு மொழிகளைக் கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதே நேரத்தில் உலகத்தின் 130 கோடி மக்களைக் கொண்ட சீன நாட்டில், 94 விழுக்காட்டினர் சீன மொழி பேசுகிற மக்கள் தான். அவர்கள் தான் இங்கேயும் பரவியிருக்கிறார்கள். சிங்கப்பூரிலும் பரவியிருக்கிறார்கள். எனவே, அவர்கள் தங்களுடைய மொழியைப் பேணுகிற அந்தச் சூழல் சிறப்பானது. ஒரு காலத்தில் தொன்மை மொழிகள் என்று சொன்னால், கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முந்தைய மொழிகள் என்று சொன்னால் ஆறே ஆறு மொழிகள் தான். ஒன்று தமிழ்; மற்றொன்று சீனமொழி மூன்றாவதாக சமற்கிருதமொழி; நான்காவதாக இலத்தீன் மொழி; ஐந்து கிரேக்க மொழி; ஆறாவது, இன்றைக்கு இசுரேல் என்று ஒரு நாடு இருக்கிறதல்லவா? அங்கே பேசப்படுகிற ஈப்ரு மொழி (பாவாணர் தமிழில் எபிரேயம் என்று சொல்வார்). இப்போது எல்லாமே வழக்கில் இருக்கிறதா என்றால் இல்லை. சமற்கிருதம் சொற்களிலே கலந்து இருக்கிறதே தவிர யாருடைய பேச்சு வழக்கிலும் இல்லை. கிட்டத்தட்ட அது இறந்துபோன மொழி It is a dead language என்று சொல்லக் கூடிய அளவில் தான் சூழ்நிலை இருக்கிறது. அதே போல இலத்தீன் மொழியும்

இப்போது பேச்சு வழக்கில் குறைவுதான். அந்த இலத்தீன் சொற்கள்தான் பெரும்பாலும் ஆங்கிலச் சொற்களில் மாறி இருக்கின்றன என்பதை நீங்கள் என்றைக்காவது ஒருநாள் வாய்ப்புக் கிடைத்து - உரோமாபுரிக்குச் சென்று தெருக்களில் போனால் அந்த இலத்தீன் சொற்களைப் பார்க்கும் போது ஓ இது தான் ஆங்கிலத்தில் இப்படி வந்திருக்கிறது என்று உடனே பளிச் சென்று தெரிந்து விடும். எனவே, அதுவும் வழக்கில் இல்லாத மொழியாகி விட்டது. இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம். இதிலே எனக்கு வியப்பு என்னவென்றால், இந்த ஈப்ருக்காரர்களுடைய செயல்தான். கிட்டத்தட்ட அதுவும் இறந்து போன மொழிதான். ஆனால், அந்த யூதர்கள் ஒரு வேகத்தில் - ஒரு வெறியில் - ஒரு சிறிய நாட்டை ஆங்கிலேயர்களின் உதவியோடு. அமெரிக்கர்களின் உதவியோடு அமைத்துக் கொண்டார்கள். அது பாலத்தீனத்திற்கு ஒட்டியிருக்கும் நாடு. அங்கே இப்போது கலவரம் எல்லாம் நடந்து கொண்டேயிருக்கிறது. அந்த நாட்டில் யூதர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நாட்டை அமைத்தனர். கிட்டத்தட்ட ஆறே ஆறு மாவட்டங் களைக் கொண்டதுதான் அந்த நாடு; சின்ன நாடு. ஆனால் இறந்துபோன மொழியை மறுபடியும் மீட்டுருவாக்கி உயர்கல்வி வரைக்கும் - நான் சொல்வது பொறியியல் மருத்துவம் வரைக்கும் ஈப்ரு மொழியில் சொல்லிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் வ்ளர்ந்திருக்கிறார்கள். எனவே ஓர் இறந்து போன மொழியைக் கூட ஓர் இனம் நினைத்தால் அதை மீட்டு உருவாக்க முடியும். உயர்கல்வி வரைக்கும் கல்வி மொழியாக்க முடியும். அனைத்து அலுவலகங்களிலும் ஆட்சி மொழியாக்க முடியும். அந்த மொழியை ஆராய்ச்சி செய்வதற்காகத் தான் நான் போகலாம் என்றிருந் தேன். ஆனால் அங்கே இருப்பவர்கள் எல்லாம் கடிதம் எழுதி விட்டார்கள். “நீங்கள் வந்தால் திரும்புவது கடினம்” என்று. அது உண்மை நிலையும் கூட. அங்கே இன்னும் சிக்கல்களெல்லாம் இருக்கின்றன. அதற்கு மாறாகத்தான் சீனாவிற்குச் சென்று அந்த மொழியை ஆய்வு செய்யக் கூடிய வாய்ப்புப் பெற்றுத் திரும்பி வந்தேன். வந்த உடனே, இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வரவேண்டியிருந்தது. ஏற்கெனவே வந்து கிளானில் பேசி விட்டுப் போனேன் என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே - பெரிய அளவிலே இலக்கியப் பேருரை பற்றிப் பேசினோம். அந்தப் பேச்சைக் கேட்பதற்காக நம்முடைய டத்தோ அவர்களே அங்கிருந்து வந்து கேட்டுவிட்டுத் திரும்பிப் போனார்கள். எனவே இந்த முறையும் அவர்கள் தலைமையில் 26.11.2002 அன்று இந்த விழா நடந்தபோது ஏற்கெனவே பேசிய பேச்சிலிருந்து மாறுபட்டு, பேசுகிறபோது அவர்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஏனென்றால் உலகளாவிய சிந்தனைகள், தமிழியக்கச் சிந்தனைகள் பற்றிப் பேசினோம். எனவே, அந்த நிலையில் அவரே சொன்னது போல, நம்முடைய மொழி முன்னர் பிறந்த மொழி; வழக்கில் முழு வீச்சிலிருக்கிற மொழி. நான் ஒரு மணிநேரம் பேசுகிறேன் என்று சொன்னால், எந்தப் பிறமொழிச் சொல்லும் இராது. ஏனென்றால் அந்த அளவுக்கு எனக்குப் பயிற்சி. 1957 லிருந்து தொடங்கி, ஒரு 45 ஆண்டுகாலத்தில், இன்னும் சொல்லப்போனால் சட்டமன்றத்திலே விறுவிறுப்பாக ஒரு மணிநேரம் பேசினாலும் கூட எங்கேயும் பிறமொழிச்சொல் இருக்காது. பதற்றப்

பட்டுப் பேசிவிட்டார் என்ற வேலையே கிடையாது. எனவே முடியும் - நம்முடைய மொழியால் நம்மால் பேச முடியும். நாம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர என்னால் முடியாது; தமிழால் முடியாது என்று சொல்லுவது அதைப்போல ஒரு கையாலாகாத்தனம் வேறு எதுவும் கிடையாது. எனக்கு முடியவில்லை என்றால் முடியவில்லை என்று போய் விட வேண்டும். இது தமிழால் முடியாது என்று எவனாவது சொன்னால் அவன் பேதை என்பது மட்டுமன்று. அவன் பேடி என்றுதான் சொல்ல வேண்டும். தமிழால் முடியும். எதுவும் முடியும். நான் இதைக் குறிப்பிடு வதற்குக் காரணம். பொறியியல் வரைக்கும் தமிழைக் கொண்டு வர எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம். அனைத்து நூல்களும் வெளியாகி இருக் கின்றன. நடுவணரசோடு நாம் மாட்டிக் கொண்டிருக்கிற காரணத்தால் தான் சில சிக்கல்கள். இல்லையென்றால் இந்நேரம் வந்திருக்கும். மருத்துவம் என்பது தமிழில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னாலேயே ஈழ நாட்டில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தமிழில் கிரீன் என்பவர் ஏற்கெனவே மருத்துவ நூலைத் தமிழிலே எழுதி அங்கே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவுங்க ஒழுங்காத் தான் இருக்கிறார்கள். நாமதான் ஒழுங்காக இல்லை. என்றாலும் அப்படிப்பட்ட நிலையிலும் இன்றைக்கு நம்முடைய சமூகப் பண்பாடு குறித்து இங்கே பேசக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது பற்றி உள்ளபடியே பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். படங்களை எல்லாம் பார்க்கிறேன். திருவள்ளுவர். அதாவது 1330 அருங் குறளைப் பாடினாலும் எந்த இடத்திலும் 'தமிழ்' என்ற சொல்லையோ, 'தமிழன்' என்ற தன்னுடைய இனத்தையோ காட்டாத ஒரு பொது மனிதர். ஆனாலும் தமிழுக்கு உரியவர். ஆனாலும் இவை எல்லாவற்றையும் சேர்த்து நாம் உலகுக்குத் தந்த பெருமை அவருக்கு உண்டு. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு என்று சொல்ல வில்லையா! அதைப்போல உலகமெங்கும் இன்று அறிமுகப்பட்டவர். பைபிளுக்கு அடுத்து - குரானுக்கு அடுத்து - அதிகமாக உலகத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் ஒன்று உண்டு என்றால் அது திருக்குறள் தான். எனவே அதையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நீண்ட காலத்திற்கு முன்னாலேயே ஜி.யூ.போப் போன்றவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுவிட்டார்கள். எனவே, எந்த நாட்டிற்குப் போனாலும் நம்முடைய மொழி பெயர்ப்பைப் பார்க்கலாம். அப்படிப்பட்ட சிறப்புக்குரியவர்; அதை இன்னொரு தடவை பார்ப்போம். பக்கத்திலே வள்ளலார். உங்களுக்குத் தெரியும். உண்மையிலேயே வாழ்க்கைக்கு ஓர் அருமையான நெறி காட்டியவர் வள்ளலார். அவர் சொல்லுவார்.

**ஒருமையுடன் நினது திரு அடிமலர் நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்;**
**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்;**
**மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் - உனை**
**மறவாதிருக்க வேண்டும்;**

பெருமை பெறும் நினதுபுகழ் பேசவேண்டும் - பொய்மை
பேசாதிருக்க வேண்டும்

என்று அருமையான பாடல். மிகச் சிறப்பாக. அதுமட்டுமல்ல, அவர் பாடுகிறபோது திருவாசகத்தைப் புகழ்ந்து பாடுவார். வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் - இந்தக் கலந்து என்பதில் (நான் வகுப்பு எடுத்துப் பழகியவன் என்பதால் அதை விளக்கிச் சொன்னால் ரொம்பப் போய்க்கொண்டே இருக்கும்) கபிலருக்கும் பாரிக்கும் எப்படி நட்பு என்று சொன்னால் கலந்த கேண்மை என்றார். நட்பிலேயே ரொம்பக் கலந்து நிற்கின்ற நட்பு. அதுதான் இங்கேயும் வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால். அதாவது சில பேரு புத்தகத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டேயிருப்பார்கள்; மனசு எல்லாம் வேற இடத்தில் இருக்கும். புத்தகத்தைப் பார்த்துப் படிக்கிறமாதிரி நமக்குத் தோன்றும். ஆனால் இங்கே இருக்காது. மனம் வேற இடத்தில் ஊரை மேய்ஞ்சுக்கிட்டு இருக்கும். மனக்குரங்கு அதுதான். எனவே நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினில் தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர்கலந்து. எத்தனை கலந்து இவ்வளவு கலந்தாலும் அது உவட்டாமல் இனிப்பது இவ்வளவு கலந்தாலும் திகட்டாது அது உங்களுக்கு. ஆனாலும் திருவாசகம் என்பது அப்படி உவட்டாமல் இனிக்கின்ற அற்புத மணிகளை உடையது. அதனால்தான் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த ஜி.யு.போப் திருவாசகத்தை மொழிபெயர்த்தார். அதை மறந்து விடக்கூடாது, நீங்கள். இன்னொரு சமயத்தைச் சார்ந்தவன் தன் சமயத்தைச் சார்ந்த நூல்களை மொழிபெயர்க்கலாம், அல்லது பொதுவாக உள்ளவற்றை மொழிபெயர்க்கலாம். திருக்குறளை மொழிபெயர்த்தால் அது பொது; நாலடியாரை மொழிபெயர்த்தால் அது பொது. ஆனால் திருவாசகம் ஒரு சமயச்சார்பான நூல். முற்றிலும் சைவ நூல். சிவனைப் பாராட்டிப் பாடப்படுகிற நூல். ஆனாலும் அதை விரும்பி ஏற்று அதனால் கவரப்பட்டு, ஜி.யு. போப் மொழி பெயர்க்கிறார் என்றால் அதுதான் திருவாசகத்தின் சிறப்பு. "பக்கத்திலே விவேகானந்தர் படம். விவேகானந்தர் சொல்லுவார் என்னிடத்தில் ஒரு நூறு பேர் - எதையும் எதிர்பார்க்காமல் செயலாற்றக் கூடிய ஒரு நூறுபேர் இருப்பார்களேயானால் நான் இந்த உலகத்தையே மாற்றிக் காட்டுவேன்" என்று சொன்னவர் தான் விவேகானந்தர். அவர்களுடைய இன்னொரு வரியும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதை அடிக்கடி மேற்கோள் காட்டுவேன். I hold everyman a traitor, who having been educated at their expense, pays not the least heed to them எத்தனையோ பேர். ஏழை மக்களுடைய உழைப்பைச் சுரண்டி, உறிஞ்சி, அவர்கள் மூலமாகக் கல்வி கற்று மேம்பாடு அடைந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு கல்வி கற்று, மேம்பாடு அடைந்து, கை நிறையச் சம்பளம் வாங்கி, அல்லது நல்ல வளமான வாழ்க்கை வாழுகிறபோது. அதிலே ஒரு துளிப் பயனைக் கூட அந்த ஏழை மக்களுக்குத் திருப்பித் தாராதவனை நான் துரோகி என்று குறிப்பிடுவேன் என்று சொன்னவர்தான் விவேகானந்தர். அதுதான் அந்த வரி. எனவே, அவர்களையெல்லாம் பார்த்துப் பார்த்துப் பேசி முடித்து விடுவேன். ஆனாலும், சிலப்பதிகாரத்

திலே நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில செய்திகள், குறிப்பாக, பொதுவாகவே நான் ஒரு கல்லூரிப் பேராசிரியர் மட்டுமல்ல ஒரு பேச்சாளன் என்பதும், பட்டிமன்றத்தில் பேசுபவன் என்பதும் உங்களுக்குத் தெரியும். கோவலன் குற்றவாளி என்று ஒரு வழக்காடு மன்றத்தில் தலைப்பிட்டு கன்னா பின்னா என்று திட்டுவேன். இலக்கிய வரிகளை வைத்துக் கொண்டுதான். நினைக்கிறமாதிரி முடியாது (தெருவிலே திட்டுகிற மாதிரி). இலக்கிய வரிகளிலிருந்தே குற்றம் சாட்டுவோம். பிறகு இல்லை என்று மறுப்போம். அதே மாதிரி கண்ணகி மதுரையை எரித்தது குற்றம். கண்ணகி மீது குற்றம் சாட்ட முடியாது; ஆனால், மதுரையை எரித்தது குற்றமில்லையா? எத்தனையோ பேர் இறந்து போயிருக் கிறார்களே என்று அது ஒரு வழக்காகச் சென்றது உண்டு. இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு பிறகு பார்க்கலாம்.

நம்ம ஊரிலே, அந்தக் காலத்தில் கோவலன் நாடகமெல்லாம் நடக்கும். கோவலன் நாடகம் என்பது கிராமப்புறத்திலே வள்ளி திருமணம் போல அந்த வரிசையில் கோவலன் நாடகமும் ஒன்று உண்டு. அந்தக் கோவலன் நாடகத்தில், மாதவி ஒரு கணிகை போலவும் ஒரு தாசி போலவும், கண்ணகி தான் கற்புக்கரசி போலவும் காட்டப் படுவது உண்டு. கிராமப் புறத்தில் அது இன்னும் மோசமாகவே காட்டப்படுகிறது. அவளுக்குப் பக்கத்திலே நிற்கும் மாமாவைக் காட்டுவார்கள். இது ஒரு கேவலமான படப் பிடிப்பு. எப்படி அது வந்தது; இளங்கோவடிகள் அப்படிச் சொல்லவே இல்லையே. அது தான் வேடிக்கை. இன்றைக்கும் சொல்லுகிறேன். நான் உள்ளபடியே நினைத்து வியப்படைவது இந்த 3 பெண்களில் யார் உயர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாத அளவுக்கு உயர்ந்தவர்கள். அது கண்ணகியா? மாதவியா? கோப்பெருந்தேவியா? நான் இந்தத் தலைப்பிலேயே பட்டி மன்றம் எல்லாம் போட்டிருக்கிறேன். கோப்பெருந்தேவி என்ற பெயர் எனக்குப் பிடிக்கும். ஏனென்றால் என் மகளுக்குப் பெயரே கோப்பெருந்தேவிதான். ஆனால் அதே நேரத்தில் இன்னொரு நண்பருடைய மகளுக்கு மாதவி என்று பெயர் வைத்திருக் கிறோம். இன்னொரு நண்பருடைய மகளுக்குக் கண்ணகி என்று பெயர் வைத்திருக்கிறோம். அதெல்லாம் எங்கள் காலத்தில் நாங்கள் செய்த பணிகள். ஆனால் மாதவியோ கண்ணகியோ கோப்பெருந்தேவியோ எந்த வகையிலும் யாருக்கும் குறைந்தவர்கள் அல்லர்.

கோப்பெருந்தேவியைப் பற்றி நிறையச் செய்திகள் இராது. அரசனுடைய மனைவி. அவ்வளவுதான். அரசவையிலே ஒரு நடனம் நடக்கிறபோது அரசன் அதைக் கண்டு மகிழ்கிறான். அப்படிக் கண்டு மகிழுகிறபோது, இவளுக்குச் சற்று வருத்தமாக இருக்கிறது. அதற்குத் தான் ஊடல் என்று பேர். உங்களுக்குத் தான் தெரியும். நான் போன முறை அரங்கத்திலே பேசியபோது அதை நயமாக விளக்கிப் பேசியிருக்கிறேன். திருக்குறளில் ஊடல் உவகை எப்படி இருக்கும் என்பதைச் சொல்லி இருக்கிறேன் (இதே கிளானில் பேசி இருக்கிறேன்). எனவே, ஊடல் என்பது தேவை, அப்போதைக்கப் போது மனைவிமார் கோவிச்சுக்கறது இயற்கை; அதே மாதிரி கணவன் மார்கள் கோவிச்சுக்கறது இயற்கை.

அதற்காகக் கோவித்துக் கொண்டு 4 நாள்கள் இருந்து விடக்கூடாது. ஊடல் என்பது ஓர் அளவு. அவ்வளவுதான். அது, போடி உங்க அப்பா வீட்டுக்கு என்று சொல்லுகிற அளவுக்கு வந்து விடக்கூடாது. அதுவும் தேவை என்றார் திருவள்ளுவர். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்று பொருள். அதேபோல் கோப்பெருந்தேவியும் ஊடினாள்; சினந்து கொண்டாள்: பொய்க் கோபம்; எழுந்து நடந்தாள். இவனும் பின்னாலே நடந்து சென்றான். அந்தச் சூழலில், பொற்கொல்லன் வந்து நின்று, அரசே! அரசியினுடைய கால் சிலம்பு ஒன்றை ஒருவன் கையில் வைத்திருக்கிறான் (ஒன்று காணாமல் போய்விட்டது). எடுத்தவன் இவன்தான். தற்செயலாகக் கோவலன் வந்து மாட்டிக் கிட்டான். அதைக் கொண்டு வந்து இதிலே ஒப்படைத்தால், நாம் எடுத்தது சரியாக இருக்கும் என்று செய்துவிட்டான். எனவே, அரசே, நம்முடைய அரசியி னுடைய சிலம்பு கிடைத்து விட்டது! எடுத்த ஒருத்தன் இருக்கிறான், பிடித்து வைத்திருக்கிறோம் என்றான். இவன் அந்த வேகத்திலே, அதாவது கோப்பெருந்தேவியை அமைதிப்படுத்த வேண்டும் என்ற அந்த வேகத்திலும், அவள் எழுந்து போகிறாள் என்ற வருத்தத்திலும், அன்று இருந்த சூழலில் என்ன சொல்லி விட்டான். 'கொன்று அச்சிலம்பு கொணர்க' என்றான். கொண்டு வாங்க, விசாரிக்க லாம் என்று சொல்லியிருந்தால் பிரச்சினையில்லை. இவ்வளவு சிக்கலே வந்திருக்காது. கொண்டு வா என்பது வேறு: கொன்று வருதல் என்பது வேறு. எனவே, கொண்டு வா என்று சொல்லி யிருந்தால் அது விசாரணைக் குட்பட்டிருக்கும். அதனாலே தான் கண்ணகி அரண்மனையிலே பேசுகிற போது எடுத்த உடனே நெடுஞ்செழியனை விட்டாள் ஒரு அடி. 'தேரா மன்னா' என்றாள். ஆராயாத மன்னனே என்று அடித்ததற்குக் காரணம்! இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் கேளாமல் செய்தது தானே வினை. ஆனால், இளங்கோவடிகளுக்கு அதற்கு மேலே அந்த இடத்திலே ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. ஏற்கெனவே கொள்கை வகுக்கும் போது என்ன சொல்லி விட்டார். இந்தச் சிலப்பதிகாரத்தை நான் மூன்று கோணங்களில் பாடுகிறேன் என்று; அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம் - இது நெடுஞ்செழியனுக்கு நேர்ந்தது. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோ ரேத்தலும் - கண்ணகிக்குப் பாராட்டுக் கிடைத்தது எல்லார்க்கும் தெரியும். அதே நேரத்தில் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம். நீங்க எங்கே இருந்தாலும் இந்த ஊழ்வினை வந்து நிற்கும். அதிலே எனக்கு உடன்பாடு என்பதில்லை. சிலப்பதிகாரத்தில் அது கொள்கையிலே ஒன்று. ஏனென்றால் நாலடியாரில் சொல்லுவான். தன்னுடைய இளங்கன்றுக் குட்டியை ஒரு பசு கண்டு பிடிப்பது எளிது. ஏனென்றால் பசு முதிர்ந்தது, அதற்கு அனுபவம் இருக்கிறது. தன் கன்று எது என்று தெரியும். ஆனால், இளங்கன்றுக்குட்டி பல பசுமாடுகளுக் கிடையில் தன் தாயைக் கண்டு பிடித்து விடும். அதுதான் ரொம்ப முக்கியம். இளங்கன்று இப்போதுதான் பழக்கம். இன்னும் இது தாயா அது தாயா என்று அறிமுகமில்லாத காலத்திலே கூடத் தன் தாய் எது என்று கண்டுபிடித்து விடும் என்று சொன்னான்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக் கோடலை." இது நாலடியார்

எனவே, ஊழ்வினை எங்கே இருந்தாலும், நீங்கள் ஓடி ஒளிந்தாலும் உருத்து வந்து ஊட்டும், தேடிக் கொண்டு வந்து பிடிக்கும் என்றான். இப்போது இந்த இடத்தில் ஏன் நெடுஞ்செழியன் இப்படிச் சொன்னான் என்பதை இளங்கோவடிகள் அழகாக,

"வினைவிளை காலமாதலின்"

என்றார். பாவம் என்ன செய்வது. வினை விளைகிறது. முடியனும் என்று இருக்கிறது, முடிந்து போச்சு. அதனால சொல்லிவிட்டான். வேறு ஒன்று மில்லை.

வினைவிளை காலமாதலின் சினை அலர் வேம்பன் தேரானாகி என்றான்.

இந்த இடத்திலேதான் இளங்கோவடிகளை எனக்கு ரொம்பப் பிடிக்கும். இங்கே அவர் என்ன சொல்லுகிறார். இவன் தேராமல் சொல்லி விட்டான் என்று இங்கே சொன்னவர், இவர் தான் தேராமல் சொன்னான் என்று சொல்லுகிறார். ஆனால் கண்ணகிக்கு எப்படித் தெரியும்; இவன் தேராமல் எப்படிச் சொன்னான் என்று. இவர்தானே எழுதுகிறாரு - கண்ணகி யினுடைய வாக்கியத்தை. நான் நாடகத்தை எழுதுகிறேன் என்றால், கதாநாயகனுக்கு நான் தான் எழுதுவேன், கதாநாயகிக்கும் நான் தான் எழுதுவேன். வில்லனுக்கும் நான் தான் எழுதுவேன்; அடியே! என்றும் அன்பே! என்றும் நான் தான் எழுதுவேன். ஒரே ஆசிரியர் தானே எழுத வேண்டும். எனவே அவள் தேரா மன்னன் என்று கேட்பதற்குக் காரணம் இங்கே தேராமல் செய்து விட்டான். இந்த மன்னன் என்பதை இளங்கோ வடிகள் நினைவாக அங்கே வந்து சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் நிறைய சொல்லிக்கிட்டே போகலாம். ஏனென்றால் சிலப்பதிகாரத்தை நெடுங்காலமாகப் பாடம் நடத்தியவன். நன்றாக நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறேன். முதுகலை (எம்.ஏ) வகுப்பில் பாடமாக நடத்தியிருக்கி றேன். எனவே எந்தக் குறிப்புமில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே அந்த நிலையில் அவன் செய்துவிட்டான். பிறகு வழக்காடுகிற போது, அவன் உணர்ந்தான். இவள் என்னுடைய சிலம்பு இன்னது தான் என்றாள். அவன் என்னது தான் என்றான். பிறகு தூக்கிப் போட்டு உடைத்தாள். முகத்தில் தெறித்தது. பிறகு அவனுக்குத் தெரிந்துவிட்டது. நாம் தவறு செய்துவிட் டோம் என்று. எனவே, பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்? அந்த நேரத்தில் அவன் சொன்னதைக் கேட்டு முடிவெடுத்த நானா அரசன். இல்லை யானே கள்வன். கெடுக என் ஆயுள் என வீழ்ந்தான். வேடிக்கை என்னவென்றால் அவன் வீழ்ந்தான். கூடவே கோப் பெருந்தேவியும் விழுந்து மடிந்தாள். அவள் ஒன்றும் திட்ட மிட்டு முடிவெடுத்து, ஐயோ இறந்து விட்டாரே என்று அரைமணிநேரம் அழுது கொண்டிருக்கவில்லை (நம்ம ஊரில் அப்படி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும்! நாடகம், திரைப்படம் என்று பார்த்தீர்களேயானால் கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டு ½ மணிநேரம் பேசிக் கொண்டே

யிருப்பான். ஏனென்றால் வசனம் பேசியபிறகுதான் துப்பாக்கி வெடிக்கு மாம்) ஆங்கிலப் படங்களில் அப்படியா வருகிறது? பட் பட் என அடிப்பான் உங்களுக்குத் தெரியும். நம்ம ஊரிலே எழுதின வசனங்களை எல்லாம் பேச வேண்டும் பிறகு சுடுவதைப் பார்த்துக் கொள்வோம். நாம பேசிட்டுத்தான் முடிக்கவேண்டும். ஆனால், சிலப்பதிகாரத்தில், கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் - ஒரே வரிதான். அந்த வரிகளை எல்லாம் நினைவிலே வைத்துக் கொள்வீர்களேயானால், எழுதப்பட்ட காப்பியங் களில், கம்பராமாயணம் ஒரு சமயச் சார்புடையது. இராமன் என்ற அரசனைத் தலைவனாக வைத்துப் பாடப்படுகிற ஒரு வைணவக் காப்பியமாகும். சீவக சிந்தாமணி என்பது திருத்தக்கதேவர் எழுதினாலும் சமண சமயத்தைச் சார்ந்தது.

இதே மணிமேகலையும் புத்த மதத்தைச் சார்ந்தது. பாரதம் என்றால் கண்ணன், துரியோதனன் என்று போகும். எந்தச் சார்பும் இல்லாமல் எல்லாச் சமயங்களாலும் பாராட்டிப் பேசப்படுகிற நூல் ஒன்று என்றால் அது சிலப்பதிகாரம் தான்.

எந்தச்சமயத்திற்கும் வேறுபாடே காட்டவில்லை. ஆய்ச்சியர் குரவையும், குன்றக் குரவையும் இருக்கும். முருகனைப் பாராட்டியும் பாட்டிருக்கும். திருமாலைப் பாராட்டியும் பாட்டு இருக்கும். ஏனென்றால் அப்படிப் பாடுகின்ற சிறப்பு இருக்கும். கோப்பெருந் தேவி வாழ்க்கையே முடிந்து போய்விட்டது. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல். அவ்வளவுதான். நம்ம ஊரிலே அடிக்கடி சொல்வது உண்டு. ஒரு கணக்கப் பிள்ளை இருந்தாரு. அவரு அடிக்கடி யாரா இருந்தாலும் ஆறுதல் சொல்லிப் பழக்கப்பட்டவர். ஒரு நாள் போகிறார். ஒருத்தரோட அம்மா இறந்து போய் விட்டார். அப்போது அவர் சொல்கிறார். உங்க அம்மா என்பது உங்களுக்கு மட்டுமா? எல்லார்க்கும் அம்மா மாதிரி தான். பிறகு இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன் மகன். இவன் இறந்த பிறகு இவன் ஒரு நாள் ஆறுதல் சொல்லப் போனான். அங்கே இறந்தது ஒருத்தருடைய மனைவி. இவன் அங்கே போய் அப்பா சொன்னதை யோசித்தான். நாமும் அதே மாதிரி சொல்லிக் கொண்டு வருவோம் என்று நினைத்தான். உங்க மனைவி என்பது உங்களுக்கு மட்டுமா மனைவி! ... என்ன விழுந்திருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே போலச் செய்தலில் எவ்வளவு தவறு இருக்கிறது. அன்றைக்குச் சொன்னதை நான் இப்போதும் சொல்கிறேன். ஒரு அம்மாவை - பெண்ணைப் பார்த்துக் கேட்கிறான். உங்களுக்கு எத்தனை குழந்தை? இரண்டு குழந்தைகள் என்கிறாள். கல்யாணம் ஆயிடுச்சுங்களா? குழந்தை எத்தனை என்று கேட்ட பிறகு, கல்யாணமாயிடுச்சா என்றா கேட்கிறது கல்யாணமாயிடுச்சா என்று கேட்ட பிறகுதானே குழந்தைகள் எத்தனை என்று கேட்க வேண்டும். இல்லீங்க இப்போ தான் திருமணமாச்சு என்று சொல்வார்கள். மாற்றிச் சொன்னால் முறை மாறுவது மட்டுமல்ல, பண்பாடு மாறுகிறது. பண்பாடு சிதைகிறது. எனவே, கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல். என்று ஒரே வரியில் காட்டுகிறது. உங்களுக்குத் தெரியும் இந்தியாவில் ஒரு காலத்தில் ஒரு பெரிய சிக்கல் நேர்ந்தது.

கணவன் இறந்தபோது மனைவியும் அவள் விரும்புகிறாளோ விரும்பவில்லையோ அவள் உடன்கட்டை ஏறவேண்டும். அது ஒரு கால கட்டம். இதை ஒழித்தார் இராசாராம் மோகன்ராய். யார் காலம்? ஆங்கிலேயர் காலம் பெண்டிங் பிரபு அதற்குத் துணை செய்தார். என்ன காரணத்தினால் இராசாராம் மோகன் ராய் செய்தார் என்றால் அவருடைய அண்ணன் மனைவியை அவர் கண் முன்னாலேயே நெருப்பில் தூக்கி யெறிந்தார்கள். அதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; அவள் விரும்பவில்லை. கணவன் இறந்தபிறகு உடனே உடன்கட்டை ஏறுவது என்பது தப்பு. எல்லார்க்கும் வாழ்க்கை உண்டு. வாழ்க்கையிலே ஒரு காலம் வாழ்கிறோம். ஒரு காலம் வாழ முடியாமல் போகிறது. ஆனாலும் வாழ்க்கை என்பது ஒன்று. தனித்து வாழ்வது, துணையோடு வாழ்வது எல்லாம் வாழ்க்கையே தவிர வாழவே முடியாது, வாழவே கூடாது என்று எவனும் சொல்ல முடியாது. இது முற்போக்குக் காலம். எனவே, இராசாராம் மோகன்ராய் இதைத் தடுத்தார். இன்றைக்கு இந்தியாவில் இது ஒழிந்து போய்விட்டது. ஆனால், அன்றைக்கு, பத்தாம் நூற்றாண்டில் பார்க்கலாம். இந்த இராசராச சோழனுடைய அம்மா சுந்தரசோழனுடைய ஒரு மனைவி வானவன்மாதேவி சுந்தரசோழன் இறந்தபோது உடன் கட்டை ஏறியிருக் கிறாள். ஆனால் 10 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் இல்லை. இது எதிர்பாராமல் நடந்திருக்கிறது. எனவே, கோப்பெருந்தேவிக்குரிய சிறப்பு இந்த உடன் கட்டை ஏறுதல் பிரச்சனையே அல்ல. அவன் விழுந்தானா! அவனுடைய அடியைத் தொழுது இவளும் விழுந்தாள். இணையடி தொழுது விழுந்தாள். கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல். ஏனென்றால் யாரும் அதற்கு மாற்று மட்டும் கொடுக்க முடியாது. அப்புறம் மறுமணம் செய்து கொள்வது நம்முடைய காலத்தில் வந்தது. அதிலே ஒன்றும் தவறு என்று நான் கருதவில்லை. பாரதிதாசன் அவர்கள் எத்தனையோ அருமையான வரிகளைப் பாடியிருக்கிறார்கள்.

**“கணை விடுபட்டதும் லட்சியம் தேடும் - நம்**
**காதலும் அவ்வாறே!”**

உங்களுக்குத் தெரியும். பழைய படம் ஒன்று வந்திருக்கும். அடிப்படையே இது தான். கைம்மை நோன்பைக் கேலி செய்யாதீர்கள். அவளுடைய இளமைக்காலத்தில் கணவன் இறந்து விட்டால் மறுமணம் செய்து கொள்வதற்கு உரிமை கொடுங்கள். அது தான் சமுதாயப் புரட்சி என்றால் அது இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் கண்ணகி காலத்தில் சிலப்பதிகார காலத்தில் அப்படியெல்லாம் இல்லை. ஓர் அரசனு டைய மனைவி. எனவே அந்தச் சிறப்பு கோப் பெருந்தேவிக்கு உண்டு. மாதவிக்கு என்ன சிறப்பு என்றால், இந்த மூன்று பேரிலும் ஆடலில் சிறந்த வள்; பாடலில் சிறந்தவள்; அழகில் சிறந்தவள். சிலபேர் ஆடுவாங்க நல்லா. ஆனால் வாயைத் திறந்தால் பாட்டு சரியாக வராது. அதற்குப் பின்னணி. இப்போது பேசுவதற்குப் பின்னணி. யாருக்கும் தமிழே தெரிய வேண்டிய தேவையே இல்லை. தமிழ்த் திரைப்படங்களில் யாருக்கும் தமிழ் தெரிய வேண்டியதே இல்லை. எல்லோர்க்கும் பின்னணி தான். பேசுவதற்கும் - பாடு வதற்கும் மட்டும் பின்னணி. நடிகை மட்டும் முன்னணி. அவ்வளவு தான்.

ஆனால் ஆடலில் சிறந்தது மட்டுமல்ல; பாடலிலும் சிறந்தவள். ஆனால் இரண்டிலும் சிறந்து இருக்கலாம். நன்றாகத்தான் ஆடுகிறாள்; ஆனால் ஆளு நல்லாயில்லையே! நாம். சொல்கிறோம். பிறகு ஆளு நல்லா இருப்பார்கள்; பார்க்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் தை. தை. என்று குதிக்கிறார்களே சரியாக ஆடத் தெரிய வில்லை என்றால் இப்படிச் சொல்ல வேண்டியிருக்கும். தமிழிலே பழமொழி இருக்கிறது "ஆளிலே அழகு; வேலையிலே இழவு" என்று. Though who you are beautiful; you are not dutiful என்று ஆங்கிலத்தில் இருக்கிறது! எனக்குத் தெரிய எத்தனையோ நாள் இலக்கியங்களைப் படித்திருக்கிறேன். மாதவிக்குச் சொன்ன மாதிரி இளங்கோவடிகள் யாருக்கும் சொல்லவில்லை. ஆடல், பாடல், அழகு என மூன்றிலும் ஒன்று குறைவுபடாதவள். கோவலன் இவளோட வந்து வாழ்ந்தானே! அது சரியா என்று கேட்பீர்கள். அந்தக் காலத்து மரபு சரிதான். அப்படித் தான் இருந்தது. ஏனென்றால். பிரிவு என்று இலக்கணத்திலே சொல்லுகிறபோது பொருளுக்காகக் கணவன் பிரியலாம். போர்க் களத்திற்குப் போவதற்காகப் பிரியலாம். அரசனுக்காகத் தூது செல்கிறபோது பிரியலாம். இவனே படிப்பதற்காகக் பிரியலாம். ஓதற் பிரிவு; தூதிற்பிரிவு; பொருள் வயிற் பிரிவு ... இப்படிப் பிரிகிறது. அதே போல அதையும் சேர்த்து இதையும் செய்துவிட்டான். பரத்தைச் சார்பிலும் பிரியலாம் என்று. இப்போது மாறிவிட்டது என்பது வேறு. ஆனால் அன்றைக்கு அந்த மரபு இருந்தது. சங்க இலக்கியங்கள் தொடர்ந்து சொல்லுகின்றன. ஏனென்றால் இது சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்ட நூல்தான். அந்த மரபுப்படி கோவலன் செய்தது தவறு என்று சொல்ல முடியாது. மாதவி செய்ததும் தவறு இல்லை. யாராவது ஒருவருடன் அவள் வாழ்ந்து தீரவேண்டும். மாதவி தன்னைச் சரியாக நிலை நிறுத்திக் கொண்டாள். கோவலன் பிரிந்துபோன பிறகு அவள் இன்னொருவனுடன் வாழ்ந்திருந்தால் அவளை இழிவாகக் கருதியிருப்பார்கள். அதோடு நிறுத்திவிட்டாள். நிறுத்தியது மட்டுமல்ல, அதாவது முதலில் எழுதுகிற மடலில் தன்னுடைய காதல் உணர்வைப் புலப்படுத்துகிற மாதிரி எழுது வாள். மடலையே வாங்கிக் கொள்ள மாட்டான். அவன் கோபத்திலே போகிறான். ஆனால் கொஞ்ச காலம் கழித்து, கண்ணகியோட போனபிறகு கோசிகமானியிடம் கடிதம் கொடுத்து - அந்தக் கடிதத்தைக் கோவலன் பிரித்துப் படிப்பான் 'அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்'. எவ்வளவு அடக்கமாகி விட்டாள். கணவன் அடிகளாகி விட்டார். இதையே கண்ணகியும் சொல்வாள் இப்போது அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன் என்று மாதவியும் சொல்வாள். மாதரி வீட்டில் கடைசியா சாப்பிட்டுவிட்டு இரண்டு பேரும் பேசிக்கிட்டிருக் கும் போது. அதுதானே கடைசி சாப்பாடு, பிறகு நகை விற்கப் போகிறாரு. சொல்லும் போது அமுதம் உண்க அடிகள் என்றாள் அவள். ஆக இரண்டு பேருமே கோவலனை உயர்த்தி இருக்கிறார்கள். பிறகு கோவலன் நல்ல செயல்களைச் செய்தான் என்பது நமக்கும் தெரியாது. அது பின்னாலே ஒருத்தன் வந்த பிறகு மாடலன் வந்த பிறகு சொல்வான்.

**"இம்மைச் செய்தன யானறி நல்வினை"**

இந்தக் கோவலன் இந்தப் பிறவியில் செய்ததெல்லாம் நன்மைகள் தான். ஏனென்றால், ஒரு தானம் வழங்குகிறபோது, ஒரு யானை எதிர் பாராமல் வந்து ஒரு முதிய பிராமணனை அடித்துக் கொல்ல வளைக்க முயன்ற போது பொருது அழித்து அந்த யானையை வதைத்து அவனை மீட்டான். கடக்களிறு அடக்கிய கருணைமறவன். இன்னும் சில பேருக்கு இல்லோர் செம்மல். இப்படியெல்லாம் பாராட்டுகிறான் அவன். பிறகு தான் தெரியவருகிறது இவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறான் என்று. நமக்கெல்லாம் என்ன தெரியும் இவன் ஏன் அந்த வீட்டுக்குப் போனான், வரவேண்டியது தானே! கடைசியில், இரண்டு பேருக்கும் எப்படி மன வருத்தம் உண்டாச்சு பாருங்கள்! கானல் வரிதான். ஒன்றை மட்டும் நினை வூட்டுகிறேன். வாய்ப்பு இருக்கும் போது உரை நூலை வைத்துக் கொண்டு படியுங்கள். அந்த நூலிலேயே சிறப்பு என்றால் முதலாவது 'கானல் வரி', இரண்டாவது 'அரங்கேற்று காதை', மூன்றாவது 'கொலைக் களக் காதை'. இந்த அரங்கேற்றக் காதையிலே என்ன இலக்கணம். இசைக்கு மேடைக்கு, நடனத்துக்கு, ... பிறகு அடியார்க்கு நல்லார் உரை எழுதிய பிறகுதான் எங்களுக்கே தெரியும். அடேயப்பா இவ்வளவா இருக்கிறது என்று. படிக்கிற எங்களுக்கே அடியார்க்கு நல்லாரில் இவ்வளவு செய்தியா? ஒன்றும் வேண்டாமுங்க; இப்பொழுது மேடையிலே என்ன திரை போடுகிறோமோ அது அப்படியே 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது. மேடையிலே ஒரு நாடகத்திற்கு எப்படித் திரை போடுவோம். இந்தப்பக்கம் ஒரு திரை வரும்; அந்தப் பக்கம் ஒரு திரை வரும். இது ஒன்று. இந்தப் பக்கமாக இழுத்தால் விர் என்று வரும். அந்தப் பக்கம் இழுத்தால் போகும். அல்லது மேலிருந்து ஒரு கழைக்கம்பிலிருந்து சுருட்டிக் கொண்டே வரும். ஒரு முக எழினி! அப்படியிருப்பது பொருமுக எழினி! இதற்கொரு முகம்; அதற்கொரு முகம். எனவே பொருமுக எழினி. கரந்துவரல் எழினி நீங்கள் சுற்றச் சுற்ற மறைந்து போய்விடும். எனவே, இதே திரையமைப்பு சிலப்பதிகார காலத்திலே இருந்தது என்றால் அரங்கேற்றக் காதையைத் தான் சொல்வேன்; பிறகுதான் சொல்லுவேன். நம்ம ஆளுங்க இதையே தான் வைத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு வரையில் 1800 ஆண்டுகளாக மாற்றவேயில்லையே! மாற்றுவதற்கு அதற்குமேலே மேடையில் போட முடியாது. அதற்காகத் திரையை நடுவிலா போடமுடியும். குறுக்கே போட்டால் இந்தப்பக்கம் பாதி தெரியும்; அந்தப்பக்கம் பாதி தெரியும். எனவே அந்த முறை மாற வில்லை. அந்த அரங்கேற்றக் காதையில் நிறையச் செய்திகள் இருக்கின்றன. அதே மாதிரி கானல் வரியில் உள்ளபடியே சொல்கிறேன். இராச கோபாலாச்சாரி என்ற ஒரு திறனாய்வாளர் நம்முடைய இராசாசி அல்லர்; இன்னொரு திறனாய்வாளர்; அவரு கொஞ்சம் வடமொழியெல்லாம் கலந்து எழுதுவாரு; ஆனால் கானல்வரி குறித்துப் புத்தகம் எழுதியிருக் கிறார். அட்சரம் இலட்சம் பொன் பெறும் என்று. இந்தக் கானல் வரிகளில் ஒவ்வொரு எழுத்துக்கும் இலட்சம் பொன் கொடுக்கலாம் என்று எழுதுகிறார். அவ்வளவு அற்புதமானது. அதாவது இரண்டு பேரும் போட்டி போட்டுக்கொண்டு பாடுவார்கள். வேடிக்கை என்னவென்றால்

ஒருத்தருக்கொருத்தர் தவறாகப் புரிந்து கொண்டார்கள். இந்தப் பாட்டுப் பாடும்போது சின்னத் தவறு நேர்ந்து விடுகிறது. இவன் பாடும்போது என்ன நினைத்தான். இவனும் குறும்பு எல்லாம் செய்ய வேண்டுமல்லவா அதற்காகப் பாடினான். இவன் உண்மை யிலேயே மாதவியை விட்டுவிட்டு இன்னொரு பெண்மேல் மனம் வைக்க வில்லை. அதற்கு எங்கேயும் எந்த அடையாளமும் இல்லை. மனத்தை அலையவிட்டான் என்று சொல்ல முடியாது. ஆனால், "மாதவிதன் மனம் மகிழ வாசித்தல் தொடங்குமன்". யாழ் வாசிக்கும் போது அவள் மனம் மகிழுவதற்காகத்தான் வாசித்தான். ஆனால், மாதவி என்ன நினைத்து விட்டாள்.

"மன்னுமோர் குறிப்புண்டிவன் தன்னிலை மயங்கினான்"

இவன் ஏதோ ஒரு குறிப்பை வைத்துக் கொண்டுதான் பேசுகிறான்; இவன் தன்னிலையில் மயங்கிவிட்டான் என்று "தானுமோர் குறிப்பினள் போல்", குறிப்பு வைத்துப் பேசவில்லை; இவளும் குறிப்பு மாதிரிதான் பேசுகிறாள். ஆனால், கடைசியில் ஏட்டிக்குப் போட்டியாகப் பாடினாள் அவன் சினந்து கொண்டான்.

தவறாகப் புரிந்து கொண்டு, மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள் அப்படின்னு நினைத்தான். என்ன இருந்தாலும் ஆடல் மகள் அல்லவா? என்று இழிவாக நினைத்து விட்டு, எழுந்து கொண்டு வா! போவோம் என்று கூப்பிடும் போது எழுந்து போயிருந்தால் அந்தப் பிரச்சனையே இருந்திருக்காது. இவளுக்கும் அந்த வேகம். வரமாட்டேன் என்று உட்கார்ந்து கொண்டிருந்தாள். எழுக என உடனெழாது என்று சொன்னான். இது அப்படியே கானல் வரியில் வருகிறது. கடைசியிலே கண்ணகி உணவு படைப்பாள் அல்லவா! அப்போது இவனுக்கு உருக்கம் வந்துவிடும். எத்தனை தூரம் நடந்து வந்திருக்கா இவள். ஏனென்றால் இப்படியெல்லாம் கண்ணகி நடந்து வந்ததே இல்லை. "வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்" அவளுடைய அந்த அற்புதமான சீறடிகள் தரையில் பட்டதே இல்லை; எங்கேயிருந்து! இப்பவும் பூம்புகார் இருக்கிற தல்லவா? இப்பவும் மதுரை இருக்கிறதல்லவா? எனக்குத் தெரிய மதுரை எத்தனைத் தொலைவில் இருக்கிறது! கிட்டத்தட்ட பூம்புகார் 250 வது கி.மீ. தூரத்தில் இருக்கிறது அவ்வளவு தொலைவு நடந்தாள் வழியில் தீங்கு ஏதும் இல்லை. பாண்டியனுடைய ஆட்சியில் எந்தத் தீங்கும் இல்லை... அப்படி யெல்லாம் போகிறாள். அப்போது அவன் நினைக்கிறான். வீட்டிலே எப்படி வாழ்ந்தவள். நாம் அவளை அழைத்துக் கொண்டு வந்து விட்டோமே என்று நினைத்தான். அந்த ஊரிலே அவமானப்பட்டதனாலேயே பொருளை எல்லாம் நிறைய இழந்து விட்டான். அவனே சொல்கிறான். எவ்வளவு காலம் வாழ்ந்தான் இவன். பளிச்சென்று மாதவியைத் திட்டிவிட்டானே இவன்.

"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடி
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன"

எனக்கு வெட்கமாக இருக்கு; வேற ஊருக்குப் போய்ப் பொருள் தேடுவோம் என்று சொன்னான். இவள் உடனே வந்து விடுகிறாள். அன்றைக்கு முதல்நாள்தான் வந்தான்; அடுத்த நாள் காலையில் புறப்பட்டுப் போய்விடுவான். அப்போது இளங்கோவடிகள் சொல்வார்.

**"வினைகடைக் கூட்ட வியம் கொண்டான் கங்குல்**
**கனை சுடர் கால்சியா முன்"**

இந்தக் கதிரவன் தன்னுடைய கதிரைப் பரப்புவதற்கு முன்னாலேயே புறப்பட்டு விட்டார்கள். எனவே, கண்ணகியோடு வாழ்ந்தகாலம் சிறப்பாக வாழ்ந்தான். அதற்காக இரண்டு பேரும் சேர்ந்தே வாழவில்லை, அடுத்த நாளே விட்டு விட்டுப் போய் விட்டான் என்றெல்லாம் சொல்லவில்லை, நன்றாகவே சொல்லி இருக்கிறார்.

**"மண்ணில்**
**தொலையாத இன்பமெல்லாம் துன்னினார்**
**மண் மேல்**
**நிலையாமை கண்டவர் போல் நின்று"**

என்று பாடியுள்ளார். ஆனால், அதற்குப் பிறகு வாழ்க்கை போய் விட்டது. மணிமேகலை பிறக்கிற அளவுக்கு மாதவியிடம் வாழ்ந்திருக்கிறான். அவ்வளவு காலம். பெயர் வைக்கிற அளவுக்கு -தானாக வளருகிற அளவுக்கு. எனவே, அப்படிப்பட்ட அந்த நீண்டகால வாழ்க்கை கண்ணகிக்குக் கிடைக்கவில்லை. சரி, இனிமேலாவது நமக்கு ஒரு மறுமலர்ச்சி வாழ்க்கை கிடைக்கும், என்ன இருந்தாலும் கணவன்தானே, என்று கூடவே புறப் பட்டுப் போய்விட்டாள் ... அப்போ மாதரி வீட்டிலே போய் அடைக்கலம் கொடுத்து அந்த அடைக்கலத்தில் கடைசியாகச் சாப்பிட்டுவிட்டு முடிக்கிறபோது சொல்லுவான்.

"எழுகென எழுந்தாய் என் செய்தனை" (நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்) மாதவி எழும்போது எழு! என்று தான் சொன்னான். ஆனால் அவள் உடன் வரவில்லை. இவளை "நான் எழு என்று சொன்ன உடனே" எழுந்து வந்துவிட்டாயே! நீ என்ன காரியம் செய்தாய். இரண்டும் கோவலன் சொல்வது தான். "எழுகென எழுந்தாய் என் செய்தனை" அப்போது தான் கண்ணகி வாயைத் திறக்கிறாள். நீங்கள் பூம்புகார் திரைப்படம் பார்த்திருப்பீர்கள்; கலைஞர் எழுதின பூம்புகார்த் திரைப்படத்தை. அதில் கோவலன் முதலிரவுக் காட்சியில் கண்ணகியை ரொம்ப வர்ணிப்பான். "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே! பெருங்குடி வாணிகன் பெருமட மகளே! மலையிடைப் பிறவா மணியே என்கோ! அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ! யாழிடைப் பிறவா இசையோ என்கோ! தாழிருங் கூந்தல் தையால்! நின்னை என்று ... இப்படி நிறையப் பாடிக் கொண்டே இருப்பான்". இதை அப்படியே பாட்டாக்கி இருக்காங்க.

இவன் பாடுவான் மாசறு பொன்னே! உடனே அவள் ... (ராகம்) வலம்புரி முத்தே! உடனே ... (ராகம்) கடைசிவரை இப்படித்தான் (ராகம்

மட்டும்) இழுப்பாளே தவிர இவள் எங்கேயாவது வாக்கியம் பாடியிருக் கிறாளா? 'டுயட்' என்றால் அப்படியா பாடுவது! ஆளுக்கொரு வரி பாடணுமில்லையா? ஆளுக்கொன்று பாடுவதைத் தானே நாம் இப்போது திரைப்படத்தில் பார்க்கிறோம். அங்கே மட்டும் இவன்தான் பாடுகிறானே தவிர அவள் ஒத்திசை (ஹம்மிங்) தான். தருகிறாள் ... இப்பொழுது தான் முதல் தடவையாக வாயைத் திறந்து பேசுகிறாள். ஏனென்றால், மனத்திலே நீண்ட காலம் இருந்த துயரத்தைச் சொல்ல வேண்டும். நான் ஏன் உங்கள் கூட வந்தேன் தெரியுமா? நான் வீட்டுக்கு ஒரு சான்றோன் வரும்போது கூட அவருக்கு நான் சமைத்து உணவாக்கி அறம் செய்ய முடியவில்லை. இப்போது என் நண்பர்கள் வீட்டுக்கு வருகிறார்கள், நண்பர் மனோகரனோ அல்லது திருமாவளவனோ என் வீட்டுக்கு வருகிறார்கள். நான் இல்லாத போது என்னுடைய மனைவி .. இப்போது எல்லாம் நாம் மாறிவிட்டோம். நண்பர்கள் வருகிறார்கள்; நல்லபடியாக. விருந்தாக்கிப் போட்டுவிடு என்று சொன்னால் அவுங்க பண்ணி விடுவாங்க; பிள்ளைகள் இருக்காங்க. ஆனால், அவள் என்ன நினைக்கிறாள்; கணவன் இல்லாதபோது மனைவி மட்டுமே விருந்து படைப்பது மனைவி மட்டுமே ஒரு சான்றோனை வரவேற்பது பொருத்தமற்றது; அதுதான் அந்தக்காலத்துப் பண்பாடு. எனவே கணவன் இருந்து செய்வது தானே அவளுடைய பணிவிடைக்கும் சிறப்பு. அறவோர்க் களிக்கவும் அந்தணர் ஓம்பவும் - இதையெல்லாம் என்னால் செய்ய முடியாமல் போய்விட்டது.

எனவே இப்படி நான் இழக்கக் கூடிய அளவுக்கு, நீங்கள் போற்றா ஒழுக்கம் புரிந்தீர். நன்றாகவே பேசினாள். இது வரைக்கும் அவள் வாயைத் திறக்காத (நம்ம ஊரிலே தெரியும் பையன் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருப்பான் டேய் பேசுடா! வாயைத் திறந்து பேசுடா! பேசாமல் இருப்பான்; ரொம்பப் பேசாமல் இருப்பான். திடீரென்று ஒரு நாள் வாயைத் திறந்து ரொம்ப மோசமாகப் பேசுவான். அப்புறம் என்ன சொல்வார்கள் 'இதைவிட நீ பேசாமல் இருந்திருக்கலாம்' என்று நான் தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன். ஒரு திரைப்படத்திலே கூட வருகிறது. வாயில் விரல் வைத்துக் கொண்டு இரண்டு பேர் இருப்பார்கள், "வேண்டாம் சார் வம்பை விலைக்கு வாங்காதீர்கள்; என்று சொல்லுவான். நான் என் கையை - விரலை - நான் சூப்புவேன். டேய் அசிங்கமாக இருக்கிறது. எடுடா கையை என்று சொன்ன உடனே. எடுத்த உடனே சொல்லுவான். யாரு அப்பா இவர் என்று கேட்டான். உடனே இவர் தான் மானேஜர். அந்த டைப்பிஸ்டோடு சேர்ந்து சுற்றுவார் என்று சொல்வீரே அவரா? மானத்தை வாங்கிவிடுகிறான் - வாயைத் திறந்ததனாலே வந்த வினைதானே! இது நல்ல உத்தி தான். இது வரைக்கும் வாயைத் திறக்காத கண்ணகி அழகாகச் சொல்லுகிறாள். "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" அதைவிடச் சிறப்பு, கண்ணகிக்கு. அடுத்த வரிகளை யெல்லாம் மேன்மைக்குப் படித்துக் கொள்ளுங்கள்.

**"யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன்**
**ஆதலின் ஏற்று எழுந்தனன்"**

எனக்கு என் கணவன்தான் முக்கியம். நீங்கள் எங்கே அழைத்தாலும் நான் வருவதற்குத் தயார்.

அவன் கேட்கிறானே! எழுகென எழுந்தாய் என் செய்தனை! என்று அவன் வருத்தப்பட்டுக் கேட்கும்போது, நான் மாற்றாத உள்ள வாழ்க்கை படைத்தவள். என் கணவனோடு சேர்ந்து வாழ்வதுதான் எனக்கு வாழ்வு. எனவே நீங்கள் எங்கே அழைத்தாலும், எத்தனை தூரம், எத்தனை கல் தொலைவு அழைத்தாலும் வரத்தயார். இப்போது இருக்கிற வசதிகள் என்ன; 1800 ஆண்டுகளுக்கு முன்னாலே கண்ணகியும் கோவலனும் அந்தப் பாதையில் வரும்போது. எவ்வளவு இடர்ப்பட்டிருப்பார்கள். அவன்தான் சொல்கிறான். இரண்டுபேரும் வரும்போது அவ்வளவு அயர்ந்து போய் வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், வைகை ஆற்றுப் பக்கத்தில் படகிலே தாண்டி மதுரைக்குள் வரவேண்டும். அப்போது வைகை ஆறு முழுவதும் ஒரே மலர்களால் குவிந்து, புன்னை மலர்களெல்லாம் உதிர்ந்து, வைகை ஆற்று வெள்ளத்தில் - அப்போது வெள்ளம் ஓடியிருக்கிறது; இப்போதுதான் ஒன்றும் கிடையாது. கை வைத்தால் தானே வைகை. வைகை என்பது கை வை. எனவே, அப்போது வெள்ளம் ஓடியிருக் கிறது. அந்த வெள்ளத்திற்கு மேலே பூ எல்லாம் மூடியிருக்கிறது. அப்போது இளங்கோவடிகள் சொல்கிறார். இந்தப் பெண்ணுக்குப் பின்னால் நேருகின்ற துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இந்த வைகை தன் கண்ணீரை மறைத்துக் கொண்டு மலர்களால் மறைத்துக் கொண்டு ஓடுகிறது என்கிறார்.

“தையற்குறுவது தான் அறிந்தனள் போல்” இது புனலாறு அன்று மலர் ஆறு என்று கொண்டு வந்து விட்டான். வெறும் தண்ணீர் ஆறு அல்ல; இது மலர் ஆறு. ஏனென்றால் பின்னால் கண்ணகிக்கு மதுரையில் தீங்கு நேரப்போகிறது. அது இந்த வைகைக்குத் தெரிகிறது. ஆனால் கண்ணீரைக் காட்டக்கூடாது என்பதற்காக அப்படி மலரால் மறைத்துக் கொண்டு போகிறது என்ற ஒரு குறிப்பை முதலிலேயே கொடுத்து விடுகிறான். நமக்கும் இவன் சொல்வதைப் பார்த்தால் எங்கேயோ நிற்கப் போகிறது. ஏனென்றால் இதுதானே உத்தி. அடுத்தடுத்த வழக்குகள் என்ற உத்தி. அதற்குப் பிறகு போகிறார்கள், வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். என்னவென்றால் அந்த இடத்திலே பேசியவள் நீண்டகாலமாகப் பேசாமல் இருந்தவள். தன் கணவனுக்கு இழப்பு என்றவுடன், அதுதான் பெண்ணினுடைய மறு மலர்ச்சி. இறந்தான். உன் கணவன் கள்வன் என்று குற்றஞ் சாட்டப் பட்டுக் கொலை செய்யப்பட்டான் என்று அந்த ஊரிலே எல்லாம் பேசிக்கிறாங்க என்று மாதரி வந்து சொல்லும்போது, ஒரே வரியில் அதாவது கொலை செய்யப்பட்டான் என்பது வேறு, இறந்து போனான் என்பது இயற்கை. கொலை செய்யப்பட்டான் என்பது செயற்கை, எவனோ செய்தது. உடனே சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. பொங்கி எழுந்தாள். ஏனென்றால் கொலை செய்யப்பட்டான் என்ற உடனே. என்ன இருந்தாலும் கோவலனுடைய மனைவி இல்லையா? கணவனை இழந்து விட்டாள் அல்லவா! இழந்தவுடனே சோகம் பற்றி

விடும் அல்லவா! உடனே விழுந்தாள் என்றான். இளங்கோவடிகள் சொற்களை மேலே ஏற்றி கீழே இறக்குகிறார்.

இப்படி அடுக்குகிறான். எப்படி விழுந்தாளாம்? வானத்திலே இருக்கின்ற நிலவு அந்த முகிலோடு சேர்த்துப் பெயர்த்துக் கொண்டு தரையில் வீழ்ந்ததுபோல் வீழ்ந்தாள். அந்தக் கூந்தல் முகிலுக்கு, முகம் நிலவுக்கு உவமை. இப்போது மீண்டும் அதே வரிகளைப் பாருங்கள்

**"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்**
**திங்கள் முகிலொடுஞ் சேண்நிலங் கொண்டெனச்**
**செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை**
**எங்கணாஅ என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்".**

அந்த இடத்திலேதான் இளங்கோவடிகள் அந்த வரிகளைத் தூக்கிப்போட்டு - அதாவது கொடுமை நடந்துவிட்டது என்பதற்காகப் பொங்கி எழுந்தாள். ஆனால், கணவன் இறந்துவிட்டான் என்றவுடன் விழுந்தாள். இரண்டையும் மாற்றி மாற்றி அடுத்தடுத்துப் போட்டு அப்படியெல்லாம் கொண்டுவந்து கதையைச் சிறப்பாக முடிக்கிறார். இப்போது கண்ணகியை நீங்கள் எனை குறை சொல்ல முடியும். வழக்குரை காதையில் பிடித்துக் கொண்டாளே!

என்னைக் கேட்டால் அந்தக் காலத்திலேயே ஜுலியஸ் சீசர் நாடகம் எல்லாம் படிக்கிறோம். நாங்களெல்லாம் படிப்போம், உங்களுக்கும் தெரியும், பலருக்கும் தெரியும். ஜுலியஸ் சீசரில், மார்க் ஆண்டனி பேசித்தான் - அந்தத் துரோகிகளை - பேசித்தான் ஒழிப்பான். பேசும்போது ரொம்ப கவனமாகப் பேசுவான். ஏனென்றால் புரூடஸ்தான் இவ்வளவும் பண்ணினது : தெரியும். இவர்களுக்கு - நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இவனுக்குத் தெரியும், நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமே! எனவே, Brutus is a Hon'ble man என்று சொல்லிவிட்டு - அவன் என்ன செய்தான் என்பதை ஒவ் வொன்றாகச் சொல்லி வருவான். Brutus is a Hon'ble man ஆனாலும் இப்படிச் செய்தார்கள். இப்படிச் சொல்லி - சொல்லி - கடைசியில் பொது மக்களைத் திரட்டி எல்லாரையும் காலி பண்ண வைச்சுப்புடுவான். இது ஜுலியஸ் சீசரிலே. மார்க்ஆண்டனியின் அந்தப் பேச்சு உலகப் புகழ் பெற்றது. அதே போல கெட்டிஸ்பர்க்கில் நம்முடைய ஆபிரகாம் லிங்கனின் பேச்சு ... இப்படி சிலது. ஏசுவினுடைய மலைப் பேச்சு : இப்படி யெல்லாம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இலக்கியத்திலும், ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு வகையானது சிறப்பு. ஆனால், எனக்குத் தெரிய அந்தக் கண்ணகியினுடைய வழக்குரை காதையைப் படித்துப் பார்ப்பீர்களேயானால், அடுத்தடுத்து என்ன பேச்சு! ஒரே வரி "தேரா மன்னா செப்புவது உடையேன்" எல்லாம் சொல்லிவிட்டு நீ யார் என்றுதானே கேட்க வேண்டும். வரிசையாக அடுக்கினால் முடிந்து போய்விட்டது. "நின்பாற் கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி" என்றாள். உடனே அவன் இன்னும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான். சரியாகத்தானே கொலை பண்ணியிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். அவன் நினைப்பு அப்படித்தானே இருக்கமுடியும். "கள்வனைக் கோறல் கடுங் கோலன்று" 'ஒரு கள்வனைக் கொல்வது

எப்படித் தவறாக இருக்க முடியும்' என்றான். இல்லை நீ தவறுதான் செய்திருக்கிறாய் என்று சொல்லி, என்னுடைய இந்தச் சிலம்பு மாணிக்கக் கற்களைப் பரல்களாகக் கொண்டது. ஏனென்றால், பாண்டியனுக்கு உள்ளது வேறு சொத்திருக்கிறதே கொற்கை முத்து இல்லையா அது. என்னுடையது மாணிக்கம். சரி, கொண்டு வா நாம் வாங்கிட்டு வந்தோமல்லவா ஏனென்றால் அந்தச் சிலம்பு தான் சிக்கலுக்குரியது. இந்தக் கோவலன் வைத்திருந்தான் என்று சொல்லி வாங்கி (அது தான் கோப் பெருந்தேவியினுடைய சிலம்பு என்று) அரண்மனையில் வைத்திருந்தது தானே சிக்கலுக்குரியது அதை உடை என்றாள். கொண்டு வந்து உடைத்தால் - அதிலே இவள் சொன்னது மாதிரியே மாணிக்கம். இவள் கையில் இருந்ததும் மாணிக்கம். எனவே தன் தவற்றை உணர்ந்தான். அப்போதுதான்

> **"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட**
> **யானோ அரசன் யானே கள்வன்**
> **கெடுக என் ஆயுள்"**

என விழுந்து இறந்தான். அதிலே அவள் வாதிடுகிற முறை. ஒரே செய்திதான் ஒரே வாதம். அடித்து முடித்துவிட்டாள். இப்போது நீங்கள் கண்ணகியை எந்த அளவிலே குறை சொல்லுவீர்கள்! ஒன்றே ஒன்று! பின்னாலே கொஞ்சம் மிகையாக இருக்கும். மதுரையை எரித்தது பார்த்தீங்கன்னா, அதிலே அவள் சொல்லி விடுகிறாள். தீத்திறத்தார் பக்கமே சேர்க! என்று சொல்லி விடுகிறாள். அது கொஞ்சம் கற்பனை. ஏனென்றால், ஒரு தீயை வைத்த உடனேயே, இந்த ஊர்க் கடைகளை விட்டுவிட்டு, நம்முடைய மலேசியா சமூகப்பணி இயக்கத்தை விட்டுவிட்டு அடுத்த கடையிலே பிடி என்றா வைக்க முடியும். தீ வைத்தால் எல்லாம் தான் பிடிக்கும். வள்ளலார் படமும் போகும், தமிழ்க்குடிமகனும் மாட்டிக்கிடுவான், எல்லோரும் தான் மாட்டிக்குவோம். அவள் சொல்வது போல் முடியாது. இலக்கியத்திலே எப்போதும் வரையறை மீறிய கற்பனைகள் இருக்கத்தான் செய்யும். எனவே, "தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்றாள். அது நல்லதுதான். இப்போது அப்படியெல்லாம் தீயை வைத்துத் தீயவர்களை மட்டும் கொல்ல வேண்டும் என்றால் இந்நேரம் ரொம்ப பேரைக் காலிபண்ணி யிருப்பேன். இல்லையே! சேர்ந்து தான் பிடித்து விடுகிறது. திடீரென்று 300 குடிசைகள் தீப்பிடித்து நல்லவன் கெட்டவன் என எல்லோரும் சேர்ந்து தானே மாட்டிக் கொள்கிறான். எனவே, அப்படி முடியாது. ஆனாலும் அதிலே ஒரு மிகை இருந்தது! இருந்தாலும், நான் சொன்னதிலே எங்கே யாவது கண்ணகி மேலே குறை சொல்கிறமாதிரி இருக்கிறதா? இல்லையே! அதேபோல மாதவி என்ன செய்து விட்டாள் என்றால் தனக்குப் பின்னால் தன் தலைமுறையே இந்தத் தொழிலிலே ஈடுபடக் கூடாது; இந்தத் துறைக்கே வரக்கூடாது. எனவேதான் மணிமேகலையைத் துறவியாக் கினாள். தான் துறவியானாள்; ஏற்கெனவே இல்லறத்திலிருந்து அவள் துறவியானாள்; தன் மகளைத் துறவியாக்கி விட்டாள். இந்தத் தலைமுறை இதோடு முடிய வேண்டும்; இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று நினைத்தாள். எனவே அவளும் சிறந்தவள்தான். அவளை எந்த

இடத்திலும் குறை சொல்ல முடியாது. எந்த இடத்திலும் அவள் தவறு செய்ததாகவோ, தீங்கு செய்ததாகவோ எங்கேயும் காண முடியாது.

இன்னும் சொல்லப் போனால், மாதவியே என்ன சொல்வாள். கண்ணகியினுடைய மகள்தான் மணிமேகலை என்று பெருமையாகச் சொல்லுவாள். எனவே அவளையும் குறை சொல்லமுடியாது, கோப்பெருந் தேவியையும் குறை சொல்லமுடியாது. கோவலனையும் குறை சொல்ல முடியாது. அந்தக் காலத்து மரபுப்படி அந்த வீட்டுக்குப் போனான் என்று தான் சொல்லலாமே தவிர அவன் செய்தது குற்றம் என்று சொல்ல முடியாது. கருணை மறவனாக இருந்திருக்கிறான். இல்லோர் செம்மலாக இருந்திருக்கிறான். செல்லாச் செல்வனாக இருந்திருக்கிறான். இப்படிப் பட்ட ஆற்றல் படைத்தவனாக - வாரி வழங்குகிற வள்ளல் தன்மை படைத்தவனாக எல்லாம் இருந்திருக்கிறானே, இவன் எப்படித் தவறு செய்திருக்க முடியும்?

அதனால்தான் இம்மைச் செய்தன யானறி நல்வினை - போன பிறவியிலே ஏதோ தவறு செய்திருக்கிறாய். ஒரு கதையெல்லாம் இருக்கிறது. இவன் ஒரு காவலனாக இருந்தபோது வேறு ஒருவனைத் தவறாகக் கொன்றதற்கு இவன் காரணமாக இருந்தான். அவன் மனைவி சாபமிட்டுச் செத்துப்போயிட்டாள். அந்தச் சாபம் இந்தப் பிறவியில் வந்து பிடித்தது என்கிறான். அந்தக் கதை எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். முன்னைப் பிறவியில் அவன் செய்த தவறினால் இது வந்ததே தவிர. இந்தப் பிறவியில் செய்த காரியங்களுக்காக அவனுக்கு இந்தத் தண்டனை இல்லை. எனவே, கோவலனையோ, கண்ணகியையோ, மாதவியையோ, கோப்பெருந் தேவியையோ எந்த இடத்திலும் இளங்கோவடிகள் ஒரு சிறு மாசு கூடக் கற்பிக்காமல் எல்லாரையும் தூக்கி நிறுத்திய சிலப்பதிகாரம் எனக்கு ரொம்பப் பிடித்தது. சிலப்பதிகாரத்தில் ரொம்பப் பிடித்தது என்னவென் றால் அவர்தான் முதன் முதலில் தமிழகத்தை ஒருங்கிணைக்க வேண்டும் என்று நினைத்தார். அதற்கு முன்னாலே புறநானூறு (அன்றைக்குக் கூடச் சொன்னேன்; இன்றைக்கும் சொல்கிறேன்) புறநானூற்றில் சேரன் சோழனை வென்றான். சோழன் பாண்டியனை வென்றான். 10 ஆம் நூற்றாண்டு வரைக்கும் என்ன நடந்திருக்கிறது? 13 ஆவது நூற்றாண்டில். எல்லா நூற்றாண்டிலும் இதுதான் நடந்திருக்கிறது. 10ஆவது நூற்றாண்டில் ஆதித்ய கரிகால சோழன் பாண்டிய நாட்டு மன்னனாகிய வீரபாண்டிய னுடைய தலையைக் கொய்தான். “பொன்னியின் செல்வன்” படித்தால் உங்களுக்குத் தெரியும். அது உண்மை. ஆதித்ய கரிகாலன் வீரபாண்டியன் தலையைக் கொய்தான். வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் போல் ஒருத்தருக்கொருத்தர் அடித்துக்கொண்டு வெளியிலே போய், பகைவரைக் கூப்பிட்டுக் கொண்டு இரண்டு பேரும் உதை வாங்கி, அயலவரைத் தாமே கொண்டு வந்தார்கள். இந்த வேலையை நம்ம ஆட்கள் நன்றாகவே செய்வார்கள். வரலாற்றில் இன்னும் நிறைய இருக்கின்றன. (அதையெல் லாம் சொன்னால் விரிந்து போய்விடும்). எனவே, இப்படி ஒருத்தருக் கொருத்தர் அடித்துக் கொண்டு இறந்திருக்கிறார்கள். இதிலே என்ன வருத்தம் என்றால் புறநானூற்று வீரன் என்று நாம் சொல்வது ஒருத்தருக்

கொருத்தர் அடித்துக் கொன்று செத்திருக்கிறீர்களே! யாரை அடித்தீர்கள் என்றால், சேரன் சோழனை அடித்திருக்கிறான்; சோழன் பாண்டியனை அடித்திருக்கிறான். பாண்டியன் சேரனை அடித்திருக்கிறான். திருப்பித் திருப்பி ஒருத்தனுக்குள்ளேயே அடித்துக் கொண்டிருக்கிறான். தமிழனுக் குள்ளேயே ஒருத்தனுக்கொருத்தன் அடித்துக் கொண்டு செத்திருக்கிறானே தவிர இன்னொரு அயலவனை வென்றான் என்பது இராசராச சோழன் காலத்திலே தான் கலிங்கம் வரை போகிறது, மங்களூர் வரை போகிறது. கருநாடக மாநிலத்தின் நுளம்பபாடி, தாளவாடி போன்ற பகுதிகள் வரை சுழன்று மேலே போகிறது. இராசராச சோழன் காலம் 10 ஆம் நூற்றாண் டிற்குப் பின்னாலேதான். அதுவரைக்கும் ஒருத் தனுக் கொருத்தன் அடித்துக் கொண்டான். அட ஒருத்தனுக்கொருத்தன் அடித்துக் கொள்ளட்டும். எதிரியை அடிங்கடா! அவனும் தமிழன்; நீயும் தமிழன்! ஆனால், இளங்கோவடிகள் என்ன நினைத்தார், இந்தத் தமிழர் களையாவது சேர சோழ பாண்டியர்களையாவது ஒற்றுமையுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கண்ணகியை, பிறந்தது புகாராக சோழநாட்டுப் பெண்ணாகப் பிறந்து, வாழ்வதற்குப் புகுந்த இடம் மதுரையாக - மதுரைக்கு அடுத்த பக்கத்தில் கடைசியில் சிறப்புச் செய்தது வஞ்சி நாட்டில் என்று அந்த 3 மன்னர்களை இணைத்த பெருமை - தமிழகத்தை நினைத்த பெருமை - தமிழகம் முதன்முதல் ஒரே தமிழகமாக இருக்க வேண்டும் என்று அடியெடுத்துக் கொடுத்த பெருமை இளங்கோவடிகளைத்தான் சாரும். எனவே, வெறுமனே மாதவிக்குச் சிறப்புச் சேர்த்தான், கண்ணகிக்குச் சிறப்புச் சேர்த்தான் என்பது மட்டுமன்று; இந்தப் பெண்மணிகளுக் கெல்லாம் சிறப்புச் சேர்த்தது மட்டுமல்லாமல் தமிழகத்திற்கும் சிறப்புச் சேர்த்து – தமிழகம் ஒன்றாக இணைந்து இருக்க வேண்டும் என்று சிறப்புச் சேர்த்தான். அவனும் ஒரு நாட்டு இளவரசனாக இருந்து துறவு கொண்ட வன்தான். ஆனாலும், அதையும் மீறி ஒரு தமிழினமாக ஒன்றுபட வேண்டும் என்று நினைத்தான். அதனாலே சேரன் செங்குட்டுவன் போகும்



போது. வடநாட்டுக்கு ஏன் போனான் என்றால், அருந்தமிழாற்றல் காண்குதும் என்பதற்காகப் போனானாம். ஏண்டா! தமிழைப் பழித்தா பேசுகிறீர்கள்! வருகிறேன் அங்கே! என்று போய் விட்டான். தமிழைப் பழிக்கும்போது, இவர்களெல்லாம் சேர்ந்து அதை எதிர்க்கக்கூடிய நிலையைக் கொண்டு வந்து விட்டார்கள். அந்தப் போருக்கான அடிப் படைக் காரணம் தமிழைப் பழித்தது. எனவே தான் கனக விசயர் தலையில் கல்லை எடுத்துக் கொண்டு வருகிறபோது, ஒரு அற்புதமான உலகத்தைப் படம்பிடித்து, நல்ல இலட்சிய உணர்வோடு, அதே நேரத்தில் எந்த ஒரு பாத்திரத்தையும், துல்லியமாக விளக்கிச் சொல்லி - அவர்களுடைய சூழலை விளக்கி மாசு மறு இல்லாமல் எல்லோரையும் மேலேற்றிச் சிறப்புக் குரியவர்களாக்கிய பெருமை. அதனால்தான் பாரதி பாடினான். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு என்று பாடினான். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடினான். அந்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைக் கொஞ்ச நேரத்தில். உங்களிடத்திலும் சொல்லுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்வு பெற்று விடை பெறுகிறேன்! நன்றி! வணக்கம்!.

3

# பாவாணரும் பாவேந்தரும்
# சுங்கைப்பட்டாணி - காந்திமண்டபம்
# 29.11.2002

இந்த நிகழ்ச்சியினுடைய தலைவர் காந்தி நினைவு மண்டபத்தினுடைய மேலாண்மைக் குழுவின் தலைவர் திரு. தண்ணீர் மலை அவர்களே! தமிழ் எழுத்தாளர் இயக்கத்தினுடைய சார்பில் முன்னிலை ஏற்றுக் கொண்டிருக்கிற திரு. புண்ணியவான் அவர்களே! நண்பர் சுப்பிரமணியம் அவர்களே! தமிழ்நெறிக் கழகத்தினுடைய தேசியத் தலைவர் நண்பர் திரு. திருமாவளவன் அவர்களே! அதனுடைய பொதுச் செயலாளர் பழ.வீரன் அவர்களே! தமிழகத்திலிருந்து என்னுடன் வருகை தந்திருக்கின்ற பாவாணருடைய நூல்களை இதுவரை யாரும் இப்படி ஒட்டு மொத்தமாக வெளியிட்டதே இல்லை என்ற வரலாற்று முத்திரை படைத்த அன்புக்குரிய நண்பர் இளவழகன் அவர்களே! நண்பர் யோகராசு அவர்களே! மற்றும் வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

பொதுவாகவே, தமிழ்நாட்டில் ஏராளமான கூட்டங்கள் நடைபெறக்கூடிய வாய்ப்பும், அதை ஆங்காங்கு இருக்கின்ற பல்வேறு அமைப்பினர் சிறப்பாக ஏற்பாடு செய்து, ஏராளமான பேரைக் கூட்டிவைத்து உரையாற்றுகிற வாய்ப்பும் அதிகமாக அமைவதற்குக் காரணம் எங்களுடைய மக்கள் தொகை. ஏனென்றால் தமிழ்நாட்டில் மக்கள் தொகை 6,21,00,000. ஆனால், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உங்களைப் போன்றவர்கள் ஆர்வ மிக்கவர்கள் ஒன்று கூடிக் கேட்பது என்பது தான் எங்களுக்கு மனநிறைவையும், உங்களுக்கு ஒரு மன மகிழ்ச்சியையும் தரக் கூடியது. காரணம் பேச்சு என்பது; ஒன்று பயனுடையதாக இருக்க வேண்டும். மற்றொன்று சுவை உடையதாகவும் இருக்க வேண்டும். சிலபேர் இலக்கியத்தை இலக்கணம் மாதிரிப் பேசுவார்கள். ஏற்கெனவே, இலக்கணம் என்றால் ரொம்பப் பேர் ஓடிடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இலக்கிய வகுப்பையே கூட இலக்கணம் மாதிரி நடத்தியவர்களும் இருக்கிறார்கள். இலக்கண வகுப்பையே இலக்கியம் மாதிரி நடத்தியவர்களும் இருக்கிறார்கள். எனவே அவரவருடைய திறமையைப் பொறுத்துப் பேச்சு அமையும் என்பதை நான் நெடுங்காலம் கண்டவன் என்ற முறையிலும் பி.எசி. மாணவனாக இருந்த காலத்திலிருந்து அதாவது 1958 லிருந்து பேசிக் கொண்டே வருபவன் என்ற முறையிலும் - பிறகு சட்டப் பேரவைத் தலைவராக, தமிழில் அந்தப் பட்டம் இருந்தாலும்

ஆங்கிலத்தில் அதற்கு speaker என்று பெயர். அதற்கும் பேச்சாளர் என்று தான் பெயர். பிறகு அமைச்சராக இருக்கின்றபோது விடை சொல்லுகிற போது (அல்லது) மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது ஒரு மணிநேரத் திற்கும் மேலாகப் பேசுகிற வாய்ப்பைப் பெறுவோம். பிறகு நானே 23 ஆண்டுகள் பேராசிரியராக இருந்திருக்கிறேன். 10 ஆண்டுகள் கல்லூரி முதல்வராகவும்,10 ஆண்டுகள் தமிழ்த் துறைத் தலைவராகவும்,3 ஆண்டுகள் கணித ஆசிரியராகவும் இருந்திருக்கிறேன். எனவே, 23 ஆண்டுகள் பாடம் நடத்தி, ஆயிரக்கணக்கான மேடைகளில் ஏறிப் பேசிப் பழக்கப்பட்ட எனக்குப் பேசுவதில் இடர் ஒன்றுமில்லை. எனக்கு ஏற்படுகிற மகிழ்ச்சியெல் லாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் அங்கிருக்கின்ற மக்களுக்கோ அல்லது இயக்கம் சார்ந்த இப்போது வருகிற தலைமுறை யினருக்கோ (அது ரொம்ப முக்கியம் அதற்காக வேறுபடுத்திக் காட்டு கிறேன்) அல்லது கல்லூரி சார்ந்திருக்கிற தோழர்களுக்கேற்படுகிற ஆர்வத்தை விட மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிகுந்த ஆர்வம் காட்டி, அக்கறை காட்டித் தமிழை வளர்ப்பதிலும், பேணுவதிலும் இது போன்ற கூட்டங்களில் கேட்டுச் சுவைப்பதிலும் நீங்கள் முன்னணியில் இருக்கின்றீர்கள் என்பதை நினைக்கின்றபோது நான் உள்ளபடியே பெருமிதமடைகிறேன். எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பதைப் பற்றி எப்போதுமே கவலைப்பட வேண்டிய தில்லை. ஏனென்று கேட்டால் நாமே சொல்லிக் கொள்ளலாம். 10 பேரை நாங்கள் 1000 பேராகக் கருதுகிறோம் என்று; அப்படியல்ல உண்மையிலேயே ஆர்வமுடைய வர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கும் பயனிருக்கும் என்ற நம்பிக்கை யோடு வந்திருக்கிறீர்கள். நானும் இப்போது நிறையச் செய்திகளை வெவ்வேறு தலைப்புகளில் பேசக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் குறிப்பாகப் பாவேந்தரைப் பற்றியும் பாவாணரைப் பற்றியும் இணைத்துப் பேசப் போகிறோம். ஏன் இதை இணைத்துப் பேசுகிறேன் என்றால் இரண்டுக்கும் ஒரே அடித்தளம்தான். அவருக்கும் முன்னாலே ‘பா’, இவருக்கும் முன்னாலே “பா”. அவர் பாவாணர், இவர் பாவேந்தர். பா ஆற்றல் படைத்த ஒருவர், வேந்தர் என்றால் அதில் உச்சத்தில் நிற்கும் தலைவர் என்று பொருள். ஆனாலும், பாவாணர் பாவேந்தரை என்ன கருதினார் என்பதை விட, பாவேந்தர் பாவாணரைப் பற்றி என்ன கருதினார் என்பது தான் முக்கியம். காரணம் அவருடைய மொழி அறிவை, மொழி ஆற்றலை, பாவேந்தர் பெரிய அளவிலே பாராட்டியவர். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாவேந்தருடைய பாடல்களிலே ஏற்படுகிற சில மாற்றங்களுக்குக் கூடப் பாவாணர் ஒரு காரணம். ஓர் எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். பின்னாலே தமிழியக்க நூல் வரும்போது எல்லாமே நல்ல தமிழ். ஒரு பாட்டைக் கேட்டால் உங்களுக்குத் தெரியும்.

**வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையினில்**
**ஆங்கிலமா வேண்டும்?**
**மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என**
**அன்னவர்க்குச் சொல்ல வேண்டும்**
**ஆணி விற்போன் முதலாக அணி விற்போன் ஈறாக**

அனைவர் போக்கும்
நாணமற்றதல்லால் இங்கே
நந்தமிழின் நலங்காக்கும் செய்கையாமோ

என்று ஒரு பாடலைப் பாடுவார்.

இதில் எந்த ஒரு பிறமொழிச் சொல்லும் கிடையாது. ஆனால், இதே பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் - சபாஷ் கரகோஷம் என்று பாடியிருப்பார். மறந்து விடக்கூடாது. சபாஷ்! கரகோஷம்! அது வேண்டுமென்று பாடவில்லை. அதைத்தான் நீங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எனக்கே பாவாணருடைய நூலை 1957 இல் முதன்முதல் ஒரே ஒரு ஊருபாய் கொடுத்து, (இப்போது நீங்கள் 20 வெள்ளி கொடுத்து வாங்கப் போகிறீர்கள்) நான் வாங்கியது ஒரு உரூபா கொடுத்து 'ஒப்பியன் மொழி நூல்' அதுவும் பழைய புத்தகக் கடையில். எவனோ ஒரு புண்ணியவான் வாங்கி, 50 காசுக்குக் கடையில் கொடுத்திருக்கிறான். அவன் வாழ்க! இல்லையென்றால் எனக்கு அந்த நூல் கிடைத்திராது. ஏனென்றால் நானும் மாறியிருக்க மாட்டேன். அந்த நூலை வாங்கிய போது எனக்கு ஏற்பட்ட திகைப்பு என்னவென்றால், எல்லோரும் என்ன எழுதுவார்கள். ரூபாய் 6, ரூபாய் 10, ரூபாய் 20 என்று அப்படித்தானே விலை போடுவோம். ஆனால் பாவாணர் மட்டும் என்ன பண்ணினார் உரூபாய் 3 என்று போட்டிருந்தார். ஏனென்றால் 'ர' கரம் மொழிக்கு முதலில் வாராது. வேற எல்லோரும் நூல் எழுதினவர்கள் தான். பாரதிதாசன் நூலை எழுதிக் கொடுத்திடுவார். எவனோ போடுவான். அவன் ரூபாய் என்றுதான் போடுவான். எனவே அதைப் பார்த்தவுடனே ஆகா இந்த நூலுக்குள் ஏதோ ஒன்று இருக்கிறது. நான் ஒரு உரூபா கொடுத்துத்தான் அதை வாங்கினேன்; 3 உரூபா கொடுத்து வாங்கவில்லை. எவனோ ஒருத்தன் 50 காசுக்கு விற்றிருக்கிறான். நான் ஒரு உரூபா கொடுத்துத்தான் வாங்கி இருக்கிறேன். அப்போது ஏதோ ஒன்று இருக்கிறது அப்படி என்று வீட்டுக்குப் போனோம். 57 ஆவது ஆண்டில் நான் பி.எ.சி. முதலாண்டு படித்த காலத்தில். 1957-58இல் ஏனென்றால் இந்தத் தனித் தமிழ்ப் பேச்சு என்பது ஓராண்டு அல்ல, 45 ஆண்டுகளாகப் பயிற்சி - மறந்து விடக்கூடாது. எனவே, ஒன்று மட்டும் நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும். உங்களால் முடியவில்லை என்பது வேறு. தமிழால் முடியுமா முடியாதா என்பது வேறு. தமிழால் முடியும். உங்களால் முடியாமல் போனால் தவறில்லை. எனக்கு இருக்கிற அதே ஆற்றல் இளவழகனுக்கு இருக்காது. இளவழகனுக்கு இருக்கிற அதே ஆற்றல் திருமாவளவனுக்கு இருக்காது. எனவே,

"எனை வகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்"

இன்னும் சொல்லப்போனால், நான் நினைப்பதை எடுத்துச் சொல்வதே பெரிய கலை. சிலபேர் நினைப்பான். வெளியிலே வராது. மேல்நாட்டிலே யாரோ ஓர் அறிஞர் சொல்வார். பேசத் தொடங்கினாராம் I conceive I conceive I conceive என மூன்று தடவை சொன்னாராம். Conceive என்றால் வேறு பொருள். பக்கத்திலே இருப்பவர் மூன்று தடவை Conceive ஆகியும் ஒன்றும் பிறக்கவில்லையே என்றாராம். பொருள் அது. அவர்

சொல்ல வருவது வேறு. ஆனால் உணர்த்த முடியவில்லை. அதனால் தான் வள்ளுவரே சொன்னார்.

> "இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
> உணர விரித்துரை யாதார்" (குறள். 650)

அழகான மலர் ஆனால் அதில் மணம் இல்லையே? நீங்கள் உணரும்படி நான் விரித்துரைத்தால்தானே அது மணம். எனவே, இப்படிப் பட்ட சில கலைகளில் வல்லமை படைத்ததற்குக் காரணம் அந்த நூல்தான். எங்களுக்கு ஏற்கெனவே திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் இருந்தது. அந்தக் காலத்தில் உங்களுக்குத் தெரியும். உங்களில் பலபேர் தமிழ் நாட்டில் தொடர்புடையவர்கள். 1954,'56,'57 ஆகியவற்றில் எல்லாம் திராவிட இயக்கத்தின் சார்பில் 42 இதழ்கள் வந்தன. இப்போது எல்லாம் குறைந்து ஒரே ஓர் இதழுக்கு வந்து விட்டோம். அது ஒரு நல்ல முன்னேற்றம் என்று வைத்துக் கொள்ளுங்கள்! இப்போது எல்லாமே கலப்பட இதழ்கள்; கதம்ப இதழ்கள். உங்களுக்குத் தெரியும். மணி அடித்தது என்று எழுத மாட்டான். 'டிரிங்கியது' என்று எழுதுகிற அளவுக்கு இதழ்கள் வளர்ந்து விட்டன; நூல்கள் வந்துவிட்டன. ஆனால், அன்றைக்குத் தமிழை நோக்கி - தமிழினத்தினுடைய மேம்பாடு நோக்கி - அப்போது ஏற்கெனவே திராவிட நாட்டுடைய விடுதலைக் கொள்கையும் எல்லோருக்கும் இருந்தது. (அதையும் சொல்லிவிட்டு வரவேண்டும்). விடுதலை நோக்கி இந்தக் கோணத்தில் போகிறபோது, எல்லோரும் அவரவர்க்கு முடிந்த அளவுக்குக் கட்டுரைகளை - கவிதைகளை எழுதினார்கள். அந்தக் காலகட்டத்தில் தான் தந்தை பெரியாருடைய கருத்துகளை ஏற்று, நாம வந்து தவறாகக் கருதி விடக் கூடாது. தந்தை பெரியாருக்கு அவர் இறை மறுப்பாளரே தவிர, ஆனால் அருமையான பண்பாளர். அவருடைய பண்பாடு இறை மறுப்பு. அதிலே ஒன்றும் தப்பில்லை. ஏனென்றால் நான் கண்டிப்பாக கோயில் களுக்குச் செல்வேன். நான் பெரியார் பற்றாளர். எனவே, அறநிலையத் துறை அமைச்சர் கோயிலுக்குள் போகாமல் வெளியே நின்றால், அது எப்படி முடியும்? குடமுழுக்கு செய்து, வழிபாடு செய்து எல்லாவற்றிலும் நான் நிற்கத் தான் செய்வேன். ஆனால், பெரியாருடைய பண்பாடு வேறு, அது வேறு, இது வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஆனாலும், பெரியாரை மதிக்கிறேன் என்றால் அவர்தான் உள்ளபடியே தூங்கிக் கிடந்த தமிழினத்தைத் தூக்கி நிறுத்தி - நீங்களெல்லாம் உணர்ந்து வளரச் செய்தவர் - அவர் பேசி முடித்தவுடன் சொல்லுவார். நாம் என்ன சொல்லுவோம்? "இதையெல்லாம் சொல்லியுள்ளேன்; ஒழுங்காகக் கேட்டுக் கடைப்பிடியுங்கள்" என்று. ஆனால், பெரியார் அப்படிச் சொல்லவே மாட்டார். "பெரியார் சொன்னாலும் சிந்தித்துப் பார்" என்று சொல்லுவார். பெரியார் சொன்னாலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெரியார் சொன்னாரு என்பதற்காக ஏற்றுக் கொள்ளக் கூடாது. என்பது தான் அவருடைய விவாதம். ஏனென்றால் நான் எவ்வளவு சொல்லு கிறேனோ அதற்குப் பிறகு கேட்டு, இது நல்லது, இது அல்லது என்று கொள்ள வேண்டியதைக் கொண்டு, தள்ள வேண்டியதைத் தள்ள வேண்டியது உங்களுடைய கடமை. பாவாணரே எழுதுகிறார்.

*பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார்கல்வி*
*மிகுத்ததனால் ஏது பயன்?* இது பாவாணர்.

இவ்வளவுக்கும் பாவாணர் இறைப் பற்றாளர் என்பதை மறந்து விடக் கூடாது. பகுத்தறிவு என்ற உடனே இறைப்பற்றுக்கு எதிர்ப்பு அன்று. இறைப்பற்றாளர்க்கும் இறைப்பற்று இல்லாதவர்களுக்கும் பகுத்தறிவு பொது. நாம கண்டிப்பாக இலையில் என்ன வைக்கிறோம் என்பதைப் பார்த்து விட்டுத்தான் சாப்பிடுவோம். அதற்காக, கண்டதைப் போடுவதை யெல்லாம் சாப்பிட மாட்டோம். அதுதானே உண்மையும் கூட. எனவே, பகுத்தறிவு என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் செய்ய முடியும். எனவே, பகுத்தறிவு ஒரு கோட்பாடு. ஆனால், பெரியாருடைய இந்தக் கருத்துகளை அந்தக் காலகட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ... பல எழுத்தாளர்கள் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், அன்பழகன் என்று எத்தனையோ பேர்கள் எழுதுகிறார்கள். அதே மாதிரி பாவேந்தர் என்ற முறை யில் அவர் கவிதைகளை எழுதினார். அண்ணா அவர்கள் உரைநடையில் கொண்டுவந்தார். எனவே, பெரியாருடைய இரட்டைக் கிளைகளாக, அண்ணாவினுடைய உரைநடை. உரை நடை என்றால் புதினம், சிறுகதை, நாடகம் ஒரு பக்கம். பாவேந்தருடைய கவிதைகள் மறுபக்கம். இவை இரண்டும் சேர்ந்துதான் தமிழ்நாட்டுக்கு ஒரு விறுவிறுப்பைத் தந்தன. அன்றைக்கு அண்ணா அவர்கள் ஓரிடத்தில் பேசுகிறார் என்று சொன்னால். பச்சையப்பன் கல்லூரியில் பேசினால். எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் கேட்க வந்து விடுவோம். அது ஒரு காலகட்டம். ஏனென்றால் நான் பச்சையப்பன் கல்லூரி மாணவனாக இருந்தவன்; அண்ணா அவர்களைப் பேச அழைத்துக்கிட்டுப் போன ஒரு வாய்ப்பைப் பெற்றவன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பேசுகிறார் என்று விளம்பரப் படுத்தினாலே போதும். எல்லோரும் வந்து சேர்ந்து விடுவோம். அவ்வளவு பெரிய விறுவிறுப்பு மிக்க ஒரு காலம் அது. அதேபோல பாவேந்தருடைய கவிதைகள் என்று சொன்னால் அதுவும் நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்கள் எல்லாம் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று அந்தக் கடைசி வரியைச் சொல்லித் தான் அரசியல் கூட்டத்தையே நடத்துவார்கள். அரசியல் கூட்டத்திலேயே கடைசி வரியைத் தான் சொல்லுவார்கள். ஏனென்றால் அவ்வளவு விறுவிறுப்புள்ள வரிகள்.

*"வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்*
*எங்கள் மூச்சாம்"*

*"கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்*
*ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்"*

*"சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள் தீராதி தீரரென்*
*றூதூது சங்கே!"*

எல்லாம் அந்தப் பாட்டிலே வருவதுதான். எனவே அப்படிப் பட்ட விறுவிறுப்பான கவிதைப் பகுதிகளைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும், மற்ற பகுதிகளை அண்ணா அவர்களும் எடுத்துக் கொண்ட இயக்கமாக

அது வளர்ந்ததனால் தான் அந்த இயக்கத்தின் ஒரு துளிதான் தமிழ்க் குடிமகன். அப்படியானால் பாரதிதாசனுடைய அடிப்படைக் கோட் பாடுகள்; என்ன? அவருடைய சிறப்புகள் என்ன? ஏனென்றால் நண்பர் பாவேந்தர் அவர் களைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டும் என்று விரும்பினார். பாவாணர் என்ன கருதினார். அவருடையது மொழி ஆராய்ச்சி. அவரும் பாக்களை எல்லாம் எழுதினதாலே அவரும் பாவாணர். அவர் 'இசையரங்கு இன்னிசைக் கோவை' எனும் நூலை எழுதி யிருக்கிறார். உங்களுக்குத் தெரியும். அது நூலாக வெளிவந்திருக்கிறது. இன்னும் நன்றாகப் பாக்களை எழுதக் கூடியவர். ஆனால், அந்தப் பாக்கள், நீங்கள் பொதுமக்கள் எடுத்துப் புழங்கக் கூடிய அளவுக்கு அல்லது மேற்கோள் காட்டக் கூடிய அளவுக்கு அவர் எழுதவில்லை. அவர் ஒரு வகையில் செய்தியை எழுதியிருக்கிறார். அவ்வளவுதான். அவர் எதிலே சிறந்தவர். மொழியாராய்ச்சியில் சிறந்தவர். பாவேந்தர் எதிலே சிறந்தவர். அந்தச் சொல்லை அழகாக எடுத்துப் போட்டு அந்தப் பாட்டைக் கொண்டு போவார். ஓர் எடுத்துக்காட்டுக்குச் சொல்லுகிறேன். எல்லோர்க்கும் தெரிந்த செய்திதான். ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் காதலிக்கிறார்கள். காதல் பார்வையை எப்படிப் பரிமாறிக் கொள்கிறார்கள். ரொம்ப அழகாகச் சொல்லுவார்.

"கூடத்திலே மனப் பாடத்திலே - விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை."

இப்போது அவள் 'sight' அடிக்கிறாள். அப்படிச் சொன்னால் தான் உங்களுக்கு விளங்கும். அப்படித்தானே நாடு ஆகிவிட்டது. இவன் வந்து அவளைப் பார்க்கவில்லையாம். அவள் வந்து இவனைப் பார்க்கிறாள்.



கூடத்திலே மனப்பாடத்திலே - இவன் நூலை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்கிறான்.

*கூடத்திலே மனப்பாடத்திலே - விழி*
*கூடிக் கிடந்திடும் ஆணழகை*
*ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் - அவள்*
*உண்ணத் தலைப்படு நேரத்திலே*
*(அவள் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே)*
*"பாடம் படித்து நிமிர்ந்த விழி"*

இவன் அப்படியே படித்துவிட்டு நிமிர்ந்து பார்க்கிறான். எதிர் பாராமல் அவள் பார்ப்பது இவனுக்குத் தெரிந்து விடுகிறது. சும்மா இருப்பானா இவன்

*பாடம் படித்து நிமிர்ந்த விழி - அதிற்*
*பட்டுத் தெறித்தது மானின் விழி!*

அவளுடைய பார்வையும் இவனுடைய பார்வையும் மோதி என்னாச்சு.

*"பட்டுத் தெறித்தது மானின் விழி!"*

ஒரு பெண்ணுக்கு எவ்வளவு தான் உவமை. நம்ம தமிழ்நாட்டில் எனக்குக் கவிஞர்கள் மேல் இருக்கிற பெரிய வருத்தமே சினமே ஆறாத சினமே-எப்பொழுது பார்த்தாலுமே பெண்களை வர்ணித்திருக்கிறார்களே தவிர நம்மளை எவனாவது வர்ணித்திருக்கிறானா! மான் விழி என்கிறான். கேட்டால் மருட்சி மிக்க கண்கள் என்கிறான். மீன் விழி என்கிறான். அது பாண்டிய நாட்டு மீனாம். மீன் போன்ற வடிவத்திற்காக மீன் விழி என்கிறான். மலர் விழி என்கிறான். மலர் போன்ற கண்கள் என்கிறான். நமக்கு ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? பாடியவர்கள் எல்லாம் நம்ம ஆள்கள்தான். ஆனால் நமக்கும் நான்கைச் சொல்லி வைப்போம் என்றால் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை.

*"ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் - அவள்*
*உண்ணத் தலைப்படு நேரத்திலே,*
*பாடம் படித்து நிமிர்ந்த விழி - அதிற்*
*பட்டுத் தெறித்தது மானின் விழி!*
*ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் - இவன்*
*ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!"*

ஏற்கெனவே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். இவன் அப்படி அவளைப் பார்த்தவுடனே தான் தன் ஆடையைத் திருத்தி நின்றாள். இதுதான் பெண்களின் சிறப்பு. அதாவது உடுக்கை இழந்தவன் கைபோல என்று சொல்கிறானே இயல்பாகவே தன்னுடைய ஆடைகளைச் சரிசெய்து கொள்வது நம்முடைய தமிழ்நாட்டுப் பெண்களுக்குரியது. அந்த மரபில்

*"ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் - இவன்*
*ஆயிரம் ஏடு திருப்புகின்றான்".*

படித்து முடித்துவிடுவான் புத்தகத்தை. எவ்வளவு எளிய ஓர் அழகிய கவிதை.

இவனே அப்படிக் காதலை மட்டுமே பாடிக் கொண்டே யிருந்தானா! இல்லை. அவனுக்கு சமுதாய சீர்திருத்தத்திலே ரொம்ப

அழுத்தம். ஏனென்றால் பெரியாருடைய கொள்கையிலே வருபவனாச்சே! ஓர் ஆடவன் இறந்தால், அந்தப் பெண் உடன் கட்டை ஏறவேண்டும் என்ற நாடாச்சே இந்தியா. சிலப்பதிகாரத்திலே கூடக் கோப்பெருந்தேவி இறந்து போகிறாள் உடனே. ஆனால் உடன்கட்டை ஏறி அல்ல. கோப்பெருந்தேவி என்ற பாத்திரத்தை எங்கேயோ கொண்டு போய்விடுகிறான். கோவலனைக் கொன்று அந்தச் சிலம்பைக் கொணர்க என்று சொல்லிவிட்டான். போனார்கள், கொன்றார்கள், பிறகு வழக்குரை காதைக்கு வந்து விட்டாள். எல்லாம் முடிந்துவிட்டது. உண்மையை உணர்ந்தான்

**"பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட**
**யானோ அரசன் யானே கள்வன்"**

என்று சொல்லி வீழ்ந்தான். அவன் விழுந்ததைப் பார்த்து, இவளும் இணையடி தொழுது வீழ்ந்தாள். அதோடு கதை முடிந்துவிட்டது. இரண்டு பேரும் இறந்து போய் விட்டார்கள். இது எதிர்பாராமல் ஏற்படுகிற ஓர் இழப்பு. இப்பொழுதும் நாம் செய்தி கேள்விப்படுகிறோம். கணவன் இறந்ததைக் கேட்டு மனைவியும் உடனே ஆவி துறந்தார் என்றிருக்கும். உடன்கட்டை ஏறுதல் வேறு, ஆவி துறத்தல் வேறு. எனவே, கோப்பெருந் தேவிக்கு அதற்கு ஒரு வரி போட்டான் பாருங்கள். சிலப்பதிகாரத்தில் (அதை எல்லாம் நீங்கள் நினைவில் வைக்கவேண்டும் அது தான் வாழ்க்கை)

**"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்"**

ஆனால், இப்போது மறு மணம் எல்லாம் செய்து கொள்வதற்கு நாம் அனுமதி கொடுத்துள்ளோம். அதிலே ஒன்றும் தவறன்று. காலத்தால் வர வேண்டும்.

பாரதிதாசனை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்பதைச் சொல்லு கிறேன். மறுமணம் செய்வதை அனுமதிக்கிறோம். ஆனால், அன்றைய காலகட்டத்தில், கோப்பெருந்தேவி இன்னொரு அரசனையா மறுமணம் செய்து கொள்ளமுடியும். கண்ணகி கோவலன் போய் விட்டான் என்று இன்னொரு திருமணம் செய்துகொள்ள முடியுமா? அது அந்தக் கால மரபு அன்று. எனவேதான் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல். அதுதான். ஈடுசெய்ய முடியாத நிரப்பிட முடியாத ஓர் இழப்பு அன்றைக்கு. ஆனால், பாவேந்தர் காலத்தில் என்ன வருகிறது.

**"சாத்திரம் பார்க்காதீர்**

(எத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு வருகிறது பாருங்கள்).

சாத்திரம் பார்க்காதீர் ஒரு கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திடச் சாத்திரம் பார்க்காதீர்".

எதற்கு கைம்மை நோன்பை - நோற்கணும் எதற்காக அந்தப் பெண் பட்டினி கிடக்க வேண்டும். எதற்காக உடலை வருத்தணும். இளம் பெண்ணாக இருக்கிற கைம்பெண் ஏன் இன்னொரு திருமணம் செய்து கொள்ளக்கூடாது. இது பெரியாருடைய கருத்து. அது திராவிட இயக்கத்தி னுடைய கருத்து. சமூக சீர்திருத்தத்தின் நோக்கம். எனவே, பாவேந்தர் அப்படி தூக்கிப் பாடுகிறார். அடுத்து, ஒரு கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என்பதற்காகத்தான் அந்த இறைவனுடைய கோட்பாடு

தொடங்கப் பட்டது. It is a concept. பிறகு பெயர்களை வடிவங்களைக் கொடுத்து விட்டோம். முதலில் வடிவமில்லாதவன் தான் இறைவன். வடிவங்களைக் கொடுத்து விட்டோமே தவிர. அடிப்படைக் கோட்பாடு என்பது ஒன்றுதானே! அவனை நினைத்தாவது நாம் கட்டுப்பாடாக வாழ வேண்டும். இந்தச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத் தான். பிறகு அதன் பேரிலேயே தவறுகள் நடந்ததை யெல்லாம் பார்க்க வேண்டும். அதனாலே வள்ளுவனே என்ன கண்டித்தான். துறவி என்று காவி உடை போட்டிருக்கிறீர்களே! ஏன் தவறு செய்கிறீர்கள்.

தவம் மறைந்து அல்லவை செய்தல். அது எதற்குச் சமம். ஒரு பறவையைப் பிடிப்பதற்கு வேடன் வந்து புதர் ஓரத்தில் மறைந்து நின்று பிடிக்கிறான் பாருங்கள்! அது மாதிரி தவத்திலே மறைந்து நின்று தவறு செய்கிறாய். எங்கள் ஊரிலே பிரேமானந்தா சுவாமி மாதிரி இப்போது அதுதானே வெளிப்படை. வெளிப்படையாகத் தெரியாமல் இன்னும் எவ்வளவோ நடக்கிறது. அதைச் சொன்னால் உங்களுக்குத் தாங்காது. நீ துறவியா? துறவு. அதோடு நிறுத்திக்கொள். அதன் வாயிலாக, துறவு என்று போன பிறகு உனக்கு எதற்கு உறவு.

“சாமியாருக்கு எதற்கு மாமியார்”. மாமியார் எனக்கல்லவா இருக்க வேண்டும். உனக்கு எதற்கைய்யா மாமியார். இந்த மாதிரி உள்ளவற்றையும் அவர் சாடுகிறார். இந்தமாதிரிப் போலி நிலைகள் கூடாது என்று பாவேந்தர் பாடல்களிலும் பெரியாருடைய பேச்சு களிலும் வருகிறது.

சரி இதுபோக வேறு நிலைகளில் எப்படிக் கருதுகிறார். இன்றைக்குக் காதலை நாம் போற்றுகிறோம். வாழ்த்துகிறோம். எல்லாம் ஓரளவு கலப்பு மணங்கள். எல்லாம் என்னைக் கேட்டால், தமிழ் நாட்டை விட இங்கே சாதி மத வேறுபாடுகளைக் கருதாமல் நிறைய திருமணங்கள் நடைபெறுகின்றன. என்பது எனக்குத் தெரியும். நிறைய குடும்பங்களையும் எனக்குத் தெரியும். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. அதுதான் வேண்டும். ஆனால், நாங்கள் இப்போதுதான் சாதிகளை வளர்ப்பதற்கு நிறைய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். இந்த 7,8,10 ஆண்டுகளில் அதிகமாகிவிட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அரசியல் ரீதியாகவும் வந்து குட்டிச் சுவராகிப் போய்விட்டோம். அது தவறு. ஏனென்றால் நாம் தமிழ்நாட்டுக் காரர்கள் குறிப்பாக இந்தியாவில் மட்டும்தான் இந்த வர்ணாசிரமம். ஒருத்தருக்கொருத்தர் தொழில் செய்வதில் தான் வேறுபாடு. தமிழ்க்குடிமகன் ஆசிரியர் தொழில் செய்கிறான். இளவழகன் அச்சுத் தொழில் செய்கிறார். அவர் கொல்லுப் பட்டறையிலே வேலை செய்கிறார். அவர் செய்கிற தொழில் அது, இவர் செய்கிற தொழில் இது. மாலையில் எல்லோரும் சேர்ந்து அண்ணன் தம்பிகளாகப் போகிறார்கள். இதுதானே சமூக உறவு. நீங்கள் கடைசியிலே என்ன செய்து விட்டீர்கள். இவன் உயர்ந்தவன்; தாழ்ந்தவன்; தீண்டத்தகாதவன். நான் என் கண் முன்னாலேயே பார்த்திருக்கிறேன். மறந்துவிடக்கூடாது நீங்கள். என் ஊரிலேயே குப்பையன் என்ற ஓர் ஆதி திராவிடன்; ரெங்கையர் வீடு ... கொஞ்ச தொலைவில் இருக்கிறது என்றால், இவன் இங்கேயிருந்து நின்று ‘சாமியோவ்’ என்று கூப்பிடுவான். அவர் அங்கேயிருந்து வந்து காசைக்

கொடுத்து விட்டுப் போவார். கடைக்குப் போய் வெற்றிலை, பாக்கு வாங்கிட்டு வருவான். எப்படித் தெரியுமா உங்களுக்கு. வெற்றிலை பாக்கை ஒரு தாளில் சுற்றி அதை ஒரு சணலில் கட்டித் தூக்கிக் கொண்டு வருவான். அதாவது 'டச்' பண்ணக்கூடாது. அதுதானே பொருள். தீண்டாமை. அவன் சணலில் கொண்டு தருவதை அவர் வாங்கிக் கொண்டு போவார். இந்தச் சணலின் மேல் அவர்தான் பிடிப்பார். அது தீட்டில்லையாம். ஆனால், வெற்றிலையிலே பட்டுவிடக் கூடாது. ஆனால் அதே குப்பையன் என் கண் முன்னால் பார்த்தேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு. அதே வீட்டில், வீட்டுக்குள் வேலை பார்த்தான். இதில் குப்பையன் ஒன்றும் விண்ணப்பம் போடவில்லை. ரெங்கையரும் வாங்க! உடனே நான் மனமாற்றம் அடைந்து விட்டேன் என்று சொல்லவில்லை. இயற்கையாகவே நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மெல்ல மெல்ல வளர்ந்து இந்த இரண்டு பேருடைய மனநிலை யையும் மாற்றி இருக்கிறது. இதுதானே சமுதாயத்தின் மீட்சி. இதைத் தானே நாம் எதிர்பார்க்கிறோம். இன்றைக்கு அந்த வேறுபாடு எல்லாம் முடிந்து போய்விட்டது. இன்றைக்கு இ.ஆ.ப. அலுவலர்கள் எத்தனைபேர் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் நீங்கள். 1898 ஆம் ஆண்டில் நாம் சாதாரணக் கொடுமைகளை எல்லாம் தமிழ்நாட்டில் செய்யவில்லை. 1898 ஆம் ஆண்டில் சரியாக 104 ஆண்டுகளுக்கு முன்னால் கமுதியில், முதுகுளத்தூர் பகுதியில் மீனாட்சியம்மன் கோயிலில் ஓர் இனத்தாரை இன்னோர் இனத்தார் உள்ளே நுழைய விடவில்லை. (பேர் எல்லாம் சொன்னால் நன்றாக இருக்காது. நான் தனியாகச் சொல்கிறேன்) ஓர் இனத்தாரை - இரண்டு பேருமே தமிழர்கள் தான். நான் சொல்வது வேறு இனத்தாரைச் சொல்லவில்லை. தமிழர்களாகிய ஓர் இனத்தாரை இன்னோர் இனத்தார் கோயிலுக்குள் நுழைய விடவில்லை. அதனுடைய விளைவு 28 கொலைகள். உங்களுக்கு அதெல்லாம் நினைவு இருக்காது. அதற்குப் பேருதான் சிவகாசிக் கலவரம் என்று பெயர். ஆனால், அதையே அப்படியே திருப்புங்கள். இன்றைக்கு சிவகாசி, சாத்தூர் எல்லாவற்றிலும், இந்த மக்கள் பெருவாரியாக இருந்து, எல்லாக் கோயில்களிலும் அவர்கள்தான் அறங்காவலர்கள், அவர்கள் தான் எல்லாம் செய்கிறார்கள். பழைய நிலைமை மாறிப் போச்சே! எப்படி!



அதற்கு இராசாசி போட்ட சட்டமும் ஒரு காரணம்! ஏனென்றால் இந்த நேரத்தில் அவரை நன்றியோடு நினைவு கூர வேண்டும் 1939லே கோயிலுக்குள் நுழைய தடை செய்யப்பட்ட போது மறுக்கப்பட்டபோது சட்டம் போட்டுத் தடுத்தவர் அவர். இன்னும் சொல்லப் போனால் இது இலண்டனிலே உள்ள Privy Council வரைக்கும் போயிருக்கிறது. கோயிலில் நுழையக் கூடாது என்று அவன் தீர்ப்பளித்துவிட்டான். அதை முறியடித்தார் இராசாசி. இப்போது அந்த வேறுபாடில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் - அது வேண்டாம் - முதுகுளத்தூர் பகுதியில் நான் சொல்வது அப்போது சௌந்திரபாண்டிய நாடார் என்ற திராவிட இயக்கத்தினுடைய சுயமரியாதைத் தலைவர் இருந்தாரே அவர் மாவட்டக் கழகத்தின் தலைவராக இருந்தார். Distirct Board Chairman அவர்காலத்தில் பேருந்துப் பயணச் சீட்டில் என்ன அச்சடித்திருப்பான். பஞ்சமர்கள் யாரும் இந்த வண்டியில் ஏறக்கூடாது என்று இருக்கும். ஆதிதிராவிடர்கள் யாரும் இந்த வண்டியில் ஏறக்கூடாது என்று இருந்தது. இவர் வந்ததும் என்ன செய்தார்? ஆதி திராவிடர்களும் பயணம் செய்வதாக இருந்தால் தான் வண்டிக்கு உரிமம். இல்லையென்றால் வண்டியை மூடிப் போடுடா என்றார். இவர் வந்து பயணச் சீட்டில் அச்சடிக்கச் சொன்னார்.

பஞ்சமர்கள் இதில் பயணம் செய்யலாம் என்று அச்சிட்டு என்னிடம் கொண்டுவந்து காண்பித்தால் தான் உனக்கு உரிமம். எனவே, இப்படித்தான் வளர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. பாரதிதாசன் சொன்னான்.

**மனிதரில் நீயும் ஒரு மனிதன், மண்ணன்று**
**இமை திற! விழி! எழு! பார்!**
**பாரடா உனது மானிடப் பிறப்பை**
**எங்கும் பாரடா இப்புவி மக்களை**

என்று சொன்னான். ஆனால், என்ன ஆச்சு! பொட்டுப் பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக, தாழ்ந்து தாழ்ந்து வீழ்ந்து வீழ்ந்து இறக்கின்ற ஓர் இனமாக ஆகி மெல்ல மெல்ல வளர்ந்து இப்போதுதான் கல்வி யினால், அரசியல் வாய்ப்புகளால், எத்தனையோ வாய்ப்புகளால் இன்றைக்கு வளர்ந்திருக் .கிறோம். எனவே, இதை எய்துவதற்கு ஒரு நூற்றாண்டாகி இருக்கிறது நமக்கு. மறந்துவிடக்கூடாது.

அது மட்டுமல்ல, 1912 இல் நடேசமுதலியார் முதல் குரல் கொடுத்தார். பாரதிதாசனுக்கு, அடித்தளம் அவர்கள்தான். முதல் ஆண்டு விழா வருகிறபோது தேடிப் பிடிக்கிறார்கள். பிராமணர் அல்லாதவர்களில் யாராவது பட்டதாரிகள் இருக்கிறார்களா? என்று. இப்போது நாம் எத்தனை பட்டதாரிகள் இருக்கிறோம். நான் ஒரு கல்லூரி முதல்வனாக இருந்தவன். 20 ஆண்டுகள் அந்தக் கல்லூரியில் பணியாற்றி இருக்கிறேன். ஓர் ஆண்டுக்கு 300 பட்டதாரிகள் என்றால் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு எத்தனை பட்டதாரிகளை நான் ஒருத்தன் மட்டும் அனுப்பியிருப்பேன். ஆனால், 1912 இல் நடேசமுதலியார். திராவிட சங்கம் வைத்து நடத்திய போது, யாராவது ஒரு பிராமணரல்லாத ஒரு பட்டதாரியைத் தேடிக் கண்டுபிடித்து அவருக்குப் பாராட்டுச் செய்ய வேண்டும் என்று பார்த்தால்

ஆளே கிடைக்கவில்லை. அது தான் அவலம். தமிழ் நாட்டில் தான் சொல்லுகிறேன். வேறு எங்கேயும் இல்லை. கிடைக்கவே இல்லை. கடைசியில் யாரையோ ஒருத்தரைக் கண்டுபிடித்துப் பாராட்டு விழாவை நடத்தினார்கள். பாராட்டிப் பேசியவர் யார் என்றால் சர் பி.ட்டி. தியாகராயர், டிஎம்நாயர் ஆகியோர் தான். இவர்கள் திராவிட இயக்கத்தின் முன்னோடிகள். பாராட்டப் பெற்றவர் யார் தெரியுமா? அவர் தான் பிற்காலத்தில் இந்தியாவின் நிதி அமைச்சராக இருந்த ஆர்.கே.சண்முகம் செட்டியார். வரலாறு எப்படி மாறுகிறது பாருங்கள். அதே நேரத்தில் பிறகு முத்தையா முதலியார் வந்து வகுப்புரிமைச் சட்டம் போட்ட பிறகுதான், நம்மளைப் படிக்கவே விட்டாங்க!

எனவே, ஒவ்வொன்றுக்கும் போராட வேண்டி இருந்தது. இன்னும் சொல்லப் போனால், 1951லே இவ்வளவு வகுப்புரிமைச் சட்டம் வந்தும் எல்லாம் நாம படிக்கக் கூடிய வாய்ப்பு வந்தும் திடீரென்று, இந்தியாவில், உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு அதை நிறுத்திவிட்டார்கள். தமிழ்நாட்டில் இனிமேல் இட ஒதுக்கீடே கிடையாது என்று. ஆனால், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், இரண்டு இயக்கங்களும் அந்த நேரத்தில் சேர்ந்து கிளர்ச்சி செய்து, பெரிய போராட்டம் நடத்தின. நேரு அங்கிருந்து வல்லபாய் பட்டேலை அனுப்பினார். தமிழ்நாட்டுக்குப் போய்ப் பார்த்து என்ன நிலை என்று தெரிந்து வாருங்கள் என்று. அவர் போய்ச் செய்தியைச் சொன்ன பிறகு நேரு அதை ஏற்றுக் கொண்டு, மீண்டும் அந்த இட ஒதுக்கீட்டுக்கு அனுமதி அளிப்போம் என்று சொல்லி, அரசியல் சட்டம் முதன்முதலாக இந்திய அரசியலில் திருத்தப்பட்டது. தந்தை பெரியார் அறிஞர் அண்ணா ஆகியோரின் போராட்டத்திற்காக. நான் அப்போது நேரு சொன்னதை அப்படியே சொல்லுகிறேன். I have made an amendment in the constitution of India for the first time only because of some happenings in the Madras State என்று சொன்னார். அப்போது Madras State; தமிழ் நாடாக வில்லை. எனவே சென்னை இராஜதானியில் ஏற்பட்ட சில விளைவுகளுக்காக அரசியல் சட்டத்தை முதன்முதலாகத் திருத்தியவர் தான் நேரு, அப்படி யெல்லாம் போராடிப் போராடி வளர்ந்தோம் என்றால் உள்ளபடியே அதற்கு அண்ணாவினுடைய எழுத்து. பெரியாருடைய பேச்சு, பாவேந்தருடைய கவிதை இவையெல்லாம் காரணம்.

ஓர் அரசன்மகளை ஒரு கவிஞன் காதலிக்கிறான். திடீரென்று காதலித்து விட முடியுமா? அரசன் மகளுக்கு எல்லாக் கலைகளும் தெரியும். ஆனால், கவிதை எழுதத் தெரியவில்லை. அப்போது கேட்கிறார் அமைச்சரிடத்தில், கவிதை எழுதத் தெரியவில்லையே அதற்கு யாராவது ஒரு நல்ல புலவரை ஏற்பாடு செய்யமுடியுமா? என்று. ஒரு கவிஞரை ஏற்பாடு செய்து அழைத்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவன் கவிதை எல்லாம் சொல்லிக் கொடுக்கிறான். ஆனால், என்ன நிபந்தனை தெரியுமா உங்களுக்கு! பாவேந்தர் பாட்டிலே உச்சம் அதுதான். அதாவது, அந்தப் பெண் தொழுநோயாளி; எனவே, நீ நேரில் பார்த்துக் கவிதை சொல்லிக் கொடுத்தால் உனக்கே இரக்கம் வந்துவிடும். வேண்டாம். அதனாலே ஒரு திரையைப் போட்டு விடுவோம். அவள் அந்தப் பக்கத்தில் இருப்பாள்.

ஏனென்றால் அவளைப் பார்த்துச் சொன்னால் இரக்கம் வந்து விடும் என்று இவனிடத்தில் சொல்லிவிட்டார்கள். அவள் கிட்டே என்ன சொல்லி விட்டார்கள். அவன் கண்தெரியாதவன் - யாரு கவிஞன். அதைப் பார்த்தால் உனக்கு நன்றாக இருக்காது. ஆனால், கவிதையில் வல்லவன் என்று சொல்லி - ஒரு வழியாகக் கவிதை நடைபெறுகிறது. எதிர்பாராமல் அந்தக் கவிதையைச் சொல்லிவிட்டு அவன் வெளியே போகும்போது, அந்த நேரத்திலே நிலவு வருகிறது. நம்ம கவிஞனுக்கு இந்த நிலவைக் கண்டால் உடனே கவிதை பிறந்துவிடும். இந்தக் காலத்தில் இல்லை, அந்தக் காலத்தில் ஔவையார் பாடிய "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" என்று அந்தப் பாட்டுக் காலத்திலிருந்து, நம்ம திரைப்படப்பாடலில் "நிலவே! என்னிடம் நெருங்காதே! நீ ... என்கிற பாட்டு வரைக்கும் நிலாவைப் பார்த்துப் பாட்டுப் பாடாமல் எவனும் இருந்தது கிடையாது. இவனும் என்ன செய்து விட்டான். நிலவைப் பார்த்த உடனே விர்ரென்று போகாமல்" நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவு என்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை; கோல முழுவதும் காட்டிவிட்டால் என்று பாட்டைப் பாடி விட்டான். மேலிருந்து பார்க்கிறவள் என்னடா இப்போதுதான் போனான், திடீரென்று பாட்டுப் பாடுகிறவன் யார் என்று பார்த்தால் கவிஞன். ஓ! இதற்காகச் செய்த ஏற்பாடு தான் போலிருக்கிறது என்று தெரிகிறது. எப்போதுமே தடை விதிக்கப்பட்ட பிறகு அது மேலே எவ்விக் குதிக்கும். தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும் போது கையை வையுங்கள். மேலே ஏறித்தான் தாவும் அதுதானே இயல்பு. மீன் வந்து எப்போதுமே தடை வைத்தால் மேலே எம்பித்தான் குதிக்கும். அதேமாதிரி. பிறகு இருவருமே காதலர்களாகி விடுகிறார்கள். ஆனால், ஒரு காலகட்டத்தில், இரண்டு பேரும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கும்போது, இவன் சொல்லுகிறான் முடியாது என்று. அழகான கவிதை. நான் எத்தனையோ கவிதைகளைப் படிப்பேன். சரமாரியாக அடிப்பான்.

**காதல் நெருப்பால் கடல் உன் மேல் தாவிடுவேன்**
**சாதி எனும் சங்கிலிஎன் தாளைப் பிணித்ததடி**
**பாளைச் சிரிப்பில் நான் இன்று பதறிவிட்டால்**
**நாளைக்கு வேந்தன் எனும் நச்சரவுக்கு என் செய்வேன்**

அதாவது இயல்பாக அடித்திருக்கிறான் பாருங்கள்.

**ஆணிப்பொன் மேனி அதில் கிடக்கும் நல்லொளியைக்**
**காணிக்கை நீ வைத்தால் காப்பரசர் வாராரோ!**
**பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன் சிரிப்புக்**
**கட்டாணி முத்துக்குக் காலில் விழமாட்டாரோ!**

இவ்வளவும் சொல்லி அழுதான் என்று வருகிறது. கடைசியில் என்னவாகி விட்டது. செய்தி தெரிந்து போய்விட்டது அவள் விடவில்லை நான் உங்களைத்தான் திருமணம் செய்து கொள்வேன். இவனும் முடியாது என்றான். இருந்தாலும் கடைசியில் அரசனுக்குத் தெரிகிறது. இரண்டு பேருக்கும் மரண தண்டனை விதிக்கிறார். அப்போது, பாரதிதாசன் இந்தக் காதல் கவிதைக்குள்ளேயே சாதி வேறுபாட்டைக் கொண்டு வந்து மேல்

குடி, அதாவது மேல்வருணம், மேதினியை ஆள் வருணம் நீயன்றோ பெண்ணே! அதிலே வருகிறது.

மேல் வருணம் - மேதினியை ஆள்வருணம் நீயன்றோ பெண்ணே! என்றால் அவள் ஓர் வருணம். வருண பேதம் வந்து விட்டது. அப்படி வருகிற போது, கடைசியிலே அவன் கேட்கிறான். இப்போது முதலில் சமூக வேறுபாடுகளைச் சொல்லிவிட்டார். காதலைப் பற்றியும் அழகாகச் சொல்லியிருக்கிறார். காதலிலே இப்படி இருக்கிற இடர்ப்பாடுகளையும் சொல்லியிருக்கிறார். கடைசியில் என்ன கேட்கிறார். அவன் மரணதண்டனைக்குப் போகும் போது ஒரு வரியை வைத்தான் பாருங்கள்! அதாங்க பாரதிதாசன். அங்கே வந்து தமிழை வைத்தான். அங்கே சொல்கிறான்.

*தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்.*
*(நான் இந்தக் கவிதையைப் படிக்காமலிருந்தால் என்னைக் கூப்பிட்டிருப்பானா? தெரியாத்தனமாகப் படித்துவிட்டேன் கவிதை எழுதக் கற்றுக் கொண்டேன், அதனாலே வந்து மாட்டிக்கிட்டேன்).*
*தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்*
*தமிழ்க்கவி என்று எனை அவளும் காதலித்தாள்*
*அமிழ்து என்று சொல்லும் இந்தத் தமிழ் என் ஆவி*
*அழிவதற்குக் காரணமாய் இருந்ததென்று*
*சமுதாயம் நினைத்திடுமோ ஐயகோ என்*
*தண்டமிழ்க்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ!*

இப்போது, அவன் என்ன சொல்கிறான். தமிழ் அறிந்ததனாலே தான் நான் வந்தேன். அவள் தமிழ்க்கவி என்று என்னைக் காதலித்து விட்டாள். ஆனால், நாடு என்ன நினைக்கும். இவன் அழிவதற்கு எது காரணம். இவன் படித்த தமிழல்லவா காரணம்; இவன் படித்த தமிழல்லவா இவனைக் கொன்று விட்டது. அப்படித்தானே சமுதாயம் நினைக்கும். ஐயகோ என் தண்டமிழ்க்குப் பழி வந்தால் சகிப்பதுண்டோ! அவன் கவலையைப் பாருங்கள்.

என் மேலே பழி வந்தால் நான் தாங்கிக் கொள்வேன். ஆனால், என் தமிழுக்குப் பழிவந்தால் நான் தாங்கமாட்டேன். இப்போது நீங்கள் சொல்லுங்கள் என்று கேட்கிறான். பிறகு மக்கள் வருகிறார்கள். விடுதலை செய்கிறார்கள், அது கதை. நான் சொல்லும் அடித்தளத்தை நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு கதைக்குள் காதலின் சிறப்பையும் சொல்லி, அதற்குள்ளே இருக்கின்ற சமுதாயத்தினுடைய ஏற்றத் தாழ்வையும் சொல்லி, தமிழுக்குரிய பெருமையையும் சொல்லி வருகிறபோது ஒரு புரட்சிக் கவியை எழுதி அவருக்குப் புரட்சிக்கவி என்று பட்டம் கிடைக்கிறது.

எனவே, பாரதிதாசன் மற்ற கவிஞர்களைப் போல் அல்ல. இன்றைக்கு நிறையபேர் எழுதினார்கள். விளையாட்டுக்கல்ல; நான் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவன். எனக்கு எல்லாமே தெரியும். சில பேர் புதுக் கவிதைகளை எழுதுகிறான். "அவன் - அவள் - அது புழு - பூச்சி" முடிந்துவிட்டது. விளையாட்டுக்கல்ல; இது கவிதை. என் ஆய்வேட்டில் நான் கூட எழுதி

எடுத்துக் காட்டியிருக்கிறேன். நானும் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறேன் - உதைப்பதற்கு, ஏண்டா இது ஒரு கவிதை! இதை ஒரு பக்கம் அச்சிடுவான். உங்களுக்குத் தெரியும். இந்தப் புதுக்கவிதை எழுதுபவர்களைப் பார்த்தால் இருக்கின்ற நான்கு வரிகளை ஒரு பக்கத்தில் அழகுபடுத்துகிறாராம். ஏண்டா காசு கொடுத்து நான் வாங்குகிறேன். முக்கால் பங்கு தாள். கால் பங்குதான் கவிதை. இந்த வேலைஎல்லாம் உங்களுக்கு எதற்கு. அப்படியா எழுதினான் பாரதிதாசன். இல்லையே! ஒரு தமிழியக்கம் பாடுகிறான் என்றால் தமிழை மீட்க வேண்டும் என்பதற்காகத்தான் பாடுகிறான். இந்தச் சமுதாயத்தில் இந்த ஏற்றத் தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்பதற்காகத் தான் பாடுகிறான். ஆனால் அதே நேரத்தில் புதுக்கவிதைகளில் சிறப்பாகவும் பாடி இருக்கிறார்கள். அதற்காக நான் புதுக்கவிதையை வெறுக்கவில்லை ஒருத்தன் அழகாகப் பாடினான். நம்ம ஊரிலே வரதட்சிணைக் கொடுமை அதிகம். இவ்வளவு பணம் கொடுத்தால்தான் திருமணம். இன்று கொஞ்சம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. இருந்தாலும் முழுக்க மறைந்து விட்டது என்று சொல்லவில்லை. குறைந்திருக்கிறது அவ்வளவுதான். பணம் கொடுக்க வேண்டும் என்கிறான். இன்னும் ஒரு பெரிய உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் விசயநகர் மன்னன் காலத்தில் ஆண்கள் எல்லாம் போய் மன்னரிடம் ஒரு கோரிக்கையைக் கொடுத்தார்கள். இது கல்வெட்டில் இருக்கிறது என்ன கோரிக்கை என்றால், எங்களைப் பெண்களிடம் இருந்து காப்பாற்றுங்கள்! ஏண்டா! என்று கேட்டான். ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் எங்கள் வீட்டிலிருந்து 50 மாடும், 50 எருமையும் அந்தப் பெண் வீட்டிற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்போது தான் திருமணமே நடக்கும். இதிலிருந்து எங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்ன பிறகுதான் விசயநகர மன்னர் ஆணை பிறப்பித்து, இனிமேல் அப்படிக் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னார். எனவே, முதலில் வரதட்சணை வாங்கியதே பெண்கள் தான்! மறந்துவிடக் கூடாது. நம்ம ஆளுங்க பார்த்துக்கிட்டே இருந்தார்கள். நமக்கும் வரும்படி வரும் வாய்ப்பு என்று நினைத்துக் கொண்டுதான் இப்போது இவன் திருப்பி வாட்டுகிறான். எத்தனை பேர் ஸ்டவ் வெடித்து சாகும் மருமகள்கள். அது ஒன்று தான். இந்த Stoveக்குத் தெரியுது பாருங்கள்! மருமகள் மேலேதான் வெடிக்க வேண்டும், மாமியார்மேல் வெடிக்கக் கூடாது. அதனாலே கணக்கு தெரிகிறது. அதை ஒருத்தன் அழகாகப் பாடுகிறான்.

**வரதட்சணை கொடுக்க முடியாமல்**
**திருமணமாகாத ஒரு பெண் என்ன நினைக்கிறாள்.**

(எங்கே போய்ப் பொருத்தி விட்டான் பாருங்கள்! சின்னக் கவிதை பாடியவன் பேர் எனக்குத் தெரியவில்லை) ஆனால், சுங்கைப் பட்டாணியிலிருந்து அவனை நான் பாராட்டிக் கொண்டிருக்கிறேன். அது தான் இலக்கியம். பிறகு என்ன பாடுகிறான் என்றால்,

**நானும் ஒரு பாபர் மசூதிதான்**

அந்தப் பெண் சொல்கிறாளாம். "நானும் ஒரு பாபர் மசூதிதான்" கண்ட பயலெல்லாம் இடிக்கத்தான் வருகிறானே தவிர (தெரியுமில்லே உங்களுக்கு; இங்கே இருக்காது, அங்கே அது சர்வசாதாரணம்) நான் யாதவர் கல்லூரியில் ஆடவர் கல்லூரியில் முதல்வராக இருந்தேன். என் கல்லூரிக்கு எதிரே மகளிர் கல்லூரி; கண் கொள்ளாக் காட்சிகள்! காலை 8.00 மணிக்கு வண்டி வரும், ஏறமாட்டான் 8.30 மணிக்கு காலியாகத் தான் வரும், வரமாட்டான். 9.30 மணி வண்டியிலேதான் வருவான், ஏன்! அவனுக்கு வேண்டிய ஆளு அதிலேதான் வருவாங்க! பிறகு உங்களுக்குத் தெரியும் அங்கே எங்கள் ஊர் பெண்கள் எல்லாம் இடிதாங்கிகள் என்று ஒரு கவிஞன் பாடுவான். அப்ப அவ சொல்கிறாள்.

**கண்ட பயல்கள் எல்லாம் இடிக்கத்தான் வருகிறானே**
**தவிர ஒரு பயலாவது கட்ட முன்வரவில்லையே!**

என்று அதாவது கச்சிதமாகச் சொற்களைப் போட்டு, ஒரு சொல்லைக் கூட வீணாக்காமல் அழகாக அடிச்சான் பாருங்க!

பாபர் மசூதிக்கும் அப்படியே பொருந்தும்.
இந்தப் பெண்ணுக்கும் அப்படியே பொருந்தும்.

இது தான் கவிதை! அதே நேரத்தில் நான் என்ன கருதுகிறேன். நீங்கள் எழுதுங்கள்! ஒரு நல்ல செய்தியைக் கொடுங்கள்! சில பேரு மரபு பார்த்து எழுதுகிறான். அது குப்பையாகவும் போகிறது. அதுவும் இருக்கும். ஒருத்தன் எழுதுவான்.

**இன்பம் இன்பம் இன்பம்**
**எதிலும் இன்பம் இன்பம்**
**எதிலும் எதிலும் எதிலும் இன்பம்**
**(பிறகு) இன்பம் இன்பம் இன்பம்**

(ஏண்டா எத்தனை தடவைதான் இழுப்பே இதை)

இரண்டு வரியில் சொல்லவேண்டியதை இப்படிக் குப்பை கொட்டுவதனால்தான் என்ன பண்ணிவிட்டான்? ஒரு காலத்திலே புதுக் கவிதைக்காரர்கள் அதை எதிர்த்ததற்குக் காரணம் மரபுக் கவிதைக்காரர்கள் குப்பை கொட்டினதால்தான். புதுக்கவிதை மாட்டிக்கிட்டதுக்கு என்ன காரணம் என்றால், விளங்காமல் எழுதியதுதான் காரணம். அதற்குத்தான் கூடார்த்தம் என்று பெயர் obscurity என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். இன்னும் நல்ல தமிழில் சொல்வது என்றால் 'இருண்மை' என்று பெயர். எனவே, இரண்டும் கூடாது. வாழ்க்கையே அப்படித்தானே! இரண்டு பக்கமும் பார்த்துத்தான் நடக்க வேண்டும். ஒரு எல்லைக்குப் போகக் கூடாது. அது எப்போதுமே இடர்ப்பாடு. ஒரு எல்லைக்குப் போய் விட்டால் அது தொல்லை. மறந்து விடக்கூடாது நீங்கள் இரண்டு பக்கமும் பார்த்துத்தான் வாழவேண்டும்.

இப்போது இரண்டு பேரும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். (திருமாவளவனும் இளவழகனும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். தெருவில் என்றால் நாம இரண்டுபேருக்கும் வேண்டியவன் என்று நினைத்து நான் போய் சண்டையை விலக்குகிறேன். நாளை காலை செய்தித்

தாளில் என்ன வருகிறது "சண்டையை விலக்கப் போனவர் குத்துப்பட்டுச் சாவு" அது யாரு நான்!) சண்டையடித்துக் கொள்வது அவர்கள் இரண்டு பேரும்; கடைசியில் குத்துப்பட்டுச் செத்தவன் நான். இது விளையாட்டு அல்ல, செய்தித் தாள்களில் வந்து கொண்டிருக்கிறது. அப்போது நான் நடுநிலைமையோடு இரண்டு பேருக்குமிடையே சமரசம் செய்து வைக்க நினைக்கும் போதுகூட ஏற்படுகிற ஏதங்களைப் பார்த்து நான் தடுமாறி விடுகிறேன். தடுமாறும்படி இந்தச் சமுதாயம் என்னை ஆளாக்கிவிடுகிறது. அதே நேரத்தில் தமிழ் மக்கள் தாழ்நிலையிலிருந்து மீள வேண்டும். மூட நம்பிக்கையிலிருந்து மீள வேண்டும். சமுதாய ஏற்றத்தாழ்விலிருந்து மீள வேண்டும் என்பதற்காகத்தான் பாரதிதாசன் இவ்வளவும் பாடினான்".

தமிழுக்கே எவ்வளவு பாடுபடவேண்டியிருந்தது. இன்றைக்கு நாங்களெல்லாம் விளம்பரப்பலகைகளில் எல்லாம் தமிழில் எழுதுவதற்கு ஆணைபிறப்பித்தோம்.

அதுவும் எம்.ஜி.ஆர் காலத்தில் போடப்பட்ட ஆணை. நான் வந்தபிறகு அதைப் பெரிதுபடுத்தி, 50 ரூபாய் தண்டத்தை 1000 ரூபாயாக உயர்த்தி, எழுதவில்லையென்றால் தீட்டிப்புடுவோம் என்று சொல்லிவிட்டோம் கிட்டத்தட்ட 90-95 விழுக்காட்டுக்கு மேலே தமிழில் எழுதி விட்டான். மேலே தமிழில் எழுதவேண்டும். அதற்கடுத்து என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். பாரதிதாசன் எந்தக் காலத்தில் சொல்கிறான். தமிழியக்கம் பாடுகிறபோது சொல்கிறான். அவர் இறந்தது 1964 இல் அதற்கு முன்னாலேயே பாடி இருக்கவேண்டும். அவர் என்ன சொல்கிறார். (முன்னுரையிலே வருகிறது)

**"ஏன் ஒரு கூட்டம் தெருக்களிலே சென்று**
**விளம்பரப் பலகைகளை மாற்றியமைக்கச் சொல்லி**
**வற்புறுத்தக்கூடாது"**

(ஏனென்றால் தமிழை இங்கே வைக்க வேண்டும் என்று) பிறகு கவிதையில் எழுதுகிறார்.

**"வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில்**
**ஆங்கிலமா வேண்டும்;**
**மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச்**
**சொல்ல வேண்டும்;**
**........."**

என்ற அந்தப்பாட்டு. அப்போது எல்லோரும் வெட்கப்படும் படியாகத் தானே நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் ஏன் தமிழில் எழுதக்கூடாது. நான் பார்க்கிறேன். நம்ம தமிழ்வாணன் அவர்கள் அழகாக "மின்னகம்" என்று எழுதியிருக்கிறார். வணிகம் என்ன படுத்துப் போச்சா? நம்ம மொழியிலே வாய்ப்பிருக்கும் போது எழுதி வைத்துக் கொள்கிறோம். அதிலே என்ன தவறு! நான் இன்னும் ஒரு படிமேலே போய்ச் சொல்கிறேன். பிற நாடுகளைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். சீனாவில் எல்லாமே சீன மொழியில்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் சில ஆங்கிலம். பெர்லினில் காரல்மார்க்ஸ் தெரு என்று இருக்கிறது. நம்ம அண்ணாசாலை மாதிரி. அந்த கார்ல்மார்க்ஸ் தெருவையே Street என்று எழுதவில்லை.

stresse என்று ஜெர்மன் மொழியில்தான் எழுதியிருக்கிறான். மறந்துவிடக் கூடாது. 100 விளம்பரப் பலகைகளை நான் எண்ணிப் பார்த்தால், 98 விளம்பரப் பலகைகளில் ஜெர்மன் மொழி மட்டும்தான். இரண்டே இரண்டு பலகைகளில் மட்டும் ஆங்கிலம் கீழே இருக்கும். அதே மாதிரி பாரீசில் போய்ப் பார்த்தீர்களே யானால்,100 பலகைகளில் 98 பலகைகளில் பிரெஞ்சு மொழி மட்டும்தான். இரண்டே இரண்டு பலகைகளில்தான் ஆங்கிலம். நான் இவ்வளவு படித்திருக்கிறேன். பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எச்.டி., கல்லூரி முதல்வர், பேராசிரியர் எல்லாம். ஒரு ரொட்டியும் ஒரு தேநீரும் வாங்குவதற்கு பாரீசிலே நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். என் ஆங்கிலம் அங்கே கை கொடுக்க வில்லையே! நானும் சொல்லிப் பார்த்தேன். புரியவில்லை. பிறகு சைகை மொழிதான். ஏனென்றால் அது தான் நம்ம பழைய மொழி. முதலில் மொழியின் தொடக்கமே அதுதானே. பிறகு காட்டினேன் ரொட்டியை "ஓ, பிறகு 'டீ' சைகை காட்டினேன். பிறகு போட்டுக் கொடுத்தான். அப்போது என் ஆங்கிலம் அங்கே பயன்பட வில்லையே! எனவே, ஆங்கிலம் எனக்குத் தேவை. எந்தநாட்டுக்குத் தேவை. நம்ம நாட்டுக்குத் தேவை. ஆனால் பாரீஸ் காரனோ, ஜெர்மன் காரனோ அவனுக்குத் தேவை என்றால்தான் பயன்படுத்திக் கொள்வான். இல்லை யென்றால் அவன் கவலைப்பட மாட்டான். அதனால்தான் பாவேந்தர் சொல்வார்"

**"ஆங்கிலத்தைக் கற்கையிலும்;**
**அயல்மொழியைக் கற்கையிலும்**
**எந்த நாளும்**
**தீங்கனியைச் செந்தமிழைத்**
**தென்னாட்டின் பொன்னேட்டை**
**உயிராய்க் கொள்வீர்!"**

உன் மொழியை உயிராய் வைத்துக்கொள்; பிறகு என்ன மொழியை வேண்டுமானாலும் படித்துக்கொள். அப்பாத்துரையார் பன்மொழியாளர் என்பதற்காக அவருக்குக் கண்டனக் கூட்டமா போடப் போகிறோம். எப்படிப் பல மொழிகளைப் படிக்கலாம் என்று. அவர் இந்தியும் படித்தாரு. அதனாலேதான் பன்மொழிப்புலவர். அதற்காக ஊரிலே உள்ளவர்களை யெல்லாம் படிக்கச் சொல்ல முடியாது. எவனுக்குத் தேவையோ படி. தமிழ் நாட்டிலே இந்தி பிரச்சார சபை என்று இருக்கிறது. தனிப்பட்ட முறையில் படிப்பதைத் தமிழ்நாடு அரசு எப்போதும் தடை செய்யவில்லை. ஆனால், பள்ளிகளில் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் படித்துக் கொள்ளுங்கள், ஆனால் பள்ளி சொல்லிக் கொடுக்காது. இதுதானே இருமொழிச் சட்டம். எனவே, பாரதிதாசன் என்ன கேட்கிறான். நான் கேட்கிறேன். நல்ல சொற்கள் இருக்கும்போது அதையாவது பயன்படுத்தக் கூடாதா? உணவகம் என்ற சொல்லை இங்கே எல்லோரும் பயன்படுத்து வது எல்லோர்க்கும் தெரியும் உணவகம் என்று நம்ம தமிழ்நாட்டில் எழுதுவதற்கு என்ன பாடுபட்டார்கள் தெரியுமா? உங்களுக்கு. ஒரு சில பேர் "முருகன் கிளப்பு" "முருகன் கிளப்பு" என்று எழுதுகிறானா! ஒரு பெரியவர் அங்கே போய்க் காப்பியைச் சாப்பிட்டு விட்டு வட்டை டபராவைக்

கிளப்பிக் கொண்டு போய்விட்டார். அவன் என்ன நினைத்தான் என்றால் 'கிளப்பு' என்று போட்டிருக்கிறானே என்று கிளப்பிக் கொண்டு போய் விட்டான். ஓர் இளைஞன் என்ன செய்கிறான். காப்பியைக் குடித்து விட்டு என்ன செய்கிறான். இதிலே ஒரு கருத்து நமக்கு இருக்கிற மாதிரி தெரியுதே! எது? கிளப்பிக் கொண்டு போவது. நான் சொல்வது உங்களுக்கு விளங்கி யிருக்கும் என்று நினைக்கிறேன். அவன் கிளப்பிக் கொண்டு போய்விடு கிறான் பக்கத்து வீட்டுப் பெண்ணை. அவனும் கிளப்பிக்கிட்டு போகிறான். இவரும் கிளப்பிக் கிட்டுப் போகிறார். அதுவா கிளப்பு. நான் கேட்கிறேன் club என்று போட்டிருக்கிறீர்களே. அது எப்படி உணவகமாகும். Rotary club இருக்கிறது. அதற்கும் உணவகத்திற்கும் என்ன தொடர்பு. Lions club இருக் கிறது. அதற்கும் உணவகத்திற்கும் என்ன தொடர்பு. ஒவ்வொன்றுக்கும் இடம் நோக்கி எல்லா மொழியிலும் பொருள் இருக்கும். ஏன் உணவகம் என்று எழுதினால் என்ன தவறு. இப்போது 'கிளப்' என்று நீங்கள் எழுதுகிறீர்கள். அதை மாற்றுங்கள் என்றுதான் சொல்கிறோம். வேறு ஒன்றும் சொல்லவில்லை.

பட்டுத் துணி என்று எழுத மாட்டாமல் 'சிலுக்கு' (அவள் பாவம் இறந்து போய்விட்டாள்; நீங்கள் சிரிக்கிறீர்கள்; நான் உள்ளபடியே சொல்கிறேன். ஒரு திரைப்பட நடிகை என்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு பரிதாபமாக இருக்கிறது. தற்கொலை செய்து கொண்டாள். அப்படி ஒரு வாழ்க்கையெல்லாம் வாழக் கூடாது. அதற்காகக் கண் கலங்குகிறேன். ஏனென்றால் அவள் ஒரு வகையில் செல்வாக்குப் படைத்தவளாக இருந்தாள். கடைசியில் என்ன ஆச்சு. வாழ்க்கை சரி இல்லாமல் ஏதோ ஒரு பிரச்சினையில் தற்கொலை செய்து கொண்டாள்). சிலுக்கு ஷாப் என்று எழுதுகிறான். அதுதான் பாவேந்தர் கேட்டார்.

> **உணவுதரு விடுதியினைக் 'கிளப்' என வேண்டும் போலும்;**
> **உயர்ந்த பட்டுத் துணிக்கடைக்கு**
> **'சிலுக்கு ஷாப்' எனும் பலகை**
> **தொங்குவதால் சிறப்புப் போலும்;**

சொல்லிவிட்டு அடுத்தகருத்து இதுதான். தென்றல் என்றால் என்ன வரும்? ஒரு குளிர்ச்சி இருக்கும். சிலப்பதிகாரத்தில் சொல்ல வில்லையா "பொதிகைத் தென்றல் போலாது ஈங்கு மதுரைத் தென்றல் வந்தது" என்று பொதிகையில் தான் தென்றல் வரவேண்டும். ஆனால் மதுரையில் காற்று ஜிலுஜிலு என்று வீசுதாம். கோவலன் கண்ணகி வரும் போது.

> **"பொதிகைத் தென்றல் போலாது ஈங்கு**
> **மதுரைத் தென்றல் வந்தது"**

அந்தத் தென்றல் என்றால் ஒரு குளிர்ச்சி இருக்கிறது என்றுதானே பொருள்!

> **"மணக்கவரும் தென்றலில் குளிரா இல்லை;**
> **தோப்பில் நிழலா இல்லை;"**

(எதெதெல்லாம் இருக்க வேண்டுமோ எல்லாம் இருக்கிறது)

ஆனால் தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை. நான் ஒன்றும் இங்கிலாந்தில் எழுதுங்க பாரீசில் எழுதுங்க என்று சொல்ல வில்லை. தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழில் எழுதுங்கள் என்று சொல்வதில் என்ன தவறு? தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ் தான் இல்லை.

இப்பொழுது இங்கே நிறைய இறை அன்பர்கள் எல்லாம் இருப் பீர்கள். உங்களுக்காகச் சொல்கிறேன். ஏனென்றால் அந்தத் துறையில் பணியாற்றியவன். அறநிலையத் துறை அமைச்சராக இருந்து கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் என்னுடைய துறையின் கட்டுப்பாட்டில் இருந்த கோயில் களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? எத்தனை கோயில்களுக்கு ஆட்சியாளனாக இருந்திருக்கிறேன் தெரியுமா? 36,324 கோயில்கள், என் காலத்தில் நான் 2,699 கோயில்களுக்குக் குடமுழுக்குகள் செய்திருக்கிறேன். ஆண்டாள் கோயிலிலிருந்து தொடங்கி திருப்பரங் குன்றம் கோயில், திருவானைக் காவல் கோயில், திருவரங்கம் கோயில், இராமேசுவரம் கோயில் என்று பெரிய பெரிய கோயில்களுக்குக் குடமுழுக்குகள் நடை பெற்றுள்ளன. நான் என்ன கருதுகிறேன். கோயில் என்று கருதுவது அது தமிழர்களின் கலைச் செல்வங்கள் இல்லையா? 1300 ஆண்டு களுக்கு முன்னாலே கும்பகோணத்திற்குப் பக்கத்தில் தாராசுரம் என்ற ஊரில் - தமிழ்நாட்டிலேயே சிற்பங்களுக்குச் சிறப்பு உள்ள ஒரு கோயில் என்றால் அது தாராசுரம் கோயில்தான். ஒரு தூணில் 24 சிற்பம்! தூணுக்கு தூண் வேறு! அவ்வளவு சிறப்புப் பெற்ற கோயில்கள் நான் என்ன நினைக்கிறேன். பாதுகாக்க வேண்டிய நம்முடைய கலைச் செல்வங்கள். எவனோ ஒருத்தன் கட்டிக் கொடுத்துப் போய்விட்டான். அதில் என் கடமை என்ன! அதைப் பழுது பார்த்து வைக்க வேண்டாமா! அப்படித் தான் நினைக்கிறேன். அது மட்டுமன்று; ஏன் தமிழில் வழிபாடு செய்தால் என்ன தவறு? சுந்தரர் சொல்ல வில்லையா! சுந்தரர் முன்னாலே சிவன் சொன்ன மாதிரி இல்லையா!

"அர்ச்சனை பாட்டே ஆகும்! ஆதலால் மண்ணில் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றான்! தமிழில் பாடுங்க ஐயா! நான் உள்ளபடியே சொல்கிறேன். நான் தமிழ் இலக்கிய வரலாறு படித்தவன்; எழுதியவன்; அந்தக் கால கட்டத் தில் நான் சொல்வது கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டுக்குள் களப்பிரர்கள் பல்லவர்கள் ஆண்ட காலத்தில் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் மாணிக்கவாசகரும் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் தமிழ் அழிந்து போய் இருக்கக்கூடும். எவன் ஆண்டான் என்றே தெரியவில்லை. நமக்கு ஒரு பழக்கம் என்ன வென்றால் விழுந்தால் சாமானியமாக எழுந்துகொள்ள மாட்டோம். நூற்றாண்டுக் கணக்காக நாம கிடப்போம். படக் என்று எழுந்து கொள்வதே தமிழர்களிடத்தில் கிடையாது. கி.பி. 2 ஆம் நூற் றாண்டில் விழுந்தவன். அது பொற்காலம்; எப்போது விழித்திருக்கிறான். கி.பி. 9ஆம் நூற்றாண்டுக் காலத்தில் விஜயாலய சோழன் ஆட்சியைக் கைப்பற்றிய போதுதான் எழுந்திருக்கிறான்." கி.பி. 1310 இல் விழுந்தவன்; சுந்தர பாண்டியனும், வீரபாண்டிய னும் அடித்துக் கொண்டு, அலாவுதீன் கில்ஜி வரை போய் எதிரியைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து இவனும் உதை

வாங்கி, அவனும் உதை வாங்கி நாட்டையே குட்டிச் சுவராக்கினார்கள் அல்லவா! அந்தக் கால கட்டத்தில் விழுந்தோம். அதற்குப் பிறகு நாம் விடுதலையாவதற்கு 600 ஆண்டுகள் ஆனது! எனவே, ஒவ்வொரு முறையும் 100 ஆண்டு, 200 ஆண்டு 300 ஆண்டு என வீழ்ந்து இருக்கிறோம். இனி மேலாவது வீழாமல் இருக்க வேண்டாமா! எனவே, பாவேந்தர் என்ன சொல்கிறார்.

**"ஏன் ஒரு கூட்டம் போய்க் கோயிலில் சென்று**
**பிறமொழிக் கூச்சலைத் ... தடுத்து நிறுத்தக் கூடாது"**

அவர் கடுமையாகச் சொல்லுகிறார். நான் என்ன நினைக்கிறேன். தமிழில் இல்லாததா! ஏன் சுந்தரமூர்த்தி பாடினாரே! "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றால் நிற்காதா! அதனாலே என்ன செய்தேன் என்றால் அறிஞர்களை எல்லாம் கூட்டிவைத்து, 22 போற்றி வழிபாட்டு நூல்களை வெளியிட்டிருக்கிறேன். ஒரு செய்திக்காகச் சொல்கிறேன் கையில் கொண்டுவர மறந்து விட்டேன். இல்லையென்றால் காட்டுவேன். திருமால் போற்றி, 8 வரிகள், 16 வரிகள், 108 வரிகள் அதே மாதிரி, முருகவேள் போற்றி, உமையம்மை போற்றி, தாயார் போற்றி என நவகோள்கள் போற்றி வரைக்கும் உள்ள 22 போற்றிகள். வேடிக்கை என்னவென்றால் ஏ.வி.செட்டியார் அவர்கள் மோரீசியசு நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர், நம்ம தமிழ் நாட்டுக்காரர். தமிழ் பேசுபவர். அவர் நேராக வந்து என் துறையிலிருந்து நூல்கள் வேண்டும் என்று கேட்டு, ஒவ்வொன்றிலும் 1000 படிகள் வீதம் கொடுத்துவிட்டோம். மொரீசியசில் போய் இன்றைக்குப் பார்த்தேன். அவனுக்குத் தமிழ் பேச வரவில்லை, அது தான் வேடிக்கை. மொரீசியசிலே இருக்கிற தமிழர்களுக்கு நான் பேசுகிற தமிழ் விளங்கவில்லை. அவர்கள் பேசுகிற தமிழும் எனக்கு விளங்கவில்லை; இரண்டு பேரும் ஆங்கிலத்தில் பேசிக்கொள்கிறோம். தமிழின் பெருமையைப் பற்றி. நானே மேடையில் தமிழில் பேசிவிட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னேன். வேடிக்கை என்னவென்றால் கோயிலில் மட்டும் நாம கொடுத்த போற்றி நூல்களை வைத்துக்கொண்டு, ஓதுவாரைப் படிக்கச் சொல்லி அந்த ஒட்டு மொத்தக் கூட்டமும் படிக்கிறார்கள்.

அச்சுதனே போற்றி என்று சொன்னால் கூட்டத்தினரும் "அச்சுதனே போற்றி" என்று 108 வரிகளையும் எல்லோரும் படிக்கிறார்கள். நான் பார்த்து வியந்தேன், ஏனென்றால் தமிழ் நாட்டில் கூட நான் இவ்வாறு பார்க்கவில்லை. நான் மொரீசியசிலே பார்த்தபோது வியந்தேன். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் - முடியும். தமிழில் வழிபட எனக்கும் இறைவனுக்கும் இடையே இன்னொருத்தன் எதற்கு! என் தாய் மொழியில் இறைவனை வழிபடுவதற்கு யார் வேண்டும்! நமக்கு இல்லாத தமிழ்ச் செல்வமா! எந்த நூற்றாண்டில் இந்த வடமொழி வந்தது! கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தானே! அது வரைக்கும் தமிழ்தானே இருந்தது.

பழநியில் பண்டாரங்கள் தான் ஓதினார்கள். அந்தப் பண்டாரங்கள் ஓதுகிறபோது 1646 இல் ஓதுகிறபோது தமிழில்தான் ஓதுகிறார்கள்.

பண்டாரங்கள் தமிழில்தான் ஓதுவார்கள். அந்த நேரத்தில் திருமலை நாயக்கரின் திவானாக இருந்த இராமப்பையர் என்பவர் வருகிறார். வரும் போது அவர்கள் திருநீறு கொடுக்கிறார்கள். நீங்கள் யார் என்று கேட்டு விட்டு, வாங்கமாட்டேன் என்கிறார். பண்டாரங்களிடம் நான் வாங்க மாட்டேன் என்று சொன்னது மட்டுமில்லாமல், ஊருக்குத் திரும்பிப் போய்க் கொடுமுடியி லிருந்து சரசுவதி அய்யர் என்ற ஒருத்தரையும் இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு வந்து, இந்தப் பண்டாரங்களை வெளியிலே போகச் சொல்லிவிட்டு, அன்றைக்குத்தான் வடமொழியிலே ஓத வைத்தான். எனவே, தமிழ்நாட்டில் ஒழுங்கா இருந்ததையும் மாற்றித்தான் இருக்கிறார்கள். நீங்கள் மறந்துவிடக்கூடாது. இது வரலாறு. யாரும் மறுக்கமுடியாது. நான்தான் வெளிப்படையாகச் சொல்கிறேன். ஆகமத்தில் அப்படிச் சொல்லப் பட்டிருக்கிறது என்கிறார்கள், அதெல்லாம் கிடையாது கிடையாது! பொய்! நான் சட்டமன்றத்திலேயே விவாதித்திருக்கிறேன். நீதியரசர் மகாராசன் ஒரு குழு அறிக்கையைத் தந்திருக்கிறார். எம்.ஜி.ஆர் காலத்தில் - அதிலேயே இருக்கிறது. எந்த ஆகமத்திலும் எந்த மொழியில் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப் படவேயில்லை. மறந்துவிடக்கூடாது. எனவே, உன் தாய்மொழி யில் செய்! கோலாலம்பூரில் இருக்கின்ற மாரியம்மன் கோயிலில், மாரியம்மனைத் தமிழில் கும்பிட்டால் கேட்டுக் கொள்கிறது. நான் கேட்கிறேன். ஏசுவுக்கு என்ன மொழி தெரியும்! அவரு பேசினது அராமிக் மொழி. பைபிள் முதலில் எழுதப்பட்டது ஈப்ரு மொழியில். அடுத்து இருந்தது இலத்தீன் மொழி. இலத்தீன் மொழியை மாற்ற முடியாது என்று சொன்னார்கள். சில பேர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். எல்லோர்க்கும் உதை விழுந்தது. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களுக்கு. ஆனால் மார்ட்டின் லூதர் போன்றவர்கள் கிளர்ச்சி செய்தபிறகு, ஆங்கிலத் தில் உலகம் முழுவதும் பைபிள் வந்தது. இன்றைக்கு அதே பைபிள் தமிழில் வந்தவுடனே, மதுரை தேவாலயத்தில் போய்ப் பாருங்கள்! தமிழில்தான் ஓதுகிறார்கள். அப்போ, ஏசுவுக்குத் தமிழ் மொழியும் தெரியும்; அப்படித் தானே பொருள்! ஏசுவுக்கு அராமிக் உட்பட எல்லா மொழிகளும் தெரியும். அப்போ நீங்கள் மட்டும் ஏன் வேறுபடுகிறீர்கள் - நம்முடைய தமிழ்த் தெய்வங்கள். எனவே, அதையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு நீங்களும் உங்களுக்குத் தேவையான நண்பர்களோடு தொடர்பு கொண்டு அந்தத் தமிழ் நூல்களை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். பயன்படுத்திக் கொள்ளுங்கள். உள்ளபடியே அது மனத்திற்கு உகந்தது. மாணிக்கவாசகர் பாட்டை, வள்ளலார் பாராட்டுவது முக்கியமல்ல, வள்ளலார் பாராட்டத் தான் செய்வார். ஜி.யு. போப் பாராட்டி, மொழி பெயர்த்திருக்கிறார் - என்ன காரணத்தினால். அந்த மாணிக்கவாசகருடைய பாட்டில் உள்ள திருவாசகத்தின் ஈர்ப்புதானே காரணம்! வள்ளலார் பாடுகிறார்.

**“வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து**

ஊன் கலந்து உயிர் கலந்து (இவ்வளவும் கலந்தாலும்)
உவட்டாமல் இனிப்பதுவே!"

ரொம்ப கலந்தாலும் திகட்டும் என்பது உங்களுக்குத் தெரியும். இவ்வளவு கலந்தாலும், உவட்டாது என்று வள்ளலார் சொல்லலாம். ஆனால் ஜி.யு. போப்பிற்கு என்ன வந்தது. ஒரு கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர், எப்படி ஒரு சைவ சமயத்தின் நூலை மொழிபெயர்த்தார். அதிலுள்ள ஈடுபாடுதான் காரணம்! அவர் சிவனை வணங்கினார் என்ற பொருளில் நான் சொல்ல வில்லை. அந்த நூலினுடைய சிறப்பு. எனவே இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, பாவேந்தர் போன்றவர்கள் என்ன நினைத்தார்கள். இதிலிருந்து மீட்க வேண்டும், தமிழர்கள் முன்னேற வேண்டும் - தமிழ்நாட்டில்.

பிற நாடுகளுக்கு முதலில் அரசியல் விடுதலை தேவை. அடுத்தது பொருளாதார விடுதலை தேவை. ஆனால், பெரியாரும் அறிஞர் அண்ணாவும் சொன்னது நம் நாட்டுக்கு அரசியல் விடுதலைக்கு முன்னால், பொருளாதார விடுதலைக்கு முன்னால், சமுதாய விடுதலை தேவை! ஏனென்றால் நாம் அந்தப் பிணிப்புகளிலிருந்து மீள வேண்டும். பாரதிதாசன் போன்றவர்கள் கடவுளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்கள்.

"கடவுளை! நான். ஏற்க மாட்டேன் என்கிறார். அது அவருடைய கருத்து. அதற்காக நீங்கள் மாறுபட்டிருந்தால் அதில் ஒன்றும் தவறு கிடையாது. அது அவருடைய கருத்து அவ்வளவுதான்..."

**கடவுள் வெறி. சமய நெறி கன்னல் நிகர் தமிழுக்கு**
**நோய் ... நோய் ... நோயே!**
**இடை வந்த சாதி எனும் இடர் ஒழிந்தால், ஆள்பவள் நம்**
**தாய் தாய் தாயே!**

என்கிறார். பாரதிதாசன் பாட்டு இது.

ஒருவன் கேட்கிறான். எவண்டா கடவுள் இல்லை என்று சொல்வது? பாரதிதாசனைப் பார்த்துக் கேட்கிறான்.

**"இல்லை என்பான் யாரடா!"**
**தில்லை சென்று பாரடா!**
**பாரதிதாசன் என்ன எழுதினார் தெரியுமா!**
**இல்லை என்பேன் நானடா!**
**தில்லை கண்டு தானடா!**

பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன் என்றார்.

இந்த அறை கூவல்களை எல்லாம் சொல்வதற்கு அவரால்தான் முடியும். இரண்டு வரிகளும் அதே ஓசையில் வருகிறது பாருங்கள்!

அதே சந்தத்தில் ... இது ஒரு போட்டி நான் இதைச் சொல்லுகிறேன் என்றால், நம்முடைய மொழியைப் பேணுவதில் அது இறைவணக்க மாக இருந்தாலும் சரி (நான் தான் வழிபாட்டுக்கு வழி சொல்லியிருக் கிறேன்).

சமூக விடுதலையோடு இறையன்பைச் செலுத்துங்கள். அதே நேரத்தில் சாதி வேறுபாடுகளைக் களைந்து நாமெல்லாம் எந்தச் சமயத்தவராய் இருந்தாலும் தமிழினம் என்ற ஓர் உணர்வு வர வேண்டும். அந்த முயற்சி

வந்தால் தான் மீட்சி.

தமிழ்நாட்டில், ஓர் அலுவலகத்தில், புதியதாக வேலைக்கு வரு கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள்! திருமாவளவனுக்கு திடீரென்று வேலை கிடைத்துவிடுகிறது. ஓர் அலுவலகத்திற்குப் போகிறார்கள். எல்லோரும் வாங்கண்ணே! வாங்கண்ணே! நீங்களெல்லாம் வந்ததற்கு மிக்க நன்றி என்று சொல்லிமுடித்து விட்டுக் கடைசியாய் எல்லோரும் ஒருவருக்கொருவர் என்ன ஆராய்ச்சி செய்கிறார்கள் என்றால், இவன் யாராக இருக்கும், யாராக இருக்கும் என்றால் திருமாவளவனாக இருக்கும். அதில்லீங்க! என்ன ஆளுகளாக இருக்கும். நான் சொல்வது உங்களுக்கு விளங்கும். என்ன இனம்? தமிழினம்! அதில்லீங்க! என்ன இனம்? ஆண் இனம்! இவ்வளவும் சொன்னால் விடமாட்டான். அவன் என்ன சாதி என்பதற்காக முயற்சி செய்கிறான். பிறகு தெரிந்தவுடனே, அணி சேர்த்து விடுவான். இந்தக் கெட்ட பழக்கம். ஏன் இவ்வளவு பெரிய தமிழ்நாட்டிலே 6¼ கோடி தமிழர்களில் ஒருத்தருக்கொருத்தர் இப்படியா அறிமுகப் படுத்திக் கொள்வது. கேவலம் இல்லையா உங்களுக்கு! அதுவும் எத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னாலே! எவ்வளவு மாறியிருக்கிறோம். மொழி நடையில் மாறிப் போய் விட்டோம்; உள்ளபடியே நீராருங்கடலுடுத்த பாடலைப்பாடிய மனோன்மணீயம் சுந்தரனார் அருமையான உணர்ச்சி படைத்தவர். அவர் தான் திசையைத் திருப்பினார்.

**வள்ளுவர் செய் திருக்குறளை**
**மறுவற நன் குணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒருகுலத்துக் கொருநீதி.**

என்றார். மனுவைப் பின்பற்றி ஒரு குலத்திற்கு ஒரு நீதியா சொல்வது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இதெல்லாம் மாறி வருவதற்கு எத்தனையோ பேர் முயற்சி எடுத்திருக்கிறார்கள். எத்தனையோ பேர் தன் ஆற்றலை வெளிப்படுத்தினர் பொருளாதார ஏற்றம் வேண்டும் என்று கேட்டால், பாரதிதாசன் கேட்கிறார். இரண்டே வரியில் சொல்கிறார்.

**பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்;**
**பொதுவுடைமையோன் திருட்டைக் களைவிக்கின்றான்.**

அவருடைய வரி அது. எப்படி இதையெல்லாம் சரிப்படுத்துவது! உதைத்தால் தான் சரியாக வரும்; இது பாரதிதாசனுடைய கொள்கை.

**ஓடப்பராகியிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்பராகிவிட்டால். ஓர் நொடிக்குள்**
**ஓடப்பர். உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பராகிடுவார் உணரப்பா! நீ!**

எல்லாம் உதைத்தால் சரியாகிவிடும் என்கிறார். இது ஏற்கெனவே பராசக்தி படத்தில் வந்ததுதான். இதுபோன்ற அழுத்தமான சிந்தனைகள், கோட்பாடுகள்.

**கெடல் எங்கே தமிழின் நலம்; அங்கெல்லாம்**
**தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!**

கடல்போலும் எழுக; கடல் முழக்கம் போல கழறிடுக!
தமிழ் வாழ்கென்று.

அவ்வளவு வீறாப்போடு பேசமுடியும் கடைசிவரைக்கும் அந்தத் தமிழுக்காக வாழ்ந்தார். எந்த வகையிலும் தமிழுக்கு மாறுபட்டு ஒரு காலத்திலும் பாரதிதாசன் போனதே கிடையாது. அது முக்கியம். இதே மனோன்மணீயம் சுந்தரனார் அவர் காலத்தினுடைய நடையிலே எழுதினார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்று எழுதவில்லை. அவர் பாஷாபிமானமும், தேசாபிமானமும் என்று எழுதினார். ஆனால், அதற்காக விட்டுவிட்டோமா அவரை. அவர்தானே நமக்கு அடி எடுத்துக் கொடுத்தவர். எனவே, சிறுசிறு குறைகளிருந்தாலும் அவற்றை அகற்றி, என்னைவிட என்பிள்ளை அறிவாளியாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எதிர்பார்ப்பு. "தம்மில் தம்மக்கள் அறிவுடைமை" இதோ! பாருங்க! நான் குடும்பத் தலைவனாக இருந்து கொண்டு, நான் எம்.ஏ. படித்திருக்கிறேன்; ஒரு பயலும் பி.ஏ. க்கு மேல படிக்கக்கூடாது. அப்பனை மிஞ்சுகிற வேலையெல்லாம் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னால், அப்பனா நான்! முறையா அது! நான் படிக்க முடிந்தது அவ்வளவு தான். நீ படி; இன்னொன்று சொல்லட்டுமா! தமிழ்க்குடிமகன் பி.எஸ்.சி. கணிதம் படித்து, எம்.ஏ. படித்து பி.எச்.டி. படித்து, ஒரு கல்லூரி முதல்வராகி, சட்டப்பேரவைத் தலைவராகி அமைச்சராக இருந்தவன். ஆனாலும் பெரியோர்களே சொல்லுகிறேன்! என்னைப் படிக்க வைத்த என் தாய்க்குக் கையெழுத்துப் போடத் தெரியாது! என் அப்பா இறந்த பிறகு என்னைப் படிக்க வைத்த என் தாய் - நான் ஒரே பிள்ளை. படிக்க வைத்த தாய்க்குக் கையெழுத்துப் போடத் தெரியாது. ஆனாலும், தன் பிள்ளை படிக்க வேண்டும் என்று நினைக்கிறாள் அல்லவா அந்தத் தாய். அதுதான் பாரதிதாசன் சொன்னார்.

"சின்னஞ்சிறு கடுகு உள்ளம், துவரை உள்ளம்
அதெல்லாம் வேண்டாம்;
தூய உள்ளம் அன்புள்ளம் தொண்டு உள்ளம்,
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தன்னிலன்றோ இன்பம் அங்கே
சண்டை இல்லை, தன்னலம் தான் தீர்ந்ததாலே!"

எனவே, தாயுள்ளம் படைத்த எத்தனையோ தாய்மார்களைப் பார்க்கிறேன். பத்துப்பாத்திரங்களைத் தேய்த்து, தன் பிள்ளைகளைப் படிக்க வைப்பார்கள். தான் படிக்காவிட்டாலும், தன் தலைமுறை படிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் பாருங்கள்! அதுதான் வளர்ச்சி. இன்றைக்கு நாம் வளர்ந்திருக்கிறோமே. ஆனால், இந்தப் பாரதிதாசன் கற்றுக் கொடுத்து, பாவாணர் கற்றுக் கொடுத்து, அண்ணா கற்றுக் கொடுத்து. பலபேருடைய பாடத்தைப் படித்து நான் வளர்ந்திருக்கிறேன். என் அறிவு பலரிடமிருந்து திரட்டப்பட்டது. நான் என்ன கருதுகிறேன், என்னிடமிருந்து நீங்களும் திரட்டிக் கொள்ளுங்கள். இது என்றும் கொடுக்கக் கொடுக்க வளருவது தான். செலவிடுவதில்லை தமிழ்க்குடிமகன் ஒரு மணி நேரம் பேசிவிட்டாரு, இனிமேல் வாயைத் திறந்து பேசமாட்டார் ஏன் என்றால் எல்லாவற்றையும்

அந்த ஊரில் பேசிவிட்டார். இனிமேல் அப்படிப் பேசுவதற்கு வாய்ப்பே கிடையாது. அப்படியா இருக்கிறது. இதை விட்டால் இன்னும் பேசுவேன் நான். எனவே, இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற வாய்ப்பை நீங்கள் எனக்கு வழங்கியிருக்கிறீர்கள். எனவே, தமிழியம் தமிழினம் மீட்கப்பட வேண்டும், தமிழ் மீட்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாடு முழுமையாக நிறைவு பெற வேண்டும் என்பதில், மூட நம்பிக்கைகளிலிருந்து அகன்று, சாதி பேதமற்ற சமுதாயமாக உருவாக வேண்டும் என்று நினைத்த பாவேந்தரை நாம் நினைத்துப் போற்றுவோம். அந்தப் பாவேந்தரே பாவாணர் ஒருகாலகட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்பட்ட போது, பாவிகளே! என்று திட்டிப் பாவாணருக்கு மீண்டும் பதவி கொடுங்கள்! என்று வலியுறுத்தியவர். எனவே, அப்படிப் பட்ட நிலையில் பாவாணர் மீது பெருமதிப்பு உடைய பாவேந்தரைப் பற்றிப் பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்காக நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.

வணக்கம்!

## 4

# நமது இலக்கியம்

## குரோ தமிழ்ப்பள்ளி - 30.11.2002

மதிப்பிற்குரிய பெரியவர் இராமச்சந்திரனார் அவர்களே! இங்கே வருகை தந்திருக்கின்ற பெரியவர் கரு. செல்வம் அவர்களே! மலேசிய தமிழ்நெறிக் கழகத்தினுடைய தேசியத் தலைவர் அருமை நண்பர் திருமாவளவன் அவர்களே! பொதுச்செயலாளர் பழ.வீரன் அவர்களே! பொருளாளர் தமிழ்வாணன் அவர்களே! பாவாணர் அவர்களுடைய நூல்களை இதுவரைக்கும் யாரும் தமிழ்நாட்டில் இப்படி இவரைப்போல் ஒட்டு மொத்தமாக வெளியிட்டதில்லை என்ற தனி முத்திரை படைத்து 53 நூல்களையும் பாவணருடைய பெயரால் வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்திருக்கின்ற அருமை நண்பர் இளவழகன் அவர்களே! பள்ளித் தலைமையாசிரியர் கவிதா அவர்களே! மற்றும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுள்ள இனிய உடன் பிறப்புகளே! தாய்மார்களே!

பேசுவதில் ஒரே ஒரு சிக்கல்! பக்கத்தில் இந்தத் தொந்தரவு; நண்பர்கள் எல்லாம் போய்ச் சொல்லிவிட்டு வந்தார்கள் என்று நினைக் கிறேன்! ஆனால், ஒன்றும் நடக்கவில்லை என்று நினைக் கிறேன். நான் இப்போது சொல்லி விடுகிறேன். உங்களுக்கு! இந்த நாட்டைவிட நாங்கள் எவ்வளவோ மேல். அப்படித்தான் சொல்ல வேண்டும். விளையாட்டுக்குச் சொல்ல வில்லை. ஒரு பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அந்த வழியாக ஒரு சாமி ஊர்வலம் வருகிறது என்று சொன்னால், உடனே நாங்கள் பொதுக் கூட்டத்தை நிறுத்திவிட்டு, அந்தச் சாமி ஊர்வலம் தாண்டிப் போகும் வரை பொறுமை காப்போம். அதேபோல இசுலாமியர்கள் இருக்கின்ற ஊரில் பொதுக்கூட்டம் பேசிக் கொண்டிருக்கிற போது மசூதிகளில். உங்களுக்குத் தெரியும். தொழுகை நேரத்தில் தமிழில் அறிவிப்பு. அந்த அறிவிப்பு முடிந்து அமைதி ஏற்படும் வரை சில மணித் துளிகள் வரை எங்கள் பேச்சை நிறுத்தி வைப்போம். அதே போல வேறு இடங்களில் பொதுக் கூட்டம் நடைபெறுகிற போது இதுபோலக் கோயில்களில் பாட்டுகளை போட்டுக் கொண்டிருந்தால், தொடக்கத்தில் விட்டு விட்டாலும், அந்தத் தலைப்பில் சிறப்புப் பேச்சாளர் பேசுகிறபோது. அவர்கள் அதை நிறுத்தி ஒத்துழைப்புக் கொடுப்பார்கள். எனவே, இந்தப் பண்பாட்டை நாங்கள் பேணுகிறோம் என்பதை மட்டும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் இன்றைக்குப் பேசப்போவதே அதைப்பற்றித்தான். ஏனென்றால், இதுபோன்ற ஒரு முரட்டுத் தனமான முரட்டு பக்தி என்பது எந்த இறைவனுக்கும் உகந்ததன்று. இறைவன்

அப்படியெல்லாம் கேட்கவில்லை என்பது அந்தத் துறையின் அமைச்சராக இருந்த எனக்குத் தெரியும் என்பதைவிட உங்களுக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், இவ்வளவு பேர் எடுத்துச் சொல்லியும், ஒலித்தட்டு தான்! இசை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற வில்லை. அதைக் கொஞ்சநேரம் நிறுத்தி வைத்துவிட்டு இந்தப் பேச்சு முடிந்தபிறகு போடலாம். வேண்டுமென்றே போடுகிற இந்த உணர்வை. அதற்கு மேல் பெரிய அளவில் ஏதாவது பூசல் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நானும் பொறுத்துக் கொண்டேன். இதே மாதிரி நிச்சயமாக எங்கள் ஊராக இருந்தால் நடக்காது. அதை மட்டும் சொல்லிவிடுகிறேன். நீங்கள் வருத்தப்படக் கூடாது என்மேல். நடக்காது, நடக்கவும் விட மாட்டோம். குறைந்தது அந்த நாடாப் பெட்டியையாவது நொறுக்கி விடுவோம். அது எங்களால் முடியும். ஏன் இதைக் குறிப்பிடு கிறேன் என்று சொன்னால் ஓர் அடிப்படை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது அது தனக்கு உடன்பாடா? முரண்பாடா என்பதல்ல முக்கியம். எனவே, அப்படிப் பட்ட இந்த நிலையில், "தில்லானா மோகனாம்பாள்" படத்தில் நாதசுரம் வாசிக்கின்ற சிவாஜிகணேசனுக்கு ஏற்பட்ட இடைஞ்சலைப் போல ஓர் இடைஞ்சலைத் தொடர்ந்து கொடுத்தவுடன் அவனே நாதசுரம் வாசிப்பதை நிறுத்தி விடுவான். கண்டிப்பாக நான் நிறுத்தமாட்டேன். ஒரு பேச்சுக்காகச் சொல்கிறேன். இந்த நிலையில், அருமை நண்பர்கள் இன்றைக்குப் பாவாணருடைய நூல்களை அறிமுகப் படுத்தினர். நம்முடைய திருமாவளவன் எடுத்துச் சொன்னார். அடிப்படை நிலைகளை வீரன் போன்றவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பொதுவாகவே தமிழ்நாட்டில் நீண்டகாலமாக நம்முடைய இலக்கியங்கள் தலை சிறந்து விளங்குகின்றன. அதை யாரும் மறுக்க முடியாது. ஏறத்தாழ, பாவாண ருடைய கருத்துப்படி, மற்ற அறிஞர்களின் கருத்துப்படி சொல்லப் போனால், தொல்காப்பியம் என்ற அந்த இலக்கண நூல் 2500 ஆண்டு களுக்கு முற்பட்டது. பிறகு நமக்குப் பொற்காலம் என்று சொல்லப்படுகிற சங்க இலக் கியங்கள் கி.மு. 2ஆம் நூற் றாண்டுக்கும் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப் பட்டவை. அதாவது 1800லிருந்து 2200 ஆண்டு களுக்கு நடுவில் உள்ளவை... திருக்குறளும் அந்தக் கால கட்டத்தைச் சார்ந்தது என் பதை மறைமலையடிகள் போன்றவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, திருவள்ளுவருடைய காலத்தை வரையறுத்து,



கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முந்தையவராக திருவள்ளுவரைக் கணித்து நமக்கு அறிவித்திருக் கிறார்கள். இன்றைக்குத் தமிழக அரசு அதைத்தான் பின்பற்றுகிறது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். எனவே, அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற சங்கம் மருவிய காலம், அப்போது வந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, பிறகு 8,9 ஆம் நூற்றாண்டில் பிறந்த கம்ப இராமாயணம், 12 ஆம் நூற் றாண்டில் அதையொட்டி இந்த இரண்டு காலத்திலும் வந்துள்ள சீவக சிந்தாமணி போன்ற நூல்கள் பிறகு வியாசர் பாரதத்தை உள்வாங்கிக் கொண்டு சில மாற்றங்களை மட்டும் செய்து வெளியிடப்பட்ட "வில்லிபுத்தூரார் பாரதம்", அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கிற நல்ல சிறந்த சிற்றிலக் கியங்கள். குறிப்பாக, குற்றாலக் குறவஞ்சி போன்ற நூல்கள் - முக்கூடற் பள்ளு போன்ற நூல்கள் பிறகு மீனாட்சி பிள்ளைத் தமிழ் நூல் போன்ற இப்படி ஏராளமான இலக்கியச் செல்வத்தைத் தமிழகம் கொண்டது மட்டுமல்லாமல், இக்கால இலக்கியம் என்று நாம் சொல்வது. ஆங்கிலத் தில் Modern Literature. அது என்னவென்றால் நாடகம், மற்றொன்று கவிதை, மூன்றாவது புதினம் (நாவல்) நான்காவது சிறுகதை, ஐந்தாவது உரைநடை; இந்த நான்கிலும் அடங்காத கட்டுரை நூல்கள். இந்த ஐந்திலும் உள்ளபடியே நாம் பெரிதும் வளர்ந்திருக்கின்றோம். குறிப்பாகச் சொல்லப்போனால் வீரமா முனிவர் போன்றவர்கள் தமிழுக்கு அகராதி நூலைத் தொகுத்துத் தந்து, "சதுரகராதி" என்ற நூலைத்தந்து தேம்பாவணி என்ற இலக்கியத்தையும் தந்த அந்தக் காலகட்டத்தில் அவர்தான் முதலில் சிறுகதைக்கு வித்திட்டவர். உங்களுக்கு எல்லாம் தெரியும், தெரிந்திருக்க வேண்டும். "பரமார்த்த குரு" கதை என்ற தொடக்கக் காலத்தைய கதை அவருடைய காலத்தில் உருவாக்கப்பட்டது. அதிலே கேலி கிண்டல்; அதில் பாத்திரப் பெயர்களே மட்டி, மடையன் என்றெல்லாம் வரும். அப்படிப் பட்ட காலகட்டத்தில் அந்தச் சிறுகதையினுடைய வளர்ச்சியாக இன்றைக்கு ஏராளமான சிறுகதைகள், முத்திரைபதித்த சிறுகதைகள், சிறுகதைத் தொகுப்பு களாகப் பல்வேறு நூல்கள். அதே போல, தொடக்கத்தில் புதினம் என்பது எப்படி இருந்தது என்று சொன்னால், சிலப்பதிகாரம் என்பது புதினம்தான், ஒரு நாவல்தான், ஆனால் அன்றைக்கு அது கவிதையில் எழுதப்பட்டதால் அது காப்பியம். ஆனால், அதே நேரத்தில் பின்னால் வருகின்ற நம்முடைய அகிலனோ, நா. பார்த்தசாரதியோ, மு.வ.வோ, கல்கியோ, கலைஞர் போன்றவர்களோ எழுதுகிற எல்லாமே உரைநடையில் எழுதப்பட்டதனால் அவை புதினங்கள். இன்றைக்குக் கவிதையில் எழுதுகிற காப்பியங்கள் குறைந்து போய் விட்டன. எனவே, உரைநடையில் எழுதுகிற - புதினங்கள்தான் அதிகம். அதற்குப் பிறகு அன்றைக்கு நாடகங்கள் கவிதை நாடகங்களாக வந்தன. உங்களுக்குத் தெரியும்! மனோன்மணீயம் சுந்தரருடைய நூலே கவிதை நாடகம்தான். ஆனால் இப்போது கவிதை நாடகங்களை விட உரைநடை நாடகங்கள் அதிகமாகி விட்டன. அதனுடைய தாக்கம்தான் திரைப்படம், சின்னத் திரைப்படங்கள் எல்லாம் அதனுடைய நாடகப் பகுதிகள்தான். எனவே, அந்த நாடகங்களை இன்றைக்கு ஏராளமாக ஆக்கித்தருகிற

முத்திரை படைத்த பலபேர் இருக்கிறார்கள். அற்புதமான உரையாடல்களை எழுதி, விறுவிறுப்பாக நடிக்கக்கூடிய அந்த நாடகங்கள் இருந்தாலும், ஒரே ஒரு வருத்தம்! அவை மேடை யேற்றப்படுவதில் சிக்கல் ஏற்பட்டுப்போய் விட்டது. எனக்குத் தெரிய வரலாற்று நாடகங்களை அற்புதமாக நடத்தியவர் உங்களுக் கெல்லாம் தெரிந்த ஆர்.எஸ்.மனோகர். அவர் படத்திலேதான் அழிம்பன், ஆனால் நடைமுறையில் ஒரு சிறந்த நாடக நடிகர், அவர் அதைத்தான் விரும்பினார். ஏனென்றால் அவருடைய எல்லா வகையான நாடகங்களையும் நான் பார்த்திருக்கிறேன். இலங்கேசுவரனாக இருந்தாலும் சூரபத்மனாக இருந்தாலும் நான் பார்த்திருக் கிறேன். அற்புதமான காட்சியமைப்பு, அற்புதமான நடிப்பு. ஆனால் அவரே ஒரு காலகட்டத்தில் என்ன முடிவுக்கு வந்துவிட்டார். என்னிடத்தில் ஏராளமான திரைகள் இருக்கின்றன, ஏராளமான கருவிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் யாரேனும் தொடர்ந்து இந்த நாடகங்களை நடத்த விரும்பினால், நான் அன்பளிப்பாகத் தர அணியமாக இருக்கிறேன் என்று சொன்னார். அவரும் கொடுக்கவில்லை! காரணம்! யாரும் கேட்கவில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில் இந்த நாடகங்களை அவரால் நடத்த முடியாத சூழ்நிலை! எனவே, இன்றைக்கு மேடை நாடகம் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாக அமெச்சூர் நாடகம் என்று சொல்வார்களே அதுபோலச் சிலபேர் போட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. அது குறைந்து போய்விட்டது.

ஆனால், கவிதைத் துறை பெரிய அளவில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியாது. மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள் என்று ஏராளமான நூல்கள். நான் கவிதைகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவன் என்ற முறையில், உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்:. 1967 ஆவது ஆண்டு சனவரி முதல்நாள் தொடங்கி 76 ஆவது ஆண்டு திசம்பர் வரை 10 ஆண்டுக்காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளை நான் ஆய்வு செய்தவன். அந்தப் பத்தாண்டு காலத்தில் மட்டும் தமிழில் 614 கவிதை நூல்கள் வந்திருக்கின்றன. நான் தொகுத்ததில் கூடச் சில விட்டுப் போயிருக்கலாம். இன்னும் கூட இருக்கலாம். ஆனால் 614 கவிதைகள் என்றால் சராசரியாக ஓர் ஆண்டுக்கு 60 கவிதை நூல்கள் வருகின்றன. மரபுக் கவிதை, புதுக் கவிதை. இதிலே வேடிக்கை என்னவென்றால் புதுக்கவிதை திடீரென்று அதுதான் பெரிய கவிதைபோலவும், நிறைய வெளியானது போலவும் ஒரு தோற்றத்தை உண்டாக்கியது. ஆனால், அது உண்மையன்று! நான் சொல்லுகிற அந்த 614 நூல்களில் வெறும் 66 தான்; மீதியெல்லாமே மரபுக் கவிதைகள். எனவே, பிள்ளைத் தமிழ் எழுத வல்லவர்கள்; குறவஞ்சி எழுத வல்லவர்கள்! அருமையான கவிதைகளைப் படைக்க வல்லவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அதற்குப் பஞ்சம் ஒன்றுமில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில், அந்த இலக்கிய வரலாற்றில் எத்தனையோ இலக்கியங்களைப் படிக்கிறோம். எத்தனையோ பண்பாடுகளைப் பார்க்கிறோம். அவற்றில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நான் சுட்டிக் காட்டப் போகிறேன். அதற்குக் காரணம் இங்கிருக்கின்ற மக்களுக்கு இதுபோன்று எதிர்பாராமல்

சில விருந்தாவது கிடைத்தால்தான் அது வாழ்க்கையில் ஒரு நெஞ்சத்தின் பதிவாக இருக்க முடியும். இங்கே அருமை நண்பர்கள் கோ.சாரங்க பாணியைச் சுட்டிக் காட்டினார்கள். உங்களுக்கு எப்போதுமே தெரியும். ஓர் எழுச்சி எப்போது ஏற்படுகிறது என்று சொன்னால்,ஏதாவது ஒரு தடை அல்லது தடங்கல் வந்தால்தான் எழுச்சி ஏற்படும். காமராசர் காலம் என்று நினைக்கிறேன். அவர் காலத்தில் பிரிக்கப்படாத மலேசியா சிங்கப்பூர் - அந்த நாட்டில் தமிழர்களுக்கு என்ன மொழியைச் சொல்லிக் கொடுக்க லாம். பல்கலைக்கழக மட்டத்தில் என்று ஆய்வு செய்து சொல்லுங்கள்! அதற்கு நாங்கள் வழிவகை செய்கிறோம் என்பதற்காகத் தமிழ்நாட்டி லிருந்து ஓர் அறிஞரை அனுப்பியிருந்தார். அவர்தான் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி. அந்தப் புண்ணியவான் இங்கே வந்து, இங்கே இருக்கின்ற தமிழர்களுக்குச் சமற்கிருதத்தைச் சொல்லிக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்து விட்டுப் போனார். நிலைமை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அது இறந்து போன மொழி என்பது எல்லார்க்கும் தெரியும். ஒன்றை மட்டும் மறந்துவிடக் கூடாது! எந்த மொழியின் மீதும் யாருக்கும் வெறுப்பு இருக்கக் கூடாது, வெறுப்பும் கிடையாது. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு! இன்றைக்கு நம்முடைய கரு. செல்வம் அவர்கள் பிறந்த அவர் வாழுகின்ற பகுதிக்குப் போனோம். அந்த மண்ணின் பூர்வீகக் குடிகளைச் சுட்டிக்காட்டினார். அவர் களிலே நான்கு பேர் ஆளுக்கொரு மொழியைப் பேசிக் கொள்கிறார்கள். அதில் எந்தத் தவறுமில்லை. அவர்களால் இன்னும் மேலேறி ஓர் இலக்கியத்தைப் படைக்க முடிய வில்லை, இடத்தைப் பிடிக்க முடிய வில்லை என்று வேண்டுமானால், சொல்லுங்கள், அது தவிர அவர்கள் பேசுகிற மொழிக்கு அவர்கள் உரியவர்கள், பெரியவர்கள், அவர்களுக்குரிய உரிமையில் மூத்தவர்கள், அதை மதிக்க வேண்டிய மனப்பாங்கு நமக்கு வேண்டும். எனவே, இந்தியா வில் எந்த மொழியையும் படிக்கலாம். நாம் இந்தியை எதிர்ப்பவர்கள் அல்லர், இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு. அதை மறந்துவிடக்கூடாது. நாம் இடையிலே சுருக்கிவிட்டதனால் தான் ஒரு தனிப்பட்ட காழ்ப்பு. எனவே, என்னுடைய மொழியின் மீது கை வைக்காத வரைக்கும் நான் எந்த மொழி மீதும் கை வைக்கமாட்டேன். எந்த மொழியின் மீதும் கை வைக்கக்கூடாது. எனக்கு அதில் உரிமையில்லை. நான் சொன்னது போல, காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு; பேசுகிறவர்கள் 100 பேராக இருக்கலாம். ஏனென்றால், திருந்திய திராவிட மொழிகள், திருந்தாத திராவிட மொழிகள் என்று கால்டுவெல் ஒரு பட்டியலேயே போட்டுக் கொடுத்தார். அதிலே தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் திருந்திய திராவிட மொழிகள். இன்னும் எங்கேயோ 100 பேர், 200 பேர் பேசுகிற கோண்டா பிராகுவி போன்ற மொழிகளெல்லாம் இருக்கின்றன. பலுச்சிஸ் தானத்தில் ஒரு மொழி பேசப்படுகிறது. அதுவும் திராவிடமொழிகளில் ஒன்று தான். எனவே, அதிலே யாருக்கும் எந்த வருத்தமும் கிடையாது. அதுதான் முறையும் கூட! இந்த நீலகண்ட சாஸ்திரியினுடைய கருத்தை எதிர்த்து, தமிழைத்தான் வைக்க வேண்டும் என்று அன்றைக்குக் குரல் கொடுத்தவர் களில் முதலாவதாகப் பாராட்டப்படக் கூடியவர். கோ. சாரங்கபாணி. அவர்

ஒரு நிதி திரட்டினார் என்று கருதுகிறேன். தமிழ் எங்கள் உயிர் நிதி. அந்த நிதியைத் திரட்டி, அரசுக்கு வைப்புத் தொகையாகக் கொடுத்த பிறகுதான் தமிழ் பிறகு வளர்ந்து வந்தது. எனவே தமிழுக்கு அவ்வப்போது இப்படிப் பட்ட ஏதங்கள் எல்லாம் நேரும்; தமிழுக்கும் நேரும், இப்போது பக்கத்திலே கேட்பதுபோலத் தமிழ்க்குடிமகனுக்கும் நேரும். எனவே, அந்த விபத்தைத் தாண்டி வருவதற்கு யாரோ ஒரு வல்லமை படைத்தவர் தம்மை முன் நிறுத்திச்செல்ல வேண்டும். அதனால் கோ. சாரங்கபாணி அவர்கள் பாராட்டுக்குரியவர். இந்த நேரத்தில் நினைவுகூர்வதற்குப் பொருத்தமாக இருக்கும்.

இன்றைக்கு நீங்கள் தமிழ்நெறிக் கழகத்தின் சார்பில், ம.இ.க. சார்பில் வெவ்வேறு அமைப்புகளின் சார்பில் எல்லோரும் அவரவர் பங்கிற்குத் தமிழை வளர்க்கிறோம். அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. தமிழை வளர்க்க வேண்டும். ஆனால் இப்படி பாட்டுப் போட்டுக் கொண்டு தமிழை வளர்க்க முடியாது. அது வீம்பு. எனவே, இதை மனத்தில் வைத்துப் பார்த்தால், ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கும் குறைகள் உண்டு. எல்லா மொழிகளுக்கும் குறைகள் உண்டு. ஆனால், அந்த மொழிக்காரர்கள் இதைக் குறையாகச் சொல்கிறார்களா என்றால் இல்லை. எனக்கு வேண்டு மானால் அது குறையாகத் தெரியலாம். எடுத்துக்காட்டுக்குச் சொல்லு கிறேன். no நோ, now - நௌ பிறகு know - நோ மறுபடியும் know - க்கு நோ என்று தான் பெயர் no க்கு நோ என்று தான் பெயர் தனியாக ஒவ்வொன்றை யும் விளக்கிச் சொல்ல முடியாது. இல்லீங்க! க்நௌ என்றா சொல்ல முடியும்; உடனே என்ன சொல்லுவார்கள்; இவனுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால், ஒலியில் இரண்டிலும் ஒற்றுமை இருக்கிறது, இரண்டும் வெவ்வேறு. அது மாதிரி, paid - பெய்டு, laid - லெய்டு, said அதை ஏன் செட் என்று சொல்கிறீர்கள், செய்டு என்று சொல்ல வேண்டியது தானே இல்லீங்க! ஆங்கிலேயன் அப்படித்தான் சொல்லிக் கொடுத்திருக்கிறான். நான் கேட்கிறேன் ஆங்கிலேயன் சொல்லிக் கொடுத்தான் என்பதற்காக ரொம்பக் கவனமாக இதைச் செய்கிறீர்களே! தமிழ்க்குடிமகன் சொல்லி வைத்தால் - தமிழைக் கவனமாகப் பேசலா மில்லையா! தமிழ்க்குடிமகன் இந்த மொழிக்கு ஓர் அதிகாரி என்று வைத்துக் கொள்ளுங்கள்! முறை யாகத் தமிழ் கற்ற அதிகாரி. அப்படித்தானே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு தமிழ்ப் பேராசிரியராக 20 ஆண்டுகள் பணியாற்றிய தமிழ்க்குடிமகன் ஓர் அமைச்சராக தமிழ் வளர்ச்சித் துறையில் 5 ஆண்டுகள் பணியாற்றிய தமிழ்க்குடிமகன் சொல்வதைவிடவா உங்களுக்கு இன்னோர் அதிகார பூர்வமானவர் தேவை! எனவே நாங்கள் சொல்வது என்பது ஏதோ இட்டுக் கட்டப்படுகிற செய்தி அன்று. பாவாணர் ஆராய்ச்சி செய்கிறார் என்றால், மொழியினுடைய பெருமையை நமக்குச் சொல்கிறார். ஆனால், அதற்குள் அடங்கியிருக்கிற 2500 ஆண்டுகளாகத் தரப்படுகிற பண்பாடு இருக்கிறதே அதுதான் என்றைக்கும் நிலைத்து நிற்கின்ற சிறப்பு! புறநானூற்றில் நமக்கு என்ன தோன்றும்! ஒருத்தருக் கொருத்தர் சண்டை போட்டுக் கொண்டது, அது பற்றிய வீரம். அப்புறம் தேடி வந்தவர்களுக்கு நன்கொடை. இது தான் வீரம் கொடை. காதல் புறநானூற்றில் வாராது என்பது உங்களுக்குத்

தெரியும். அதற்கு 400 பாடல்கள். ஆனால் அதையும் மீறி ஒரு பண்பாட்டு வரி இருக்கிறது. நான் கூட இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன். ஓர் எடுத்துக்காட்டுக்கு. அதற்காக அதிர்ச்சி அடைய வேண்டாம். திடீரென்று ஒருவர் மேடைக்கு வந்து, ஐயா உங்களுடைய பேச்சைக் கேட்டு ஐயா அவர்களுக்கு 100 வெள்ளியை அன்பளிப்பாகக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்ளத்தான் செய்வேன். ஏனென்றால் என் நிலைமை அப்படி. சரி நல்லது! அவர் பாராட்டிக் கொடுக்கிறார். அதற்கு நான் ஒரு காரணம் சொல்வேன். அவருடைய மனம் புண்படக்கூடாது என்பதற்காக வாங்கினேன் என்று அதையும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் மனசுக்குள் - நான் என்னைச் சொல்லவில்லை (ஓர் எடுத்துக் காட்டுக்குத் தான் சொல்கிறேன்) நினைப்பேன். கொடுத்ததுதான் கொடுத் தான். ஒரு 200 வெள்ளியாவது கொடுத்திருக்கலாம் என்று தோன்றும்! என் பிச்சைக்காரப் புத்தி அது. அதாவது அவன் கொடுக்கிறான் என்பதைப் பெருமையாக எடுத்துக் கொள்வதற்குப்பதிலாக, கொடுத்தது தான் கொடுக் கிறார் ஒரு 200 வெள்ளியாவது கொடுக்கக் கூடாதா அப்படி நினைக்கின்ற மனப்பாங்கு நம்மிடத்தில் இருக்கிறது. ஆனால், புறநானூறு என்ன சொல்கிறது தெரியுமா! உங்களுக்கு.

100 வெள்ளி எனக்குக் கொடுக்க முன் வருகிறபோது அவர் உயர்ந்து நிற்கிறார். ஏனென்றால் அவர் கொடுக்கப் போகிறார். நான் கை நீட்டி வாங்கப் போகிறேன். அவர் உயர்ந்திருக்கிறார். நான் தாழ்ந்து நிற்கிறேன். ஏனென்றால் கை நீட்டிவிட்டேன். எனவே, அவர்தான் உயர்ந்தவர். ஆனால் நான் எப்போது உயர்ந்தவனாகிறேன் தெரியுமா உங்களுக்கு! எனக்கு வேண்டாம் என்று அதை நான் மறுத்துவிட்டால், நான் அவரைவிட உய்ாந்தவராகிவிடுவேன். வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுப்பது உயர்ந்தது. இதைச் சொல்வது புறநானூறு. மறந்து விடக் கூடாது. வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுப்பது உயர்ந்தது, ஆனால் அதை வேண்டாம் என்று மறுப்பது அதைவிட உயர்ந்தது. இதைவிட எப்படி உங்களுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு பெரிய பண்பாட்டை யார் சொல்ல முடியும்? எவ்வளவு எளிய இரண்டு வரிகள்

**"கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று".**

அதற்குமேலே என்ன சொல்ல முடியும். மலையமான் திருமுடிக் காரி பற்றிச் சொல்லும்போது, அவன் ஒரு சிற்றரசன். இன்னும் சொல்லப் போனால் அவன் யார் கூடச் சேருகிறானோ அந்த அணி வெற்றிபெறும். நம்ம கூட்டணி கதைதான் அங்கேயும். கூட்டணி என்பது நாம் அங்கிருந்து கற்றுக் கொண்டதுதான். சேரனோடு சேர்ந்தானா? சோழனோடு சேர்ந் தானா? பாரதக்கதையே என்ன? சிலபேருடன் கூட்டணி சேர்ந்துதானே சண்டையே நடந்தது. பாண்டவர்கள் மட்டுமே சண்டைபோடவில்லை. அவர்களோடு இன்னும் வேறு சில மன்னர்களும் சேர்ந்தார்கள். அதே போல துரியோதனன் மட்டும் சண்டைபோடவில்லை. அவர்களோடு வேறு சில மன்னர்களும் சேர்ந்தார்கள். கண்ணன் இந்தப்பக்கம் அந்தப்

பக்கம் விளையாடிப் போரை முடித்து வைத்தான். அதிலே ஒரு பண்பாட்டைப் பற்றி உங்களுக்குச் சொல்லப் போகிறேன். ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் என்றால் அப்படி ஒரு மனநிலையில் இதுபோன்ற அற்புதமான வரிகளை நம்முடைய இலக்கியம் தருகின்ற போது, நான் உள்ளபடியே நெகிழ்ந்து போகிறேன். இவ்வளவு பெரிய முரட்டுத்தனமான இந்த நூலில், வீரம் சண்டை, போர், அவன் சாவு, இவன் சாவு எல்லாம் சொல்லுகிற இந்த நூலில், இப்படி ஒரு பண்பாட்டு வரி? இது ஒரு பக்கம், மற்றொரு நூலில், அது சங்க இலக்கியமா அல்லது வேறு பிற்கால இலக்கியமா என்று எனக்கு நினைவில்லை. இருந்தாலும் சொல்லு கிறேன். அந்தக் காலத்தில், நான் நேற்றுகூட சொன்னது மாதிரி, காதலனுக்கும் காதலிக்கும் அவரவர்களுடைய வீட்டில் விரும்பியா திருமணம் செய்து வைப்பார்கள்! இன்றைக்கும் நடக்கவில்லை. சிக்கல் தான். நிறைவேறாமல் போகின்ற காதலும் இருக்கிறது! இரண்டு காதலர்களும் சேர்ந்து போய்த் தற்கொலை செய்து கொள்வதும் இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறது, வேறுஇடங்களிலும் இருக்கிறது. எல்லா இடத்திலும் இருக்கிறது. அதனால்தான் பாரதிதாசன் சொன்னார்.

> **"இன்று தொட்டுப் புவியே இரண்டு**
> **எண்ணம் ஒருமித்த பின் - நீ**
> **நின்று தடைபுரிந்தால் நிச்சயம்**
> **தோல்விகொள்வாய்"**

நமக்காக ஒரு வேண்டுகோள் வைக்கிறான் - எதற்கு இந்தக் காதலுக்கு இப்படி ஒரு தீங்கு விளைவிக்கிறீர்கள்?

"இன்று தொட்டுப் புவியே இரண்டு எண்ணம் ஒருமித்த பின் நீ நின்று தடைபுரிந்தால் நிச்சயம் தோல்விகொள்வாய்" என்று சொல்லுகிற அளவுக்கு ஓர் அழுத்தத்தை உண்டாக்கினான். ஆனாலும் நாம் கேட்ப தில்லை. என் மகளையா இவன் காதலித்தான் என்று இவருக்கு வீம்பு; என் பையனையா இவள் காதலித்தாள் என்பதில் வீம்பு. சாதிகள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள். எல்லாம் வந்துவிடும். அவனவன் தன்னுடைய தன்மையைக் காதல் மேல் ஏற்றிவிடுவான். நல்ல அன்பு இதயங்கள் நல்ல அன்பு நெஞ்சங்கள் இவற்றை இணைத்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலும் இருப்பதில்லை. அது வந்தால் பெரிய பெரிய பண்பாடு! இது மாதிரி அந்தக் காலத்தில் இருந்ததா! என்றால் இருந்தது. காதலனும் காதலியும் ஊரிலேயே திருமணம் செய்துகொள்ளாமல் பெற்றோருடைய ஒப்புதல் பெறாமல் இரண்டுபேரும் பாலை வழியாகப் பிரிந்து நாட்டை விட்டே போய்விடுவார்கள்! இது நடந்திருக்கிறது! மறந்து விடக்கூடாது நீங்கள்! அதனால்தான் இது ஐந்தாவது ஒழுக்கம்! பாலைத் திணை! பிரிதலும் பிரிதல் நிமித்தமும் அதன் உரிப்பொருள்; இதில் உடன் போக்கு என்ற ஒன்று வருகிறது! உடன்போக்கு என்றால் இரண்டு பேரும் சேர்ந்து போவது! இதிலே எனக்கு மகிழ்ச்சியென்னவென்றால் காதலனும் காதலியும் போய்விட்டார்கள். போய் கிட்டத்தட்ட 4 மணிநேரம் ஆகி விட்டது. அப்போது காதலனையும் காதலியையும் தேடித் தாய் போக மாட்டாள். இந்தப் பெண்ணை வளர்த்த செவிலித்தாய்தான் போவாள்.

அவளும் இந்தக் காட்டு வழியே போயிருக்க வேண்டும் என்று நம்பிப் போவாள். எதிரே இன்னொரு காதலனும் காதலியும் வருகிறார்கள். நல்ல வேளையாக அவர்களுடைய பெற்றோர் வரச் சொல்லியிருப்பார்கள் போலும், திரும்பி வந்து விட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்! அந்த இரண்டுபேர் வருகிறார்கள். இந்த இரண்டுபேரையும் கடந்து போய் விட்டார்கள். செவிலி கேட்கிறாள்! ஐயா ஒரு பெண் ஒரு பையன் இரண்டு பேரும் இந்தப்பக்கமாகப் போனார்களா? என்று. அடையாளம் என்ன அம்மா? அப்படின்னு அவன் கேட்கிறான். இந்த ஆடவன் இப்படி இருப்பான்; ஏனென்றால் செவிலி இரண்டு பேரையும் பார்த்திருப்பாள். அவளுக்குத்தான் இதெல்லாம் தெரியுமே பையன் இப்படி இருப்பான், என் பெண் இப்படி இருப்பாள் என்று சொல்வாள். அப்போது அந்த ஆடவன் சொல்கிறான். நீங்கள் சொன்ன அடையாளமுள்ள அந்த ஆண் மகனை நான் பார்த்தேன். இங்கிருந்து இரண்டாவது கல் தொலைவில் போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்றும் இந்த ஊருக்குப் பக்கத்திலே பார்த்தேன் என்றும் அவன் சொல்கிறான். உடனே கூட வந்த அவனுடைய காதலி சொல்கிறாள். நீங்கள் சொன்ன அந்த ஆடவனுக்குப் பக்கத்திலிருந்த அந்த அடையாளமுள்ள பெண்ணை நான் பார்த்தேன். அவனை அவன் பார்த்தான், அவளை அவள் பார்த்தாள், இரண்டு பேரும் மாற்றிச் சொல்ல வில்லை. மறந்துவிடக்கூடாது. வழக்கமாக நாம என்ன சொல்லுவோம். ஆடவனைப் பார்த்தேனா இல்லையா என்று எனக்குச் சரியாகத் தெரிய வில்லை; ஆனால், அந்தப் பெண்ணைப் பார்த்தேன் நான் என்போம்.

ஏனென்றால் நம்ம வேலையே அதுதானே! சின்னப் பண்பாட்டுச் சிதைவு அதில் இருக்கிறது. ஆனால், அதைச் சொல்லுகிறபோது அந்த இலக்கிய வரியில் பாருங்கள், அவனை அவன் பார்த்தான், அவளை அவள் பார்த்தாள். எவ்வளவு பெரிய பண்பாடு இது! எங்கே! பாலைநிலத்தில் - உடன் போக்குக்கிடையில் ஒரு செவிலிக்குச் செய்தியாகத் தரப்படுகிற இடத்தில் நம்முடைய இலக்கிய ஆசிரியர் எப்படி ஆழ்ந்து சிந்தித்து ஒரு பண்பாட்டைத் தந்திருக்கிறார் பாருங்கள்.

பிறகு காதலியைத் தேடிக் காதலன் வருவான். பகலில் சந்தித்து விட்டுப் போகிறவனும் இருக்கிறான், இரவில் சந்தித்துப் போகிறவனும் இருக்கிறான், இவை பழைய மரபுகள், இப்போதும் இல்லாமல் இல்லை. அப்போதெல்லாம் பகல் குறி இரவுக்குறி என்றெல்லாம் போடுவார்கள். பெரும்பாலும் இரவில் வருவதைத் தலைவி விரும்பமாட்டாள். ஏனென் றால் இப்போதிருக்கிறமாதிரி நெடுஞ்சாலையில் வரமுடியாது. சந்துபொந்தில் புகுந்து தான் வரமுடியும்! சந்து பொந்து வழியே காட்டு வழியில் தான் வரமுடியும்! சிங்கம், விலங்குகள், பாம்புகள் என எல்லாம் உண்டு! இதனால் தீங்குகள் உண்டு! எனவே, தலைவிக்கு ஓர் அச்சம் வரும்! தலைவனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் தலைவிக்கு இருக்கின்ற அச்சம் தோழிக்கு இருக்கும்! தோழிக்கு இருக்கும் அச்சம் செவிலிக்கு இருக்கும். எல்லோருமே அவன் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் நினைப் பார்கள்! ஏனென்றால் இவர்களும் இவன் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் தானே! தலைவன் ஒரு நாள் வருகிறபோது, தோழி

அவனுக்கு ஓர் அறிவுரை சொல்கிறாள். இதோ! பாருங்க! தயவு செய்து முதலில் இந்த இரவில் வந்து செல்வதை நிறுத்திவிட்டு, நீங்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்யுங்கள்

"இரவுக்குறி மறுத்து வரைவு கடா அயது"

என்று இலக்கணத்தில் வரும். அதில் ஒரு செய்தியைச் சொல்லிச் சொல்கிறாள். இந்த மலைநாட்டைச் சேர்ந்தவனே நீ வாரல் நடு நாள்! நடு நாள் என்றால் இரவு 12 மணி நள்ளிரவில் வாராதே! வாரல் சாரல் நாட நடுநாள் வாரல் - வாராதே என்று சொல்வாள். அந்த நாட்டைப் பற்றி எவ்வளவு அருமையாகச் சொல்லி இருக்கிறாள். இது குறுந்தொகை. தோழி சொல்கிறாள். ஒரு குரங்கு - ஆண் குரங்கு மந்தியாகிய பெண் குரங்கோடு சேர்ந்து வாழ்கிறது. இரண்டுக்கும் ஒரு குட்டி பிறக்கிறது. இந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் ஆண் குரங்கு ஒரு மலையிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தாவுகிற போது எதிர்பாராமல் தடுமாறி விழுந்து இறந்து போய்விடுகிறது. இது விலங்கியல் வாழ்க்கைதானே! இயற்கை தானே என்று நாம் நினைப்போம்! இது இயற்கைதான். நான் மறுக்கவில்லை. சில பேர் சொல்வான். நீ தவறி விழுவது தவறன்று. ஒரு தடவை தவறி விழுவது தவறன்று. ஆனால் மறுபடியும் அடுத்த நாளும் அதே இடத்தில் தவறி விழக்கூடாது. இன்னும் கொஞ்சம் தள்ளியாவது விழவேண்டும். அதுதான் முதலிலே விழுந்திருக்கிறீர்களே! அறிவு கெட்டவர்களே! மறுபடியும் ஏண்டா அதே இடத்தில் விழுகிறீர்கள் என்று அவன் கேட்பான். அது மாதிரித் தவறி விழுவது இயற்கை. நாம பார்த்திருக்கிறோம். நீலகிரியில் ஒரு செய்தி போட்டுள்ளான். புல் தடுக்கி ஒரு புலி விழுந்து செத்துவிட்டது. நம்புகிறீர்களா என்றால் அது உண்மை என்கிறான். எதிர்பாராமல் நடப்பது. அது. அப்படி ஒன்றும் புலி தடுமாறி விழும் நிலை படைத்ததன்று; ஒரு காட்டில் எத்தனையோ மேடு பள்ளங் களைத் தாண்டி ஊடுருவிச் செல்லும் தன்மை படைத்தது புலி. Discovery சேனலில் புலி எவ்வளவு வேகத்தில் போய் மானைக் கவ்வுகிறது என்று பார்க்கிறோம். அது எதிர்பாராமல் நடக்கும் அல்லவா! எனவே கடுவன் என்று சொல்லப்படுகிற இந்த ஆண் குரங்கு எதிர்பாராமல் விழுந்து இறந்து விடுகிறது. அடுத்து மந்தி என்ன செய்ய வேண்டும்? இப்போது கம்ப இராமாயணத்திற்கு வாருங்கள்! வாலியுடன் போய் வாதம் செய்கிறான் பாருங்கள், என்ன இருந்தாலும் நீ சுக்ரீவனுடைய மனைவியைக் கவர்ந்து கொண்டது தவறு என்று இராமன் வாதம் செய்கிறான். அப்போது, வாலி சொல்வான் "நாங்களெல்லாம் குரங்கு இனத்தைச் சேர்ந்தவர்கள், உங்களுக்கு இருக்கிற ஒழுக்கத்தை ஏன் எங்களிடம் சொல்கிறீர்கள்! நாங்கள் ஒருவருக்கொருவர் மாறி மாறி வாழ்ந்து கொண்டிருக்கிற குரங்கு இனத்தைச் சேர்ந்தவர்கள்; நீ ஏன் ஒழுக்கத்தைப்பற்றி வலியுறுத்திக் கொண்டிருக்கிறாய் என்று வாலி சொல்வான். இல்லை; நீ மனிதனைப் போல அறிவுடன் பேசுகிறாய்; எனவே, ஒழுக்கத்தை வலியுறுத்துகிறேன் என்றான். ஆனால், வாலி செய்கிற அந்த வாதத்தில் இராமனையும் தவிடுபொடியாக்கி விட்டான். அந்தக் கைவண்ணத்தைக் கம்பன் காட்டினான். பேராசிரியர் சொக்கலிங்கம் என்னுடைய கல்லூரியின் முதல்வராக இருந்தவர்; அவருக்குக் கம்ப இராமாயணத்தில் நிறைய ஈடுபாடு. அவர் சொல்லுவார்"

*இந்த இடத்தில் கம்பனும் .... கைவிட்டான் என்பார்.*
*அப்போது இந்தக் குரங்கு என்ன செய்திருக்க வேண்டும்.*
*இயல்பாக அடுத்த குரங்கு! ... அவ்வளவுதான்!*

அப்படியிருந்தால் நான் எடுத்துச் சொல்லி இருக்கமாட்டேன். இந்தப் பெண் குரங்கு - மந்தி தன் கணவன் இல்லாதிருக்கிற அந்த வாழ்க்கையை விரும்பவில்லை; அதாவது கைம்மையை விரும்ப வில்லை. எனவே, தன் குட்டியை என்ன செய்கிறது தன் உறவினரிடம் ஒப்படைத்து விட்டுத் தானும் விழுந்து இறந்துவிடுகிறது. அப்படிப்பட்ட மலை நாட்டுக்குச் சொந்தக்காரனே! என்று இவனைப் பார்த்துச் சொல்கிறாள். அதிலிருந்து என்ன விளங்க வைக்கிறாள் அவள்? நம்ம இலக்கணத்திலே நிறைய இறைச்சிப் பொருள், உள்ளுறை என்றெல்லாம் சொல்லுவோம் நாங்கள். அதன் வாயிலாக உனக்கு ஏதாவது நேர்ந்தால், இந்தத் தலைவி உயிரோடு இருக்கமாட்டாள். நேரிடையாகச் சொன்னால், அமங்கலமாக இருக்கும்! ஆனால், ஓர் உவமை வாயிலாகச் சொல்லலாம். எனவே,

*"கருங்கண் தா அக்கலை பெரும்பிறிது உற்றெனக்*
*கைம்மை உய்யாக் காமர் மந்தி*
*கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி*
*ஓங்குயர் அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்*
*சாரல் நாட! நடுநாள்*
*வாரல் ..."*

எனவே, ஒரு மந்தியே கைம்மை நோன்பை ஏற்றுக் கொள்ள முடியாத - தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இறந்து போகிறது என்று சொன்னால், உன்னுடைய தலைவி தாங்கிக் கொள்வாளா! - உனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், எனவே, இரவில் வாராதே! இது ஓர் அடிப்படைப் பண்பாடு! இது எந்தப் பண்பாடு! நம்ம பண்பாட்டை விளக்குவதற்காக ஒரு குரங்கினுடைய பண்பாட்டை விளக்கிச் சொல்லி, அதற்குப் பிறகு கொண்டு வருகிறோம்.

கண்ணகி, கோவலன் நடந்து போகிற காட்சி, கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும், உள்ளபடியே அவள் எங்கேயும் கோவலனுடன் மனம் திறந்து விரிவாகப் பேசியதாக இல்லை. பேசியிருப்பார்கள்! அதற்காகப் பேசாமல் இருந்திருக்க மாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், இளங்கோவடிகள் சொல்கிறார். இரண்டு பேரும் நன்றாகக் கொஞ்ச நாளாவது வாழ்ந்தார்களா? வாழ்ந்தார்கள் என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

*"தொலையாத இன்பமெல்லாம் துன்னினார் மண்மேல்*
*நிலையாமை கண்டவர் போல் நின்று"*

எனவே, இரண்டுபேரும் தொலையாத இன்பமெல்லாம் துன்னினார். நீண்டகாலம் நெருங்கி வாழ்ந்தார்கள், எனவே அதிலே ஒன்றும் சிக்கல் இல்லை. மாதவியுடன் அவன் நன்றாக வாழ்ந்தானா? மணிமேகலை பிறக்கும் வரை அவன் வாழ்ந்திருக்கிறான். வாழ்ந்தது மட்டுமன்று, இளங்கோவடிகள் சொல்கிறார். கலவியும் புலவியும் காதலர்க் களித்தார்.

யார் மாதவி! ஊடலையும் தந்தாளாம், கூடலையும் தந்தாளாம். அவள் எப்படிப்பட்ட சிறப்புப் படைத்தவள்! ஆடல், பாடல், அழகு என மூன்றிலும் ஒன்று கூடக் குறைவு படாதவள்! எனவே, இந்தப் பக்கமும் சிறப்பாக வாழ்ந்திருக்கிறாள். அந்தப் பக்கமும் சிறப்பாக வாழ்ந்திருக்கிறாள். இந்த நிலையில் நாம கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

இவ்வளவு பொருளையும் இழந்து திரும்பி வந்த பின் (அதுதான் பண்பாடு) நீங்கள் அதற்காகக் கண்ணகிபோல் நினைத்தவுடனே கணவன் பின்னாலே போவது மாதிரி முடிவெடுத்து விடக்கூடாது என்பதற்காகத் தான் எச்சரிக்கையாக அவன் சொல்லியிருக்கிறான். கண்ணகி காலம் வேறு, நாம் இப்போது நேருக்கு நேர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். மறந்து விடக்கூடாது. இது முற்போக்குக் காலம். திரும்பி வந்தவுடன் அவன் (கோவலன்) என்ன செய்கிறான். மாதவியைத் திட்டினால் தான் இவளுக்குப் பிடிக்கும் என்று அப்படித்தான் நினைத்துக் கொண்டு பேசுவான்.

**"சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடி**
**குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த**
**இலம்பாடு ... நாணுத் தரும்"**

என் சொத்துகளை எல்லாம் அழித்து விட்டேன், அவளோடு சேர்ந்து ரொம்ப ஆடிவிட்டேன். நாம சொல்வோம்! டேய்! ரொம்ப ஆடாதே! கடைசியிலே நீ எங்கோ வந்து நிற்கப் போகிறாய்! கேட்க மாட்டான், ஆட்டம் முடிந்த பிறகுதானே இவருக்குத் தெரியும்! எனவே, அவ்வளவு பெரிய சொத்தை வைத்திருந்தவன் இழந்து விட்டான். இலம்பாடு - அந்த வறுமை எனக்கு வெட்கம் தருகிறது. எனவே, நாம் .... என்று சொன்னவுடனே அப்போதும் பாருங்கள்! அவன் திரும்பி வந்து விட்டான் என்று மகிழ்ச்சியடைய விடாமல் சொல்லி விட்டான். இவள் என்ன நினைத்து விட்டாள் ... சரி! அங்கே கொடுப்பதற்கு ஒன்றுமில்லை போலிருக்கிறது இன்னும் ஏதாவது இருந்தால் வாங்கிக் கொண்டு போவதற்காகத்தான் வந்திருக்கிறான் என்று நினைத்து விட்டு, 'டக்' கென்று அடுத்த வரியைச் சொல்கிறாள் பாருங்கள் "சிலம்பு உள கொள்க". என்னிடம் சிலம்பு இருக்கிறது, அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அதை எடுத்துக் கொண்டு செல்லுங்கள் என்றாள். பிறகு நான் அதற்காக வரவில்லை. நான் நாளைக்கு மதுரையை நோக்கிப் போக உன்னை அழைத்துச் செல்வதற்காக வந்தேன். இவள் நினைத்தது என்னவென்றால் அதற்காக வந்திருக்கிறான், கொடுத்தனுப்பிவிட்டால் நல்லபடியாக மாதவியிடம் போய்த் தங்கி விடுவான். என்று நினைத்தாள். இவளுடைய பண்பாடு இது. பிறகு எல்லோரும் நீண்ட தூரம் நடந்து போனார்கள், அவளுடைய சிற்றடிகள் இந்தத் தரையைத் தொட்டதில்லை. "வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்" பிறகு மாதரி வீட்டில் அடைக்கலம் கொடுத்து, கடைசியாக உணவு சமைத்துப் போடுகிறாள். மாதரி, ஐயை ஆகிய இரண்டு பேரும் சேர்ந்து, அவர்களுக்குத் தேவையான காய்கறிகளையெல்லாம் வாங்கிக் கொடுத்து உணவு சமைக்கிறார்கள். அப்போது இலை போட்டு, தரையை மெழுகி, அந்த உணவை வைக்கும்போது - அடடா, இப்போது மதுரைக்கும்

பூம்புகாருக்கும் எவ்வளவு தொலைவு தெரியுமா, இப்போது தான் நமக்கு அளவு இருக்கிறது 250 கி.மீ. இவ்வளவு தொலைவை அன்றைக்குக் கடந்திருக்கிறார்கள். எத்தனை காலம் நடந்திருக்க வேண்டும். எத்தனை நாள்கள் நடந்திருக்க வேண்டும், எத்தனை இடர்ப் பட்டிருக்க வேண்டும். பழக்கமே யில்லாத கண்ணகிக்கு எவ்வளவு இடர்ப் பாடு! இவனாவது காடு மேடு சுற்றினவன். இவன் எப்போதுமே நகரநம்பியர் திரிதரு ... மறுகில் எல்லாம் திரிவான்! நகரநம்பியர் என்றால் மைனர்கள் திரிகிற தெருக்களில் திரிந்தவர் இவர் என்று சிலப்பதிகாரத்திலே இருக்கிறது. மறந்துவிடக் கூடாது. எனவே, அவளுக்குத்தான் இடர்ப்பாடு. அப்போது இவனும் நினைக்கிறான். அடடா! நான் வா என்று சொன்னவுடனே நீ வந்து விட்டாயே! எழுகென எழுந்தாய் என் செய்தனை? இப்போது நினைத்துப் பார்க்க வேண்டும். இதுவரைக்கும் வாயைத் திறக்காத கண்ணகி "போற்றா வொழுக்கம் புரிந்தீர்" என்று சொன்னாள். ஆனால் நான் ஏன் வந்தேன் தெரியுமா? இது தாங்க பெண்கள் ... "யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கை யேன். நான் எந்த நிலையிலும் மாற்றமடையாதவள்; என் கணவன் தான் எனக்கு வாழ்வு, என் கணவன்தான் எனக்கு உயிர், அவர் என்ன கருதுகிறாரோ அதைச் செயற்படுத்த வேண்டியது என் கடமை" என்றாள். முடிந்து போனான், இறந்தான். ஆனால், இவ்வளவு அடங்கியிருந்த கண்ணகியா வழக்குரைகாதையில் இப்படிப் பேசினாள், நம்ப முடியவில்லை, நான் உள்ளபடியே பல இலக்கியங்களைப் படித்தவன். ஜுலியஸ் சீசரில், ஜுலியஸ் சீசரைக் குத்திக் கொன்றவர்களில், புரூட்டஸ் முக்கிய மானவன் இன்னும் சில பேரெல்லாம் இருக்கிறார்கள். வரலாறெல்லாம் உங்களுக்குத் தெரியும்! ஆனால் இவர்கள் குத்திக் கொன்றுவிட்டார்கள். இப்போது மக்களை இவர்களுக்கெதிராகத் திருப்பி, இவர்களைக் காலி செய்ய வேண்டும்! அதற்கு மார்க் ஆண்டணி பொறுப்பேற்றுக் கொள்கிறான். அது ஒரு பேச்சு! ஆபிரகாம்லிங்கனின் கெட்டிஸ்பர்க் பேச்சு. ஏசுவினுடைய மலைப்பேச்சு போன்ற பல சிறப்புகள் உண்டு. மனோன்மணீயம் சுந்தரனார் நாடகத்திலேயே அரசன் பேசுகிற கடைசி வீரவுரை - போர்க்குறிக் காயமே புகழின் காயம் யார்க்கது வாய்க்கும் என்று சொல்லுகிற அந்த வீரவுரைகள் நிறையப் பார்க்கிறோம். இங்கே வழக்குரை காதையில் பாருங்கள்! எத்தனையோ காலத்திற்குப் பின்னால் வந்தது ஷேக்ஸ்பியர். ஜுலியஸ் சீசர் என்பது 1600க்குப் பின்னாலே வந்தது. ஆனால் நம்முடைய சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம், 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சங்கம் மருவிய காலம். அந்த வழக்குரை காதையில் எடுத்து வைக்கின்ற வாதம், பேசுகிற முறை, எத்தனை அற்புதம்! (அதை மட்டும் விளக்கிச் சொன்னால் ஒரு மணிநேரம் ஆகும்). அந்த இடத்தில் இத்தனை வகையான பேச்சுகளுக்கிடையில் அவன் (அரசன்) என்ன செய்தான் பொன் செய் கொல்லன் சொல் கேட்ட யானோ அரசன்! யானே கள்வன் என்று கெடுக! என் ஆயுள்! என வீழ்ந்தான். கோப்பெருந்தேவி, பக்கத்திலிருந்த அரசி; இவர்களுடைய வாதங்களை எல்லாம் கேட்டவள்! அடடா என் கணவன் இவ்வளவு பெரிய தீங்கைச் செய்து விட்டானே! என்று நினைக்கும்போது, இவளுடைய மனம் சோர்ந்து விடுகிறது; உடல் சோர்ந்து விடுகிறது, உள்ளம் சோர்ந்துவிடு

கிறது, உயிர் ஒடுங்கிவிடுகிறது. கிட்டத்தட்ட அதிலேயே வந்து விடும்! அப்படிப்பட்ட நிலையில் இவன் விழுந்து இறந்தான் என்ற உடனே அவளும் அவனுடைய அடியைத் தொழுது இறந்து விடுகிறாள். யாருக்கு வேண்டுமானாலும் மாற்றுத் தேடலாம். ஆனால் இப்போது மறுமணம் செய்திடும், நம்முடைய பிற்கால நடவடிக்கைகள் தவறல்ல! பாரதிதாசன் சொன்னது போல, "சாத்திரம் பார்க்காதீர்கள். ஒரு கட்டழகன் திருத்தோளினைச் சார்ந்திடச் சாத்திரம் பார்க்காதீர்கள் என்று சொல்லுகிற காலம் இது. ஆனால் அன்றைக்கு - கோப்பெருந்தேவி இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? அதனை அன்றைய - அரசியல் - நடைமுறை ஒத்துக் கொண்டதா? இல்லை. இந்தக் கால கட்டத்தில் போற்றா வொழுக்கம் புரிந்தீர் என்று பண்போடு எடுத்துச் சொன்ன கண்ணகியைப் பாராட்டுவதா? தன் கணவன் தவறு செய்துவிட்டான் என்பதை உணர்ந்து அவனுக்கு முன்னாலே தானும் உயிர் துறந்த கோப்பெருந்தேவியைப் பாராட்டுவதா? இல்லை! கோவலன் பிரிந்த பிறகு மாதவி என்ன செய்திருக்கலாம்; அவளுடைய குலத்தொழிலின்படி இன்னொருத்தனுடன் சேர்ந்து போயிருக்கலாம். முடிந்து போய் விட்டது; அதுதானே அன்றைக்கு வரையறுத்த நியதி! ஆனால் அவள் நினைக்கிறாள். கோவலனோடு இவ்வளவு காலம் வாழ்ந் திருக்கிறோம்! இனிமேல் அந்த வாழ்க்கை கிட்டாது; எனவே, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நினைத்து, தான் துறவு பூண்டது மட்டுமன்று, தன்னுடைய மகள் மணிமேகலையையும் துறவியாக்கி, இந்தக் குலத்துக்கே இனிமேல் இந்தத் தொழில் கூடாது என்று அவ்வளவு பெரிய மறுமலர்ச்சியைச் செய்தாள். எனவே, இதிலே மாதவியைப் பாராட்டுவதா? என்று பார்த்தால், 3 பேருமே உயர்வு பெறுகிறார்கள் என்று தான் சொல்லக் கூடிய அளவுக்கு பண்பாட்டுக் காவியமாகத் தான் சிலப்பதிகாரம் விளங்குகிறதே தவிர யாரையும் குறை சொல்வதற்காக அன்று; ஆங்காங்கே குற்றங்கள் சொன்னாலும் கூட அந்தக் குற்றத்திலே மென்மை இருக்கும்.

திருக்குறளில் இருக்கின்ற நுட்பமான அந்த இல்லறப் பண்பாடு இருக்கிறதே அது ரொம்பச் சிறப்பு. என் தொடர் சுற்றுப் பயணத்தில் இன்றைக்குத்தான் அதைப்பற்றிப் பேசப்போகிறேன். நம்ம தமிழ்ப் பெண்களுக்கு ஏனென்றால் திருக்குறள் முழுவதும் தமிழ்க் காவியம் - தமிழ் நூல் - தமிழ் மறை நம்ம தமிழ்ப் பெண்களுக்குத் தலையில் பூ வைத்துக் கொள்வது என்பது பெரிய மகிழ்ச்சி; அதுவும் குறிஞ்சிப் பாட்டில் நம்முடைய கபிலர் பல வகையான பூக்களைத் தொடுத்தே கொடுத்து விட்டுப் போய்விட்டார். அவரும் ஒன்று நிலுவை வைக்கவில்லை. ஊரில் உள்ளவற்றையெல்லாம் பிடுங்கிக் கொண்டு வந்து ஒரே இடத்தில் போட்டு. ஒரே மாலையாகத் தொடுத்து - நான்கூடத் தொலைக் காட்சியில் பேசப் போகிறேன். பூமாலை தொடுத்த பாமாலையா? அல்லது பாமாலை தொடுத்த பூமாலையா? என்று சொல்லக் கூடிய அளவுக்கு. ஒருநாள் கணவன் வெளியிலே அலுவலகத்திற்குப் போகும்போது மனைவி சொல்லி அனுப்பு கிறாள். "என்னங்க! திரும்பி வரும்போது பூ வாங்கிக் கொண்டு வாருங்கள்!" என்று. இது பல வீடுகளில் நடைபெறுகிறதுதான். இவனும்

வாங்கிக் கொண்டு வந்திருந்தால் அந்தப் பிரச்சனையே தீர்ந்திருக்கும். இவன் என்ன செய்தான். அவன் அங்கே இங்கே சுற்றிவிட்டு மறந்து விட்டான். வீட்டை நெருங்கும் போது அடடா! மறந்து விட்டேனே! திரும்பிப் போகவும் முடியாது; ஏனென்றால் வாசலுக்கு வந்தாச்சு! சரி! சமாளித்துக் கொள்வோம்! நாம எல்லோருடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் உண்டு. சமாளித்துக் கொள்வோம் என்று வீட்டுக்குள் போனான். அவள் பூவாங்கி வருவதை எதிர்பார்த்தவள் தான். இவன் கொண்டுபோன பையில் பூவை வைத்திருப்பான் போல இருக்கிறது என்று நினைத்திருப்பாள். கையிலே இல்லை என்றதும் பையில் வைத்திருப்பான். பையை வைத்தவுடன் உள்ளே அவன் முகம் கழுவப் போனான். பையை ஆராய்ச்சி செய்து பார்க்கிறாள். அது நம்ம தாய் மார்கள் நம்ம பையை மட்டும் அல்ல இந்தப் பையையும் ஆராய்ச்சி செய்து கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுவாடு எல்லாம் சேர்த்துக் கொள்வது. நல்ல சொல்லை அவர்கள்தான் உருவாக்கினர். சூழ்நிலைக் கேற்ப, சிறுவாடு சேர்ப்பது என்பது - நம்ம பெண்களைக் கேளுங்கள்! அவர்கள் சொல்வார்கள்! எனவே, பையையும் ஆராய்ச்சி செய்தால், அங்கேயும் பூ இல்லை. அப்போது அவளுக்கு அவன் மீது சினம் பிறக் கிறது. அந்தச் சினம் - இதிலேதான் தமிழனுடைய பண்பாடே இருக்கிறது. சினம் கொப்பளித்து விட்டால் - ரொம்ப மோசமாகிப் போய்விட்டால் - அது பெரிய விபரீதமாகப் போய்விடும். அதே மாதிரி இவனுக்கும் சினம் வந்து விட்டால் போடி உங்க அப்பன் வீட்டுக்கு என்கிற அளவுக்கு வந்துவிடும். இரண்டும் கூடாது. சினமும் இருக்க வேண்டும். ஆனால் சிறிது நேரத்தில் தீர்ந்தும் போக வேண்டும். அதுதான் ஊடலும் கூடலும், 'டக்' என்று அதற்குமேல் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அவளால் முடிந்தது, 'கம்' என்று இருந்தாள். இவன் உடனே கண்டு பிடித்துவிடுவான். இவன் ஏற்கெனவே வரும் போது வாசலில் எச்சரிக்கை ஆகிவிட்டான். உடனே என்ன நினைத்தான். நாம் பூ வாங்கி வரவில்லை என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. எப்படியாவது சமாளிப்போம் என்று நினைத்து வந்தவன் 6.00 மணிக்குத்தான் வருகிறான். வழக்கமாக, 8.00 மணிக்குச் சாப்பிடுவது தான் வழக்கம். இவன், இன்றைக்கு என்னமோ எனக்கு ரொம்ப பசிக்கிறது, சாப்பாடு போடு! சாப்பிட்டு விடுவோம்! என்று - எப்போது 6.00 மணிக்குச் சாப்பிட்டான்? அவளுக்குத் தெரியும். இது உண்மையான பசி அன்று என்று. சரி பார்ப்போம் என்று சாப்பாடு போடச் சொன்னால், சாப்பாடு போடாமல் இருக்க முடியாது என்று நினைத்து, அவன் கை கழுவி வந்து உட்கார்ந்ததும் அவள் சோற்றை எடுத்து வைத்தாள். பக்கத்திலே கிண்ணங் களை எல்லாம் எடுத்து வைத்தாள். சாப்பாடு எல்லாம் போட்டுவிட்டு கொஞ்ச தூரம் தள்ளிப் போய் உட்கார்ந்தாள். இவன் என்ன நினைத்தான். ஒரு மரபு இருக்கிறது. அதாவது தும்மினால், நம்ம ஊரிலே மனைவி வந்து தலையில் தட்டுவாள். 100, 100 என்பாள் நம் ஊரையும் சொல்வாள், இளையான்குடி, பரமக்குடி என்பாள். இவன் ஊரு, அவள் ஊரு என்று சொல்லி, தட்டுவாள். இது ஒரு மரபு. இவன் நினைக்கிறான் தும்மியவுடன் அவள் வந்து பக்கத்திலே வந்து தலையைத் தட்டுவாள். கையைப் பிடித்துச்

சமாதானம் செய்து சரிப் படுத்தலாம் என நினைத்து, ஒரு பொய்யான தும்மலைப் போட்டான். உண்மையாகத் தும்மல் வந்திருந்தால் பரவா யில்லை. அப்போது இவன் எதிர்பார்த்த மாதிரியே நடந்து விட்டது. அவள் அங்கிருந்து வந்து 100, 100 என்று சொன்னாள், ஊரைச் சொன்னாள். சொல்லிவிட்டு விருட்டென்று கையை உதறிக் கொண்டு அங்கே போய் உட்கார்ந்தாள். உட்கார்ந்து 'ஓ' என்று அழுதாள். கேட்டான், நான் என்ன செய்துவிட்டேன், தும்மினேன் வந்து வாழ்த்தினாய்! அதற்குப் போய் ஏன் அழ வேண்டும்! இவன் ஒரு பகுதியைத் தானே பார்த்தான். மற்றொரு பகுதி மறைந்திருக்கிறது. அவள் சொன்னாள். இப்போது நான் உங்கள் மேலே கோபத்தில் இருக்கிறேன். சினத்திலே இருக்கிறேன். அதனால் நான் உங்களை நினைக்கவில்லை. ஆனால் இந்தத் தும்மலுக்கு யாரோ நினைக் கிறார்கள் என்று பொருள். இப்போது நான் உங்களை நினைக்கவில்லை. உங்களுக்குத் தும்மல் வந்த தென்றால் எவளோ ஒருத்தி உங்களை நினைக்கிறாள் என்றாள். இப்போது தான் சிக்கலே. இவன் கேட்கிறான். ஏன் நண்பன் நினைக்கக் கூடாதா? இந்தக் காட்சியிலே அதெல்லாம் வாராது. சக்களத்தி நிலைதான் வருமே தவிர இன்னொருத்தன் நினைப்பது எல்லாம் வாராது. எனவே, நான் உங்களை நினைக்கவில்லை; யாரோ ஒருத்தி உங்களை நினைக்கிறாள் என்று சொன்னவுடன் தான் "ஆகா! தெரியாத்தனமாகத் தும்மி விட்டோமே! முதலிலேயே கையிலே காலிலே விழுந்தாவது சரி செய்திருக்கலாம் என்று எண்ணினான். இப்படி எண்ணிக் கொண்டிருந்தபோது தும்மல் வந்துவிட்டது. இப்போது தான் அவனுக்குச் சிக்கல். இந்தத் தும்மலைப் போடுவதா? அல்லது அடக்குவதா! ஏற்கெனவே 1½ கட்டையில் பாடிக் கொண்டிருக்கிறாள். இன்னும் விட்டால் 7½ கட்டையிலே அவள் பாடுவாள். எனவே, அடக்கு வது தான் நல்லது என்று துண்டை வைத்து இந்தப் பக்கம் அடக்கினான் பாருங்கள்! தும்மலுக்கு ஒரு கெட்ட பழக்கம். ஒரு பக்கம் அடக்கினால் இன்னொரு பக்கம் போய்விடும்! எங்கேயாவது போக வேண்டும். அதனுடைய குணம் அது. எனவே, மறுபடியும் தும்மலை அடக்குவதையும் பார்த்து விட்டாள். அது பீறிட்டு வருவதையும் பார்த்து விட்டாள். ஓ என்று 7½ கட்டையிலே அழுகிறாள். என்னம்மா செய்து விட்டேன். தும்மலை அடக்கினேன். இல்லைங்க மறுபடியும் மறுபடியும் அவள் உங்களை நினைக்கிறாள். அதனாலே உங்களுக்கு மறுபடியும் தும்மல் வருகிறது. அதெல்லாம் விடக் கொடுமை! அதை எனக்குத் தெரியக்கூடாது என்று மறைக்கிறீங்க பாருங்க! அதுதாங்க என்று மறுபடியும் அழுதாள். பார்த்தான்! இது சரிப்பட்டு வராது. நமக்கே உரிய வசனங்கள் இருக்கிறதல்லவா! ஏதாவது புது மொழியைப் பேசி, வயப்படுத்திட வேண்டும் என்று நீ இப்படியெல்லாம் நினைக்காதே! நான் உன் மேல் உயிரையே வைத்திருக்கிறேன்! நீ என்மேலே உயிரையே வைத்திருக்கிறாய்! இந்தப் பிறவியிலே உனக்கு நான், எனக்கு நீ என்று அடித்துச் சொன்னான். அவள் மறுபடியும் அழுதாள். என்ன சொல்லிவிட்டேன்! நீ அழுகிறாய்! என்று - அவள் சொன்னாள்." அடுத்த பிறவியில் அவளைக் கட்டிக் கொள்ளலாம் என்று இருக்கிறாயா? இவன் என்ன சொன்னான்; இந்தப் பிறவியிலே தான் என்று சொன்னான். என்னை

வெட்டிவிட்டு அவளை அடுத்த பிறவியில் கட்டிக் கொள்ளலாம் என்று இருக்கிறாயா என்று கேட்டாள். இவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. உண்மையிலேயே நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு. இந்த மூன்றும் வள்ளுவர் சொன்னவை, நான் உங்களுக்குக் கதை போலத்தான் சொல்லியிருக்கிறேன். மீண்டும் பாட்டைச் சொல்கிறேன் பாருங்கள்!

**வழுத்தினாள் தும்மினேன் ஆக; அழித்தழுதாள்**
**யார் உள்ளித் தும்மினீர் என்று!**
**தும்முச் செறுப்ப அழுதாள்; நுமர் உள்ளல்**
**எம்மை மறைத்திரோ என்று!**
**இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனா**
**கண்ணிறை நீர்கொண் டனள்.**

நான் சொல்லுகிற திருக்குறள் எத்தனை ஆண்டு காலம் - நம்ம கணக்குப்படி 2033 ஆண்டுகளுக்கு முன்பு. நாம பேசுகிறோம். எங்கேயோ இருக்கிற குரோவில் வந்து பேசுகிறோம். அப்பப் பேசுகிறபோது. அதை மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன். இந்தக் காலத்து இயல்புக் கேற்ப, இன்றைக்கும் அந்த உணர்வுகள் இருக்கின்றன. இன்றைக்கும் அது மாறாமல் வாழுகிறது. அந்த ஊடலும் கூடலும் இன்றைக்கும் மாறாமல் வாழுகின்றன. அது தான் காதலுக்கு இருக்கின்ற பெரிய சிறப்பு, கணவன் மனைவிக்குள்ள பெரிய சிறப்பு. இந்தப் பண்பாடு தொடர வேண்டும் என்பது தான் நமது நம்முடைய ஆசை.

கடைசியாக ஒன்றைமட்டும் சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன்.

பொதுவாகவே அநீதிகளைக் கண்டால் கொதித்து எழ வேண்டும் என்பதுதான் பாரதியார் போன்றவர்களின் கருத்து. பாரதிதாசன் கொஞ்சம் வேகமாகப் பேசியிருப்பார். "பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை" என்பது அவருடைய வரி. இன்றைக்கு நாம் ரொம்பக் கோழையாகி விட்டோம். விளையாட்டுக்கு அல்ல, நடைமுறையைப் பார்த்துப் பார்த்து நாம் எல்லோரும் கோழை ஆகிவிட்டோம். என்ன நடந்தாலும் பார்க்கக் கூடாது. என்ன நடந்தாலும் தட்டிக் கேட்கக் கூடாது என்று சொல்லுகிற காலம் இன்றைக்கு. ஆனால், பாரதியார் பாஞ்சாலி சபதம் எழுதுகிற போது, துரியோதனன், "பாஞ்சாலியைத் தரதரவென்று இழுத்து வரச் சொல் கிறான். துச்சாதனன் தெருவிலே இழுத்துச் செல்கிறான். பாஞ்சாலி யினுடைய கூந்தலைப்பற்றி தெருவிலே இழுத்துச் செல்கிறான். அப்போது மக்களெல்லாம் தெருவில் நின்று, ஐயோ! இப்படிப் பண்ணுகிறானே!" என்று புலம்புகிறார்கள். புலம்பத்தானே செய்வார்கள், கண்ணீர் விடுகிறார்கள். அவன் இழுத்துக் கொண்டு போகிறான். பிறகு கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும். பாரதிக்கு வருகிறது பாருங்கள் சினம், 'ஏண்டா நாய்களா!' எனக்குத் தெரிய நம்மை நாய்கள் என்று திட்டியவன் பாரதி. உரிமையோடு. நம்மைச் சொல்வதற்கு அவனுக்கு உரிமையுண்டு.

**"வீரமிலா நாய்கள்! விலங்காம் இளவரசன்**
**தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே**
**பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்**

நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"

ஏண்டா வீரமில்லா நாய்களா! நீங்களெல்லாம் சேர்ந்து அந்தத் துச்சாதனனை மிதித்து அந்தப் பாஞ்சாலியை விடுவித்து அரண்மனையின் அந்தப்புரத்தில் விட்டிருக்க வேண்டாமா! என்று கேட்கிறான். அவன் காலத்தில் அந்தச் சினம் இருந்தது. ஆனால் துரியோதனன் காலத்தில் அப்படி இருக்க முடியுமா! ஆனாலும் அப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவன் பாரதி! அதனால் தான் வேறு கவிஞர்களைவிடப் பாரதி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எடுத்துக் கொடுத்த அடியை, பாரதிதாசன் முழுமையாகப் பின்பற்றி அவனுடைய கருத்துக்கு எந்த வகையிலும் மாறுபாடு இல்லாமல் பாடியுள்ளார். பாரதிதாசன் அண்ணா வைத் திட்டியிருக்கிறார்; பெரியாரையும் திறனாய்வு செய்திருக்கிறார். இன்னும் பல பேரைத் திட்டியிருக்கிறார். எனக்குத் தெரிய பாரதியாரை மட்டும் தான் அவர் எங்கும் எந்த இடத்திலும் திட்டியதில்லை, காரணம், பாரதியாரிடத்தில் உண்மை இருந்தது. எந்த வகையான தன்னலமும் இல்லை. இப்போதெல்லாம் நாம எல்லோருக்கும் ஒவ்வொருத்தருக்கும் சுரங்கம் இருக்கிறது, எல்லோருக்கும் ஓர் எண்ணம் இருக்கிறது. ஒரு செயலை மேற்கொண்டால் நன்றாக இருக்கும், இதிலே எத்தனை காசு வரும்? அதிலே எத்தனை காசு வரும் என்று எண்ணுகிறோம். தப்பில்லை, வாழ்க்கை அது. நாமெல்லாம் உலகியல் மனிதராகி விட்டோம். அதெல் லாம் இல்லாமல் அவன் காலத்தில் பட்ட துன்பங்கள்! இந்திய விடுதலை வரவேண்டும் என்பதற்காக அவன் பட்ட தொல்லைகள்; துயரங்கள்! உள்ளபடியே ...

**"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்**
**கண்ணீரால் காத்தோம்! கருகத் திருவுளமோ?"**

வ.உ.சி. போன்றவர்கள் இரட்டை ஆயுள் தண்டனை பெற்றவர்கள். இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள். எனக்கு அதில் எல்லாம் என்ன வருத்தம் என்றால், இப்போது இருக்கிற இளைய தலைமுறை இவை எல்லாவற்றையும் மறந்துவிட்டது. வ.உ.சி யைப் பற்றி நினைவு இல்லை. வ.உ.சி க்கு மாலை போடுகிறவர்கள் 10 இளைஞர்கள் போய் மாலை போட வில்லை பிள்ளைமார் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போய் மாலை போடு கிறார்கள். கடைசியில், வ.உ.சி. யை என்ன ஆக்கி விட்டார்கள். விடுதலை வீரன் என்று ஆக்காமல், அவரைப் பிள்ளைமார் சங்கத்துக்குத் தலைவர் என்று கொண்டு போய்விட்டார்கள். இப்போது இனிமேல் எல்லாச் சங்கத்துக்கும் வரப்போகிறது. கடைசியிலே ஒரு நாளைக்கு தமிழ்க் குடிமகனுக்கு மாலை போட வேண்டும் என்றால், தமிழ்க்குடிமகன் எந்தச் சாதி என்று பார்த்து, சாதிக்காரர்கள், தான் மாலை போடுகிற மாதிரி வருமே தவிர தமிழர்களெல்லாம் சேர்ந்து மாலை போட வரவில்லை என்றால், தமிழ்க்குடிமகனுடைய வாழ்வால் என்ன பயன்! அதனால் விளைவு என்ன! வ.உ.சி. பிள்ளைமார் சங்கத்துக்காகவா பாடுபட்டார்!

நூலோர்கள் வெஞ்சிறையில் நொந்து கிடக்கிறார்கள் என்றார் பாரதியார், நூலோர்கள் செக்கடியில் நொந்து கிடந்தார்கள். மேலோர்கள்

வெஞ்சிறையில் வீழ்ந்துகிடந்தார்கள். நான் அந்தமான் சிறைச்சாலையை நேரடியாகப் பார்த்து நூல் எழுதியவன். எத்தனைக் கொடுமைகள். வீர சவார்க்கர் ஒரு தனிமை அறையில் அடைக்கப் படுகிறார். 10 ஆண்டுகள் ஒரே அறையில் - மறந்துவிடக்கூடாது. 123 ஆவது அறை இன்றைக்கும் அதிலே எழுதப்பட்டிருக்கிறது. This is a solitary cell in which Veer Savarkar was frequently kept என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே, தனிமைச் சிறையில் 10 ஆண்டுகள் இருந்திருக்கிறார். அவருடைய சகோதரர் கணேச சவார்க்கர் அந்தச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டது கூட ஓராண்டு கழித்துத்தான் அவருக்குத் தெரிந்தது என்றால் எவ்வளவு கட்டுப்பாடுகள் இருந்திருக்க வேண்டும். எவ்வளவு கொடுமைகளை அனுபவித்து இருக்க வேண்டும். அந்த வரலாற்றை எழுதுகிறபோது, நான் கண்ட உண்மை ஒன்று.

ஒருமுறை ஏதோ தக்க நேரத்தில் 82 பேர் தப்பி ஓடிவிட்டார்கள். பிறகு இவர்களை எப்படியும் பிடித்து விடுவார்கள். அதிலே ஒருவன் மட்டும் கிாணவில்லை. மற்ற 81 பேரையும் கொண்டு வந்து விட்டார்கள். அந்த 81 பேரும் ஒரே நேரத்தில் அந்த Gallows என்று சொல்லப்படுகிற தூக்கு மேடையில் ஒரே நேரத்தில் தூக்கில் இடப்பட்டார்கள். அவர்களுடைய பெயர்கள் தெரியவில்லை. நான் எவ்வளவோ முயன்றேன். அவர்களுடைய பெயர்களை நூலில் எழுதலாம் என்று. ஒருவருடைய பெயர்கூடத் தெரியவில்லை. எனவே, அடையாளம் தெரியாத எத்தனையோ பேர் இந்த மண்ணுக்காகக் குருதி சிந்தி இருக்கிறார்கள். இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். அதே போல, இந்த மண்ணுக் காகப் பாடுபட் டிருப்பார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் அப்படிப்பட்ட விடுதலை வீரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நாம் நினைத்துப் போற்ற வேண்டும். ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தபோது டயர், ஓடயர் ஆகியோர் காக்கை குருவி சுடுவதுபோல மக்களைச் சுட்டார்கள். ஒரு குறுகிய வாயிலில் போகமுடியாத அளவுக்கு அன்றைக்குச் சுட்டான். அதில் ஒரு சின்ன இளைஞன் 10, 12 வயது இளைஞன் பார்த்துக் கொண்டே இருந்தான்; இரத்தம் சிந்தியவர்களை இவர்களெல்லாம் காலியாகிப் போன பிறகு போய்பார்க்கிறான். கொஞ்சம் மண்ணை எடுத்து, அந்தக் கையில் வைத்துக் கொண்டு, என்றைக்காவது ஒரு நாள் இந்த டயரை ஓட ஓட விரட்டிச் சுட்டுக் கொல்வேன் என்று சொன்னான். அப்படியெல்லாம் வஞ்சினம் கூறி இப்படியெல்லாம் செய்ய முடியாது. இன்றைக்கு நமக்கு வாய்ப்பிருக் கிறது. நான் உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்லப்போகிறேன். அண்மையில் நான் சீனாவுக்குப் போய்விட்டு வந்தேன். தமிழ்நாட்டிலிருந்து 10 மணி நேரத்திற்குள் போய்விட்டேன். 3¾ மணிநேரம் சிங்கப்பூருக்கு, பிறகு அங்கிருந்து 6 மணி நேரத்திற்குள் சீனாவிற்கு. ஆனால் இராசராச சோழன் காலத்திலும் இரசேந்திர சோழன் காலத்திலும், குலோத்துங்க சோழன் காலத்திலும் சீனாவிற்குத் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் போய்த் திரும்பி வர 3 ஆண்டுகளாயின. போய்ப் பார்த்துவிட்டுச் செய்தியைச் சொல்லி விட்டு செய்தியைத் திரட்டிக் கொண்டு வருவதற்கு 3 ஆண்டுகளாகி

யிருக்கிறது. நான் 10 மணி நேரத்தில் போய் விடுவேன். இன்றைக்கு நிலைமை. எனவே, அன்றைக்கு எப்படி இருந்திருக்கும் அவனுக்கு. அன்றைக்கு அவனுக்கு அந்த ஏந்துகள் கிடையாது. ஆனாலும் அவன் வளர்ந்த பிறகு இந்த டயர் ஓடயர் ஆகிய இரண்டு பேரும் ஓய்வு பெற்று இங்கிலாந்து போன பிறகு, போய்ப் பார்த்தபோது, ஒருத்தன் இறந்து போய் விட்டான். இன்னொருத்தனைப் பின்பற்றியே நடந்து சரியான கூட்டத்தில் ஒரு மேடையில் பேசுகிறபோது சுட்டுத்தள்ளும் போது சொன்னான். அவன் என்ன சொன்னான். டயர் ஓடயர் சுட்டேன் சுட்டேன் என் ஆசை தீரச் சுட்டேன் என்றான் பாருங்கள், அதையே திருப்பிச் சொன்னான். சுட்டேன் சுட்டேன் என் ஆசை தீரச் சுட்டேன் என்று சொன்னான். இப்படி எத்தனையோ ஈகங்கள், உயிர்ப்பலிகள்.

எனவே, விலை (உயிர்) கொடுத்து வாங்கப்பட்ட சுதந்திரம் கேவலப் படுத்தக் கூடாது. நம்முடைய தன்னலங்களுக்காக நாட்டை விற்கக்கூடாது. ஏன் நம்மையே விற்கக் கூடாது. சிலபேர் அவனவன் விற்றுவிடுகிறான். ஒரு விலைக்கு. அதனாலேதான் பாரதிதாசன் சொன்னார். "உன்னை விற்காதே" என்று சொன்னார். வள்ளுவரே சொன்னாரே! தக்க நேரம் வந்தால் இவன் ஒரு விலைக்கு விற்று விடுவான் என்று

**"எற்றிற் குரியர் கயவர்? ஒன்று உற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து"**

கயவர்கள் எதிலே சேர்த்தி. இவனுக்கு ஏதாவது வாய்ப்பு வந்தால் இவனையே விற்று விடுவான். ஒரு விலைக்கு என்று சொல்லுகிற மனப்பாங்கு.

எனவே, இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு பார்த்தால் நம்முடைய பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கி நிற்கிற இந்த இலக்கியங்கள், பிறகு வரலாற்றிலே வருகிற இப்படிப்பட்ட சிறப்புக் குரிய மாந்தர்கள். இவர்களெல்லாம் சேர்ந்து தான் ஒரு தமிழ்க் குடிமகனை உருவாக்க முடியும். இவர்களெல்லாம் சேர்ந்து தான் நம்முடைய தோழர்களை உருவாக்கு கிறார்கள். அதிலே பாவாணருக்கும் பங்கு உண்டு. அண்ணாவுக்கும் பங்குண்டு, பெரியாருக்கும் பங்கு உண்டு, பாவேந் தருக்கும் பங்குண்டு. இன்னும் சொல்லப் போனால் வள்ளலாருக்கும் பங்கு உண்டு, திருவள்ளுவருக்கும் பங்கு உண்டு. திருஞானசம்பந்தருக்கும் பங்கு உண்டு. எனவே, எல்லோரும் சேர்ந்து ஒரு கோணத்தில் மட்டுமன்று; அவர் கோணத்தில் அவர் பார்த்தார், இவர் கோணத்தில் இவர் பார்த்தார். ஆனால், எல்லாரையும் படித்துப் பார்த்த நான் வடிவமைக்கப்பட்டிருக்கிறேன். இந்த வடிவமைப்பு பின்னால் பயன் தரவேண்டுமென்று கருதுகிறேன். எனவே, அப்படிப்பட்ட நிலையில் நீங்களும் இந்த நல்ல வாய்ப்புகளைப் பயன் படுத்தி ஏராளமான இலக்கியங்களை மெல்ல மெல்லப் படித்து, ஏனென் றால் சிதைவுக்குரிய செயல்கள் எத்தனையோ இருக்கின்றன. "சென்றவிடத் தால் செலவிடாது தீதொரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு" என்றார் பாருங்கள்! எனவே, சிதைவுகள் ஆயிரம்! அந்தச் சிதைவுகளை எல்லாம் தூக்கியெறிந்து, அதற் காகப் பொழுதுபோக்க வேண்டாம் என்றோ, மகிழ்வாக இருக்க வேண்டாம் என்றோ சொல்லவில்லை, நல்ல இசையைக்

கேட்டால் நான் மகிழ்வேன். எனக்கே ரொம்பப் பிடிக்கும். அதனால் கேட்பதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால், அதே நேரத்தில் நாம் படிக்க வேண்டியது நிறைய இருக்கிறதே!

**நாலடியாரில் சொல்லுவான்.**
**கல்வி கரையில; கற்பவர் நாள் சில**
**மெல்ல நினைக்கின் பிணி பல**

படிக்க வேண்டும் என்று நினைத்தான். படுத்துவிட்டான். தேர்வெழுத முடியாத அளவுக்குப் படுத்துவிட்டான். எழுந்து கொள்ள முடியவில்லை. 2 மாதமாகிவிட்டது. எனவே பிணி பல. கல்வி கரையில; கற்பவர் நாள் சில. தமிழ்க்குடிமகனுக்கு அகநானூறு தெரியும். புறநானூறு தெரியும், நற்றிணை தெரியும். ஆனால், 400 பாட்டும் தெரியுமா என்றால் தெரியாது. அகநானூறில் 400 ம் தெரியுமா எனக்குத் தெரியாது. நற்றிணையில் 400 ம் தெரியுமா? தெரியாது. புறநானூறில் 400 ம் தெரியுமா? தெரியாது. அப்போது நீங்கள் கேட்பீர்கள்! சீ! இவ்வளவுதானா உங்கள் மவுசு! நான் கூட நீங்க ரொம்ப எல்லாம் படித்தவர்கள் என்று நினைச்சுக் கிட்டிருந்தேன் என்பீர்கள். உங்களுக்குத் தெரிந்ததை விட எனக்குக் கூடக் கொஞ்சம் தெரியும். அது தான் அறிவு ஏனென்றால் நானும் படிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. இன்னும் எத்தனையோ நூல்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. என் நூலகத்தில் உள்ள எல்லாப் புத்தகங் களையும் படித்து முடிச்சுட்டேனா என்றால் இல்லை. வாங்கி வைத்திருக் கிறேன். சாவதற்குள் படித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு வைத்திருக் கிறேன். நான் இல்லாவிட்டாலும், இன்னொரு தலைமுறை வந்து ஒரு புத்தகத்தை உருவிப் படிக்கும். பாவாணருடைய நூலைப் படித்து விட்டு உரூபாய் என்ற சொல்லை மட்டும் பார்த்துவிட்டு உருவான தமிழ்க் குடிமகன். ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிய ஒப்பியன் மொழி நூலை வாங்கி விட்டு, அப்படி உருவாகி வந்த தமிழ்க்குடிமகன். எனவே, நூல் ஒருவனை உருவாக்கமுடியும். அது தான் நூல்களின் சிறப்பு. அருமையாகச் சொல்லவில்லையா? ரஸ்கின் என்று நினைக்கிறேன். Books are our best companions நூல்கள் தான் நம்முடைய இனிய நண்பர்கள்.

எனவே, இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு தரமுள்ள பாவாணருடைய நூல்கள், இன்னும் அண்ணா, பாவேந்தரு டைய நூல்கள் எல்லாம் வாங்கிப் பயின்று, எங்களைப் போன்றவர்கள் அவ்வப்போது தருகிற இந்தக் கருத்துகளைக் கேட்டு, உங்களை நீங்கள் வடிவமைத்துக் கொண்டு நீங்கள் வாழ்வாங்கு வாழ வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்!

## 5

# "தமிழன் எப்படிக் கெட்டான்?"

## செலாமா - 1.12.2002

பெருமதிப்புக்குரிய மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தினுடைய தலைவர் நண்பர் திருமாவளவன் அவர்களே! பாவாணருடைய நூல்களை வெளியிட்டு, தமிழன் எங்கெல்லாம் வாழ்கின்றானோ அங்கெல்லாம் சிறப்புச் சேர்த்திருக்கின்ற அருமை நண்பர் இளவழகன் அவர்களே! தமிழ்நெறிக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வீரன் அவர்களே! பொருளாளர் தமிழ்வாணன் அவர்களே! செலாமா மாநிலத்தினுடைய தமிழ்நெறிக் கழகத்தினுடைய தலைவர் அறிவுமணி அவர்களே! வருகை தந்திருக்கின்ற பெருமக்களே! உங்கள் அனைவரையும் 1985 க்குப் பின்னால், 17 ஆண்டுகள் கழித்து, இதே செலாமாவில் தமிழ்நெறிக் கழகத்தின் சார்பில் சந்திப்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் கல்லூரியில் முதல்வராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்த காலத்தில் இங்கு வந்து பேசியிருக்கிறேன். அன்று அந்த நிகழ்வினை ஏற்பாடு செய்த திருமாலனார் இன்று படமாகி நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார். எனக்கு மகிழ்ச்சி யெல்லாம் அன்றைக்கு அவர் தொடங்கிய அந்த இயக்கத்தை எந்த வகையான தொய்வுமின்றி, சிதைவுமின்றித் தொடர்ந்து நம்முடைய நண்பர்கள் நடத்தி வருகிறார்கள் என்பதுதான். என்னைக் கேட்டால், எத்தனையோ இயக்கங்கள்! ஒரு காலத்தில் ஓகோ என்றிருக்கும், அதற்கு ஒரு காலத்திற்குப் பிறகு இருந்ததா என்றால் யாருக்கும் தெரியாத அளவிற்கு இருக்கும். எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமானால் நீதிக் கட்சி என்பது 1916 இல் தொடங்கப்பட்டு, 1937 வரைக்கும் அரசியலில் கொடிகட்டிப் பறந்த இயக்கம். நடேச முதலியார், டி.எம்.நாயர், பி.ட்டி. தியாகராயர், பொப்பிலி அரசர், பனகல் அரசர், முத்தையா முதலியார் என்று எண்ணற்ற ஆற்றல் படைத்தவர்களையெல்லாம் அமைச்சர்களாகக் கொண்டு பெரிய பெரிய தலைவர்களாகக் கொண்டு, தமிழர்களுக்குக் கல்வி வாய்க்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு அவர்களை எல்லாம் மீட்டு வகுப்புரிமைச் சட்டம் என்று சொல்லப்படுகிற communal G.O. அதை நிறைவேற்றி, இன்றைக்கு நமது இட ஒதுக்கீட்டுக் கொள்கை எப்படி இறுக்கமாக இருக்கிறதோ அதற்குத் தொடக்கம் செய்த பெருமைக்குரியவர்கள் அந்த நீதிக் கட்சியினர். ஆனால் 1937 இல் அரசியலில் தோற்ற பிறகு அந்தக் கட்சி காணாமல் போய்விட்டது. பிறகு பெரியார் வந்தபிறகு அது சுயமரியாதை இயக்கமாக மறுபடியும் உருவெடுத்தது, திராவிடர் கழகமாக, தி.மு.க. வாக, அ.தி.மு.க. வாக, ம.தி.மு.க. வாக பல அமைப்புகளாக வந்திருந்தாலும் அது

தான் சிதைந்து வந்திருக்கிறதே தவிர அந்த அமைப்பினுடைய பெயர் இப்போது இல்லை. ஆனால் நீங்கள் இந்த இயக்கத்தை அதே தமிழ்நெறிக் கழகத்தின் சார்பில் கட்டி ஆண்டு வருகிறீர்கள் என்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனவே, அந்த மகிழ்ச்சியில் தமிழன் எப்படிக் கெட்டான் என்று எப்படிச் சொல்ல முடியும். ஆனால், உண்மை யிலேயே வேறு எத்தனையோ இனத்திற்கு இலக்கியங்கள் இல்லை. நான் அதைச் சரியாகச் சொல்கிறேனா இல்லையா என்றால் ஒரு வேளை இல்லை என்றால் எனக்கு நீங்கள் மறுப்பே கூடக் கொடுக்கலாம். தவறு ஒன்று மில்லை, நான் திருத்திக் கொள்வேன். நான் சீனாவிற்குச் சென்றிருந்தபோது அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர் சுன்கோசாங் என்பவர். பெய்சிங் வானொலி நிலையத்தில் பணியாற்றுகின்ற அந்தத் தமிழ்ச் சேவைப் பிரிவின் மேனாள் தலைவர் அவரிடத்தில் கேட்டேன். சீன இலக்கிய வரலாறு இருக்கிறதா? History of chinese literature in chinese language or in english language or any other language எனக்கு நூல்தான் வேண்டும் என்றால் அவரால் அதைக் கொடுக்க முடியவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் ஒரு தமிழ் இலக்கிய வரலாறு இருக்கும். பாவாணரே ஒரு தமிழிலக்கிய வரலாற்று நூலை உருவாக்கியுள்ளார். எத்தனையோ பேர் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்டோர் எழுதி இருக்கிறார்கள். இப்போது பேர் சொன்னீர்களே மளமள வென்று தொல்காப்பியத்திலிருந்து தொடங்கி இக்காலப் புதுக்கவிதை வரைக்கும் - அது தான் தமிழ் இலக்கிய வரலாறு. சமற்கிருதம் போன்ற மொழிகளுக்கு ஏராளமான இலக்கிய நூல்கள் உண்டு. தொன்மையான மொழிதான் சமற்கிருதம். ஆனால், இன்று வாழும் மொழியா என்றால் இல்லை. ஓர் ஒட்டுண்ணி போல அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழின் மீதுஒட்டிக்கொண்டும் அச்சுறுத்திக் கொண்டும் இருக்கிறது என்றால் தனக்கொரு இனம் இல்லை என்று தெரியவரும். நான் சொல்வது இரண்டுமே தொன்மையான மொழிகள். எனவே, இவ்வளவு சிறப்புப் படைத்த இலக்கியம் படைத்த, இலக்கணம் படைத்த சேரன் செங்குட்டுவன் போன்று ஆரியப் படை வென்ற நெடுஞ்செழியன் போன்று, கரிகால் சோழன் போன்று, பிற்கால இராசராசசோழன் போன்று, இராசேந்திர



சோழன் போன்று, கலிங்கத்தை வென்ற குலோத்துங்க சோழன் போன்று ஆற்றல் படைத்த மாபெரும் மன்னர்களைக் கொண்ட தமிழ்நாடு எப்படி வீழ்ந்தது? இடைக்காலத்தில் நம் ஆட்கள் என்ன பண்ணினோம்? மூட நம்பிக்கை என்ற பெயரால் நாம ரொம்ப அடிச்சுக்கிட்டோம். 18ஆம் பெருக்கு என்று ஆடி 18 இல் ஒரு பெருக்கு நடைபெறும். எவனோ ஒருத்தன் சொன்னான் என்று கேட்டுக் கொண்டு நம்ம வீட்டிலே இருக்கிற ஏட்டுச் சுவடிகளை அதிலே அள்ளிப் போடுவது. எதிலே? ஆற்றுக்குள். அவன் எதற்குச் சொல்கிறான் தமிழ் நூல்கள் அழிய வேண்டும் என்ற நோக்கத்தில் எவனோ சொல்கிறான். கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பவனுக்குப் புத்தி எங்கே போச்சு! இந்த ஏட்டை நீங்கள் படிக்க வேண்டாங்க! உங்க பையன் கிட்டே கொடுங்க! அல்லது அந்த ஊரில் படித்தவர்கள் யாராவது இருந்தால், கொடுத்து இதைப் பாருங்கள்! வீட்டிலே இருக்கட்டும் என்று சொன்னால் அதை அவன் வாங்கி வைத்திருந்தால் இந்நேரம் பாதுகாக்கப்பட்டு இருக்கும். எத்தனை நூல்கள் அழிந்து போய்விட்டன. தெரியுமா உங்களுக்கு! மயிலை சீனிவேங்கடசாமி என்பவர் மறைந்து போன தமிழ்நூல்கள் என்று அத்தனை தமிழ் நூல்களையும் பட்டியலிட்டுத் தந்துள்ளார். “மறைந்து போன தமிழ் நூல்கள்” என்றே பேர். மறைந்து போன தமிழ் நூல்களைப் பற்றி இவ்வளவு பெரிய புத்தகம் எழுத வேண்டும் என்றால் அதில் எத்தனை நூல்கள் மறைந்து போயிருக்கும். இப்படி 18 ஆம் பெருக்கில் விட்டவர்கள் நம்ம ஆட்கள்!

இப்போது நான் பேசப்போவது - பாவாணருடைய கருத்தை யொட்டித்தான் பேசப்போகிறேன். அதிலே கொஞ்சம் கொஞ்சம் விளக்கம் சேர்த்து, பாவாணர், “தமிழன் எப்படிக் கெட்டான்” என்று ஒரு நூலை எழுதியிருக்கிறார். இதிலே வேடிக்கை என்னவென்றால் அந்த நூலை இப்போதுதான் பார்க்கிறேன். வெளியீட்டு விழா அன்றைக்குப் பார்த்திருக்கிறேன். தமிழ்நாட்டில் இதுவரை பாவாணரோடு நாங்கள் வாழ்ந்திருக்கிறோம். அவர் இந்த நூலை எழுதியது எங்களுக்குத் தெரியவே தெரியாது. அதைத் தேடிப் பிடித்துத் தமிழ்க்குடிமகனும் படிக்க வைத்த பெருமை இளவழகனைச் சாரும். இப்போது நான் அந்த நூலிலிருந்துதான் செய்திகளைச் சொல்லப்போகிறேன். அவர் சொல்கிற கருத்தை அடிப் படையாக வைத்து நான் பேசப் போகிறேன். பாவாணர் இறை நம்பிக்கை உடையவர். அதை மறந்து விடக்கூடாது. கடவுள் நம்பிக்கை உடையவர், ஒரு கடவுள் உண்டு என்று நம்புகிறவர், இதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி செய்கிறவர். ஆனால் அங்கே என்ன எழுதுகிறார்? நமக்கு மதப்பற்று இருக்கலாம். ஆனால் மதப்பித்தர்களாகலாமா? பற்று இருக்கலாம் ஆனால் பித்தம் இருக்கக் கூடாது. எனக்கு முருகன் பெரியவர், இளவழகனுக்குத் திருமால் பெரியவர், இன்னொருவருக்குச் சிவன் பெரியவர் என்று இருக்கலாம். அவரவர் வீட்டில் அவரவர் கடவுள்களை வணங்கி விட்டுப் போகிறார்கள். அவரவர் மனம் விரும்பியது அழகு என்று சொல்கிறானே! எனக்கு ஒன்று அழகாகத் தெரியும்; மற்றொருவனுக்கு அது அழகாக இல்லாமல் இருக்கும். அதற்காக நான் என்ன பொறுப்பேற்க

முடியும்? என் மனைவி என் கண்களைப் பொறுத்த வரையில் அழகுதான். .... எனவே, அப்படிப்பட்ட நிலையில் மதப்பற்று இருக்கலாம், இருக்க வேண்டும். அது இருக்கட்டும்! நாம் அதில் தலையிடவும் இல்லை. ஆனால், மதத்திலே இருக்கின்ற மூட நம்பிக்கைகளைப்பற்றிச் சொல்லலாமே! மதப்பித்தங்களை அளிக்கிற நம்முடைய முன்னோர்களில் சிலபேர் என்ன செய்திருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறார் 1898 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் என்ன நிலை தெரியுமா உங்களுக்கு ! எல்லாம் மனுநீதி அடிப் படையில், நாம கெட்டது அதிலேதான். அவன் என்ன சொல்லி விட்டான். இந்தப் பேச்சை மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டுக் கொள்ளுங்கள். எள்ளைச் செக்கில் போட்டுப் பிழிவது பாவம்! இப்போது தேங்காய் எண்ணெய் தடவி இருக்கிறீர்களா? கடலைஎண்ணெய் நல்லெண்ணெய் பயன்படுத்தி இருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் பாவிகள். அப்படித்தானே பொருள். அவன் கருத்துப்படி மனு நீதி கருத்துப்படி நீங்கள் பாவிகள்! "எள்ளைச் செக்கில் போட்டுப் பிழிவது பாவம்" அடேங்கப்பா! எனவே பிழிகிற தொழிலைச் செய்கிற வாணிகச் செட்டி யார்கள் பாவிகள்! தீண்டத் தகாதவர்கள். அதை வாங்கி விற்பனை செய்கிற நாடார் பெருமக்கள் பாவிகள்! தீண்டத்தகாதவர்கள். மறந்து விடக்கூடாது நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. அதுபோக, தாழ்த்தப்பட்டவர் களாக இருக்கின்ற ஆதி திராவிடர்களும் தீண்டத்தகாதவர்கள். இது நான் சொல்வது 1898 இல். கமுதியிலே இருக்கின்ற (முதுகுளத்தூருக்குப் பக்கத்தில் இருக்கின்ற) மீனாட்சி அம்மன் கோயிலில் அப்பகுதியிலிருந்த நாடார் பெருமக்கள் கோயிலுக்குள் நுழைய முற்பட்டபோது, இன்னொரு தமிழினத்தைச் சேர்ந்த ... இன்னொருத்தன் வேறு யாரும் இல்லை. வேடிக்கை என்ன வென்றால் சண்டை பூராவும் நமக்குள்ளேதான். அவன் ஏவிவிட்டுப் போய்விட்டான், அவன் எங்கேயோ இருக்கிறான். ஆனால், நாம ஒருத்தருக்கொருத்தர் மோதிக்கிட்டு இருக்கிறோம். கோயிலுக்குள் நுழையவிடாமல் ஒரு கூட்டம் தடுத்தது. அதனுடைய விளைவாக 28 கொலைகள். 29 தீவட்டிக் கொள்ளைகள் நடைபெற்றன என்று வரலாறு சொல்கிறது. ஆனால் இப்போது நிலைமைகள் வெகுவாக மாறிப்போய் விட்டன. இன்றைக்கு, எல்லாக் கோயில்களிலும் உள்ள அறங்காவலர் களில் ஓர் ஆதிதிராவிடர் கண்டிப்பாக உறுப்பினராக இருக்க வேண்டும். எனவே, நிர்வாகத்திற்கே வந்துவிட்டார்கள். நாடார் சமூகத்தைச் சேர்ந்த வர்கள் உள்ளே வருவதற்கு எந்தக் கவலையுமில்லை. இன்னும் சொல்லப் போனால் சாத்தூர், சிவகாசி போன்ற இடங்களில் கோயில் எல்லாம் முழுக்க அவர்கள் கையில் இருக்கிறது. அதுதான் உண்மை. ஆனால் இந்தப் பிரிவு எப்படி வந்தது. மதப்பித்தம் காரணமாகத் தானே வந்தது. பெரியார் இயக்கம் போன்றவை, அண்ணா போன்றவர்கள் வந்த பிறகு தானே இதை மாற்றியிருக்கிறார்கள். அதிலே இராசாசியை நாம் நினைவு கூர வேண்டும். ஆதிதிராவிடர்கள் போன்றவர்கள், இன்னும் சொல்லப் போனால் நாடார்கள் கோயிலுக்குள் நுழைய வேண்டுமென்று இசைவு கேட்டு, இலண்டனிலுள்ள privy council என்ற வழக்கு மன்றம் வரை போனார்கள். அவன் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. நீங்கள் போகக்கூடாது என்று

தான் சொன்னான். அதற்குப் பிறகு இங்கே போராட்டம் நடந்தபிறகு, இராசாசி 1939 இல் போட்ட சட்டம்தான் எல்லோரையும் உள்ளே நுழைய வைத்தது. அதையும் பாராட்ட வேண்டும். எனவே, அதற்குப் பிறகு இன்றைக்கு அந்தச் சூழல் சரியாக வந்துவிட்டது.

சேக்கிழாரின் பெரிய புராணம் நாம் படிக்கிறோம். அது நாயன் மார்கள் வரலாறு. எல்லா நாயன்மார்களையும் பாராட்டு கிறோம். எல்லாம் உலா வருகின்றன. எல்லோரையும் கோயிலில் வைத்திருக்கிறோம். நானும் அமைச்சராக இருந்தபோது எல்லாக் கோயில்களிலும் 63 நாயன்மார் களைப் பார்த்திருக்கிறேன். நானே திறந்து வைத்திருக்கிறேன், நானே வழிபாடு செய்திருக்கிறேன். ஆனால் நான் சொல்லவில்லை. பாவாணர் சொல்கிறார். "இயற்பகை நாயனார்" என்று ஒருத்தர் இருந்தாரே! அவர் என்ன பண்ணி விட்டார். எவனோ ஒருத்தன் சிவனடியாருடைய வேடத் தில் வருகிறான். சிவனடியார் யார்? சிவனடியார் வேடத்தில் வருவது யார் என்பதை அவர் என்ன கேட்கிறார் என்பதை வைத்துத்தானே முடிவு பண்ணனும். சோறு கேட்டால் சரி, துணி கேட்டால் சரி, இருக்க இடம் கேட்டால் சரி, இல்லை வீட்டையே கேட்டால் சரி, இயற்பகை நாயனாரின் மனைவியை அல்லவா கேட்கிறான். இயற்பகை நாயனார் என்ன பண்ணினார். மனைவியைக் கொடுக்கிறார். சிவனடியாருக்கு. தன்னுடைய இனத்தைச் சேர்ந்த பெருமக்களெல்லாம் எதிர்க்கிறார்கள்! கொன்றுவிடு வோம்! இதைச் செய்யாதே என்று. அவர்களை இவர் கொன்றார். அது ரொம்ப முக்கியம். சிவனடியாருக்கு மனைவியையும் கொடுத்துவிட்டு, இனத்தாரையெல்லாம் கொன்றுவிட்டு அந்தக் காமுகனைப் பாதுகாப்பாக, வெளியூர் வரை கொண்டு போய் விட்டுவிட்டு வந்தவர் இயற்பகை நாயனார். இது மதப்பித்தமில்லையா என்கிறார் பாவாணர்.

அதேபோல மெய்ப்பொருள் நாயனார் அவரைக் கொல்வதற்கு ஒருத்தன் வருகிறான், அவன் ஒரு கூத்தன். அவனும் சிவனடியார் வேடத்தில் தான் வருகிறான். வரும்போதே கைக்குள் வாள் கொண்டு வருகிறான். குத்தப்போகும்போது அந்தப் பாதுகாவலன் பிடித்துக் கொள்கிறான். தத்தன் என்ற பாதுகாவலன் காண்கிறான், பிடித்துக்கொள்கிறான். ஆனால், குத்தின உடனே அவனைப் பிடித்துத் தண்டித்திருக்க வேண்டாமா! ஆனால், மெய்ப்பொருள் நாயனார், தத்தா நமர்! அவர் நமக்கு மிகவும் வேண்டியவர் - குத்தியவர் என்கிறார். சிவனடியாருக்கு ... இளையான்குடி நாயனார் சரியாகச் செய்திருக்கிறார். ஏனென்றால் எங்கள் ஊர்க்காரர். சிவனடியார் வருகிறார். பசியாக இருக்கின்றார். அன்றைக்குத்தான் நிலத்தில் விதைத்திருக்கிறார்கள். ஆனால் மழை பொழிகின்றது. ஓடிப் போய் அந்த விதைத்த நெல்லில் மிதந்ததையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து உணவு சமைத்துப்போடுகிறார். உடனே இறைவன் காட்சி அளிக் கிறார். அது சரி! அது மதச் சார்புள்ளதாக இருந்தாலும், அது ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளத் தக்கதுதான். ஏற்றுக் கொள்ளத் தகாத இதை எப்படிக் கொண்டுவந்தார்கள்! என்பதுதான் கேள்வி!

அது மட்டுமன்று, இவன் மாடுகளை, ஆடுகளை, கோழிகளை நம்ம ஊரில் கோயிலுக்கென நேர்ந்துவிடுவான். இப்போது வேறு எதையும்

நேர்ந்து விடச் சொல்வதில்லை. கோழியை நேர்ந்து வீட்டிலேயே கட்டிக் கொள்ளச் சொல்வான். ஆட்டை நேர்ந்து வீட்டிலேயே கட்டிக்கொள்ளச் சொல்வான். ஒரு நாள் கோயில் பெயரைச் சொல்லி, அந்தப்பக்கமாகப் பார்த்துக் கும்பிட்டு, நேர்ந்து விட்ட ஆட்டை அடித்து உப்புக் கண்டம் போட்டுவிடுவான். அது தானே இன்றைக்கு. ஆனால் மாட்டை மட்டும் அப்படி ஒன்றும் செய்யமுடியாது. மாட்டை நேர்ந்து விட்டுப் பெயரை எழுதி விடுவான் "மகா சாத்தையனார் துணை" என்று எழுதி, உடம்பில் சூடு போட்டு விட்டுவிடுவான். அது ஊரிலே இருக்கின்ற நிலம் பூராவும் மேய்ந்து, அநியாயம் பண்ணிக்கிட்டு, அதற்குப் பொலிகாளை என்று பெயர், கோயில் காளை அல்லவா ஒன்றும் செய்ய முடியாது. முத்திரை வேறு. அது நிமிர்ந்தால் போதும். விட்டுவிடுவான்.

பெண்களைக் கோயிலுக்கு நேர்ந்து விட்டான் பாருங்கள்! யாரு தமிழன். பெண்களைக் கோயிலுக்கு நேர்ந்துவிட்டார்கள். நல்ல பெயரைத் தான் முதலில் வைத்திருக்கிறான். தேவனுக்குத் தொண்டு செய்கின்றவர்கள், அதாவது இறைவனுக்குத் தொண்டு செய்கின்றவர்கள். இவர் அடியவர், அடியார்; அந்தப் பெண்ணுக்குப் பெயர் அடியாள். தேவனுக்குத் தொண்டு செய்கிறவள் தேவடியாள். கடைசியில் காலப்போக்கில் என்ன ஆச்சு! அங்கே இருக்கிற ஊர்ப் பெரிய தனக்காரர் அர்ச்சகர் எல்லாம் சேர்ந்து நல்லபடியாக அதை ஒரு தொழிலாக்கி விட்டார்கள். அப்படித்தானே வந்துச்சு உங்களுக்கு! கடைசியில தேவதாசி முறை! இது பற்றி ஒரு காலத்தில் சட்டமன்றத்தில், முத்துலட்சுமி ரெட்டி! இன்றைக்கு அவர்கள் பெயரில் ஓர் அரசுத் திட்டமே உள்ளது. அவர்தான் முதல் பெண் மருத்துவர். அவர் சட்டமன்றத்தில் தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிறார். அதை ஒழிக்கக் கூடாது என்று வாதாடியவர் சத்திய மூர்த்தி - காங்கிரசுக் கட்சியின் தீவிரத் தலைவர். அப்படியானால் உங்க இனத்திலே ஒருத்தரைத் தேவதாசி ஆக்குவதற்கு நீங்கள் தயாரா? என்று கேட்டார். முத்துலட்சுமி. அதற்கப்புறம் தான் தேவதாசி ஆக்கப்படுப வர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது புரிந்தது. எந்தப் பிராமணப் பெண்ணாவது தேவதாசி ஆகியிருக்கிறாரா? தேவடியாளாகி இருக்கி றாளா? அந்தக் கோயிலுக்கு நேர்ந்து விட்டிருக்கிறார்களா? இல்லையே! இதற்காக இப்படி முட்டாள்தனமாக ஒரு பெண்ணை நேர்ந்து விட்டுக் கோயிலுக்குத் தொண்டு செய்ய விட்டார்கள்! அவள் தொண்டு மட்டுமா செய்யமுடியும்! அதற்குப் பிறகு தொடருகின்ற துயரங்கள் எத்தனை! எந்த அளவுக்குக் கீழ்த்தரமான தேவதாசி முறைகள்! அடியாள் என்பதை தாசியாக்கி, கடைசியில் கேவலத்தனமாகக் கொண்டு வந்து விட்டார்கள். நல்ல வேளையாக இப்போது அந்த முறைகள் எல்லாம் நின்று போய் விட்டன! எனவே, மதப்பித்தங்களினால் செய்த ஏராளமான தவறுகள்! இப்போதாவது அவரவர் தெய்வத்தை அவரவர் வணங்குங்கள். அடுத்த வர்கள் என்ன வணங்குகிறார்கள் அதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? தமிழ்க்குடிமகன் மேல் நம்பிக்கை யிருக்கிறதா? தமிழ்க்குடிமகன் பேச்சைக் கேளுங்கள்! தமிழ்க்குடிமகனை வாழ்த்த வேண்டும் என்றால் தமிழ்க்குடிமகனுக்கு வாழ்த்து அனுப்புங்கள்.

அதற்காகத் திருமாவளவனுக்கு அனுப்ப வேண்டாம், இவருக்கு அனுப்ப வேண்டாம் என்ற வேலை எல்லாம் வேண்டாம். அவருக்கு வேண்டு மானால் அனுப்புங்கள், இவருக்கு வேண்டுமானால் அனுப்புங்கள்! அனுப்பவில்லை என்றால் விட்டு விடுங்கள்! அதற்காக அங்கிருந்து ஒரு பழியைத் தூக்கி - குண்டைத் தூக்கி அனுப்ப வேண்டாம். அது வேண்டிய தில்லை. அவரவர் மனம் விரும்பியது அவரவருடைய தெய்வ ஈடுபாட்டைப் பண்ணிவிட்டுப் போகட்டும். ஆனால், மதத்தின் பித்தம் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்பது பாவாணருடைய கருத்து.

அடுத்து, நம் மன்னர்களும் அப்போது, கொடையின் பெயரில் நிறைய தப்புகள் செய்திருக்கிறார்கள். இப்போது நல்ல வேளையாக, தினம் கொடுக்கிறவன் இல்லை - இருந்தால் விடமாட்டோம் நாங்கள். நாஞ்சில் வள்ளுவன் என்ற மன்னனைப் பற்றி ஔவை பாடுகிறாள். "மடவன் மன்ற நாஞ்சில் வள்ளுவன்" நாஞ்சில் வள்ளுவன் என்ற மன்னன் ஒரு மடையன். ஏனென்றால் இங்கே கீரை வெந்துகிட்டிருக்குது வீட்டில்; அந்த நேரத்தில் போடுவதற்கு உப்பு இல்லை. சோறு சமைக்க அரிசி இல்லை. சரி அரசன் கிட்டே வாங்கிட்டு வந்துடலாம் என்று போனால், அவன் என்ன பண்ணு கிறான். நேரடியாக ஒரு யானையை வரவழைத்து அது முதுகு நிறையப் பொருள்களை ஏற்றி அனுப்புகிறான். நான் அதையா கேட்டேன். இந்த ஔவை, யானையை வாங்கி என்ன செய்ய முடியும்? ஆனால் அதற்கும் நம்ம புலவன் சும்மாயில்லை. ஓர் அரசன் கிட்டே பரிசுக்குப் போகிறான். பரிசுக்குப் போகிறபோது அவன் பரிசு கொடுக்கவில்லை. போய் விட்டான் இன்னொரு அரசன்கிட்டே போகிறான். அவன் ஒரு யானையைத் தருகிறான். வாங்கிக்கிட்டு நேரே வீட்டுக்குப் போக வேண்டியது தானே! திமிரு! எவன் பரிசு கொடுக்க வில்லையோ அவன் வீட்டுக்கு முன்னாடி அந்த யானையைக் கட்டிவிட்டுப் போய்ச் சொல்லிவிட்டுப் போகிறான். எவ்வளவு திமிர் பாருங்க! இப்படியும் இருக்கிறான். அப்போது அவன் என்ன சொல்கிறான். நம்முடைய பாவாணர் யானை முதுகொடியப் பொருள் எதற்கு ஐயா! - இந்த யானைக்கு மாறாக இந்த ஏழைப் புலவனுக்குத் தேவையான பொருள்களைக் கொடுத்திருக்கலாம் இல்லையா? யானையை வைத்து யார் தீனி போடுவது! எனவே, இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் அன்றைக்கு இருந்தன. பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தான். என்பது நமக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. மயிலுக்கு ஏன் போர்வை? இது தேவையா? அப்படியென்றால் போர்வை இன்றிக் குளிரில் நடுங்குகிறானே ஒருத்தன் அவனுக்குத் தானே போர்த்தியிருக்க வேண்டும். எத்தனை மயிலுக்குத் தான் நீங்கள் போர்த்துவீர்கள்! காடு பூரா தேடி, ஒவ்வொரு மயிலா தேடி ஒவ்வொரு போர்வையும் போர்த்தி - அந்தப் போர்வையைப் பாதுகாத்து குளிர்காலத்தில் அதுவே போர்த்திக் கொள்ளுமா, மற்ற நேரத்தில் சுருட்டி வைப்போம் என்று வைக்குமா? எனவே, இப்படிப்பட்ட கொடை மடம் அதுவும் தவறு என்கிறார் பாவாணர்.

எல்லா மேடைகளையும் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து விட்டோம். இசை மேடையா தெலுங்கு 2¾ மணிநேரம் தெலுங்கில் பாடுவான். பாலச்சந்தரின் சிந்து பைரவியை இந்த நேரத்தில் பாராட்டாமல்

இருக்க முடியாது. அவன் பாடிக் கிட்டிருக்கும் போது எல்லோரும் தலையை ஆட்டிக் கொண்டிருப்பார்கள், புரியாமல் தான் ஆட்டிக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தெரியும் ஆங்கிலப் படம் பார்க்கும் போது என்ன கதை என்று நமக்கு விளங்காது, உங்களுக்குத் தெரியும். ஆனால் ஒருத்தன் கைதட்டுகிறான் என்றால் உடனே நாமும் கைகளைத் தட்டுகிறோம். பக்கத்திலே இருப்பவன் கேட்கிறான். என்னங்க முக்கியமான காட்சி! "நீ வேற! அவன் தட்டுகிறான், நானும் தட்டினேன்" சரி வெளியிலே வரும் போது, ஆங்கிலப் படம் பார்த்து விட்டு நாம எல்லோரும் உட்கார்ந்திருக்கிறோம். ஆளுக்கு ஒரு தாளைக் கொடுத்து, இந்தக் கதையை மட்டும் நீங்க எழுதிக்கொடுங்கள்! 1¾ மணி நேரம் படம் பார்த்தீர்கள் அல்லவா! இங்கே 1¾ மணி நேரம் தான் படம். நாம தான் காட்சி காட்சியாக 4 மணி நேரம் எடுப்பது. சம்பூர்ணராமாயணம் 4½ மணி நேரத்திற்கு எடுத்திருக்கிறார்கள். ஆளுக்கொரு தாளைக் கொடுத்தால், நீங்க என்ன எழுதுவீர்கள், உங்கள் கருத்துக்குத் தோன்றுவதை எழுதினால், கடைசியில் படித்துப் பார்த்தால், ஒவ்வொன்றும் ஒரு கதையாக இருக்கும். அதுதான் நமக்கு விளங்கினது. சும்மா கதை எல்லாம் சொல்லக் கூடாது. நானும் ஒரு கதைதான் எழுதுவேன். அதே மாதிரி இன்னொரு மொழி தெலுங்கில் பாடினால் உங்களுக்கு என்ன விளங்கும். சும்மா தலையை ஆட்டிக் கொண்டு, விளங்காமல், என்னமா பாடுகிறான் என்பது பிறகு தொடையில் தாளம் தட்டிக் கொண்டு, ஆனால் பொருள் விளங்குமா என்றால் விளங்காது. அதனால் தான் "ஏடறியேன்! பாடறியேன்! படிப்பறியேன்" என்ற பாட்டில் அதைச் சரியாக உணர்த்தினான். இதைப் பாராட்ட வேண்டும். சேரிக்கும் சேர வேண்டும், தமிழில் ஒரு பாட்டுப் பாட வேண்டும். அவனுக்கும் கேட்கட்டும் ஐயா! 2¾ மணிநேரம் தெலுங்கில் பாடிவிட்டு, கடைசியில் 2 பாட்டு மட்டும் தமிழில் பாடுவார்கள். அப்போது; இப்போது மாறிவிட்டது. அதற்குப் பெயர் துக்கடா! அது வரைக்கும் அக்கடா என்று உட்கார்ந்திருக்க வேண்டும். 2¾ மணி நேரம் தலையை ஆட்டிவிட்டு, அப்புறம் தமிழ்ப்பாட்டு பாடுகிறான். அரசர் அண்ணாமலையார் முயற்சி எடுத்து, அதற்காக 15,000 ரூபாய் (அந்தக் காலத்தில் ரூ.15,000 பெரியது) முதலீடு செய்து, தமிழிசை இயக்கத்தை வளர்த்து, பின்னர் சீர்காழி கோவிந்தராசன் பாடினார் 3 மணிநேரம்! சிதம்பரம் செயராமன் பாடினார் 3 மணிநேரம், டி.எம் சௌந்தரராசன் பாடினார் 3 மணிநேரம் - கேட்கவில்லையா நாம். எத்தனை! என்னைக் கேட்டால், பாட்டினுடைய இனிமையே தெய்வத்தின் மேல் பாடிய பாடல்களில் தான் ரொம்ப இனிமையாக வந்திருக்கும். திரைப்படப் பாடல்களில் கூடச் சில நேரம் இனிமை இருக்காது. ஏதோ டகரா டகரா என்றாலே பாட்டு விளங்காது. ஆனால் தெய்வத்தின் மேலே பாடிய பாடல் நன்றாக வந்திருக்கும். மறந்து விடக்கூடாது. நான் அதை விரும்புகிறேனா என்பது வேறு. அதன் இசை அருமையாக இருக்கிறது அல்லவா உங்களுக்கு! எனவே, அதை மீட்பது ஒரு மேடை.

நீதிமன்றமா ஆங்கிலம்! கல்விக் கூடமா ஆங்கிலம், கோயிலா வடமொழி! அப்போது தமிழ் எங்கே! "எங்கே தேடுவேன் என் தமிழை

எங்கே தேடுவேன்" என்று நான் தேடிக்கிட்டே இருக்க வேண்டும். இப்போது தான் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன! அதற்காகச் சொல்கிறேன். எனவே ஒரு காலத்தில் தமிழர்கள் எல்லாம் தம்முடைய உடைமைகளையெல்லாம் வெவ்வேறு ஆட்களுக்குக் கொடுத்து விட்டுத் தெருவில் அலைந்தவர்கள் தான் மறந்துவிடக் கூடாது.

அதற்கப்புறம் நமக்குள் இருக்கின்ற பொறாமை. மனப்புழுக்கம் எல்லா இனத்திலும் இருக்கலாம். ஆனால் நமக்கு ரொம்ப கூடிப் போய்விட்டது. தமிழ்க்குடிமகனுக்கு ஒரு பதவி கிடைத்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் இங்கிருந்து வாழ்த்து அனுப்புவீர்கள், ஆனால் என் பக்கத்து வீட்டுக்காரன் தாங்கிக் கொள்ள மாட்டான். அதற்காக அவனையா அமைச்சராகப் போட முடியும். ஆனால், "என்ன அவனுக்கா, என்னப்பா இது! ஏன் இவனைக் கேட்டா போட முடியும். நான் 43000 வாக்குகள் வாங்கி வெற்றிபெற்று, பிறகுதான் அமைச்சர். நான் முதலில் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்; பிறகு என் கட்சி வெற்றிபெற வேண்டும். கட்சி பெரும்பான்மை பெறவேண்டும். பிறகு அமைச்சரவை அமையும் பேது நான் இடம் பெற வேண்டும். அப்போதுதானே எனக்கு வாய்ப்பு. அப்போது நான் தகுதியை வளர்த்துக் கொண்டால் தான் எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்". அதைப்பற்றியெல்லாம் எவனும் கவலைப்படுவ தில்லை. மனப்புழுக்கம்! பிறகு என்னோடு வேலை பார்த்திருப்பான் பாருங்கள்! அவன் ரொம்பப் புழுங்குவான். நம்மோட வேலை பார்த்தவன் காரில் போவதைப் பார்த்தியா! ஏன் காரில் போகாமல் நடந்தா போக முடியும்! நீ ஒரு காரை வாங்கிப் போ என்றால் அவனால் முடியவில்லை என்பதற்காக என்மேல் வருத்தம். இந்த எண்ணம் புலமைக் காய்ச்சல் - புலமைக்காரர்களுக்கு இது தமிழர்களுக்கு அதிகம். குறிப்பாக, பாவாணருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வாய்ப்புக் கொடுத்த போது, அது சரியாகச் செயற்படக் கூடாது என்று தடுத்தவர்களில், உங்களுக்கெல்லாம் தெரிந்த இரா.பி.சேதுபிள்ளை ஒருவர். பாவாணர்க்குத் தீங்கு செய்தவர்களில் இரா.பி.சேதுபிள்ளை ஒருவர். தெ.பொ.மீனாட்சி சுந்தரம் ஒருவர். கடைசியில் இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு வழியாகப் பாவாணரை வெளியேற்றித் தான் விட்டார்கள். கடைசியில் அவர்கள் நினைத்ததுதானே நடந்தது. என்னுடைய பேச்சை நீங்கள் கேட்கிறீர்கள்! மறுக்கவில்லை! என்னுடைய பேச்சைத் திறனாய்வு செய்து என்னுடைய பேச்சில் அல்லது என்னுடைய எழுத்தில் குறை காண்பவர்கள் ஓரளவு என் அளவுக்காவது படித்தவர்களாக இருக்க வேண்டும்! சுனித் குமார் சாட்டர்ஜி என்ற வங்கத்துக்காரன் அவனுக்குத் தமிழில் எழுதி யதைப் படிக்கத் தெரியாது; எனக்கே நல்லாத் தெரியும், என் இதழில் வெளியிட்டிருக்கிறேன், தமிழிலே எழுதியதைப் படிக்கத் தெரியாதவன் பாவாணருடைய ஆய்வை மேற்பார்க்கலாமா? பாவாணர் சொல்கிறார். மறைமலை அடிகள் ஒருவரைத் தவிர என் பேச்சையோ என் எழுத்தையோ மேற்பார்க்கும் தகுதி வேறு எவருக்கும் இல்லை என்கிறார். எனக்கே இல்லையே. பாவாணருடைய பேச்சுகளில் இது தவறு என்று சொல்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது? நான் அந்த மொழியாராய்ச்சியைச்

செய்திருந்தால் தானே சொல்லமுடியும்! திறனாய்வு பண்ணலாம். அது வேறு; மேற்பார்ப்பது அதற்கு மேலே கையெழுத்துப் போட வேண்டும். இது சரி, இது தவறு என்று. ஏனென்றால் அவர் ரொம்ப வருத்தப்படுகிறார். ......... கடைசியில் வெளியேறி என்ன சொன்னார் "எனக்கு மனைவி உண்டு, மக்கள் உண்டு, வறுமையும் உண்டு அதோடு மானமும் உண்டு" என்று வெளியேறினார்.

அதுமட்டுன்று, தமிழர்களுக்கு உள்ள பெரிய குறை. இவனுக்கு நிறையத் தெரியும், பாம்புக்கடிக்கு மருந்து தெரியும், ஆனால் அடுத்தவர்களுக்குச் சொல்லமாட்டான். சொன்னால் பலிக்காதாம். எவண்டா சொன்னது? சொன்னால் பலிக்காது என்று. கடைசியில் என்ன ஆச்சு! இவனை ஒரு நாள் பாம்பு கடித்து விட்டது. நுரை தள்ளினான் ... இவன் சொன்னது அவனுக்கு விளங்கவில்லை. இவன் மண்டையைப் போட்டு விட்டான். இதை இரண்டு நாளைக்கு முன்னாலே சொல்லியிருந்தால். அவன் காப்பாற்றியிருப்பானல்லவா! நீ வேறு யாருக்கும் சொல்லவில்லை என்றாலும் உன் மகனுக்காவது சொல்லிவை! அல்லது உற்ற நண்பனுக்காவது சொல்லி வை! என்னென்ன எப்படிச் செய்ய வேண்டும் என்று! நம்ம தமிழன் கெட்டது அதிலே தான்! தமக்குத் தெரிந்த கலைகளை யாருக்கும் சொல்லமாட்டான். குறிப்பாக, அணு என்ற கோட்பாடு உங்களுக்குத் தெரியும் "அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி" என்று. அதற்குப் பிறகு நாம் வளர்த்தோமா அதை - அறிவியல் கண்ணோட்டத்தோடு வளர்த்தோமா! அதை எவனோ ஒரு மேல்நாட்டுக்காரன் எடுத்து, வளர்த்து அதை உடைத்து Ruther ford என்பவன் அதை உடைத்து நியூட்ரான் இருக்கு, யுரோட்ரான் இருக்கு; என்றான் பிறகு அதை வைத்துக் குண்டு தயாரித்து, இரோசிமா, நாகசாகி மேலே போட்டு, நமக்குக் காட்டி விட்டான். அணு என்ன என்பதை. ஆனால், நமக்குத் தெரியும், நாம் வளர்க்கவில்லை. சீவகசிந்தாமணியில், மயில் வானூர்தி போகிறது என்கிறான். மயில் பொறி பறந்து சென்று சுடுகாட்டில் இறங்குகிறது. (ஹெலிகாப்டர் மாதிரி; ஏரோப்பிளேன் மாதிரி இறங்குகிறது). அதற்கப்புறம் வளர்த்தோமா? இல்லையே கருத்துரு தெரிந்திருக் கிறது. அதை நாம் ஏதாவது செய்தோமா! ரைட் சகோதரர்கள் வந்து கண்டு பிடிக்கவில்லையென்றால் இந்நேரம் நாம பறந்துகிட்டா இருப்போம். இந்தக் கருத்துப் பளிச்சென்று விளங்கணும் என்றால் ஒரு வரியில் சொல்லலாம். பாகப் பிரிவினை திரைப்படத்தில் எம்.ஆர். இராதாவும், சிவாஜிகணேசனும் நடிப்பார்கள். எனக்கு எம்.ஆர்.இராதாவை ரொம்பப் பிடிக்கும். துணிச்சலான கருத்துகளை என்ன அழகாக அடிக்கிறான் பாருங்கள்! சாப்பிடவா என்பார் சிவாஜிகணேசன், என்னடா சாப்பாடு என்று கேட்பார் இராதா. குழாய்ப்புட்டு அவிச்சிருக்கிறோம் என்பார் சிவாஜி. குழாயில் மாவைப் போட்டு, நீராவியில் வைச்சு சாப்பிடுவது. அவன் அழகாகச் சொல்வான்; ஏண்டா அவனவன் வெளிநாட்டில், மேல்நாட்டில் நீராவியிலே கப்பல் விடுகிறான், நீங்க குழாய்ப்புட்டை அவிச்சு வாயிலே விட்டுக் கொண்டிருக்கீங்க! இதைவிட எப்படிங்க உங்களுக்குச் சொல்ல முடியும். இவனுக்குத் தெரிந்ததைக் கூட எவனோ ஒருத்தன் வெற்றிகரமாக

நீராவிப் பொறி கண்டுபிடித்து நம்மை இழுக்க வைத்துவிட்டான். தொடர் வண்டியில் நாம் அதைப் பின்பற்றவில்லை. நமக்குத் தெரியும்; தெரியாமல் இல்லை. எனவே, நமக்குத் தெரிந்த பல உண்மைகளைச் சொல்லாமல் மறைத்ததனாலும் தொடர்ந்து பணி ஆற்றாததாலும் பலவற்றை நாம் இழந்திருக் கிறோம். முன்னேறாமல் முடங்கிப் போயிருக்கிறோம்.

அதைவிட ரொம்ப முக்கியம்? 58 அகவை அளவுடனேயே ஓய்வு பெற்றுவிடு என்று எங்களை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்களே கல்லூரியி லிருந்து! உங்களுக்கு ஒரு காப்பி வாங்கித் தருகிறேன் என்று அனுப்பி விடுவார்கள்! வீட்டுக்கு வருகிறீர்கள் என்ன பண்ணணும்? நீங்கள் இது வரைக்கும் சேர்த்த சொத்து என்ன என்று விவரம் பண்ணி, மனைவி பிள்ளைகளுடன் உட்கார்ந்து பேசி, இவ்வளவு இருக்கு நமக்கு, இதை வருங்காலத்தில் இப்படிச் செய்து கொள்வோம், இருக்கிற வரைக்கும் பண்ணிக்கி' டே இருப்போம். 58 லேருந்து 85 வரைக்கும் நாம் இருப் போம். ஆனால், முதலிலேயே சொல்லி விடலாமே! என் உடைமை என்ன; என் சொத்து என்ன! என்ற விவரத்தை என் மனைவிக்கிட்டேயாவது சொல்ல வேண்டாமா! மூச்சுவிடக்கூடாது! ஒருத்தரிடமும் சொல்லக் கூடாது. சொல்லாமல் ஒரு நாள் மண்டையைப் போட்டுவிடுவான். கடைசியில் இவன் எங்கே வைத்தான் என்றே தெரியாது. பிறகு பிள்ளைகள் எல்லாம் அடித்துக் கொள்வார்கள். போகிற நேரத்தில் இந்தக் கிழவன் ஒன்றும் சொல்லித் தொலைக்காமல் போய்விட்டானே ஐயா! அவன் செத்ததுக்குப் பிறகு. அப்பா செத்துப்போய்விட்டான் என்ற வருத்தத்தை விட இந்தக் கிழவன் விவரம் சொல்லாமல் போய்விட்டான் அல்லவா. அவன் என்ன பேசுவான்? இந்தக் கிழவன் மண்டையைப் போடறதும் போடறானே போகிற நேரத்திலே உள்ள விவரத்தைச் சொல்லாமல் போய்விட்டானே! என்று அப்படித்தான் சொல்வானே தவிர, வேறென்ன சொல்வான்? மேல் நாட்டுக்காரன் அதைப் பின்பற்றுகிறான். குறிப்பிட்ட அகவை ஆனவுடன் தன் சொத்துகள் பற்றிய விவரங்களை உயில் என்று சொல்லப்படுகிற விருப்ப ஆவணத்தில் எழுதிக் கையில் வைத்து இருப்பான். எழுதி நீங்கள் கையில் வைத்திருக்கலாம். 5 ஆண்டுகள் கழித்தும் நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். ஏனென்றால் விருப்ப ஆவணத்தை உரியவர் எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். பாகப்பிரிவினை நடந்தால்தான் மாற்றமுடியாது. அது சட்டம். அதையும் சொல்வது கிடையாது. அப்படி யும் ரொம்ப பேர். அதனால்

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடனே கேள்! - கூடுவிட்டிங்கு**
**ஆவிதான் போன பின்பு யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்!**

ஏண்டா புதையலை எங்கேயோ பதுக்கிவைத்து, ஒருத்தரிடமும் சொல்லாமல் போய்விட்டாயே! சொல்லியிருந்தால் மலேசியத் தமிழ்நெறிக் கழகத்துக்காவது எடுத்துக் கொடுத்திருக்கலாமே! பாவம் இந்த இளவழகன் துன்பப்படுகிறாரே! அவருக்கு 10,000 கொடுத்திருக்கலாமே!.

பிறகு, அப்போதும் இருந்தது. இப்போது ரொம்ப கூடிப் போச்சுங்க! பாவாணர், தமிழன் எப்படிக் கெட்டான் என்று சொல்கிறார். குறி பார்க்கிறது, இப்போது வாஸ்து பார்க்கிறது, எங்க அப்பன் கட்டிய வீடு நல்லாத் தான் இருக்கிறது. வாஸ்துக்காரன் சொல்லிவிட்டானாம் கொஞ்சம் மாற்றிக் கட்டணும் என்று; இங்கே இடிக்கிறான்; அங்கே இடிக்கிறான்; அப்படி நடக்குது; அதிகமாகப் போச்சு! ஏங்க ஜோசியக்காரன் சொல்வதை நம்பி என் வாழ்க்கையை நடத்த முடியுமா? அவன் பல தோதுக்குச் சொல்கிறான். அவனுக்கு அவன் என்றைக்குச் சாகப்போகிறான் என்று தெரியுமா? இந்த ஜோசியம் பார்க்கிறவனுக்கு அவன் என்றைக்குச் சாவான் என்பது உறுதியாகத் தெரியுமா? தெரியாது இல்லே! எனவே, அவனே அவனுடைய வாழ்நாளைக் கணிக்க முடியவில்லை. அவனே என்ன சொல்வான். நமக்குத் தெரியப்படுத்துவான் நான் சொல்வதில் 5க்கு 2 பழுது இல்லீங்க! அப்புறம் சொச்சம்! இன்னும் 3 இருக்கிறதே. அதிலே எது பழுது; எது பழுதில்லாதது என்பதையாவது தெளிவாகச் சொல்லுடா; அது தான் சொல்ல முடியாது. அப்போது நான் குழப்பிக் கிட்டே இருக்கவேண்டும். நான் என்ன சொல் கிறேன். நாள் என்பது - நேரம் என்பது பற்றிப் பாவாணரும் அழுத்தமாகச் சொல்கிறார். நானும் காலம் எனும் காட்டாறு எனும் என் நூலில் அதைத்தான் எழுதியிருக்கிறேன். வாழ்க்கை என்பது பறந்து போகும்.

**"தேரா வாழ்வின் பறவை இனும்**
**செல்லும் தூரம் சிறிதே யாம்**
**பாராய்! பாராய்! பறவை அதோ**
**பறக்கச் சிறகை விரித்ததடா!**

என்று உமர்கய்யாம் பாடலைக் கவிமணி மொழிபெயர்த்தார்.

"The bird of Time
Has but a little way to fly;
And Lo! The bird is on the wing;

என்று பிட்செரால்டும் மொழிபெயர்த்தார்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த வாழ்க்கை எந்த நேரத்தில் போகும் என்று தெரியாது. நம்ம தமிழன் சொன்னானே தூங்குகின்றபோது வாங்குகின்ற மூச்சு சுழல் மாறிப் போனாலும் போச்சு! திடீரென்று ஒரு வாய்த் தண்ணீர் குடிக்கிறான் ... அவ்வளவுதான். என்னடா 4 தடவை இழுத்தான். அவ்வளவுதான். நாடியைப் பிடித்து பார்க்கிறான். மருத்துவர் என்ன சொல்கிறார். முடிந்து போச்சுங்க! எனவே வாழ்க்கை என்பது எப்போது வேண்டுமானாலும் போகலாம். இந்தநாள் என்று எவன் ஐயா பார்த்துச் சொல்லமுடியும் உங்களுக்கு? உங்களுக்கு வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறதா? எல்லோருக்கும் 24 மணிநேரம் கிடைத்திருக் கிறதா? உழையுங்கள்! பொருளைத் திரட்டுங்கள்! மக்களுடன் வாழுங்கள்! தேவைப்படுகிறபோது கொடை செய்யுங்கள். புகழ் பெறுங்கள்; இல்லை வேறு பணிகள் செய்யுங்கள்! எனவே, பொருளைத் திரட்டுவது சரியான வழி! பொருளைச் செப்பமாக வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதும் சரியான வழி, அந்தப் பொருளோடும் புகழோடும் வாழ்வது சரியான வழி. எவனோ

ஒருத்தன் சொல்கிறான். 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரை இராகு காலம். அப்போது நம்ம ரெயிலு 4.45 மணிக்குத் தான் புறப்படும். ஏற மாட்டீங்க நீங்க! ரெயில் என்ன காலியாகவா போகிறது! செவ்வாய் புதன் வடக்கே சூலம்னான். செவ்வாய் புதனில் காலியாகத்தான் போகிறதா? அதுதான் வண்டியிலே இடம் கிடைக்காமல் 8 நாட்களுக்கு முன்னாலே பதிவு செய்தே இடம் இன்னும் காலி இல்லை என்று சொல்லிக் கொண்டிருக் கிறான். அவன் மட்டும் இராகு காலம் பார்க்கிறதில்லை. சூலம் பார்க்கிற தில்லை. எப்படி! அவனுக்குத் தேவை இருக்கிறதானாலே போகிறான். அப்புறம் வீட்டுக்குப் போகும் போது மட்டும் சூலம் பார்க்கிறது. வலது காலை எடுத்து வைப்பது; ஏன் இடது காலை வைத்தால் என்ன? நான் கேட்கிறேன். ஒருத்தனுக்கு வலது காலில் ஊனம். இடது காலைத்தான் வைக்க முடியும், அவனால் தான் வலதுகாலை எடுத்து வைக்கமுடியாமல் உள்ளானே! அது என்ன வலது கால் வைக்கிறது, இடது கால் வைக்கிறது. அதிலே என்ன பண்பாடு! அதெல்லாம் பண்பாடு அல்ல, முட்டாள்தனம். பூனை குறுக்கே போவது - சகுனத் தடையாம். அது தேவைக்கு அது போகிறது. நீங்கள் ஏன் ஐயா போட்டுக்கிட்டு குழப்புறீங்க!... அது தான் கேட்டான். ஏண்ணே! நரி வலம் போனால் நல்லதா? இடம் போனால் நல்லதா? இவன் சொன்னான். இடம் போனாலும் போயிட்டுப் போகுது, வலம் போனாலும் போய்விட்டுப் போகுது. மேலே விழுந்து கடிக்காமல் போனால் சரிதான். அது போனால் ஓடிவிட்டுப் போகிறது. உனக்கு என்ன வந்தது. பூனை ஓடினால் உனக்கு என்ன? திடீரென்று நிலைப்படி தட்டி விடும். உடனே வீட்டில் இப்போது போகக் கூடாது. வந்து உட்காருங்கள்! நான் கேட்கிறேன். நிலைப்படி தட்டுகிற மாதிரி எதற்கு 5½ அடியில் வைக்கிறாய். நீ கட்டும் போது 6½ அடியில் வைத்திருந்தால் தட்டுமா! நீ கட்டுவது 5½ அடியில் கட்டிவிட்டு, இதை எல்லாம் அப்போ உன் மனைவி, என்னங்க நல்ல உயரம் நம்ம பசங்கள் இன்னும் உயராமாக வளரப் போகிறாங்க! இன்னும் உயரமா வையுங்கள் என்று தானே சொல்ல வேண்டும். வைக்கிறது 5½ அடி என்று வைத்துவிட்டு, தட்டுது தட்டுது என்று சொன்னால் தட்டத்தான் செய்யும். உடனே வேலையை நிறுத்தி விட்டு இங்கேயே படுத்துக்கொள்ள வேண்டும். எனக்குத் தெரியப் பாவாணரே ஒரு நூலில் எழுதியிருக்கிறார். 9.30 மணிக்கு ஒருத்தருக்கு நேர் காணல் வேலைக்கு வா என்றார். இவர் 8.00 லிருந்து 9.30 வரைக்கும் இராகுகாலம் என்று நினைத்துக் கொண்டு போகாமல் இருந்திருக் கிறார். பிறகு ½ மணிநேரம் கழித்துப் போயிருக்கிறார். அவன் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டான். போ ஐயா வேலையைப் பார்த்துக் கொண்டு. ஏன் ஐயா உரிய நேரத்தில் வரவில்லை. கேட்டால் இராகுகாலம். நாங்களெல்லாம் என்ன இளிச்சவாயன்களா இங்கே உட்கார்ந்து இருப்பதற்கு. எதற்கு? உங்கள் வாழ்க்கைக்கு எது பொருத்தமோ அதை வைத்துக்கொள். எவன் ஐயா சொன்னது இராகுகாலம் - நல்ல காலம். கெட்ட காலம் என்று. கோடை காலமா சட்டையைக் கழற்றிவிட்டு காற்றாட உட்கார்ந்து வேலையைப் பாருங்கள்! குளிர்காலமா கூட ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு வேலையைப் பாருங்கள்! சீனா மாதிரி போனால் 7,8 போர்த்திக்

கொள்ளுங்கள். வேறவழி அங்கே 0° ஆனால், இங்கே இல்லையே! தேவை யில்லை நமக்கு. எந்தெந்த ஊருக்குத் தேவையோ அதுதான் நமக்கு உடை. கிராமத்திலே எல்லோரும் உள்ளாடை சட்டை போட்டுக் கொண்டா திரிகிறார்கள். அவர் ஒரு துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு போவார் தெரியுமா உங்களுக்கு. நீங்கள் இங்கேயிருந்து போகிறவர்கள் நம்ம ஊரிலே என்ன பண்ணுவீங்க! அங்கே உடையை மாற்றிப் போடுவீர்கள் நம்ம சிவானந்தம்; அவர் ஊருக்குப் போனால் இப்படியா இருப்பார். அங்கே போய் வேட்டி கட்டிக் கொள்வார். அங்கே தேவை யில்லை ஏதாவது வெளியிலே போகும் போது முழுக்கால் சட்டை தேவை. எனவே, நமக்கு எது பொருந்துமோ அது தான் ஐயா உங்களுக்கு!

பிறகு, பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்வது, பெண்ணுக்குப் பையன் பிடித்திருக்கிறதா? பிடித்திருக்கிறது. பையனுக்குப் பெண் பிடித்திருக்கிறதா? முடி. அது வேறு; இது வேறு; 8, 10 பொருத்தத்திலே ஒரு 6 சரியாகச் சொன்னால், 4 சரியாக இல்லை என்கிறான். எவண்டா சொன்னது. ஏனென்றால் பெரியாருடைய கருத்துகளை வாங்கி, பாவேந்தர் கவிதையிலும், அண்ணா உரைநடையிலும், நாடகம் போன்றவற்றிலும் எழுதித் தானே கொள்கைகளைப் பரப்பினார்கள் ஒருகாலத்தில். சுடுமூஞ்சி என்ற கதையில் சுருக்கமாகச் சொல்கிறார். ஓர் இளம் பெண் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் ஒருத்தனை விரும்புகிறாள். இது அந்த ஊர்ப் பண முதலைக்குத் தெரிந்துவிடுகிறது. இவளை அவனுக்குக் கட்டிக் கொடுக்கக் கூடாது. நாம வளைத்துப் போட வேண்டும் என்று நினைத்து உடனே, இவன் அந்த ஜோசியம் பார்க்கிறவனிடம் போய், பணத்தைக் கொடுத்து, கொஞ்சம் மாற்றி எழுது! இந்தா பணத்தைப்பிடி என்கிறான். பொருந்தவில்லை என்றவுடன் அவளுக்கும் இந்தப் பணமுதலைக்கும் திருமணமாகிவிடுகிறது. அவனுக்கும் சொல்லி விட்டார்கள் பொருந்த வில்லை என்று சரி! அவர்கள் வீட்டில் சொல்லும் போது என்ன செய்ய முடியும் என்று அவனும் விட்டுவிட்டான். ஆனால், கடைசியில் உண்மை என்னவென்று தெரிந்து விடுகிறது. பிறகு என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். இவள் என்ன பண்ணுகிறாள். இந்தப் பண முதலையை நெருங்கவே விடுவதில்லை. இவளுக்குத் தான் உண்மை தெரிந்து போச்சு! அதனாலே மற்ற எல்லாரிடத்திலும் அன்பாக இருக் கிறவள். பண முதலை வரும்போது மட்டும் சுடு சுடு என்று இருப்பாள். நெருங்கவே விடமாட்டாள். அதற்குத்தான் ‘சுடுமூஞ்சி’ கதை. எனவே, ஜோசியத்தை வேண்டுமென்றே மாற்றி எழுதலாம். சில பேர் மாற்றி எழுதுகிறார்கள். தோது பண்ணுகிறான். காதல் பண்ணுகிறவர்கள் எல்லாம் ஜோசியம் பார்த்துக்கிட்டா அலையறான். பார்த்தால், எப்போது அவன் காதல் பண்ணுவது? காதலிக்க வேண்டும் என்று எத்தனையோ பாடல் களைச் சொல்லியிருக்கிறேன். நேற்றுக் கூடச் சொல்லியிருக்கிறேன். காதலிக்க முடிந்தால் காதலி!

**காதலினால் மானிடர்க்குக் கலவியுண்டாம்**
**காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்**

காதலிக்கச் சொல்லி நம்மை வற்புறுத்துகிறான். அதற்காகத் திருமணமானவர்களெல்லாம் போய் இதற்கான முயற்சியில் இறங்கிவிட வேண்டாம். எனவே, இப்படிப்பட்ட நிலைகளில் இந்த மூட நம்பிக்கைகளில் சிறு சிறு செயல்களில் எல்லாம் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளக் கூடாது.

அப்புறம் துறவிகள் - துறவு பூண்டீர்கள்! மண்ணாசையை விட்டாச்சு! பொன்னாசையை விட்டாச்சு! பெண்ணாசையையும் விட்டாச்சு! 3 ஆசைகளையும் விட்டதனால் நீ துறவி. போ! வேலையைப் பாரு! துறவி ஆக இருந்தால் என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அதைச்செய்! சமயத்தைப் பரப்பு! சமயத்தில் உள்ள உண்மைகளை எடுத்துச் சொல்! பல நூறு மக்களுக்கு அறிவு கொடு, எங்களுக்குப் பல்வேறு குடும்ப வேலைகள் எல்லாம் இருக்கின்றன. அதனாலே எங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. உனக்கு நேரம் கிடைக்கிறது, சொல்லிவிட்டுப்போ! மகிழ்ச்சி! ஆனால், எங்கள் ஊர் பிரேமானந்தா மாதிரி எதற்கு இந்த வேலை! தெரியுமில்லே உங்களுக்கு பிரேமானந்தா என்னவென்று. சாமியாருக்கு எதற்கையா மாமியாரு! எனக்கு மாமியார் இருக்கலாம் ஐயா! சாமியாருக்கு எதற்கு மாமியார்! நான் பிரேமானந்தா ஒருத்தரைத்தான் பெயர் சொல்லியிருக்கிறேன். இன்னும் பேர் சொல்ல வேண்டிய புள்ளிகள் நிறைய இருக்கிறார்கள். மறந்து விடக்கூடாது. நான் சொல்லியிருப்பேன். யாரையும் அசிங்கப்படுத்தக் கூடாது என்று பார்க்கிறேன். துறவு என்றால் துறவோடு நில். இல்லையா காவியைக் களைந்தெறிந்து விட்டு வந்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்ந்து காட்டு. தவறு ஒன்றுமில்லை. நீ ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் கையைப் பிடித்துத் தடுத்தோமா நாங்கள். உனக்குப் பிடிக்கிறது என்றால் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து விட்டுப்போ! காவி உடையில் இந்தக் காமக்குறும்புகள் எல்லாம் எதற்கு உனக்கு? உங்க மனைவியை வந்து 4 நாட்களுக்குத் தொடர்ந்து இங்கு வரச் சொல்ல வேண்டும் என்கிறான். அதுவும் இரவு 8.00 மணிக்கு மேலே. ஏனென்றால் அப்போதுதான் பூசையை ஆரம்பிக்கிறாராம். இந்த மடையன் அங்கே விட்டு விட்டு வெளியிலேயே காத்துக் கொண்டிருக்கிறான். அவள் 4 மாத கர்ப்பத்தோட வந்து நிற்பாள். இது நடக்கிறதா? இல்லையா? ஏன் இரவு 8.00 மணிக்கு மேலே பூசை செய்தால் தான் உங்கள் தோசம் நீங்குமா? அது முட்டாள் தனமில்லையா! மருத்துவரிடம் போய்யா! எத்தனை மருத்துவமனைகளில் எத்தனை மருத்துவ வல்லுநர்கள் இருக்கிறார்கள்! அரிநாத் என்ற ஒரு மருத்துவர் அப்போலோ மருத்துவமனையில் இருக்கிறார். ஒரு நாளைக்கு 10 இருதய அறுவை மருத்துவம் செய்கிறார். அரிநாத் தொட்டால்தான் மருத்துவமே பண்ணிக் கொள்வேன் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு வல்லுநர். அவரைத் தேடிப்போ! ஏன் இந்த வேலையெல்லாம். துறவிகளும் துறவியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இங்கே வந்துவிடு! இந்த இரண்டு வேலைகளையும் செய்வதால் சமுதாயத்திற்கு மிகப்பெரிய கேடுகள் - இன்றைக்கும் நடக்கின்றன. இன்றைக்கும் பலபேர் அதைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவன் ஏமாற்றுவது இருக்கட்டும்!

நீங்கள் ஏன் ஏமாறுகிறீர்கள்! அதுதான் என்னுடைய கேள்வி! கடைசியில் என்ன ஆச்சு! நாம் சொல்லுகிற நல்ல நன்மைகளை எல்லாம் கீழே போட்டுவிடுகிறான். இந்தக் கசடுகள் எல்லாம் மேலே நிற்கின்றன. அதற்குத் தான் பன்னாடை என்று பெயர். இந்தப் பன்னாடைத்தனம் நமக்கு எதற்கு! சல்லடை மாதிரி நில்! பராவயில்லை. கீழே இருக்கிற மாதிரி சட்டியிலே இருக்கிற மாதிரி இரு. நான் எல்லாவற்றையும் சாரத்தை வாங்கிக் கொண்டேன். அப்போதுதான் நீங்கள் பன்னாடை மாதிரி இருந்தால் தூக்கிக் கீழே போட்டுவிடலாம்.

அப்புறம் நாம் என்ன பண்ணிவிட்டோம்! இந்த வர்ணா சிரமத்திற் காகச் சாதிகளைப் பிரித்தோம் பாருங்கள்! அது நம்ம நாட்டில் தான் அதிகம். பிற மாநிலத்திலே கூட அநேகமாகக் குறைந்திருக்கும் என்று நான் நினைக் கிறேன். தமிழ்நாட்டில் அதிகம்! அது போன தேர்தலில் ரொம்ப உச்சத்திற்கு வந்து தலை விரித்து ஆடிப்போச்சு! உங்களுக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்கும். உச்சத்திற்கே போயாச்சு! மாபெரும் தலைவர்களெல்லாம் அதற்கு ஆட்பட்டு மண்ணைக் கவ்வினார்கள். நான் இப்போது அதைச் சொன்னால் அரசியலாகும். அதனால் சொல்லவில்லை. ஆனால் இந்தக் குலப்பிரிவினை எப்படி வரும்; எப்படி முடியும்! இளவழகன், திருமா வளவன், தமிழ்க்குடிமகன், வீரன், அறிவு மணி, தமிழ்வாணன் என்று நாம எல்லோரும் இருக்கிறோம். எல்லோரும் சேர்ந்தால் தமிழர்கள். இப்போது நாம் எல்லோரும் எதை வைத்துக் கூடியிருக்கிறோம். தமிழ்ப்பற்றாளர்கள். தமிழ்ப்பேச்சைக் கேட்க வேண்டும்; நீங்கள் பேசுவதை நாம் கேட்கப் போகிறோம். நான் ஒவ்வொருத்தரா என்னென்ன சாதி! சொல்லுங்க! அப்போதுதான் பேசமுடியும்! எனலாமா? ஏன் தமிழர்களென்றால் பேசிவிட வேண்டியதுதானே! அதிலே என்ன தவறு! எவன் ஐயா சொன்னது! எப்போது இருந்தது இந்தப் பிரிவு! எவனோ ஒருத்தன் வந்து வர்ணாசிரமத்தைப் பிரித்ததனால், பிராமணன், சூத்திரன், அரிஜன், என்று சொல்லிவிட்டார்கள்! கடைசியிலே என்ன கொண்டு வந்துவிட்டான். சூத்திரனைப் படிக்கவிடக் கூடாது என்றான். நீங்கள் எப்போதிலிருந்து படித்தீர்கள் 1912 இல் நடேச முதலியார் குரல் கொடுக்கும் போது, எவன் படித்தவன். எவனுக்கு வேலை கிடைத்தது. அந்த அருளாளர்கள் திராவிட இனத்தின் மீது பற்றுக்கொண்டு பணிகளைச் செய்திராவிட்டால் தமிழ்க்குடிமகன் கூட படித்திருக்க முடியாது. மறந்துவிடக்கூடாது. முத்தையா முதலியார் ஒரு வகுப்புரிமைச் சட்டத்தை நிறைவேற்றித் தராவிட்டால் எனக்குக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்காது. 1951 இல் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் தங்களுடைய இயக்கங்களின் சார்பில் வலிந்து, போராடி, அரசியல் சட்டத்தினுடைய முதல் திருத்தத் தினை நேரு அவர்கள் செய்யாம லிருந்தால் இந்த இட ஒதுக்கீடு கிடைத் திருக்காது. இன்றைக்கு நம்ம ஊரில் 77 பேர் படித்தவனாகி விடுகிறான். எனவே, எவர் வர்ணாசிரம முறையை வகுத்தார்களோ அவர்களை மீறி நாம் படித்து மேலே வந்துவிட்டோம். ஆனால், அதைப் பெறுவதற்கு முன்னால், ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் அந்த நிலையில் இருந்தோமா! ஒரு பிராமணன் வேதம் ஓதிக்கொண் டிருக்கும்போது ஒரு சூத்திரன்

அந்தத் தெரு வழியாகப் போனால், அவன் வேதத்தைக் காதில் கேட்டால் என்ன தண்டனை கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா உங்களுக்கு! பழுக்கக் காய்ச்சிய இரும்பை அவன் காதில் 10 தடவை இழு! ஒரு தடவை இழுத்தால் பொத்துக்கிட்டு போய்விடும்! 10 தடவை இழுக்கணுமாம், ஏனென்றால் வேதத்தைக் கேட்டுவிட்டானாம் அவன். இது மனு நீதி. அதனால் தான், மனோன்மணீயம் சுந்தரனார் சொன்னார். "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந் தோர்கள் உள்ளுவரோ மனுவாதி; அது ஒரு குலத்துக் கொரு நீதி!" (இன்னும் நான் அதை விரித்துக் கொண்டே போனால் இன்றைக்கு நான் முடிக்கமாட்டேன்) ஒரு சூத்திரன் ஒரு பெண்ணைக் கற்பழித்தால் அவனுக்கு மரண தண்டனை. ஆனால், ஒரு பிராமணன் ஒரு பெண்ணைக் கற்பழித்தால், அவனுடைய சொத்தைப் பறிமுதல் செய்து அடுத்த ஊருக்கு அனுப்பி விடு (அப்போதுதான் அங்கே போய் இன் னொருத்தியைக் கற்பழிக்க முடியும்) எவ்வளவு வசதிகள் செய்து கொடுக் கிறான் பாருங்கள். இதைச் சாதாரணமானவன் செய்யவில்லை. பிறகு நம்ம ஆளு என்ன செய்வான். அதைத் தானே செய்வான். அப்படியெல்லாம் தன்னை மேலாண்மையாக வைத்துக் கொண்டான். ஏண்டா கற்பழித்தால் இரண்டு பேருக்கும் ஒரே தண்டனை கொடு. சட்டம் அனைவர்க்கும் சமம். இப்போதுதானே வந்திருக்கிறோம். அப்போது இதற்கு நாம் எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும். எவ்வளவு உழைத்திருக்க வேண்டும்.

நீதிக்கட்சி வந்தது; நல்ல நன்மைகள் செய்தது; நான் மறுக்க வில்லை. அதிலே சில தவறுகள்! அவர்களெல்லாம் மேட்டுக் குடி மக்களாகவே இருந்து, மக்களுடன் நெருங்கிப் பழகாததால் நீதிக்கட்சி அழிந்துவிட்டது. அதற்கிடையில் பெரியார் வந்துவிட்டார். மக்களோடு மக்களாக பின்னாலே இயக்கங்கள். நல்லபடியாக அந்த வகையில் அரசியல் வளர்ந்திருக்கிறது. காங்கிரசுக் கட்சி என்ன செய்தது. அதுவும் ஒரு வகையில் தப்புச் செய்தது. ஏனென்றால் தலைமையகம் பூராவும் அவர்களுக்கு டெல்லி. இப்பவும் தான். இப்போது கூட அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். காங்கிரசுக் கட்சி யில் 18 துணைத் தலைவர்கள், 24 பொதுச் செயலாளர்கள், 36 செயலாளர்கள். தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிக்கு! விளங்குமா அந்தக் கட்சி! அந்தக் கட்சியைப் பற்றிப் பேசுவது குறித்து யாரும் வருத்தப்பட வேண்டாம். ஒரு கட்சிக்கு இத்தனைபேர் இருந்தால் எப்படி! கூட்டம் போட வேண்டும் என்றாலே குழப்பம்தான் வரும்! வேண்டிய தில்லை! ஏனென்றால் அவர்களால் தீர்வு காணமுடியவில்லை. இடைக்காலத்தில் இந்தியைத் திணிப்பதற்கு இவர்கள் வழி வகுத்தார்கள் இதே இராசாசி காலத்தில். இதே ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் சிறந்த மனிதர்; அவர் காலத்திலும் இந்தி திணிக்கப் பட்டது. மறந்துவிடக்கூடாது, 1948ல் அவிநாசிலிங்கம் சிறந்த கல்விமான் என்று பாராட்டப்பட்டவர்; அவர் காலத்தில் இந்தி திணிக்கப் பட்டது. மறந்து விடக்கூடாது. அதெல்லாம் இயக்கங்கள் இருந்ததனால் நாம் எதிர்த்துப் போராடி, இன்றைக்கு ஒழித்து விட்டோம். எனவே, காங்கிரசுக் கட்சி சார்பில் இப்படிப்பட்ட தீங்குகளும் வந்தன. நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள். பாவாணர் என்ன சொல்கிறார். நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தீர்கள்! சரி! நளன் கதையில் தமயந்தியை ஒரு

வேடன் காப்பாற்றுவான். அதற்காக வேடனையே, தமயந்தி திருமணம் செய்து கொள்ள முடியுமா! நாங்கள்தான் விடுதலை வாங்கிக் கொடுத்திருக் கிறோம்; எனவே, நாங்கள்தான் கடைசி வரைக்கும் இருப்போம்! அது எப்படி நடைமுறைச் சாத்தியம். நீங்கள் மட்டுமல்ல, நான் உள்ளபடியே அந்த விடுதலையைப் பற்றி பேசவேண்டுமானால் 1000 பேசுவேன். ஏனென்றால், நான் அந்தமான் சிறைச்சாலையை நேருக்கு நேர் பார்த்து நூல் எழுதியவன். அவ்வளவு கொடுமைகள். எனவே, நமக்காகக் குருதி சிந்தியவர்கள், வ.உ.சி. போன்ற இரட்டை ஆயுள் தண்டனை பெற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அந்தக் கட்சிகள் காலப்போக்கில் தமிழுக்குத் தீங்கு செய்தன; தமிழுக்கு உகந்த நன்மைகளைச் செய்யாமல் விட்டன என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் உண்டு என்பதையும் மறந்து விடக்கூடாது. இவ்வளவும் பாவாணர் காலத்தில் அவர் சொன்ன திலிருந்து சொன்னேன்.

இப்போது அண்மையில் என்ன நடக்கிறது. நடிகை பானுமதியை உங்களுக்குத் தெரியும். நடிகை பத்மினி தெரியும், நடிகை சாவித்திரி தெரியும். சிறந்த நடிகையர். அதுவும் பானுமதியின் இனிய குரல், எல்லாரும் திறம்பட அற்புதமாக நடித்தவர்கள். படங்களெல்லாம் சொன்னால் உங்களுக்குத் தெரியும். அவர்களுக்கு இப்போது யாராவது ரசிகர் மன்றம் வைத்திருக்கிறார்களா? நம்ம ஊரில், பானுமதி சிறந்த நடிகைதான் பானுமதி ரசிகர்மன்றம் (அல்லது) பானுமதி நற்பணி மன்றம் என்று வை! இப்போது அதை மாற்றிக் கொண்டார்கள்; நற்பணி செய்கிறார்களாம். பானுமதிக்கு மன்றம் கிடையாது, பத்மினிக்கு மன்றம் கிடையாது, சாவித்திரிக்கு மன்றம் கிடையாது, இடையிலே ஆடலழகி அனுராதா வந்தாள், இப்போது காணோம், ஆனா ரொம்ப ஆடிவிட்டாள். எனக்குத் தெரிய அவள் பெயரில் 808 மன்றங்கள் இருந்தன. என்ன தொண்டு! நம்முடைய தமிழர்களுக்கு அந்த அனுராதா செய்த தமிழ்த் தொண்டு! இந்தச் சமுதாயத்திற்கு நாட்டிற்குச் சொல்ல வேண்டும் அல்லவா உங்களுக்கு ! அதற்காகத்தான் ரசிகர் மன்றங்கள். அதுதானே இன்றைய நிலை! வ.உ.சி. பெயரில் ஒரு மன்றம் வையுங்கள்! விடுதலை உணர்வாவது வரும்; மறைமலையடிகள் பெயரில் ஒரு மன்றம் வையுங்கள்! தனித் தமிழ் உணர்வாவது வரும். நடிகர் நடிகைகளின் பெயரில் எதற்கு மன்றம்? அவர்கள் உங்களைக் கேட்டார்களா! ஒரு படத்திலே விசு நல்லா கொடுப்பார். ஒரு பையனைப் பிடித்துக் கொண்டு, ஏண்டா அவர் சொன்னாரா எனக்கு மன்றம் வை, கொடி கட்டு என்று. நான் என்ன சொல்கிறேன்! மன்றம் வைப்பதற்குரியவர்கள் பாராட்டுக்குரியவர்கள் எத்தனையோ பேர்களை நீங்கள் மறந்து விட்டீர்கள்! ஒரு ஊரிலேதான் திருவள்ளுவர் மன்றம் வைத்து, நன்றாகப் பணியாற்றினால். ஊருக்கொரு திருவள்ளுவர் மன்றம் நம்மால் வைக்கமுடிந்ததா! வைக்கிறோமா! ஆனால்; இது என்றால் உடனே வைத்து, 10 பேர் கூட்டம் சேரவேண்டியது, தட்டி வைக்க வேண்டியது, பெரிய வானளாவிய வேட்டுகள் வைக்க வேண்டியது, பிறகு மோதல் எல்லாம் வருகிறது, எதற்கு இது? நம்முடைய எண்ணங்கள்,

நம்முடைய ஆற்றல்கள், நம் இளைஞர்களின் அந்த அற்புதமான இளமைக் காலம் எப்படி வீணாகின்றன என்பதைப் பாருங்கள்.

அது மட்டுமன்று, தொலைக்காட்சி வேறு வந்துவிட்டது, சின்னத் திரை வேறு வந்துவிட்டது. அதில் மெகா தொடர்கள் வேறு. தொடர்களில் மெகா, பெருந்தொடர் இல்லை, மெகாத்தொடர். அதிலே நம்ம தாய் மார்கள் (இங்கே எப்படி என்று தெரியாது) அடேயப்பா 6.30 மணிக்கு தமிழ் நெறிக்கழகத்தின் சார்பில் ஒரு கூட்டம் இருக்கிறது போயிட்டு வரட்டுமா! ஏங்க 7.30 மணிக்கு இந்தத் தொடர் பார்க்க வேண்டுமே! இல்லையென்றால் சாப்பிட முடியாது! ஏனென்றால் 7.30 மணிக்கு அந்தத் தொடரைத் தொடர்ச்சியாக பார்க்கவில்லையென்றால் சாப்பாடு இறங்காது. நாட்டு நிலைமை எப்படி ஆகிவிட்டது பாருங்கள்! இலக்கியம் படிக்கிறது போச்சு! புத்தகம் படிக்கிறது போச்சு! நல்ல பாட்டுக் கேட்கிறது போச்சு! நல்ல வசனம் கேட்பது போச்சு! எல்லாம் குட்டிச் சுவராகிப் போய், இப்போது எல்லாம் மெகாவில் இருக்கிறது. கிட்டத்தட்ட தமிழ்நாடே மெகாவில்தான் இருக்கிறது. அதற்கு ஒரு தொலைக்காட்சியா! 7,8 தொலைக்காட்சிகள், அதிலே மதுரையில் என்ன பண்ணுகிறான், 4,5 பேரை உள்ளூர்த் தொலைக்காட்சியில் போட்டு அதை வேறு பார்க்கிறான். ஆக எந்த அலைவரிசையை மாற்றினாலும் ஒரு படம் ஓடிக் கொண்டே யிருக்கும். நம்மளும் மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டேயிருக்கிறோம் ... விடிய - விடிய - வேற வேலையே இவனுக்குக் கிடையாது! ஏன் வாழ்க்கையை வீணாக்குகிறீர்கள்! நான் என்ன சொல்லு கிறேன் அது தேவை. ஒரு பொழுதுபோக்கு. அவ்வளவுதான். ஆனால், வேலைக்குப் போகிறவன் வேலைக்குப் போக வேண்டும். நான் கேட்கிறேன் உங்க நாட்டில் மட்டு மல்ல, எல்லா நாடுகளிலும் உரிய நேரத்தில் அலுவலகத்திற்குப் போகி றீர்களா? இல்லையா? உரிய நேரத்தில் கடைக்குப் போகிறீர்கள் இல்லையா! ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் அப்போதைக்கப் போது அலுவலகத்தில் வேலை நிறுத்தம் என்று அறிவிக்கிறான். நம்ம பொதுமக்கள் என்ன கேட்கிறான். எதுக்குடா வேலை நிறுத்தம் செய்கிறீர்கள்! “எங்களுக்கு அந்தக் கோரிக்கை வேண்டும்; சம்பளம் கூட வேண்டும்” என்று அதற்கு வேலை நிறுத்தம் என்று வைக்கிறீர்கள்! கோரிக்கை என்று வையுங்கள்! வேலை நிறுத்தம் செய்தால்தான் அரசாங்கம் தருமாம்! அதற்கு இவன் கேட்கிறான் (பொது மக்களில்) ஆமாம்! நீங்க ஏற்கெனவே நல்ல காலத்திலே வேலை செய்து கிழிச்சுப்புட்டீங்க! இதிலே வேலை நிறுத்தம் வேறு. நீங்கள் வேலை செய்தால்தானே நிறுத்துவதற்கு! பொதுமக்களுக்கு எவ்வளவு ஆதங்கம் இருக்கிறது என்பது தெரியும். ஏண்டா (மேசைக்கு மேசை) மிசைக்கு மிசை காசு வைக்காமல் என்றைக்காவது வேலை பார்த்திருக்கி றீர்களா - நீங்கள்! ஒரு பணியாளர் ஓர் ஏவலர் ஒரு முத்திரை போட்டுக் கொடுப்பதற்கு ரூ.10/- வாங்காமல் முத்திரை போடுவார்களா? அது என்னடா வேலை நிறுத்தம் - உங்களுக்கு ! இந்தப் போராட்டம் தோற்ற தற்கு அது ஒரு காரணம் ! மறந்துவிடக்கூடாது. எதிர் விளைவுகள் வரும்! action, reaction வரத்தான் செய்யும். அது தமிழ்நாட்டில் கூடிப்போய் விட்டது. நான் உள்ளபடியே சீனாவுக்குப் போன போது வியப் படைந்தேன்

130 கோடி மக்கள். ஆனால், வேலை நிறுத்தம் என்பது முற்றிலும் அறவே நிறுத்தப்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தமும் இல்லை, தீவிரவாதமும் இல்லை. அமெரிக்காவில் இருக்கிற தீவிரவாதம் அங்கு இல்லை. நாடு எங்கேயோ போய்விட்டது. அடேயப்பா! நான் பார்த்ததும் வியப்படைந்து விட்டேன். நம்ம ஆளுங்க என்ன சொல்வார்கள்? நான் இங்கேயிருந்து போய் மலேசியா அப்படி இருக்கிறது, சிங்கப்பூர் அப்படி இருக்கிறது என்று நம்ம ஊரில் சொன்னால், அண்ணே! அதெல்லாம் முடியுமா நம்மநாட்டில்! 2½ கோடி பேர் மலேசியாவில்; அது சின்ன நாடு! முடியும்! சிங்கப்பூர் கொஞ்சம் தான்! முடியும்! அப்படின்னு சொல்லிக் கிட்டிருந் தார்கள்; நானும் சரிதான்னு சொல்லிவிட்டு - சொல்லிவிட்டு - அவன் சொல்வதில் நியாயம் இருக்கும் என்று நினைத்துக் கொண்டேயிருந்தேன். ஏனென்றால் இந்தியாவில் 103 கோடி மக்கள். சீனாவுக்குப் போய்ப்பார்த்து விட்டு வந்தபிறகு தான்; இவன் ரொம்ப நாளாக, என்னையே ஏமாற்றியிருக் கிறான். அவன் 130 கோடி மக்களை வைத்துக்கொண்டு என்ன முன்னேற்றம் தெரியுமா! அவன் சொல்கிறான் "We will over take America by inviting the investors to our country to establish factories and other things" என்றான். நாங்கள் அமெரிக்காவை முந்துவோம் என்று சொல்கிறான். சீனாவின் பிரதமர் என்ன சொல்கிறார்! நாம் சிலராவது முதலில் பணக்காரர்களா வோம்; பிறகு எல்லோரையும் பணக்காரர்களாக்குவோம். அதெல்லாம் பார்த்தால் .. பாடம் என்பது அ னா, ஆ வன்னாவைப் படிக்கிறது மட்டும் தானா பாடம். உலகம் ஒரு சிறந்த பாடப்புத்தகம். அதில் எத்தனை பாடங்கள். அதை நான் கற்றுக் கொடுக்கவில்லை என்றால் நான் என்ன மனிதன்! என் பார்வை! என்ன பார்வை! எத்தனையோ பேர் கல்வி அறிவு இல்லாதவர்கள் அற்புதமாக வாழ்ந்து காட்டவில்லையா! தமிழ்க்குடிமகன் பி.எஸ்சி. கணிதம் படித்தவன். முதுகலை என்ற எம்.ஏ. படித்தவன், பி.எச்.டி. என்று சொல்லப்படுகிற முனைவர் பட்டம் பெற்றவன், 23 ஆண்டுகள் கல்வித் துறையில் பணியாற்றியவன்; சட்டப்பேரவைத் தலைவராக இருந்தவன், அமைச்சராக இருந்தவன். ஆனால், என்னை இவ்வளவு ஆர்வத்தோடு அக்கறையோடு படிக்க வைத்த என் தாய் கையெழுத்துப் போடத் தெரியாதவர். மறந்துவிடக்கூடாது. அவருக்கு ஆர்வம் இருந்த தால்தானே படிக்க முடியும். அப்புறம் நான் பிடித்துக் கொள்வேன். கொஞ்சம் தூக்கிவிட்டால் பிடித்துக் கொள்வேன். முதலில் எனக்கு 5 ஆம் வகுப்பு வரை விவரம் தெரியாது. என் அம்மாதானே எனக்குச் சொல்ல வேண்டும். எனவே முடியும், நாம் தன்னம்பிக்கையை இழக்கவே கூடாது.

அது மட்டுமன்று ஒருவனுக்கு மிக முக்கியம் தன்னம்பிக்கை. அதனால் தான் மூட நம்பிக்கையிலிருந்து நீங்க வேண்டும்.

அடுத்தது, இந்தப் பரிசுச்சீட்டு மோகம். இங்கேயும் இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மாதிரி மோசம் எங்கேயும் இல்லை. ஒரு காலத்தில் பஞ்சாப்பில் திடீரென்று பரிசுச்சீட்டுக் குலுக்கலை நிறுத்திவிட்டான். அப்புறம் நாங்கள் எல்லாம் கேட்டோம் எதுக்குடா பஞ்சாப்பில் குலுக்கல் சீட்டினை நிறுத்தினார்கள் என்றால் தமிழ்நாட்டில் சீட்டு சரியாக விற்க வில்லையாம்; அவன் பஞ்சாப்பில் இருக்கிறான். தமிழ்நாட்டில் ஏண்டா

சீட்டு விற்கவில்லையென்றால் அப்போது முதலமைச்சராக எம்.ஜி.ஆர் இருந்த காலத்தில் ரூ.1 சீட்டுக்கு பதிலாக ரூ.1.10 என்று போட்டிருந்தார். 0.10 காசு வரி போட்டிருந்தார். எனவே, பஞ்சாப் சீட்டு விற்கவில்லை, அதனால் குலுக்கலைத் தள்ளி வைக்கிறோம் என்கிறார்கள். நான் கூட அடிக்கடி நினைப்பது உண்டு, மதுரையிலே அடித்தால், மானா மதுரையிலே அண்டங் கட்டுகிறது எப்படி என்று; தமிழ்நாட்டிலே வரி போட்டதில் பஞ்சாப்பில் சீட்டுக் குலுக்கலை நிறுத்துகிறான். அப்போ இளிச்சவாயன் பூரா எந்த ஊரில் இருக்கிறான்? இங்கேதான். பேராசைக்காரன் பூரா எங்கே இருக்கிறான். இங்கேதான். மணிப்பூர் லாட்டரிக்காரன் பேர் வைக்கிறான் "தமிழ் லட்சுமி" தமிழ் என்று சொன்னவுடனே தமிழ்ப்பற்றோடு வாங்கி விடுவார்கள். நம்மளை எவ்வளவு இளிச்சவாயன்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். விளையாட்டுக்குச் சொல்ல வில்லை. இந்தியாவில் வெளியாகிற ஒட்டு மொத்தப் பரிசுச்சீட்டுகளில் 65 விழுக்காடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் மட்டுமே விற்பனையாகின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு கேவலம் கிடையாது. அது போக நம்ம வியாபாரிகள் அதிலே சுரண்டல் லாட்டரி; அதை நீங்கள் பார்த்திருப் பீர்கள்; சுரண்டினால் பரிசு தெரியும். உடனே பணத்தைக் கொடுத்து விடுவான். நீங்கள் 4 இடத்திலே சுரண்டி 40 ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு வருவீர்கள்! அப்புறம் 7 இடத்தில் சுரண்டி 200 ரூபாயை விட்டு விடுவீர்கள். உங்களைச் சுரண்டுவதற்காகத் தானே அவன் வைத்திருக் கிறான். நீங்கள் சுரண்டி அவன் லாபம் சம்பாதிப்பதற்காகவே வைத்திருக் கிறான். சூது அல்லவா இது!

நேர்வழியில் உங்களால் சம்பாதிக்க முடியவில்லை என்றால் நேர்வழியில் வாழ முடியவில்லை என்றால், எதற்கு இந்தக் குறுக்குவழி, ஏன் இந்தத் தமிழர்களுக்கு மட்டும் இப்படிப்பட்ட இழிவு, 65 விழுக்காடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கின்றன. பிற மாநிலங்களில் கொஞ்சம் கொஞ்ச மாக விற்கின்றன. அசாம் மாநிலச் சீட்டு இங்குதான் விற்கிறது, மணிப்பூர் மாநிலச் சீட்டு இங்குதான் விற்கிறது. ஏன் அங்கேயே விற்று விட்டுப் போகட்டும்! கடைசியில் தமிழ்நாடு பரிசுச் சீட்டு குறைவாகத்தான் விற்கிறது என்கிறார்கள். நமக்கு எப்போது தெளியும், நமக்கு அயல்மோகம் எப்போதுமே இருக்கும். இப்போது தமிழக அரசு பரிசுச் சீட்டுகளை ஒழித்து விட்டது.

நம்முடைய இயக்கத்தின் தலைவர்களும், அவரவர்கள் எடுத்த தன்னல முடிவுகள் அல்லது தவறான முடிவுகள் நம் இனத்தை வீழ்த்தின. நான் சொல்வது அரசியல் இயக்கங்களை மட்டுமல்ல; தனித்தமிழ் இயக்கம், மற்ற இயக்கங்கள் எல்லாம். தவறான முடிவுகள் சில நேரங்களில் இயக்கங்களைச் சிதைத்துவிட்டன. இல்லாவிட்டால் இன்னும் கூட நாங்கள் தனித் தமிழ் இயக்கத்தில் வளர்ந்திருப் போம் என்று கருதுகிறேன். நான் இப்போது பெயரையெல்லாம் சொல்லி வருத்தப்படவில்லை. ஆனால் எனக்கு நீண்டகாலமாக வருத்தமுண்டு.

எனவே, அப்படிப்பட்ட நிலையில், இந்தத் தீங்குகளிலிருந்து இன்றைக்காவது நாம் மீள வேண்டும். மீண்ட பிறகு ஒரு தெளிவு பெற

வேண்டும். தெளிவு பெற்று வாழவேண்டும். மனைவி மக்களோடு வாழ வேண்டுமா அது மகிழ்ச்சி. அதுதான் இல்லறம். நான் இளமைக்காலத்தி லிருக்கும்போது மனைவியோடு வாழ்கிறேன். எனக்கு 2 பிள்ளைகள் பிறந்ததும் என் பிள்ளைகளுக்காக வாழ்கிறேன். நானே இப்போது தாத்தா வாக இருக்கும் போது என் பேரப்பிள்ளைகளுக்காகவும் வாழ்கிறேன். அது எனக்கு மகிழ்ச்சி, ஏனென்றால், பேரப்பிள்ளைகள், மக்கள் என்பதெல்லாம் ஒரு செல்வம். எவனோ ஒரு புறநானூற்று ஆசிரியன் சொன்னானே!

**குறுகுறு நடந்து,**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம் வாழும்நாளே !**

அப்படி மயக்க வேண்டும், நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது உங்கள் தட்டில் அந்தப் பேரன் கையைக் கொண்டு வந்து உங்கள் கூடக் கலக்கவேண்டும். அதுதான் இன்பம். அவன் கையில் வைத்திருக்கும் தோசையைப் பிய்த்து உங்கள் முகத்தில் எறிய வேண்டும். அது இன்பம். எனவே இதற்கு எமக்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. அதற்கு நிறையச் செலவிடுங்கள். உங்க பேரனை முன்னேற்றுங்கள், அதற்கு நிறைய படிக்க வையுங்கள், நான் படிக்காமல் இருக்கலாம். என் பின்னால் வருகிற தலை முறை படிக்க வேண்டாமா? எங்கள் அப்பா என்ன முனைவர் பட்டமா பெற்றார். இல்லையே! நான் என்ன செய்கிறேன். என் பிள்ளைகளைப் பெரிய அளவில் படிக்கவைத்துக் கொண்டு வரப்பார்க்கிறேன். அது தான் தலைமுறை. அப்போதுதான் சமுதாயம் வளரும், அப்போதுதான் தமிழ்ச் சமுதாயம் வளரும். இன்னும் சொல்லப்போனால் என் மகன் இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழிலேயே எழுதியவன். மறந்துவிடக்கூடாது. ஐ.ஏ.எஸ். தேர்வைத் தமிழிலேயே எழுதி வெற்றி பெற்று இன்றைக்குப் படைத்துறையில் இணைப் பொது மேலாளராக இருக்கிறான். எனவே தமிழில் எழுத வைக்க வேண்டும் என்று நினைக்கிறவன் தமிழ்க்குடிமகன். அதைத் தாங்கிப் பிடித்து வெற்றி பெறுகிறவன் என் மகன். அதேபோல என்னுடைய மாணவன் பாலகிருட்டிணன் என்பவன் இந்திய ஆட்சிப் பணித் தேர்வைத் தமிழில் எழுதி, இந்தியாவிலேயே 99 ஆவதாக வெற்றிபெற்று இன்றைக்கு ஒரிசாவில் பண்பாட்டு(ம) சுற்றுலாத்துறைச் செயலாளராக இருக்கிறான். எனவே, நானும் சில பேரை உருவாக்க வேண்டும். எனக்குப் பின்னால் வருகிறவர்கள் இன்னொருத்தரை உருவாக்க வேண்டும். நான் சொல்கிற பாலகிருட்டிணனுடைய தாய் மொழி தெலுங்கு. ஆனால், தமிழில் எழுதி வெற்றி பெற்றிருக்கிறான். ஓர் ஓட்டுநருடைய பையன். ஆனால் இன்றைக்குச் செயலாளர். அவனிடம் நான் இனம் பார்க்க வில்லை, சாதி பார்க்கவில்லை, மொழி பார்க்கவில்லை, இவன் ஏழைப் பையன், இவன் நன்றாகப் படிக்கிறான். அது மட்டும்தான் தமிழ்க்குடிமக னாகிய முதல்வருக்குத் தேவை; கல்லூரி முதல்வருக்கு அதுதான் தேவை! என் மாணவர்களுக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்பதை நான் பார்த்துக் கை தூக்கிவிட வேண்டும். அதற்குத் தான் நான் தேவை.

ஏனென்று கேட்டால் அது என் கடமை. நான் ஓர் ஏணியைப் போன்றவன்; பரணைப் பிடியுங்கள்; மேலே ஏறுங்கள்; நான் தோணியைப் போன்றவன்; இக்கரையி லிருந்து நான் உங்களை அக்கரைக்குக் கொண்டு வந்து விடுகிறேன். நீங்கள் அக்கரைக்குப் போய்விடுங்கள். நான் திரும்பி இந்தக் கரைக்கு வந்து விடுவேன். எனவே, எங்களுடைய பணி எவ்வளவு இருந்தாலும் எங்களைப் பயன்படுத்திக் கொண்டு நீங்கள் மேலே ஏற வேண்டும். எங்களுடைய காலம் முடிந்து போனதாக இருக்கலாம். ஆனால், உங்களது காலம் இனிமேல்தான் இருக்கிறது. எனவே, அடுத்தடுத்து வருகிற தலைமுறை என்றால், 21 தலைமுறையாக ஆண்ட இராசராச சோழனுடைய ஆட்சியும் ஒருநாள் வீழ்ந்தது. காரணம் கடைசியில் வந்த கையாலாகாத அரசனால் வீழ்ந்தது.1310 வரைக்கும் கொடிகட்டிப் பறந்த பாண்டியர் அரசு 2 அண்ணன் தம்பிக்குள் ஏற்பட்ட சண்டையால் வீழ்ந்தது. எனவே, கையாலாகாததால் வீழ்ச்சியடைகிறோம், அண்ணன் தம்பி சண்டைகளால் வீழ்ச்சி அடைகிறோம். நான் என் திறமையை வளர்க்காமல் பொறாமையை வளர்த்துக் கொண்டதால் வீழ்ச்சி அடைகிறேன். “அழுக்காறு உடையார்க்கு அது சாலும்” என்றான். எனவே, நம்முடைய இலக்கியங்கள். செல்வங்கள். அவை வாரி வழங்குகின்ற இந்தக் கருத்துகளுக்குப் பஞ்சமே கிடையாது. தட்டுத்தடங்கலே கிடையாது. எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். அவ்வளவு இருக்கின்றன. “ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்”. ஒரு வரியைப்போல ஒரு வரியில் டக் டக் என்று அடிச்சது தானே நமது இலக்கியம். “அறம் செய்ய விரும்பு; ஆறுவது சினம்” என்று. இப்போதெல்லாம் நாம் அதைப் படிக்கிறதில்லை. “Baba Baba Black Sheep”, - “Rain Rain Go away” ஏற்கெனவே மழை வாராமல் இங்கே வறட்சியில் இருக்கிறது. இவன் பாட்டுப் பாடுகிறான்; மழை இல்லாத நேரத்தில். மழையே மழையே போ! என்று ஏன்! ஏண்டா இங்கேயே மழை இல்லாமல் பஞ்சத்தில் கிடக்கிறார்கள். Rain Rain Go away என்று வந்த மழையையே போகச் சொல்லிப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறான். தமிழில் எத்தனை பாடல்கள் இல்லை! எத்தனை அழ. வள்ளியப்பா, எத்தனை செல்ல கணபதிகள் எத்தனை பள்ளிப் பறவைகள் எழுதிய பெருஞ்சித்திரனாருடைய பாடல்கள்? அதெல்லாம் படித்து நம்முடைய பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால்தானே அவன் வருங்காலத்தில் உருவாவான். எனவே, நாம் தடம் மாறக் கூடாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தடுமாறக் கூடாது. அதே நேரத்தில் தன்னம்பிக்கையோடு வாழவேண்டும். மூட நம்பிக்கைகள் அகன்று வாழவேண்டும். அதற்காக இறைப்பற்றுக்கு நான் மறுப்பாளனல்லன். எனக்கு மறுப்பிருக்கலாம். ஆனால் நான் உங்களை மறுப்பாளனாக்கச் சொல்ல முடியாது. உங்களுக்குப் பற்று இருக்கிறதா! செலுத்துங்கள், ஆனால் ஒரு நெறியுடன். வள்ளலார் சொல்லவில்லையா! “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்! எதற்கு அவர் வாட வேண்டும்! அவர்தான் தர்ம சாலையில் வசதியாக இருக்கிறாரே! நன்றாகத்தானே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்! எதற்கு வாடறாரு! அவருடைய உள்ளம் அது! எனவே, நீங்களும் - ஒரு வாடிய பயிர் என்றால் பயிர் மட்டுமா! -

உயிர்! அது வாடுகிறபோது ஒரு கவளம் சோறு கொடுப்பதற்கு நமக்கு வக்கில்லையென்றால், நாம் எப்படி மனிதர்கள்! அவனுக்கு ஒரு தேநீரை வாங்கிக்கொடுத்து ஒரு தெம்பை உண்டாக்கி, தட்டுத் தடுமாறிப் போகிறவனை ஒரு நடைபிணமாக இருந்தவனை நடைபோட வைத்தால் அது என்ன தவறு! அந்த அளவுக்கா உங்களிடத்தில் வளம் இல்லாமல் போய்விட்டது. முடியும். நாம் நினைத்தால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கமுடியும்". தினையளவாவது நல்லது செய்திருப் போம். அதைப் பனையளவாகக் கொள்பவனும் இருக்கிறான். பனையளவு செய்திருப் போம். அதை மறந்து விட்ட நன்றிகெட்ட நாய்களும் இந்த நாட்டில் (இங்கே அல்ல அந்த நாட்டில்) நிறைய உண்டு. நிறைய நாய்களைப் பட்டியலிட்டு வைத்திருக்கிறேன். கேட்டால் இல்லையே! அவர் எனக்குத் தெரியவே தெரியாது என்பான். நான் தான் அரிதில் முயன்று வேலை வாங்கிக் கொடுத்த வன். ஏனென்றால், அவன் என்ன நினைக்கிறான்; ஊரிலே இவர்தான் வேலை வாங்கிக் கொடுத்தார் என்றால் இவனுடைய தகுதிக்குக் குறைவாம். இவருடைய திறமையினாலே வாங்கிட்டோம் என்று சொன்னால்தான் இவருக்குத் தகுதியாம். அண்ணன் சொல்லித்தான் வாங்கிக் கொடுத்தார் என்றால் இழுக்காம். இப்படி இருக்கிறவனுக்கு எப்படிங்க நம்பி வேலை வாங்கிக் கொடுக்க முடியும்! 10 பேர் இப்படிச் சொன்னால், நான் எப்படி 11 ஆவது ஆளுக்கு வேலை வாங்கித் தருவேன். கிடங்கடா! உங்கள் திறமை யிலேயே போங்க! என்றுதான் சொல்லுவேன். ஏனென்றால் வாய்ப்பு இருந்தாலும் செய்யமாட்டேன். என்னையும் கெடுக்கிறார். நான் செய்கிற உதவி அதுதான். வள்ளுவர்

> **"உதவி வரைத்தன்று உதவி; உதவி**
> **செயப்பட்டார் சால்பின் வரைத்து"**

என்கிறார். இதுதாண்டா உதவி என்று இந்த உதவியை வாங்கினானே அவன் சொல்ல வேண்டும். இது சிறிது, இது பெரிது, ஐயோ! என்னை வாழவைத்தவர் என்று சொல்ல வேண்டும். நான் எங்கேயோ ஓரிடத்தில் சென்னையில் அல்லது மதுரையில் எங்கேயாவது வண்டியிலிருந்து இறங்கும்போது, திடீரென்று ஒருவன் ஓடி வருவான். ஐயா! வணக்கம்! என்பான். யாருப்பா தெரியலியே! என்பேன். நான் தான் ஐயா உங்களிடத்தில் படித்தேன் ஐயா, அப்புறம் எப்படிப்பா இருக்கிறாய் சொல்லப்பா என்றால் நீங்க தான் ஐயா எனக்கு வேலை வாங்கிக் கொடுத்தீர்கள் என்று அவன் சொல்லுவான். நல்லவேளையாக எனக்கு மறந்து போச்சு! அப்போது! அது தான் மனிதாபிமானம். அதற்காக, என் வண்டியிலே ஏறு! அப்படின்னு கூப்பிட்டுக் கொண்டு வந்து, என்ன சம்பளம் வாங்குகிறாய். அதிலே ஒரு பகுதியை எனக்கு அனுப்பிவை என்றா நான் கேட்கப் போகிறேன். அவனாவது விரும்பிச் சொல்கிறான். எனக்கு மகிழ்ச்சி. எத்தனையோ பேருக்கு வாங்கிக் கொடுக்கிறோம். இவனும் ஒருவன்! நன்றியுடையவன். இன்னும் அவர்கள் நிறைய இருக்கிறார்கள். நன்றி கெடாமல் இந்த மண்ணில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்வேன், அதுதானே மகிழ்ச்சி மனிதனுக்கு. எனவே, எண்ணற்ற பண்புகளுக்கு இடையில் தமிழன் எப்படிக் கெட்டான் என்பது நமக்குத் தெரிந்திருக்

கிறது. நாம் கெடாமல் இருப்பதற்கு வழி இருக்கிறது. எனவே இவற்றை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, நீங்கள் செயற்பட வேண்டும், இந்தத் தமிழ் நெறிக் கழகத்தை நிறுவி எத்தனையோ பணிகளைச் செய்த திருமால னாருக்கு நம்முடைய வணக்கத்தைத் தெரிவித்து, இன்று தமிழ்நெறிக் கழகத்தை இயக்கிக் கொண்டிருக்கிற நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, வருகை தந்திருக்கிற உங்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

*நன்றி! வணக்கம்!*



# 6

# ஆசிரியப் பணி

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

## புக்கிட் மெர்தாஜம் 2.12.2002

இன்னும் 100 ஆண்டுகள் வாழ வேண்டும் நீங்கள்! குறைச்சுச் சொன்னால் நீங்கள் வருத்தப்படுவீர்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். இன்னும் 100 ஆண்டுகள் எனக்குப் பின்னாலும் நீங்கள் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால், 100 ஆண்டுகள் கழித்து இந்த அரங்கம் இருக்கும். மேடையிலே பேசுகின்ற தமிழ்க்குடிமகனும் இருக்கமாட்டான்; முன்னாலே இருக்கின்ற நீங்களும் இருக்கமாட்டீர்கள். வருத்தப்படக் கூடாது 100 ஆண்டுகளுக்குப் பின்னாலே என்று சொல்கிறேன். இப்போதே நீங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம். 100 ஆண்டுகள் கழித்து நாம இருக்கமாட்டோம். அப்போது வேறு மாணவர்கள், வேறு முதல்வர், வேறு அமைப்பாளர்கள், வேறு ஆசிரியர்கள், வேறு பேச்சாளர். அதைத்தான் சொன்னான் உமர்கய்யாம்

**இருந்து சென்ற முன்னோரின்**
**இடத்திலெல்லாம் நாமின்று**
**விருந்து செய்து வாழ்கின்றோம்;**
**விகடம் சொல்லி மகிழ்கின்றோம்**
**இருந்த இடம்விட்டு யாமுமினி**
**எழுந்து சென்றால் இங்கிருந்து**
**விருந்து செய்வார் யார்யாரோ?**
**விகடம் சொல்வார் யார்யாரோ?**

வாழ்க்கையைத் தெளிவாகக் காட்டிவிட்டான். இதற்கு மேலே உங்களுக்கு என்ன சொல்லமுடியும் - அதிலே.

அதுமட்டுமன்று; மாணவணர்களுக்கு நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டியவை நிறைய என்றால், நீங்கள் கோடிட்டுக் காட்டித்தான் போக முடியும். அதனாலே, நான் பாடம் நடத்துவது சிலப்பதிகாரம். அதற்காக நான் சேக்ஸ்பியரிடமிருந்து ஒரு பாடத்தையா எடுத்து நடத்திக் கொண்டிருக்க முடியும். அது எப்படி முடியும்? அது என் பாடமன்று! ஆனால், சேக்ஸ்பியரிலிருந்து மேற்கோள் காட்ட முடியும்; மறந்துவிடக் கூடாது. மேற்கோள் காட்ட வேண்டும். ஏன் தெரியுமா? ஜுலியஸ் சீசரில் அருமையாகச் சொல்வான். கோழை செத்துச் செத்துப் பிறக்கிறான். ஆனால் வீரன் ஒருமுறைதான் சாகிறான். Cowards die many times before their deaths and a valiant will never taste of death but ... once என்று குறிப்பிடுகிறான்.

இந்த வரிகள் தக்கநேரத்தில் எங்கேயாவது வருகிறபோது, இடையில் அது மின்னினால்தான், அந்த மாணவர்களுக்கு விருந்து! எனவே, அவனுக்குக் கவிதை தேவை! நாங்கள் எத்தனையோ இலக்கியங் களைப் படிக்கிறோம். பாரதிதாசன் கவிதைகளைப் படிக்கிறோம் என்று சொன்னால். பாரதிதாசனுடைய வீரம்மிக்க வரிகள் ஒரு பக்கம், அதே நேரத்தில் மென்மைமிக்க இலக்கியங்கள் ஒரு பக்கம். இங்கே பெண்கள் இருப்பதனால் சொல்கிறேன்; ஆண்கள் இருப்பதனால் சொல்கிறேன். குடும்ப விளக்கு என்ற நூல் அற்புதமான படைப்பிடிப்பு. அவன் சொல்கிறான். இங்கே எப்படி என்று எனக்குத் தெரியாது. எங்கள் ஊரில் பெண்கள் தான் முதலில் எழுந்திருப்பார்கள். பிறகுதான் ஆண்கள் எழுந்திருப்பார்கள். இங்கே நீங்கள் காலை 8.00 மணிக்கு வந்து விடுகிறீர்கள், ஆனால், அங்கே எங்களுக்கு அலுவலகமே 10.00 மணிக்குத்தான். நாங்கள் எல்லோரும் வழக்கமாக 10.30 மணிக்குத்தான் வருவோம். வந்தவுடனேயே மேசையை எல்லாம் துடைத்து வைத்துவிட்டு, போய் ஒரு காப்பி குடித்துவிட்டு 11.30 க்குத் தான் இருக்கைக்கு வருவோம். பிறகு ½ மணிநேரம் வேலை பார்த்துவிட்டு, சாப்பிடப் போய்விடுவோம். அண்மையில் அலுவலர்கள், (அலுவலர்கள் அரசு ஊழியர்கள்) வேலை நிறுத்தம் எல்லாம் நடந்தது பாருங்கள்! ஒருத்தன் கேட்டான். என்னங்க பண்றீங்க; வேலை நிறுத்தம். நீங்கள் என்றைக்குடா வேலை பார்த்தீர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு! எவ்வளவு எரிச்சலோடு கேட்கிறான் பாருங்கள்! இப்படிக் கேட்கிற மனநிலையை நாம் எங்கோ ஒரு நாட்டில் உருவாக்கியிருக்கிறோம். ஆனால் நான் பார்க்கிற எல்லா நாடுகளிலும் அந்த நிலை இல்லை. நான் உள்ளபடியே சொல்கிறேன்; இங்கும் சரி; அங்கும் சரி! அதை நான் பார்க்கிறேன். நிறைவோடு சொல்கிறேன். நான் இங்கே சொல்வதற்காகச் சொல்லவில்லை. இந்தப் பெருமையை நிச்சயமாக எங்கள் ஊரில் போய்ச் சொல்லுவேன். ஆனால், சூழ்நிலை அங்கு அப்படி இருக்கிறது. எனவே, நான் அதையும் சொல்லித் தான் தீர வேண்டும்.

எனவே, அப்படிப்பட்ட நிலையில், பாவேந்தர் போன்றவர்கள் என்ன நினைக்கிறார்கள். ஒரு பெண்ணுக்கு என்ன சிறப்பு என்றால், அவள் காலையில் எழுந்திருக்கிறபோது அவள் மட்டும் எழுந்திருப்பதில்லை. அவளோடு அவளுடைய ஊக்கம், சுறுசுறுப்பு உள்ளம் இந்த இரண்டும் சேர்ந்து எழுகின்றன என்கிறார். அந்தக் காலை நேரத்தை என்ன அழகாக வர்ணிக்கிறார். அப்போது அவர் என்ன சொல்கிறார்.

**இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை;**
**இரவு போர்த்த இருள் நீங்கவில்லை**

ஆனால் விடியணும் "இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை; இரவு போர்த்த இருள் நீங்கவில்லை. ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல் நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது."

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

என்பதுதானே திருக்குறள்; அறிதொறும் அறியாமை கண்டற்றால் என்பது தானே திருக்குறள்".

நான் தேவநேயப் பாவாணருடைய நூலை 1957 லே வாங்கிப் படிக்கிறதுக்கு முன்னாலே, எது வடசொல், எது தமிழ்ச்சொல் என்று அறிய எனக்குத் தெரியாது. வாங்கிப் படித்தபிறகுதான், சம்பவம் என்பது, சங்கடம் என்பது சந்தேகம் என்பது, சஞ்சலம் என்பது இவை எல்லாம் வடமொழிச் சொற்கள் என்று கண்டு பிடித்தேன். பிறகு அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறேன். அந்த அறிவு எனக்கு எப்போது வருகிறது. இன்னொரு அறிஞருடைய நூலைப் பார்க்கும் போதுதான் வரும். அறிஞருடைய பேச்சைக் கேட்கும்போது தான் வரும். நான் அறிகிறபோது என்னுடைய அறியாமை கொஞ்சம் பகுதியாக நீங்கிவிடுகிறது.

**"கேள்வியால் அகலும் மடமைபோல்**
**நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது"**

என்ற ஓர் அழகான உவமையைச் சொல்லிவிட்டு, அப்போது சொன்னான். எப்படி அந்த விடியல் வருகிறதாம்! ஒரு தொட்டி நிறைய நீலமையைக் கலக்கி வைத்துக் கொள்ளுங்கள். அந்த நீலநிற மையை வெள்ளையான மையாக மாற்றவேண்டும். என்ன செய்ய வேண்டும். நல்ல வெள்ளையான சுண்ணாம்பைக் கலக்கி வைத்துக் கொண்டு, அந்தத் தொட்டியில் ஒரேயடியாக ஊற்றவேண்டாம்; கொஞ்சமாக ஊற்றினால் அந்தத் தொட்டி நீலத்தின் சுண்ணாம்பு கலந்த கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது. மெல்ல மெல்ல - தொட்டி நீலம் வெள்ளை ஆச்சு! இவ்வளவையும் சொல்லி விட்டு "தூக்கத்தோடு தூங்கியிருந்த ஊக்கமும் சுறுசுறுப்பு உள்ளமும் மங்கை எழுந்ததும் எழுந்தன இருகை வீசி" என்பார். இதுதான் குடும்ப விளக்கில் எடுத்தவுடனே வருகிற பகுதி! அங்கே ஒரு வர்ணனை; ஓர் உவமை! நாம் அறிவு பெறவேண்டும் என்ற முயற்சி! ஒரு பெண்ணின் சிறப்பு! அதுதான் குடும்பவிளக்கு (அப்படியே நேரே கடைசிக்கு வந்து விடுகிறேன். ஏனெனில் இடையிலே விளக்கிச் சொல்ல நேரமில்லை) அவனுக்கு அகவை 80 தலைவனுக்கு. நான் சொன்னது முதலில் இளம் காதலர்கள். இவளுக்கு இப்போது 78 இரண்டு பேருமே அகவை முதிர்ந்தவர்கள். இப்போது இவனைக் கேட்கிறோம்! என்னங்க! எப்படி இருக்கிறீர்கள்! வாழ்க்கை எல்லாம் எப்படி இருக்கிறது? என்று. நம்ம ஊர் என்றால் என்ன சொல்லுவான் என்னத்தை சொல்றது அப்படின்னு நம்ம ஆளுங்க சலித்து விடுவான். இப்போது, 40,50 லே சலித்துக் கொள்பவன் இருக்கிறான். உங்க வீட்டுக்குப் போகவில்லையா? வீட்டுக்குப் போய் என்ன செய்யப்போகிறோம்? அங்கே பிக்கல் புடுங்கல் தாங்கலே! சொல்கிறவன் இருக்கிறான். சிறைச் சாலைக்கு ஏன் திடீரென்று வந்துவிட்டீர்கள்! போராட்டத்தில் வந்துவிட்டீர்களா? இங்கேயாவது நிம்மதியாக இருக்க லாம் என்று தான் வந்தேன். அப்படீன்னா என்ன பொருள்? அந்த அம்மா கேட்டால் என்ன பண்ணும்! இங்கேயாவது நிம்மதியாக இருக்கலாம் என்று வந்தேன் என்றால் சிறைச்சாலை - நிம்மதி; வீடு - சிறை என்கிறான். மாற்றுகிறான். இந்த மாதிரி பேசுகிறவன் நிறைய பேர் இருக்கிறான். ஆனால் இவன் என்ன சொன்னான் தெரியுமா! இந்தத் தலைவன். "எது எனக்கு இன்பம்! அவள் இருக்கின்றாள் என்பது ஒன்றே!" இத்தனை அகவையிலும் அவள் என் மனைவியாக, என் துணைவியாக, என்

பக்கத்தில் இருக்கிறாளே! அதுவல்லவா எனக்கு வாழ்க்கை! எது எனக்கு இன்பம்! அவள் இருக்கின்றாள் என்பது ஒன்றே! என்றான். இவளைக் கேட்டார்கள்: என்னங்க! எப்படி இருக்கீங்க? அவள் சொன்னாள். நான் இளமைக் காலத் தில் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் ஓடி ஓடி உழைத்தேன். என் பிள்ளைகளைக் கையில் சுமந்து அலைந்தேன். எத்தனையோ பிள்ளைகளைப் பெற்றிருக்கிறேன், அந்தப் பிள்ளைகளை இந்தக் கையில்தான் சுமந்திருக் கிறேன். ஆனால், இன்றைக்கு நான் ஓடி ஓடி நடந்த கால்கள் ஓய்ந்துவிட்டன. என் பிள்ளைகளைத் தூக்கிச் சுமந்த கைகள் ஓய்ந்துவிட்டன. ஆனால், "என் மறவனை நெஞ்சில் தாங்கும் மனம் மட்டும் ஓயவில்லை". இன்னும் 80 அகவைக் கிழவன்தான் மனத்தில் இருக்கிறான். அது மனத்திலே இருக்கிறது; ஆனால் அது ஓயவில்லை. அது கனம் என்று சொல்ல வில்லையே! எனவே, இந்தக் கைகள் ஓய்ந்தபிறகு, கால்கள் ஓய்ந்த பிறகு, என் மறவனை நெஞ்சில் தாங்கும் மனம் மட்டும் ஓயவில்லை என்று சொன்னாள் பாருங்க! அதுதான் பாரதிதாசனுடைய பாடலிலேயே உச்சம்! அதனால்தான் அதற்குக் "குடும்ப விளக்கு" என்று பேர்.

சரி இப்படி மட்டுமே பாடுகிறாரா என்றால் இல்லை. நாம் மாணவர்களுக்கு நிறைய சொல்லிக் கொடுக்கிறோம்; அவர்கள் இங்கிருந்து உருவாகிப் போகும்போது, தமிழ் உணர்வு வேண்டும். தமிழ் படிக்கிறவர்களுக்குத் தமிழ் உணர்வு; மற்றவர்கள் வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு மொழியைச் சார்ந்தவர்கள் எல்லாம் இருக்கிறீர்கள்! நான் பொதுவாகத்தான் சொல்லுகிறேன். அவரவர்கள் மொழி உணர்வு வேண்டும். ஏன்! அதுதான் காலம் காலமாக நிற்கும்! எல்லார்க்கும், எல்லாத் தமிழாசிரியர்களுக்கும் தெரியும். தொல்காப்பியம் என்பது கி.மு.500 கிட்டத்தட்ட 2500 ஆண்டுகளுக்கு முன்னால் எழுத்திற்கும், சொல்லுக்கும் பொருள் எழுதினவன் மட்டுமல்லன், "பொருள் இலக்கணம்" எழுதினான். பாவாணர் சொல்கிறார். உலகத்தின் வேறு எந்த மொழியிலும், அகத் திணையியல், புறத்திணையியல் என்று எங்குமே கிடையாது. வாழ்க்கைக்கு இலக்கணம் எழுதினவன் ஒருத்தன் உண்டு என்றால், அது தமிழில்தான் எழுதியிருக்கிறான். எழுத்துக்கு எழுதியிருக்கிறோம், சொல்லுக்கு எழுதியிருக்கிறோம்! யாப்புக்கு எழுதியிருக்கிறோம், அணிக்கு எழுதியிருக் கிறோம். இது உலக இயல்பு. ஆனால், தமிழுக்கு இருக்கிற சிறப்பு "பொருள் இலக்கணம்" ஒன்றுதான் 2500 ஆண்டுகளுக்கு முன்னாலே!

சங்க இலக்கியம் இடையிலே வருகிறது. ஒரு குழந்தையினுடைய ஓர் அற்புதமான அந்த மெய் இன்பம். வள்ளுவன் சொன்னான். "மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்" என்று சொன்னான். அதை அழகாகப் புறநானூற்றுப் பாடலில் சொல்கிறானே!

> **"குறு குறு நடந்தும்**
> **இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
> **நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
> **மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
> **பயக்குறை இல்லைத் தாம் வாழும்நாளே"**

என்றான். அட மக்கள் இன்பம் தான் இன்பம். அது வந்து கையிலே இருக்கிற சோற்றை அள்ளி நம் முகத்தில் எறிய வேண்டும். அடுத்த ஆளு

ஏறிந்தால், விடுவோமா நாம! ஆனால், நம்ம பையன் எறியலாம், நம்ம பெண் எறியலாம், அது நமக்கு இன்பம். நாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அது நம்ம தட்டில் கையை வைத்து கலக்கணும், அந்தக் கை ஏற்கெனவே தெருவிலே அலைந்த கைதான். மணலிலெல்லாம் போன கை. ஆனாலும் அப்படி வருகிறபோது கூட, அது அளாவுகிறபோது அந்தக் கூழ், எப்படி? வள்ளுவன் சொல்லவில்லையா? "சிறுகை அளாவிய கூழ்" எவ்வளவு பெரிய இன்பம் அந்தச் சிறுகை அளாவிய கூழுக்குத்தான் மதிப்பு அப்புறம் பெரிய ஆளான பிறகு எவனும் கூழை அளாவி இருக்க மாட்டான், நாம விடமாட்டோம். எனவே, இது போன்ற இன்பங்களையும் அவன் சொல்லுகிறான். இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

அது மட்டுமன்று தமிழினுடைய பெருமை தொன்மையானது, மறந்து விடக்கூடாது. கிரேக்கமொழி; இலத்தீன் மொழி, சீன மொழி, இன்றைக்கு இசுரேலில் இருக்கக்கூடிய ஈப்ரு மொழி, தமிழ்நாட்டினுடைய தமிழ், சமற்கிருதம் இந்த ஆறும்தானே தொன்மையான மொழிகள்! உங்களுக்குத் தெரியும். இந்தத் தொன்மையான மொழிகளில் வாழும் மொழியாக, "முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையாய் விளங்குகிற மொழி தமிழ்தான்! பண்டைய இலக்கணத்தையும் என்னால் எடுத்துக்காட்ட முடியும்! இன்றைக்குத் தமிழ்நாட்டில் கணினித் துறையில் பெரிய அளவில் முன்னேறி - உங்களுக்குத் தெரியும். சிங்கப்பூரில் நடந்த இணைய மாநாடு, இங்கே நடந்த இணையமாநாடு, இதற்கெல்லாம் மூலத் தாயகம் தமிழ்நாடு! அதனுடைய விளைவு என்ன தெரியுமா! இன்றைக்குத் தமிழில் ஏராளமான மென்பொருள்கள் வந்ததன் விளைவு இரண்டு. ஒன்று - இந்தியாவிலேயே ஆங்கிலத்திற்கு அடுத்தபடி கணினியில் இடம் பெறுகிற - இணையத்தில் இடம் பெறுகிற மொழி தமிழ் மட்டும்தான். இந்தி கிடையாது. அது மட்டுமன்று, தமிழ்நாட்டில் நாங்கள் இணையத்தினுடைய விசைப்பலகை - கம்ப்யூட்டரின் விசைப்பலகை (கீ போர்டு). அதைத் தரப்படுத்திக் கொடுத்தபோது, 12 கோடிக்கு ஏற்றுமதியாகியிருந்த மென்பொருள், இன்றைக்கு 5,223 கோடிக்கு ஏற்றுமதியாயிருக்கிறது". அப்போது உலகம் எங்கும் இருக்கிறவர்களெல்லாம் அதை வாங்கி பயன்படுத்துகிறார்கள். இங்கே முத்து நெடுமாறன் அதைச் சிறப்பாகச் செய்தார். இந்த மண்ணில் தான் வந்தது. கோவிந்தசாமி சிங்கப்பூரில் செய்தார். அதையெல்லாம் பார்த்துத்தான் நாங்கள் சிறப்புச் செய்திருக்கிறோம். அதையெல்லாம் ஒழுங்குபடுத்தினது எங்களுடைய அதிகாரத்தோடு சரி! எனவே, இதையும் கற்க வேண்டும், அதையும் கற்க வேண்டும். இதற்கும் தமிழ் இடம் கொடுக்கும், அதற்கும் தமிழ் இடம் கொடுக்கும். மறந்து விடக்கூடாது. முடியாததல்ல. நான் கணித ஆசிரியன் கணிதத்தைத் தமிழில் நடத்த முடியுமா என்றால் நடத்த முடியும்! நடத்திக் காண்பித்திருக்கிறேன். எனவே, இடர் ஒன்றும் இல்லை. நான் நினைத்தால் முடியும். அவ்வளவு தான். அது முடியவில்லை என்றால் இவன் என்ன பண்ணுகிறது! இவனுக்கு முடியாததை அது தமிழுக்கு முடியாதது என்றான். முதலில் இந்தப் பழக் கத்தை விடவேண்டும். உங்களுக்கு முடியவில்லை என்றால் முடியவில்லை

என்று ஒதுங்கிப் போய்விட வேண்டும். முடிந்தவன் சொல்லிக் கொடுப் பான். தமிழ்நாட்டில் 67 அரசினர் கலைக் கல்லூரிகளிலும் பி.எசி. வேதியியல், இயற்பியல், உயிரியல், பயிரியல், விலங்கியல் எல்லாவற்றிலும் தமிழில் பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன - 67 அரசினர் கலைக் கல்லூரிகளிலும் தமிழில் பாடங்கள் இருக்கின்றன. நீண்டகாலமாக. எனவே, முடியாது என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. பொறியியலில் பாடம் எல்லாம் சொல்லிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் முடியும். இவனால் முடியவில்லை என்றால் தமிழால் முடியாது என்கிறான். இன்னும் கொஞ்ச பேர் தூக்கலாகக் கேட்டான். தமிழில் என்னங்க இருக்கிறது. முதலில் என்ன செய்ய வேண்டும். கேட்கிறானா அவன் தலையில் என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டும். பிறகு தமிழில் என்ன இருக்கிறது என்று சொல்லு வோம். தமிழில் என்ன இருக்கிறது என்று சொல்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது. எத்தனை இலக்கியங்கள் தெரியுமா உங்களுக்கு ! அந்த இலக்கிய வரலாறு தொல்காப்பியத்திலிருந்து தொடங்கி இக்கால இலக்கியம் வரைக்கும் பேசினால், பேசிக்கொண்டே போகலாம். ஹைகூ கவிதை வரைக்கும் பேசலாம். புதுக்கவிதையே இன்றைக்குப் புதியதாக வந்து எத்தனை புத்தகம் வந்துவிட்டது? மரபுக் கவிதையை விட்டு விடுங்கள்! புதுக்கவிதையே எத்தனை வந்துவிட்டது? ஒருத்தன் எழுது கிறான். அருமையாக எழுதுகிறான். நம்ம ஆளுங்கதான்! என்ன எழுது கிறான் நானும் ஒரு பாபர் மசூதிதான் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். பாபர் மசூதியை உத்திரபிரதேசத்தில் உள்ள அயோத்தியில் ஏற்கெனவே இடித்து விட்டார்கள். அதை இன்னும் அங்கு கட்டவில்லை. கட்ட முடியவில்லை பல பிரச்சனைகள் இருக்கின்றன (நான் அதற்குள் போக விரும்பவில்லை). கவிதை எழுதுகிறான். ஒரு பெண் வரதட்சணை கொடுக்க முடியாமல் திருமணமாகாமல் தவிக்கிறாள். இது எங்கள் ஊரில் இருக்கிறது. இங்கு எல்லாம் நல்ல மாற்றங்கள் இருக்கின்றன. உள்ளபடியே பாராட்டுகிறேன். சாதி வேறுபாடு பார்க்காமல் ஒழுங்காகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. எனக்கு நன்றாகவே தெரியும். எனக்குப் பல குடும்பங்களைத் தெரியும். அங்கே அதெல்லாம் இல்லை. நாங்கள் மறுபடியும் இப்போது பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். இப்போது வரதட்சணை வாங்குகிற பழக்கத்தை வேறு கொண்டு வந்து விட்டான். அப்போது ஒருத்தன் கேட்டான். காப்பாற்ற மனைவியிடம் காசைக் கேட்போன் கணவன் தானா? பிச்சைக் கழுதை தானா? ஏண்டா! மனைவி கிட்டேயிருந்து, அவர்கள் வீட்டிலிருந்து பணம் வாங்கித்தான் நீ பிழைக்க வேண்டுமென்றால் நீ பிச்சைக்காரனா? நீ பிச்சைக் கழுதையா என்று கேட்டான். அப்போது இவள் எழுதுகிறாள். திருமணம் முடியவில்லை. ஏக்கத்துடன் அவள் எழுதுகிறாள். "நானும் ஒரு பாபர் மசூதிதான்" இந்த வரிதான் முக்கியம். நானும் ஒரு பாபர் மசூதிதான் (பின்னாலேதான் இருக்கிறது அதனுடைய உயிரே!) கண்டவனெல்லாம் இடிக்கத்தான் வருகிறானே தவிர (எங்கள் ஊரில் அந்தக் கெட்ட பழக்கம் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். பேருந்து களில் போனால், சாமானியமாக ஒரு பெண் நல்லபடியாய்ப் போய்த்

திரும்ப முடியாது) இளைஞர்களெல்லாம் அதற்கென்றே ஒரு முயற்சி எடுத்து ..... ஏனென்றால், நான் கல்லூரி முதல்வராக இருந்தேன். என் கல்லூரிக்கு எதிரே மகளிர் கல்லூரி இருக்கிறது. மீதி விளக்கங்களை அங்கேதான் சொல்லவேண்டும்). அப்போது "கண்ட பயலெல்லாம் இடிக்கத்தான் வருகிறானே தவிர" இது பாபர் மசூதிக்கும் பொருந்தும், இவளுக்கும் பொருந்தும் (அடித்தான் பாருங்க அடுத்தவரி எனக்கு ரொம்ப பிடித்தது) ஒரு பயலாவது கட்ட முன்வரவில்லை. கட்டு என்பது தாலி கட்டுவது இந்த வரிகளை - அழகாக அவன் சொல்கிறான். நான் ஒரு கவிஞன். 614 கவிதைகளைத் திறனாய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவன். 23 ஆண்டுகள் கல்லூரிப் பேராசிரியராகப் பாடம் சொல்லிக் கொடுத்தவன். நான் சொல்கிறேன். ஒரு சொல்லைக் கூட வீணாக்காமல் எழுதுகிறான். சொல்லை வீணாக்குபவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஒருத்தன் எழுதுகிறான் எங்கள் ஊரில்...

**இன்பம் இன்பம் இன்பம்**
**எதிலும் எதிலும் இன்பம்**
**இன்பம் இன்பம் இன்பம்**
**எதிலும் எதிலும் இன்பம்**

இப்படிப் போய்க் கொண்டே இருக்கிறான் 8 வரிகளில். எதற்கு எழுதுகிறான் இவன், யாருக்கு எழுதுகிறாய் நீ! அதே நேரத்தில் உன் முன்னோர்களைப் பாரு! ஓர் அரசனுடைய மகளை ஒரு கவிஞன் காதலிக்கிறான். அதுதான் புரட்சிக் கவி! அரசருக்கு கோபம் வரத்தானே செய்யும். அதுவும் அந்தக் காலத்தில் 3 இடத்தைப் பார்க்க வேண்டும்! இவனே சொல்கிறான். பெண்ணே! என்னை நீ காதலிக்காதே! என்னைக் கொன்றுவிடுவான் அரசன்! அப்படி என்று சொல்கிறான் காரணம்

**"காதல் நெருப்பால் கடலுன்மேல் தாவிவிடுவேன்;**
**சாதி எனும் சங்கிலி என் தாளைப் பிணித்ததடி!**
**பாளைச் சிரிப்பில் நான் இன்று பதறிவிட்டால்**
**நாளைக்கு வேந்தன் எனும் நச்சரவுக்கு என் செய்வேன்!**
**ஆணிப்பொன்மேனி! அதில் கிடக்கும் நல்லொளியைக்**
**காணிக்கை நீ வைத்தால் காப்பரசர் வாராரோ!"**
**பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன் சிரிப்புக்**
**கட்டாணி முத்துக்குக் காலில் விழ மாட்டாரோ!**

என்று அடுக்கிக் கொண்டே போவான். அதிலே சமூக ஏற்றத் தாழ்வையும் சொல்லிவிட்டான். நீ மேல் வருணம் மேதினியை ஆள் வருணம். நாங்கள் கீழ் வர்ணம் சொல்லாமலேயே விளங்கும்.இதைச் சொல்றவன்தான் அரசன் முன்னால் வரும் போது அரசனுக்கு எப்படிக் கோபம் வரும்! எப்போதுமே ஒரு நாடக ஆசிரியனுக்கு - அவன்தான் கதாநாயகிக்கும் வசனம் எழுதுகிறான். அவன்தான் கதாநாயகனுக்கும் எழுதுகிறான். அவன்தான் அழிம்பன் என்று சொல்லப்படுகிற வில்லனுக்கும் எழுது கிறான். எனவே இவனை வில்லனாக்க முடியாது. இவன் பாத்திரம் மாறி எழுதுகிறான். அவ்வளவு தான்! இப்போது இதே பாரதிதாசன் ஓர் அரசன் சொல்கிற காட்சியைக் காட்டுகிறார். எப்படி இருக்க வேண்டும்! ஏப்பா!

என் மகளைக் காதலித்து விட்டாயே! இப்படியா பண்ணுவது! வேண்டாம்பா! விட்டு விடுப்பா! என்றா சொல்லியிருப்பான் அந்த அரசன்! சரிங்க! தோதிருந்தால் பார்த்துக் கொள்கிறேன்! என்று இவன் சொல்வான். அரசன் தான் இப்படி இறங்கி வந்து பேசுகிறானே! அழகாக அடிச்சான் பாருங்க பாரதிதாசன்.

> “கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கவி
> கற்க உன் பால் விடுத்தேன் - அட
> குற்றம் புரிந்தனையா இலையா அதை
> மட்டும் உரைத்து விடு.
> வாள் பிடித்தே புவி ஆளும் அரசர் என்
> தாள் பிடித்தே கிடப்பார் - அட
> ஆள்பிடித்தால் பிடி ஒன்றிருப்பாய் என்ன
> ஆணவமோ உனக்கு!”

அப்புறம் என்றான். பேசுவானா இந்தக் கவிஞன்! கடைசியாகத் தீர்ப்பு வருகிறது! எல்லோருக்கும் மரண தண்டனை. அப்போது தான் பாரதி தாசன் எந்த நோக்கத்திற்காக எழுதினான், சமுதாயச் சீர்திருத்தத்திற்காக எழுதினான் அழகிய கவிதைக்காக எழுதினான். ஆனாலும் தமிழ்ப்பற்று முக்கியம் என்கிறான். இதோ பாருங்க! நான் சும்மாதான் வீட்டிலே இருந்தேன். இந்த அரசன்தான் என் மகளுக்குக் கவிதை சொல்லிக் கொடுக்க கூப்பிட்டான். நான் தமிழ் படிக்காமல் இருந்திருந்தால் இந்தத் தண்டனை வந்திருக்குமா? தமிழ்படித்ததால் அல்லவா நான் மாட்டிக் கொண்டேன். அப்படித்தானே சொல்லிடுவேன். அப்படிச் சொல்லுகிற மாதிரி கொண்டு வருகிறான்.

> “தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்
> தமிழ்க்கவி என்று எனை அவளும் காதலித்தாள்.
> அமிழ்து என்று சொல்லும் இந்தத் தமிழ் என் ஆவி
> அழிவதற்குக் காரணமாய் இருந்தது என்று
> சமுதாயம் நினைத்திடுமோ! ஐயகோ! என்
> தண்டமிழ்க்குப் பழி வந்தால் சகிப்பதுண்டோ!”

என்றான். பழி எனக்கு வாராது. இதோ பார்த்திங்களா! தமிழ் படித்தவனுக்கு நேர்ந்த கதியை. இனிமேல் எவனும் தமிழ் படிக்கக் கூடாது. அப்படியே தமிழ் படித்தாலும் அரசன் மகளுக்குக் கவிதை சொல்லிக் கொடுக்கக் கூடாது. அரசன் மகளுக்கு மட்டுமல்ல, ஆண்டி மகளுக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாது. அப்படித்தானே சொல்லுவான் இவன்.

எனவே, நடுநிலைமையோடு செய்யப்படுகிற காரியங்கள் சில நேரங்களில் இப்படிக் கவிழ்ந்து போய் விடுகின்றன. நடைமுறை நமக்கு ஒத்துப் போகாமல் இருக்கலாம். ஆனால் நான் உங்களிடத்தில் விரும்பிக் கேட்பது ஒன்றுதான். ஆசிரியர் பணி ஏற்றிருக்கிறீர்கள், நிச்சயமாக வேறு எல்லாவற்றையும் விட நான் பெரிதும் விரும்புகிற பணி ஆசிரியர் பணி தான். Teaching is the noblest of all the professions, noblest என்றாலே அதிலே superlative degree உங்களுக்குத் தெரியும். noblest position நான் அதை

விரும்பி ஏற்றவன். விரும்பிப் பணியாற்றியவன். எனவே, எனக்கு அந்த உணர்ச்சி இருக்கும்.

நான் சில பேரை உருவாக்க வேண்டும். ஏனென்றால், நான் என்ன நினைத்துவிடக் கூடாது நான் B.A., B.Ed. படித்துவிட்டு என் பையனுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனால், அந்தப் பையன் இருக்கிறானே அவன் ஏற்கெனவே, 1 ஆம் வகுப்பு, 2 ஆம் வகுப்பு ஆசிரியரிடம் தான் படித்திருப் பான். ஏனென்றால் அவரும் சேர்ந்து தானே உருவாக்கினார். ஆனால், அந்தப் பையன் வளர்ந்து எம்.ஏ., பி.எச்.டி. ஆகி, பெரிய அறிஞராகி, நாட்டுக்கே தலைவராகிறார். ஆனாலும் மறந்து விடக்கூடாது. எத்தனை பேர் எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் தலைவனாகலாம். அந்தத் தலைவனுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தவன் ஓர் ஆசிரியன். அவனுக்கு அ னா ஆவன்னாவைச் சொல்லிக் கொடுத்தவனும் ஆசிரியன் தான் மறந்து விடக் கூடாது நீங்கள். அதை அவனும் மறக்கமாட்டான், வேறு எதை மறந்தாலும். நான் உள்ளபடியே, பெரிய பொறுப்புக்கு, அமைச்சராக வந்த பிறகும் கூட எனக்கு 2 ஆம் வகுப்புச் சொல்லிக் கொடுத்த ஆசிரியர் சிலநேரம் தெருவில் வந்தால், டக் என்று எழுந்து நின்றுவிடுவேன். அதுதான் முறை. ஏனென்றால் சரியோ! தப்போ எனக்கு அ னா ஆ வன்னாவை என் கைவிரலைப் பிடித்துச் சொல்லிக் கொடுத்தவர் அவர்தானே! இன்றைக்கு வேண்டுமானால் அவர் அங்கே நிற்கலாம். அதனால் தான் நாங்கள் அடிக்கடி சொல்லுவோம் தமிழில். ஆசிரியர்கள் எப்படிப் பட்டவர்கள். தோணிக்குச் சமமானவர்கள். இக்கரையிலிருந்து இவர்களை யெல்லாம் ஏற்றி அக்கரைக்குக் கொண்டு போவார்கள். போய் அவர்களை அக்கரையில் இறக்கிவிட்டு, மீண்டும் இக்கரைக்கே திரும்புவார்கள். மறுபடியும் அடுத்த குழு வரும்! அடுத்த ஆண்டு வேறு குழு வரும்! அந்தக் குழுவை இவர்கள் ஏற்றிக் கொண்டு போவார்கள்! இதுதான் ஆசிரியர்கள். ஆனால், இவர்கள் அக்கரைக்குப் போனால், கரை ஏறினால், படகு பழுதானதாகப் பொருள்! அது அது அந்த இடத்தில் இருந்தாலே வலிமை! படகு தண்ணீரின் மேல் சென்றால்தான் படகு. தூக்கிக் கொண்டு கரையின் மேல் போட்டிருந்தால் ஓட்டை ஆகிவிட்டது என்று - ஓய்வு பெற்றுவிட்டார் என்று பொருள், ரிடையர் ஆகிவிட்டார் என்று அர்த்தம். எனவே, தோணியாக இருக்க வேண்டும், பிறகு நாங்கள் சொல்வோம். ஏணியாக இருக்க வேண்டும். கீழே தொட்டுக் கொண்டிருக் கிறவர்களைப் பூரா ஏற்றி ஏற்றி நாங்கள் பரணில் விட்டுக் கொண்டிருக் கிறோம். ஆனால், நான் இன்னும் தரையைத் தொட்டுக் கொண்டு தான் நிற்கிறேன். இந்த ஆசிரியன் கடைசி வரைக்கும் இந்தத் தரையைத் தொட்டு நிற்க வேண்டும், இந்தப் பரணைத் தொட்டு நிற்க வேண்டும். இந்த இரண்டையும் இணைக்கின்ற பாலம் ஆசிரியன் தான். எனவே ஆசிரியப் பணி என்பது கண்டிப்பாக வேறு எந்தப் பணிக்கும் நிகரான பணி அன்று! இது நிகரற்ற பணி! இதை ஏற்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் நெஞ்சு நிமிர்த்திப் பெருமை கொள்ளலாம். மறந்து விடக்கூடாது. நெஞ்சு நிமிர்த்திப் பெருமை கொள்ளலாம். போங்கடா! நான் ஒரு 4 பேருக்கு அறிவுரை சொல்லி இருக்கிறேன். எவனோ ஒருத்தன் என்னைப் பாராட்டுவான். எங்கேயாவது ஓரிடத்தில் என்னைப் பாராட்டுவான்.

அன்றைக்கு ஒரு நாள் ஐயா நீங்கள் நடத்தினீர்கள் அந்தக் "கானல் வரி" அது எனக்கு வாழ்நாளில் நினைவு இருக்கிறது ஐயா. ஒரு நாளைக்குச் சொன்னால் போதும், என்றைக்கோ நான் நடத்தியதற்கு, அன்றைக்குத் தான் எனக்குப் பயன் கிடைத்தது! ஆக, என்னுடைய திறமைகளை நான் வெளிப் படுத்துவதன் வாயிலாகப் பலபேர் திறமை பெறுவதற்குக் காரணமாக அமைகிற ஒரு வழிகாட்டியாக இருக்கிற காரணத்தினால் யார் யார் நெஞ்சில் எது எது தைக்கிறதோ அது காலாகாலத்தில் ஆலமரம் போல் வளர்ந்து நிழல் தருகிற காலத்தில், அந்த நிழல் தருகிற அந்த ஆலமரம் நிச்சயமாக அந்த ஆலமரத்தை வித்தூன்றியதாக இருக்கின்ற அந்த ஆசிரியன் - அவனை ஒருகாலத்திலும் மறக்காது. இதுதான் வரலாறு. எத்தனை பேராக இருந்தாலும் அத்தனை பேர்க்கும் ஓர் ஆசிரியன். அந்த ஆசிரியனுடைய பணி என்பது உள்ளபடியே நம்முடைய அறியாமையை அகற்றுகிற பணி மட்டுமன்று; திசைதடுமாறுகிற மாணவ மாணவிகளை அது ரொம்ப முக்கியம்! கவுன்சிலிங் வேறு நமக்கு இருக்குது! உங்களுக்கு வழிகாட்டு கிறது என்று ஒரு பகுதி இருக்கிறது. வெறுமனே பாடம் மட்டும் சொல்லி வகுப்பு அறையோடு நின்று போவதன்று நம்முடைய பணி. ஒரு பெற்றோர் வந்து சொல்வார்கள், என்னங்க! என் பையன் ஒரு மாதிரியா திரியறான். ஒரு மாதிரியா என்றால் ... ஒரு மாதிரியா திரியறான். அவனை எப்படியாவது நீங்கள் சொல்லி, ஒழுங்கு பண்ணுங்கள். ஏனென்றால், இவனை நம்பி இன்னும் 4 பிள்ளைகள் இருக்கின்றன. இவன் படித்து வேலைக்கு வந்தால்தான் மற்றவர்களை நான் காப்பாற்ற முடியும். நீங்கள் கொஞ்சம் ஒழுங்கு பண்ணுங்கள்! என்று யாரிடம் முறையிடுவார்கள். ஆசிரியரிடத்தில் வந்துதான் முறையிடுவார்கள். கிராமத்திலே என்ன ஆகிவிட்டது என்றால், ஒரு காலத்தில் வயது மூத்தவர்கள் இளைஞர் களைக் கூப்பிட்டு, தம்பி! இங்கேவா! என்று கூப்பிட்டால் அவன் வருவான். நான் சொல்வது ஒரு காலத்தில். என்ன ஐயா பெரியவரே! சொல்லுங்கள்! என்பான். இவர் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போவான். ஆனால், இப்போது எப்படி வளர்ந்து விட்டார்கள் இளைஞர்கள் என்றால், ஒரு பெரியவர் ஒரு பையனைக் கூப்பிடுவார். தம்பி! வந்துவிட்டுப்போ! என்று என்ன ஐயா (என்னைய்யா!) என்பான். ஒன்றுமில்லை தம்பி! வந்துவிட்டுப் போங்கள்! வருவான்! இவர் அறிவுரை சொல்வார்! "பெரிசு! உன் ஜோலியைப் பார்த்துக்கிட்டு போ பெரிசு" எனக்குத் தெரியாதா! என்று இவன் திருப்பிச் சொல்வான். நான் சொல்வது இது தமிழ்நாட்டு மொழி! பெரிசு உன் ஜோலியைப் பார்த்துவிட்டுப்போ பெரிசு என்று பையன் இந்தப் பெரியவரைப் பார்த்துச் சொல்கிறான். இதுதான் உண்மை நிலை. பெரியவர்களை அலட்சியப்படுத்துகிற மனோபாவம் இன்றைக்கு இளைஞர்களிடத்தில் இருக்கிறது. ஆனால், ஒரு காலத்தில் அவர்கள் சொல்லுகிற அறிவுரைகள் நமக்குப் பயன்படும் என்று ஏற்கின்ற மனநிலை இருந்தது. எனவே, சமுதாயம் சீரழிந்திருக்கிறது. மறந்துவிடக்கூடாது. உங்களுக்குச் சாதகமான சூழ்நிலை சமுதாயத்தில் இல்லை. எனவே, அதையும் மறந்துவிடக்கூடாது. எனவே, சாதகமான சூழ்நிலையை யார்யாரோ கெடுக்கிறார்கள். உங்களுடைய பணி வெறும் மாணவரோடு நிற்பது அன்று! அந்த மாணவருடைய குடும்பத்திலும் புகுந்து அவனுக்குத்

தேவையான அறிவுரைகளைச் சொல்லி, செம்மைப்படுத்தி, அந்தக் குடும்பத்துக்கு அவன் வாரி வழங்குகிறவனாக உழைத்து அவர்களை உயர்த்து கிறவனாக உருவானால். அது உங்களால்தான் முடியும். உங்கள் மீது தான் நம்பிக்கை வைப்பார்கள்! எத்தனை இடம் இருந்தாலும். அந்தக் காலத்தில் ஆலிவர் கோல்டுமிஸ்மித்தினுடைய ஸ்கூல் மாஸ்டர் - விலேஜ் ஸ்கூல் மாஸ்டர் கவிதையைப் படித்துப் பாருங்கள்! அந்த ஊருக்கு மருத்துவனும் அவன்தான். அந்த ஊரில் திருமணம் நடந்தால் நடத்தி வைக்கின்ற ஆசிரியனும் அவன்தான். அந்த ஊரில் பஞ்சாயத்து நடந்தால், தீர்ப்புச் சொல்கிற நீதிபதியும் அவன்தான். அதுதானே ஒரு காலத்தில் இருந்தது. எல்லாப் பொறுப்பையும் ஓர் ஆசிரியன்தான் பார்த்தான். அதுதான் "விலேஜ் ஸ்கூல் மாஸ்டர்" படித்துப் பாருங்கள்! தெரியும்! ஆனால், இப்போது இல்லையே! ஆசிரியர்கள் செய்த தவறினால் ஊர்ப் பையன் ஒதுக்குகிறான். அதே நேரத்தில் சமுதாயம் சீர்கெட்டுக் கிடப்பதால், ஆசிரியன் ஒதுக்கப்படுகிறான். இரண்டு தரப்பும் இருக்கிறது. எனவே, நான் பணியாற்றிய காலம் என்பதை விட நீங்கள் பணியாற்றுகிற காலம் சற்றுக் கடுமையான காலம். நான் பணியாற்றிட வருமுன் நாங்களெல்லாம் விழிப்புணர்ச்சி படைத்த மாணவர்களாக எழுச்சி பெற்ற மாணவர்களாக - ஓர் இயக்கத்தின் சார்பில் வேகமாக வளர்ந்தோம். எங்களுக்கு மொழி உணர்ச்சி இருந்தது; இன உணர்ச்சி என்றிருந்தது. நாட்டு உணர்ச்சி இருந்தது. அந்த வேகத்தில் வளர்ந்தோம். எங்களுக்குக் கை கொடுப்பதற்கு 42 இதழ்கள் இருந்தன. எந்தக் கடைக்குப் போனாலும் 4 இதழ்களை வாங்கிப் படிக்க முடியும். இன்றைக்கு அதெல்லாம் ஒன்றாகிப் போய் விட்டது. இப்போது வருகிற இதழ்களை வாங்கிப் படித்தால் இருப்பதும் கெட்டுப் போய்விடும். எனக்கு நன்றாகவே தெரியும். ஓர் இதழில் என்ன போடுகிறான். ஒரு நடிகையினுடைய பின்னங்கால்களின் படங்களைப் போடுகிறான். சொல்வதில் தப்பில்லை. நீங்களெல்லாம் வளர்ந்தவர்கள் தானே. ஒரு நடிகையினுடைய பின்னங்கால் - நான் சொல்வது முழங் காலுக்குக் கீழே! படம் போடுகிறானே. படம் போட்டுவிட்டு. இது தான் செய்தித்தாளினுடைய அயோக்கியத்தனம் என்பது. என்ன போட்டிருக் கிறது. "இவரை உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்கிறான். நீங்கள் நன்றாக யோசியுங்கள்! இப்போது நான் உங்களுக்கு விடை சொல்லப் போகிறேன். நான் உடனே எனக்குத் தெரியும்! என்று சொல்கிறேன். அப்போது நான் யார்? ஒரு நடிகையினுடைய பின்னங்காலைப் பார்த்த வுடனே இவள் யார் என்று ஒருத்தனுக்குத் தெரிந்திருக்குமேயானால், இவன் எவ்வளவு பெரிய ஆளாக இருப்பான்! பெரிய ஆளு என்றால் எவ்வளவு பெரிய மோசமான ஆளாக இருப்பான் இவன். அப்போது பல பேருடைய கால்களைப் பார்த்து இந்தக் கால் இன்னொருடைய கால் என்று கண்டுபிடிக்கிற அளவுக்கு இவன் அயோக்கியத்தனம் பண்ணியிருக் கிறான் என்று தானே பொருள்! அப்போ அயோக்கியத்தனம் செய்கிறவர் களின் பட்டியலில் என்னைக் கையெழுத்துப் போடச் சொல்லுகிறானா அந்தப் பத்திரிகைக்காரன். இது புகழ்பெற்ற இதழில் வந்தது. நான் இதழின் பெயரைச் சொல்லி இழிவுபடுத்த விரும்பவில்லை. இது நாட்டுக்குத்

தரப்படவேண்டிய செய்தி அல்ல! இதுபோல தீயவையெல்லாம் வரும்! வரக்கூடாததெல்லாம் வரும். அதனால்தான்

**"சென்ற விடத்தால் செலவிடாது தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"**

என்றான். எனவே, உங்களுடைய மனங்களைச் சிதைய விடாதீர்கள்! உங்களை ஈர்ப்பதற்கு எண்ணற்ற சாதனங்கள் இருக்கின்றன. தொலைக் காட்சி என்றெல்லாம் வந்த பிறகு எண்ணற்ற சாதனங்கள்! படிக்கிறதைத் தவிர மீதி எல்லா வேலைகளையும் பார்க்கிறோம். அந்த அளவுக்கு வந்து விட்டது. ஆனாலும் அவற்றுக்கிடையிலும், இன்றைக்கு ஒரு மாணவன் படித்து, பல்கலைக்கழகத்தில் முதன்மை வாங்கி 4 தங்கப் பதக்கங்களை வாங்குகிறான் என்றால், அவன் எவ்வளவு கவனம் செலுத்தி இருப்பான். அவனுக்கு அந்தப் பெற்றோர் எவ்வளவு உறுதுணையாக இருந்திருப் பார்கள். அவன் என்ன சொல்கிறான். 'எனக்கு ஆசிரியர் உறுதுணையாக இருந்தார்' என்று சொல்கிறானா இல்லையா! நன்றி சொல்கிறானா! இல்லையா! அதுதானே உங்களுக்கு வேண்டும். தங்கப்பதக்கம் வாங்கிய வன் உங்களுக்கு ஒரு தங்கப்பதக்கத்தைச் சூட்டி விட்டானே!

எனவே இதையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு விரிவாக நான் இந்தச் செய்தி களையெல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னும் நிறையப் பேசலாம், இன்னும் எத்தனையோ செய்திகள் இருக்கின்றன. நான் உங்களை விரும்பிக் கேட்பது தமிழ்நாட்டில் இருக்கின்ற எளிய உரை நடை நூல்கள், எளிய சிறந்த நூல்கள் ஆகியவற்றையெல்லாம் அவ்வப்போது வருகின்றவர்களிடத்தில் சொல்லி வாங்கி அல்லது நல்ல நூலகங்களில் இவற்றையெல்லாம் வாங்கி வைத்து நிறையப் படியுங்கள்! ஏனென்றால் எங்களுக்கு ஏராளமான நூல்களைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. நான் கல்லூரி முதல்வராக இருந்தபோது என் நூலகத்தில் மட்டும் 36000 நூல்கள் இருந்தன. நான் சொல்வது 10 ஆண்டுகளுக்கு முன்னால். ஒரு நூலகத்தில் ஒரு கல்லூரியில் 36000 நூல்கள் என்றால் எத்தனை நூல்கள் வெளியாகியிருக்க வேண்டும். அதற்குப் பிறகு நாங்களெல்லாம் துறை ஆசிரியராக வந்தபிறகு அமைச்சராக வந்த பிறகு எண்ணற்ற நூல்களைத் தமிழ்த் துறையிலேயே வெளியிட்டிருக்கிறோம். என்னால் அந்த நூல்களை யெல்லாம் பட்டியலிட்டுக் காட்டமுடியும். எனவே, அவை எல்லாம் படிக்கப் படிக்கத்தான் நமக்குப் புதிய அறிவு வரும். தமிழ்நாட்டு வரலாற்றை நான் படிக்கிறேன் என்று சொன்னால் அதில் இராசராச சோழனுடைய காலம் பொற்காலம்; இராசேந்திரன் சோழன் காலம் பொற்காலம். ஏனென்றால், கடாரத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தோம். ஆனால், அந்தப் பொற்காலத்திற்குப் பின்னால், ஏன் அந்தச் சோழ அரசு தோற்றது. அப்போது கடைசியிலே வந்த ஒருத்தன் கையாலாகாதவனாக இருந்திருக்கிறான். அது தான் பொருள். 21 தலைமுறை வந்தது. ஆனால் 21 ஆவது தலைமுறையாக வந்த 3 ஆம் இராசேந்திரன் கையாலாகாதவனாக இருந்ததனால் அவனுடைய ஆட்சி கவிழ்ந்தது. மீண்டும் சோழ அரசு தலையெடுக்கவே இல்லை. 1310 இல் ஓகோ என்று கொடிகட்டிப் பறந்த

பாண்டியர் அரசு ஏன் வீழ்ந்தது. அண்ணன் தம்பிகளாக இருந்த வீர பாண்டியனும் சுந்தரபாண்டியனும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு எதிரிகளை வெளியூரில் போய்க் கூப்பிட்டுக் கொண்டு வந்து ஒருவனை ஒழித்து, இவன் அவனையும் ஒழித்து இரண்டு பேரையும் ஒழித்து, பாண்டியராட்சியை ஒழித்துவிட்டான் அவன். எனவே, நமக்குள் சண்டை செய்வதனாலும் ஆட்சியை இழக்கிறோம். நம்முடைய ஆற்றலின்மை காரணமாகவும் ஆட்சியை இழக்கிறோம். எனவே, ஓர் ஆட்சிக்கு வருகிறோம் என்று சொன்னால், அதிலே ஆளுமைத் தன்மை தேவை! அதுவும் குறிப்பாக ஓர் ஆசிரியனுக்குத் தேவை. எனக்குப் பச்சையப்பன் கல்லூரியில் ஒருவர் பாடம் நடத்தினார். மு.வ.வே. எனக்கு ஆசிரியர்தான். எனக்கு பாடம் நடத்திய ஓர் ஆசிரியர் "முக்கூடற்பள்ளு" நடத்தினார். வகுப்பிலே முக்கூடற் பள்ளை இப்படித் திறந்தார் என்றால் கடைசி வரைக்கும் தலையை நிமிர்த்தவே மாட்டார். ஒரு மணிநேரமும் அப்படியே நிற்பார். இப்படிப் பிடித்தாரென்றால் கடைசி வரைக்கும். பாடம் போய்க் கொண்டே இருக்கும். அவரு எப்போதாவது நிமிர்ந்து எங்களைப் பார்ப்பாரா என்றால் பார்க்கவே முடியாது. எப்படிச் சரியாக இருக்கும். நல்லவர்! நல்லவராக இருப்பது மட்டுமன்று! நான் உங்களைப் பார்த்துப் பேசினால்தானே உங்களுக்குத் தெளிவு கிடைக்கும். நான் பார்த்துப் பேச முடியவில்லை யென்றால் நான் எதற்கு ஒலிபெருக்கி முன்னாலே! - திரைக்குப் பின்னாலிருந்து நான் பேசிவிட்டுப் போகிறேன்! இல்லை யென்றால் நான் பேசிய பேச்சை ஒலிப்பதிவில் போட்டுவிட்டுப் போகி றேன். அதற்காகவா வந்து பேசுகிறேன் இல்லை. ஒவ்வொருவருடைய முகமும் எனக்கு என்னுடைய பேச்சுபற்றிய பிரதிபலிப்புக் கண்ணாடிகள்! ஒவ்வொரு மாணவனுடைய முகமும் அந்த ஆசிரியனுடைய பாடத்தின் சாயல்கள் புறப்படுகின்ற இடம்!

எனவே, இவற்றை எல்லாம் மனத்திற் கொண்டு, வாழ்வாங்கு வாழ வாழ்த்தி விடைபெறுகிறேன்.



7

# பாரதியும் - பாவேந்தரும்

# கம்போங் பாண்டாங் - கணேசர் ஆலயம்

# 8.12.2002

அருமை நண்பர் சரவணன் அவர்களே! ம.இ.க. வின் சார்பிலும் பல்வேறு இயக்கங்களின் சார்பிலும் ஒருங்கிணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அருமை நண்பர் தொகுதிக் காங்கிரசினுடைய துணைத் தலைவர் ஸ்ரீதரன் அவர்களே! எத்தனையோ பேருடைய நூல்களை நாட்டுடைமையாக்கியிருந்தாலும் பாவாணர் காலத்தில் வெளியான 38 நூல்களையும் பாவாணரால் அவர் காலத்தில் வெளியிடப்பட முடியாது தேங்கி நின்ற 15 நூல்களையும் ஒருங்கிணைத்து வெளியிட்ட பெருமை படைத்த அருமை நண்பர் இளவழகன் அவர்களே! மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தினுடைய தலைவர் அருமை நண்பர் திருமாவளவன் அவர்களே! இங்கே என்னை அன்புடன் வரவேற்று கணேசர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று சிறப்புச் சேர்த்த ஆலயத்தின் தலைவர் அவர்களே! இளைஞர் மணிமண்டபத்தின் அன்பு நண்பர் சுகுமாரன் அவர்களே! திரு.இராசு அவர்களே! வருகை தந்திருக்கின்ற பெருமக்களே!

அருமை நண்பர்கள் இந்த நல்ல நிகழ்ச்சியை இங்கே ஏற்பாடு செய்து இந்த அரங்கம் நிறைந்த கூட்டத்தைத்தான் அவர் கூட்டியிருக்கிறார் என்பதில் அவர் ஒன்றும் குறை வைக்கவில்லை. அடாது மழை பெய்தாலும் விடாது அவரிடம் வருவார்கள் நாங்களும் தொடருவோம் என்பதற் கிணங்க இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. இங்கே "பாரதியையும் பாவேந்தரையும் ஒப்பிட்டுப் பேசவேண்டும் என்று அருமை நண்பர் விரும்பினார். 1882 இல் பிறந்த பாரதி 1921 இல் மறைந்தார். ஆக, அவர் இவ்வளவு உச்சகட்டத்தில் சிறந்தது தன்னுடைய 39 ஆவது அகவைக்குள் என்பதை மறந்து விடக்கூடாது. எனவே, நீண்டகாலம் வாழ்ந்தால்தான் எங்களால் ஏதாவது செய்யமுடியும் என்று சொல்வதெல்லாம் பொருத்த மற்றதாகும். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்லப்போனால், "உப்புக் கல்லை வைரம் என்று சொன்னால், நம்பி ஒப்புக்கொள்ளும் மூடருக்கு முன்னால், நான் உளறி என்ன கதறி என்ன ஒன்றுமே நடக்க வில்லை தோழா! ரொம்ப நாளா!" என்று சொன்ன பட்டுக்கோட்டை தன்னுடைய 29 ஆவது அகவையிலேயே இறந்து போயிருக்கிறான். எனவே, எத்தனைக் காலம் வாழ்கிறோம் என்பது அல்ல! எப்படி வாழ்ந்தோம் என்பதுதான், என்ன முத்திரை படைத்தோம் என்பதுதான் சிறப்பு".

“மதுரைக்காஞ்சி” எனும் நூலை எழுதிய ஆசிரியன் கிட்டத்தட்ட 782 வரிகளுக்கு மேல் எழுதியிருக் கிறான். ஆனால் 'பளிச்' என்று எனக்கு அவன் பெயரைச் சொல்ல முடிய வில்லை. ஆனால், 5 வரிப் பாட்டை எழுதிய குறுந்தொகையின் ஆசிரியர் பெயரை நான் சொல்ல எனக்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் அவன் தன் பெயரை அங்கே குறிக்கவேயில்லை. ஆனால், எழுதிய பாட்டின் சாரம் திருப்பித்திருப்பி சொல்லப்பட்டு, அதுதான் “யாயும் யாயும் யாராகியரோ _” என்ற பாட்டு! அந்தப் பாட்டை எழுதியவன் பெயர் தெரியவில்லை. ஆனால், ஓர் உவமை சொல்லலாம். வானத்திலிருந்து பெய்கிற மழை எந்த மண்ணில் விழுகிறதோ அந்த மண்ணின் நிறத்தைப் பெறும். நான். கணிதமும் படித்தவன்; அறிவியலும் படித்தவன்; Water is colourless tasteless and odourless என்பதுதான் அறிவியல்; தண்ணீருக்கு நிறம் கிடையாது; மணம் கிடையாது; வேறு எதுவும் கிடையாது. எதுவும் இல்லாமல் இருந்தால் தான் அது தண்ணீர். தண்ணீர் நன்றாக இருக்கிறதே என்று சொல்வதே கூட நல்லதல்ல. ஏனென்றால் அதில் சுவை வந்து இருக்கிறது. நான் அதற்காகச் சொல்லவில்லை. ஏன் சொல்கிறேன் என்றால் தண்ணீரின் குணம் அது.

எனவே அவன் என்ன சொல்கிறான். “செம்புலப் பெயல் நீர் போன்ற அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே! கடைசியில் அவன் பெயரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் சொன்ன வரியையே உவமை யாக வைத்து, “செம்புலப் பெயல் நீரார்” என்று பெயர் வைத்துள்ளோம். எனவே, எத்தனை ஆயிரம் வரிகளை நீளமாகப் பாடுகிறோம் என்பதல்ல முக்கியம். 5 வரிகள் பாடினாலும், 2000 ஆண்டுகளுக்குப் பின்னாலும், இந்த கம்போங்பாண்டாங் பகுதியில் தமிழ்க்குடிமகனால் அவன் பேசப்படுவான் என்பதுதான் வரலாறு. எனவே, இன்றைக்கு பாரதி - பாரதிதாசனை ஒப்பிடுவதில் எனக்கு மகிழ்ச்சி. எனவே, இரண்டு பேருமே ஆசிரியர் மாணவர். இரண்டு பேரும் ஒரே நேரத்தில் உரையாடி மகிழ்ந்த நண்பர்கள்! பல நிலைகளில் பாரதிதாசன் பாரதியாருக்கு மாறுபட்டவர்; கொள்கை யால் மாறுபட்டவர். மறந்துவிடக்கூடாது. உங்களுக்கு ஒரு பாடம் என்னவென்றால் நாம் கொள்கைகளால் கூட மாறுபடலாம். ஆனால், நட்பு மாறுபடக் கூடாது. கொள்கை மாறுபட்டவுடனேயே முன்னே ஒன்று சொல்வது, பின்னே ஒன்று சொல்வது; முன் சொல்வது வேறு; புறம் சொல்வது வேறு என்று சொல்வதெல்லாம் நம் நாட்டில் காண்கிறோம். அது இல்லாத நிலை இந்த இரண்டு பேருக்கும் உண்டு. அப்படிப்பட்ட நிலையில் கொள்கையில் எப்படி மாறுகிறார்கள்! ஓர் எடுத்துக்காட்டு.

மதத்தின் பங்கு என்ன? பாவாணரே அவருடைய நூலில் என்ன கூறுகிறார். மதத்தை நான் எந்த வகையிலும் வெறுக்க வில்லை. அது ஓர் அமைப்பு; இருக்கட்டும்; அது தன் பணிகளைச் செய்யட்டும். ஆனால், மதத்தின் சார்பில் அதிகமாகப் பிடித்துக் கொண்டு தவறான செயல்களைச் செய்கின்றார்கள். எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமானால், பெரிய புராணத்திலே இயற்பகை நாயனார் ஒரு சிவனடியார் வந்து கேட்டார் என்பதற்காக, தன் மனைவியையே அன்பளிப்பாகக் கொடுத்தவர். அது

ஏற்கத்தக்கதன்று; இன்னும் சொல்லப்போனால் கண்டிக்கத்தகுந்தது. ஏனென்று கேட்டால், சிவனடியார் வந்து கேட்டார் என்பதற்காக இளையான்குடி நாயனார் சோறாக்கிப் போட்டார். அவர்தான் சரியான பாதையில் போனார். எனவே, பாவாணர் என்ன கருதுகிறார்? இந்த இயற்பகை நாயனார் செய்தது எப்படிப் பொருந்தும். யார் இதைப் பின்பற்ற முடியும். சிவனடியார் வேடத்தில் வந்தால் கொடுத்து விடலாமா? சிவனடியார் வேடத்தில் வந்தால் பிள்ளையையே அறுக்க வைக்கலாமா? என்று கேட்கிறார். எனவே மதம் தேவை; மத உணர்வு கூடத் தேவை. ஆனால், மதப்பித்துக் கூடாது என்று பாவாணர் போன்றவர்கள் பின்னால் சொல்வார்கள். இது ஒரு நடுநிலைமை உணர்வு. அதேநேரத்தில் பாரதி மதத்தைப் பாராட்டினான்; மறந்துவிடக் கூடாது. மதத்தை ஏற்றுக் கொண்டான். அதில் அவனுக்கு எந்த மாறுபாடும் இல்லை. ஆனால், பாரதிதாசன் நேர் எதிர்மாறு! கொள்கையிலே அவன் எவ்வளவு முரண் என்றால் முக்கியமானது மதத்திலே அடிக்கும் போது ஒருத்தருக்கொருத்தர் வருத்தமே வருகிறது. அடித்தான் பாருங்கள் ஒரு அடி!

> **"இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி**
> **இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே!**
> **மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!**
> **வாயடியும் கையடியும் மறைவது எந்நாள்?"**

என்றான் பாரதிதாசன். அது மட்டுமல்ல பொதுத்தன்மை அவனுக்கு உண்டா என்றால் அவனுக்கு உண்டு! ஏசு பொழிந்த தெள்ளமுது என்று அதையும் பாராட்டித்தான் இருக்கிறான். அதற்காக ஒரேயடியாக வெறுக்க வில்லை. ஆனால் மதத்தின் சார்பில் நடக்கின்ற கொடுமைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அதன் சார்பில் மனிதன் மனித நிலையிலிருந்து கெட்டுப் போகக் கூடாது. ஏனென்றால் தமிழ்நாட்டின் சூழ்நிலை உங்களுக்குத் தெரியும். வர்ணாசிரம தர்மம் என்பது வந்து ஒருவன் மேட்டுக் குடி, ஒருவன் தாழ்ந்தகுடி, ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் சூத்திரன் என்ற நிலைமை வந்ததனால் ஏற்பட்ட விளைவு இது! எனவே இதைச் சாட வேண்டியது தந்தை பெரியாரின் வழியில் வந்த பாரதிதாசனுக்கு ஒரு கடமையாகி விட்டது. எனவே, பாரதிதாசன் வாழ்ந்தகாலம் 1891 இல் பிறந்து, 1964 இல் இறந்தவர். எனவே அவர் திராவிட இயக்கத்தினுடைய முழுத் (29.4.1891) (21.4.1964) தாக்கத்தில் வருபவர். எனவே, அந்த நிலையில் அவருக்கு, அந்தத் தேவை ஏற்பட்டது, அவருடைய கொள்கைத் தாக்கம் அதுதான். எனவேதான் அவர் கடுமையாகச் சொல்கிறார். ஆனால், அதே நேரத்தில் நாமெல்லாம் போற்றுகிற வைணவப் பெரியார் இராமானுசர், நாமெல்லாம் கிட்டத்தட்ட செட்டிநாட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நிறைய இருக்கிறோம். திருக்கோட்டியூர் கோபுரத்தின் மேல் ஏறி நின்று யாரிடமும் சொல்லக் கூடாது என்று சொன்ன அந்த மறைமுக இரகசியத்தை அந்த ஊர் அறியச் சொன்னவர். எதற்காக இது மறைமுக மாக இருக்கிறது, ஏன் எல்லோருக்கும் சொன்னால் என்ன? எனக்குக் கிடைக்கின்ற சொர்க்கம் அவனுக்கும் கிடைக்கட்டும்! எனவே, இதைச்

சொல்வதால் எனக்கு நரகம் கிடைத்தால் பரவாயில்லை என்றார். அதைப் பாரதிதாசன் பாராட்டுகிறார்! இந்தமாதிரி நிகழ்ச்சிகளைப் பாரதிதாசன் பாராட்டுகிறார். அதற்காக ஒரே அடியாகக் கையை வைத்து அழுத்துவ தில்லை. இது போன்றவை களைப் பாராட்டி விட்டு, ஆனால், இந்த மதத்தால் நமக்கு நிறையக் கேடுகள் இருக்கின்றன. நாம் ஒருவருக்கொருவர் பிரிவினைவாதங்களைப் பேசக்கூடிய சூழ் நிலையை உண்டாக்கிவிடுகிறது என்பதில் அவர் கடுமையாக இருந்திருக் கிறார். ஆனால், பாரதிக்கு அந்த எண்ணமே இல்லை. ஒரு காலத்திலும் அப்படிப் பேசவே இல்லை. பாரதி தாசனே என்ன சொல்கிறார். வரலாற்றிலே கூட நம்ம வரலாற்று ஆசிரியர்கள் என்ன செய்கிறார்கள் உண்மைகளை எழுதினால் வரலாறு; வரலாறு என்பது உண்மை. அதிலே போய் அவனவன் நோக்கத்திற்கு எல்லாம் எழுதக்கூடாது. எழுதினால் அது கதை; வரலாறு வேறு, கதை வேறு; கதையிலே கற்பனை இருக்கலாம். ஆனால், வரலாற்றில் கற்பனை இருக்கக் கூடாது. பாரதிதாசன் சொல்கிறார்

**"நம்பத் தகாத வெல்லாம் நம்பவைத்துத் தாங்கள் நலம்**
**சம்பாதிக்கின்ற சரித்திரக்காரர்கள்"**

அவன் இப்படியெல்லாம் கண்டதை எழுதி வைத்ததனால்தான் நீங்கள் அதை நம்பி மோசம் போனீர்கள்! இந்தச் சரித்திரக்காரர்கள். குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டுகின்றார் பாரதிதாசன்! அது மட்டுமல்ல இரண்டு கோணத்தில் பார்க்க வேண்டும்! பாரதிதாசன் எப்படிப் பார்வைக்கு வந்தான் பாருங்கள்; கம்பனுடைய 12000 பாட்டையும் சுருக்கி, டி.கே. சிதம்பரநாத முதலியார். எல்லோருக்கும் தெரியும் ரசிகமணி டி.கே.சி. என்பவர். இது தான் கம்பர் எழுதியிருக்க வேண்டும், அதற்கு மேல் சேர்த்த தெல்லாம் இடைச் செருகல் என்றார். 12,000 பாடல்களை 5,000 (அ) 3,000க்கு கொண்டு வந்துவிட்டு, இதுதான் கம்பன் பாட்டு என்றார். பாரதிதாசன் அதைச் சாடினார். கம்பன் எழுதியதைச் சுருக்குவதற்கு இவர் யார்? (கம்பன் சார்பில் வாதிடுகிறார்) இவரை அடித்து முடக்குவதற்கு கண்டிப்பதற்கு, தாள் ஒன்று அற்றதுவோ தமிழன் நாட்டில் என்றார்).

ஒரு பத்திரிகை கிடையாது! இவர்களைக் கண்டிப்பதற்கு என்று இவர் கண்டித்தார். அதே நேரத்தில் அவர் கம்பனை எப்படிப் பார்க்கிறார். (தெரியுமா உங்களுக்கு) "பன்னீராயிரம் பாடிய கம்பனும் அவற்றில் ஒன்றிலேயாயினும் இன்றமிழ்ப்பற்றை எழுப்பியது உண்டோ! இவ்வளவு பாடினானே கம்பன் எங்கேயாவது தமிழ்ப்பற்றைச் சொல்லியிருக்கிறானா? ஏனென்றால் தமிழ்ப்பற்றை ஏற்கெனவே சுந்தரமூர்த்தி நாயனார் பேசிவிட்டார். 7 ஆம் நூற்றாண்டில். திருஞானசம்பந்தர் பாடி விட்டார் திருநாவுக்கரசர் பாடி விட்டார்; மாணிக்கவாசகர் பாடிவிட்டார்; எல்லோருமே பாடி, அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்று இறைவன் சொல்லுகிற அளவுக்கு இன்றைக்கு வந்துவிட்டது. இந்த 4 பேரும் அன்றைக்கு ஊர் ஊராகச் சென்று கோயில்களில் தமிழைச் சொல்லித் தமிழில் பாடியிருக்கா விட்டால், தமிழே நின்றிருக்காது. எனவே, அவர்கள் தமிழை முன்னிலைப்

படுத்தி, தமிழைப்பற்றியே பேசிவிட்டார்கள். ஆனால், இதற்குப் பின்னால் வருகிற கம்பன் ஏன் பாடவில்லை? இது பாரதிதாசனுடைய கோணம்". அப்படிப் பார்க்க வேண்டும் நீங்கள்! எனவே, ஒரு பக்கம் டி.கே.சிக்கு கண்டனம் தெரிவிக்கிறார். ஆனால் இன்னொரு பக்கம் ஏன் இதைக் கம்பன் செய்திருக்கக் கூடாது, ஏன் பன்னீராயிரம் பாடிய கம்பன் இன் தமிழ்ப்பற்றை எழுப்பிருக்கக் கூடாது? அவர் தமிழ்க் கோணத்தில் பார்க்கிறார்.

அடுத்து கடவுள் என்று பார்த்தால் பாரதியாருக்குக் கடவுள் நம்பிக்கை முழுக்க உண்டு! உங்களுக்குத் தெரியும்! ஓம் சக்தி! பராசக்தி! நான் கூடச் சொல்வதுண்டு! எங்கேயோ உருசியாவில் புரட்சி ஏற்படுவது கண்டு! எழுந்தது பார் யுகப் புரட்சி என்றான் சரி! புரட்சி வந்தது! அது லெனினால் வந்தது; ஸ்டாலினால் வந்தது யாராலோ வந்தது புரட்சி வந்தது! பிறகு 1917 லிருந்து மறுமலர்ச்சி வந்தது அது உருசியா! ஆனால் பாரதி பாடும்போது, "மாகாளி பராசக்தி" கடைக்கண் வைத்தாள்! ஏன் புரட்சி உருசியாவில் வந்ததென்றால், பராசக்தி இங்கேயிருந்து அங்கே போய் அவள் கடைக்கண் பார்வையை வீசியிருக்கிறாள் என்று பாரதி பாடியிருக் கிறான். இது எப்படி இருக்கிறது என்றால் அந்தப் பார்வையை நம்ம ஊரில் கொஞ்சம் வீசியிருக்கலாமே! இப்படிக் கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். மாகாளி பராசக்தி உருசியாவில் போய்க் கடைக்கண் பார்வையை வீசினவள் நம்ம ஊரில் கொஞ்சம் வீசியிருக்கலாம் அல்லவா! இரண்டாவது அங்கே நடந்த புரட்சிக்கும் மாகாளி பராசக்திக்கும் என்ன தொடர்பு! எனவே, அவருடைய பார்வை இப்படிப் போகிறது! இவ்வளவு பெரிய புரட்சி களுக்கு இடையிலே கூட பாரதி இப்படி ஒரு பகுதியைப் போடுகிறாரே என்ற வருத்தம் கூடப் பலபேருக்கு உண்டு. ஆனால், இதை ஒரேயடியாக அடிக்கிறதுதான் பாரதிதாசன் இவ்வளவுக்கும் அவருடைய கொள்கை அது என்று தெரியும். ஏனென்றால் பராசக்தி மேலே ரொம்ப நம்பிக்கை வைத் திருந்தவர் பாரதியார். எதுவாக இருந்தாலும் சக்திதான் அவருக்கு. இன்னும் சொல்லப் போனால் எதுவாக இருந்தாலும் மாகாளிதான். எல்லாவற்றையும் பார்த்த - பாரதிக்குப் பக்கத்திலிருந்த பாரதிதாசன் அடிக்கிறார் பாருங்கள்! ஒருத்தன் கேட்கிறான், கடவுள் இல்லை என்று எவண்டா சொல்றவன்? "இல்லை என்பான் யாரடா தில்லை சென்று பாரடா எவண்டா" சொல்றவன். தில்லைக்குப் போய் பார்த்துவிட்டுச் சொல்லுடா என்றான். பாரதிதாசன் திருப்பிச் சொல்கிறான் "இல்லை என்பேன் நானடா" "தில்லை கண்டு தானடா" பார்த்துவிட்டுத்தான் சொல் கிறேன். அதே நேரத்தில் அதே ஓசையில் திருப்பி அடிக்கிற பாரதிதாசன்.

எல்லாச் சமயங்களும் தமிழுக்குப் பல தொண்டுகளைச் செய்திருக் கின்றன. புத்த மதம் சார்பில்தான் மணிமேகலை வந்திருக்கிறது. சமண சமயத்தின் சார்பில்தான் சீவக சிந்தாமணி வந்திருக்கிறது. கிறித்தவர்கள் ஏராளமான முறையில் தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறார்கள். வீரமாமுனிவர், ஜி.யு.போப், கால்டுவெல் போன்றவர்கள் முன்னணியினர். எனவே, சமயத்தின் சார்பில் தமிழே வளர்க்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஆனால், பாரதிதாசன் என்ன கருதினார்?

"கடவுள் வெறி, சமயநெறி கன்னல் நிகர் தமிழுக்கு நோய்! நோய்! நோயே!"

இடைவந்த சாதி எனும் இடர் ஒழிந்தால், ஆள்பவள் நம் தாய்! தாய்! தாயே! என்று அழைக்கிறார். எனவே, அவருடைய பார்வை அத்தகையது; ஆனால் நேர் எதிரானது பாரதியாருடைய பாடல்கள்!

பிறகு ஒன்று மட்டும் நீங்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பெரியார், அண்ணா ஆகியோரிடம் எல்லாவற்றிலும் பாரதிதாசன் நெருங்கிய தொடர்புடையவர். பெரியாருடைய கொள்கையைத்தான், உரைநடையிலே, புதினத்திலே, சிறுகதையிலே அண்ணா கொண்டு வருகிறார். கவிதையிலே கொண்டுவருகிறவர் பாரதிதாசன். இரண்டுபேரும் துறைகளைப் பிரித்துக் கொள்கிறார்கள். இவருக்கும் அதே கருத்து. அவருக்கும் அதே கருத்து. அவர் நீதிதேவன் மயக்கம் என்று எழுதினார் என்றால் அது கிட்டத்தட்ட பகுத்தறிவுக் கருத்துதான். இவருடைய நூல் களைப் பார்த்தீர்களே யானால் அவற்றிலும் பகுத்தறிவுக் கருத்துகள் தான். ஆனால், இவ்வளவு நெருக்கமாக இருக்கின்ற பாரதிதாசன் பெரியாரைத் திட்டியிருக்கிறார். மறந்துவிடக் கூடாது. ஒன்றிரண்டு இடத்தில் பெரியாரைச் சாடி இருக்கிறார். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்னால் அறிஞர் அண்ணாவை மோசமாகவே சாடியிருக்கிறார். ஒரே திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள்; ஒரே கொள்கை படைத்தவர்கள்; ஒரே கொள்கையினுடைய கிளைகளாகப் பிரிந்தவர்கள் கூட என்ன காரணத்தினாலோ ஒருத்தொருக் கொருத்தர் மோதிக் கொள்கிற சூழ்நிலை இருந்திருக்கிறது. வருத்தப்பட்டு, திட்டி, முழங்குகிற ஒரு முத்திரை இருந்திருக்கிறது. ஆனால், எனக்குத் தெரிய நான் படித்த அளவில் எந்த இடத்திலும் பாரதிதாசனால், திட்டப் படாத (ஏனென்றால் எல்லோரையும் திட்டியிருக்கிறார்) - குறிஞ்சித்திட்டு என்று நூல் இருக்கிறது. நான் அதற்கு "துணிந்து திட்டு" என்று மேலே பெயர் எழுதப்போகிறேன். நாமக்கல் கவிஞரைத் திட்ட வேண்டும் என்று நினைக்கிறார். பாட்டிலே வரும்போது நாகரிகமாகத் திட்டுகிறார். நாமக் கல்லான் ஒரு கவிஞன் அங்கே? அவர் சொல்வது படிக்காதவன் எல்லாம் இங்கே கவிஞனாக இருக்கிறான் என்று சொல்வதற்காகத்தான் வருகிறார். ஆனால், மேலே வரி எப்படி வருகிறது. நாமக் கல்லான் ஒரு கவிஞன் அங்கே? என்று வருகிறது. நாமக்கல்லான் ஒரு கவிஞனா என்று கேட் கிறார். ஆனால் அவருடைய பாட்டுத்தான் "தமிழன் என்றோர் இனமுண்டு" என்று அவருடைய பாட்டைத்தான். தூக்கி வைத்திருக்கிறோம். 10ஆவது மாடி வரைக்கும் கட்டி வரைந்திருக்கின்றோம். நம்ம தலைமைச்செயலகத் தில் எழுதி வைத்திருக்கிறோம். எனவே, அதில் நாங்கள் மாறுபடவில்லை. ஆனால் பாரதிதாசனுடைய பார்வை அது. எல்லோரையும் திட்டியவர். நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். பாரதியை மட்டும் ஓர் இடத்தில் கூட ஒரு பிசிறு கூடக் கொடுக்காமல் கடைசி வரை விட்டுக் கொடுக்காமல், அவரை ஒருவரி கூடத் திட்டாமல், மனக்குறைப் படாமல் வாழ்த்திய பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. இவ்வளவு பெரிய திராவிட இயக்கங் களைச் சேர்ந்த இந்தப் பாரதிதாசனுக்கா இப்படி ஒரு எண்ணம் என்று

வியப்பாக இருக்கும். இவ்வளவுக்கும் கொள்கை மாறுபாடு. நான் தான் சொன்னேனே; கடவுளிலே மாறுபாடு; மதத்திலே மாறுபாடு; இன்னும் ஒருபடிமேலே போய், சொல்லப்போனால் விடுதலைப் பண்பாட்டிலேயே மாறுபாடு. அவரு இந்தியா விடுதலை ஆகவேண்டும் என்கிறார். யாரு! பாரதி!

> "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
> என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?
> என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
> என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?"

இது பாரதி! ஆனால், பாரதிதாசனுடைய கொள்கை இது அல்ல. திராவிட நாடு; மறந்துவிடக்கூடாது. எனவே, அவர் இந்திய விடுதலையைப் பாடுகிறார். இவர் திராவிட நாடு விடுதலையைப் பாடுகிறார். இரண்டு பேருக்கும் முரண். ஒருத்தருக்கொருத்தர் ஒத்துப் போகாத கொள்கை. எனவே, அதிலேயும் அப்படித்தான் இருக்கிறது. அதைவிட முக்கியம். பாரதியை இவர் திட்டவில்லை என்பதை விடத் திட்டினவனையும் பிடிக்காது. அது தான் முக்கியம். பாரதியை இவர் திட்டவில்லை என்பது நல்ல பண்பு. ஆனால், கண்டவனெல்லாம் திட்டுவதற்கு நாம் போய்ப் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியுமோ! திட்டுகிறான் என்கிற அவன் கோணத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒத்துக்கொள்ளவில்லை. பாரதியை இன்றைக்கு உலகமகா கவி என்று நாம் பாராட்டுகிறோம். எப்போதுமே தமிழர்களுக்கு உள்ள மிகப் பெரிய சிறப்பு என்னவென்றால், செத்த பிறகுதான் நாம் பாராட்டுவோமே தவிர உயிரோடு இருக்கின்ற வரையில் கிட்டத்தட்ட அவனைப் பாதி உருக்குலைப்பது நாம் தான். முடிந்த வரைக்கும் அவனை ஒப்பேற்றி, அவன் பாடையிலே போகிற வரைக்கும் இருந்து பார்த்துவிட்டு, அப்புறம் பாராட்டுவிழா நடத்துவோம். ஏனென்றால் அவன் இல்லையே! இருந்து ஏற்றுக்கொள்வதற்கு அவன் இல்லையே! இது பாரதிக்கும் உண்டு. பாரதி இறந்தபோது, அவனுடைய இறப்பு நிகழ்ச்சிக்கு - கடைசியில் ஊர்வலத்திற்கு வந்தவர்கள் 23 பேர்கள் தான். பாரதி நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் 23 பேர் தான் என்கிறார்கள். ஆனால், பாரதி இன்றைக்கு இருந்து இறந்திருந்தால் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! தமிழ்நாடே திரண்டிருக்காதா! அதெல்லாம் ஒரு காலம். ஏனென்றால் அவர் 1921 இல் மறைந்தபோது, நம் தமிழர்கள் அதைப்பற்றி யெல்லாம் கவலையே பட வில்லை. இன்னும் சொல்லப் போனால், காங்கிரசுத் தலைவர்கள் வந்து கடைசியில் இறதிக்கடன் செலுத்தியதாக இல்லையே, காங்கிரசுக்காக, பாடுபட்டவன், காங்கிரசுக் கட்சியில் இருந்தவன், 1905 ஆவது ஆண்டில் சூரத்தில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்ட அவனுக்கு, காங்கிரசுக்காரன் வந்து இரங்கல் தெரிவித்ததாகச் செய்தியைக் காணோமே! ஏதோ அங்கிருந்த அன்பர்கள்தான் வந்திருக்கிறார்கள்!

அதேநேரத்தில் நமக்கு எல்லாம் கல்கியைப் பிடிக்கும்! அருமையான புதினங்கள். நான் மறுக்கவில்லை. அவருடைய அலை ஓசை என்பது உச்சகட்டம். அதே நேரத்தில், "பொன்னியின் செல்வன்" அதெல்லாம்

உங்களுக்குத் தெரியும். ஆனால், அந்தக் கல்கி, பாரதியை மதித்தாரா என்றால் இல்லை. மறந்துவிடக் கூடாது. இன்னும் சொல்லப்போனால், ஒரு எதிர்க்கருத்தையே தெரிவித்தார். பாரதி ஒரு உலக மகாகவி ஆவானா? ஆக மாட்டான் - பாரதி ஒரு உலக மகாகவி ஆக மாட்டான் என்று சொன்னவர் கல்கி. ஆனால், திருப்பிப் பிடித்தார் பாரதிதாசன்! நீ யாரு அதைப் பற்றிச் சொல்ல! உனக்கு என்ன தெரியும் பாரதியைப் பற்றி என்று கேட்டார். அவனொரு

**செந்தமிழ்த் தேனீ. சிந்துக்குத் தந்தை!**
**குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்**
**கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு**
**நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா!**
**காடுகமழும் கற்பூரச் சொற்கோ**
**திறம்பாட வந்த மறவன். புதிய**
**அறம்பாடவந்த அறிஞன்.**

எவ்வளவு வரிகள்! எனக்குத் தெரியப் பாரதியை எத்தனையோ பேர் பாராட்டியிருக்கிறார்கள். நாங்களெல்லாம் கவியரங்கத்தில் பங்கு பெற்றிருக்கிறோம். பாரதிதாசனுடைய இந்த வரிக்கு நிகராக எவனும் இதற்கு மேலே எழுதவும் முடியாது; யாராவது எழுதியதும் கிடையாது. ஒருவர் சொல்கிறார், அவர் உலக மகா கவி அல்ல, ஆனால் பாரதிதாசன் தூக்கிப் பிடித்து, என்னென்று சொல்வேன்! "தமிழால், பாரதி தகுதி பெற்றான். தமிழ் பாரதியால் தகுதி பெற்றது" என்றான். அதுமட்டுமல்ல, பாரதி எப்படிப்பட்ட நேரத்தில் தோன்றினார் தெரியுமா உங்களுக்கு என்றார் பாரதிதாசன்.

**"தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்**
**தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்**
**இலகு பாரதிப் புலவன் தோன்றினான்"**

அப்பா ஒரு தலைவன் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரம்! ஏனென்றால் இவர் உச்சக்கட்டத்தில் இருக்கிற நேரத்தில் அப்போதுதான் நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு இளைஞராக இருந்து நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு பாரதிதாசனுக்கு! அப்போது அவரால் உணர முடிகிறது. இன்னும் சரியாகச் சொல்லப் போனால், பாரதியார் இறக்கும் போது, பாரதிதாசனுக்கு 30 அகவை. எனவே, அந்த இளமைக் காலத்திலே தான் அவர் உணர்ந்திருக்க முடியும். இவரும் - மறந்து விடக்கூடாது - இவரும் தொடக்க காலத்தில் "சுப்பிரமணிய துதியமுது" பாடினவர்தான். தொடக்கத்தில் சுப்பிரமணியரைப் பாராட்டி, துதியமுது பாடினவர்தான் இதே பாரதிதாசன். பிறகு காலப்போக்கில் திராவிட இயக்கங்களின் தாக்கத்தால் மாற்றிக் கொண்டார். ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று கேட்டால் அழகாகச் சொல்கிறான்.

அவன் தோன்றிய காலம்; அதுதான் தமிழுக்கு உயர்வான காலம் என்று சொன்னான்.

சரி எப்படிங்க! பாரதிக்கு அப்படி ஓர் உணர்வு இருக்கிறது என்று கேட்கிறீர்கள்! உங்களுக்குத் தெரியாத செய்தி! நம்மாலே படிக்கப்படாதது.

ஏனென்றால், நாம எல்லோரும் கவிதைகளை மட்டுமே பார்த்திருக்கி றோம். அவருடைய உரை நடையை ரொம்ப பேர் படித்திருக்க மாட்டார்கள். பாரதியாருடைய உரைநடையை நம்ம தமிழ்நாட்டிலேயே எந்தக் கல்லூரி ஆசிரியர்களும் படிப்பதில்லை. பாரதியாருடைய கவிதையை எடுத்து, 12 ஆம் பக்கத்திலே ஒரு பாட்டு இருக்கும். நடத்திவிட்டு - சொல்லிவிட்டுப் போவார்கள். ஆனால்,

> **"சிந்து நதியின் மிசை நிலவினிலே,**
> **சேர நன் நாட்டு இளம்பெண்களுடனே!**
> **சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே.**
> **தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்!"**

என்று ஒருமைப்பாட்டுக்காகப் பாடினவன்; எங்கே படகுவிட வேண்டும்; சிந்து நதியில்; நம்ம ஊரிலே தண்ணீர் சரியாக ஓடாது என்று அங்கே போய் விட்டான். யாரு அழகான இளம் பெண்கள் இந்தப் படகிலே ஏற்றிக் கொள்வதற்கு. கேரளத்துப் பெண்கள். பிறகு எதிலே பாட்டுப் பாட வேண்டும். தெலுங்கில் பாடவேண்டும். இப்படிப் பாடுகிறவன் - அதுதான் அவன் கருத்தா என்றால் ஒருமைப்பாட்டுக்கு அது சரி. ஆனால், அவனுடைய உறவு என்ன தெரியுமா? உரைநடையில் அடித்தான் பாருங்கள்! "என்னுடைய தமிழ்ச்சாதிப் பெண்ணைவிட இன்னொரு சாதிப் பெண் அழகாக இருப்பதை நான் சகித்துக் கொள்ள மாட்டேன்" என்று சொன்னவன்தான் பாரதி. இது ரொம்பப் பேருக்குத் தெரியாது; ரொம்பப்பேர் கவனத்திற்கே இது வரவில்லை. அப்போது அவனுக்கு எப்படிப் பட்ட உணர்வு - தமிழ்நாட்டு மேலே; தமிழ்நாட்டுப் பெண்கள் மேலே! மொத்தத்திலே தமிழகத்தின்மேல் இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் உணர்ந்து பாராட்ட வேண்டும்.

இரண்டு பேருக்கும் ஓர் ஒற்றுமை இருந்தது. தமிழை மேம்படுத்த வேண்டும்; தமிழினத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் ஒற்றுமை இருந்திருக்கிறது. பொதுவாகவே தமிழ்நாடு மேம்பாடு அடைய வேண்டும் என்பதில் இரண்டுபேருக்கும் எவ்விதக் கருத்து வேறுபாடும் கிடையாது. அதனால்தான் ஒற்றுமையாக இருந்து இரண்டு பேரும் பேசிப் பேசிப் பழகுவது அதற்குப் பெரிய காரணம்! எனக்கு அதிலே வருத்தம் என்ன வென்றால், அவன் காலத்தில் இருந்த வாய்ப்பைவிட பாரதிதாசன் காலத்தில் கிடைத்த வாய்ப்புகள் அதிகம்! பரந்த எல்லை அது! எனவே, பாரதியாரால் அதற்கு மேலே போக முடியவில்லை. அவன் "பாஞ்சாலி சபதம்" எழுதுகிறான். எனவேதான் குறுங்காப்பியம் என்று சொல்லப் படுகிற அந்த முதல் தகுதியைத் தந்தவன் பாரதி! அவன்தான் தொடக்கம் செய்தான். இன்றைக்குப் பலபேர் குறுங்காப்பியம் எழுதியிருக்கிறார்கள்; பெருங்காப்பியம் எழுதியிருக்கிறார்கள். பாரதிதாசனே பின்னாலே "குடும்ப விளக்கு" எழுத வில்லையா? "பாண்டியன் பரிசு" எழுதவில்லையா? அவை யெல்லாம் காப்பியங்கள். ஆனால், தொடக்கம் செய்த பெருமை பாஞ்சாலி சபதம் தந்த பெருமை பாரதிக்கு உண்டு. அது மட்டுமல்ல. வசன கவிதை என்பதை முதலில் அவர்கள் அறிமுகப்படுத்தி, வசன கவிதை எழுதியவன்

பாரதி! இப்போதுதான் புதுக்கவிதை வளர்ந்திருக்கிறது. நாங்களெல்லாம் புதுக் கவிதைகளைப் பார்க்கிறோம்; படிக்கிறோம்; படிக்கிறோம்; நீங்களும் பார்க்கிறீர்கள்; பிள்ளைகளும் படிக்கிறார்கள்; சிலபேர் நன்றாக எழுது கிறார்கள்; சிலபேர் ஏண்டா எழுதுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஒருத்தன் எழுதுகிறான்.

அவன் அவள் அது புழு பூச்சி "முடிந்துபோச்சு" என்று எழுது கிறான். இதிலே ஏதாவது உங்களுக்கு விளங்குகிறதா? எனக்கும் விளங்கா மல்தான் அவனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். நான் ஆய்வேட்டில் அதைக் குறிப்பிட்டு இன்றைய வரையில் தேடிக் கொண்டிருக்கிறேன். இதைத்தான் இருண்மை என்று சொல்வது obscurity என்று ஆங்கிலத்தில் பெயர். ஏனென்றால், நான் கவிதைகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவன் என்பதனை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நன்றாக எழுத வேண்டும் என்றால் எழுதலாம். மறந்து விடக்கூடாது. நம்ம ஊரில் வரதட்சணைக் கொடுமை எல்லாம் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள். அதற்காகத்தான் உங்களை வாழ்த்திவிட்டுப் போகலாம் என்று வந்திருக் கிறேன். அங்கே வரதட்சணைக் கொடுமை அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு பெண் வீட்டிலிருந்து இவ்வளவு கொடுக்க வேண்டும்; அப்போதுதான் திருமணம் செய்யமுடியும்; திருமண வீடு வரைக்கும் தகராறு செய்வார்கள். இதெல்லாம் நடக்கிறது. ஒரு பெண்ணுக்கு வரதட்சணை கொடுக்க முடியாத வறுமை படைத்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கிடைக்காமல் போகிறது. அவள் மணவிழாவுக்கு வரமுடியவில்லை. அவள் என்ன நினைக்கிறாள். என்பதை ஒரு கவிஞன் எழுதுகிறான். "அப்போது பாபர் மசூதி இடிக்கப்பட்டதெல்லாம் உங்களுக்கு நினைவிருக்கும்; (நாம நெருங்கி வந்துவிட்டோம்) டிசம்பர் 6இல் அங்கே இடிக்கப் பட்டது; (பக்கத்தில்தான் நிற்கிறோம்)" "நானும் ஒரு பாபர் மசூதிதான் - அந்தப் பெண் சொல்கிறாள். அதிலே ஒன்றும் நய மில்லை - அதற்குப் பிறகுதான் இருக்கிறது" நானும் ஒரு பாபர் மசூதிதான்; கண்ட பயலெல்லாம் இடிக்கத்தான் வருகிறானே தவிர, (உங்களுக்குத் தெரியும் நம்ம ஊரு நகருந்துகளில். நான் சொல்வது நம்ம ஊரில் - நகருந்துகளில் இளம்பெண்கள் அலுவலகத்திற்குப் போய் விட்டுத் திரும்புவது. கல்லூரிகளுக்குப் போய்விட்டுத் திரும்புவது எப்படி இருக்கும் என்று உங்களுக்கெல்லாம் தெரியும்; இளைஞர் களினுடைய பட்டாளத் தின் அட்டகாசங்கள் எவ்வளவு எல்லைமீறி இருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியும்). "கண்டபயலெல்லாம் இடிக்கத்தான் வருகிறானே தவிர ஒரு பயலாவது கட்ட முன் வரவில்லையே! இது அப்படியே பாபர் மசூதிக்குப் பொருந்தும். இடித்துவிட்டார்களே தவிரக் கட்ட முடிய வில்லையே! இவளை இடிக்கத்தான் முன்வருகிறார்களே தவிர எவனும் கட்ட முன்வரவில்லை. என்னைக் கேட்டால் கச்சிதமாக எந்த ஒரு சொல்லும் வீணாகாமல் வடிக்கப்பட்ட கவிதை அது! எனவே, நான் அதைப் பாராட்டுகிறேன். அதற்காக நம்முடைய மரபுக் கவிதையிலே ஒன்றும் இல்லையா? பாரதியைப் பாருங்கள்! மரபுக் கவிதையிலேதான்

நிமிர்ந்து நின்றான். அதனால்தான் நாம் சொன்னோம்! "பாஞ்சாலி சபதம்" பாடுகிற போது அவனுக்கு கோபம் வருகிறது - நம்ம மக்களைப் பார்த்துத் தான்! என்னைக் கேட்டால். தமிழகத்தில், "பாஞ்சாலி" காலத்திலே திட்டினார்கள் என்று நாம் சொல்லிக் கொள்ளலாம். எங்களைத் திட்ட வில்லை - அவர்; பாஞ்சாலி காலத்தில் இருந்தவர்களைப் பார்த்துத்திட்டு கிறார் என்று சொல்லி நாங்கள் அதைத் தள்ளி விட்டுவிடுவோம்! ஆனால், நம்மைத் தான் திட்டுகிறான். ஏண்டா, துச்சாதனன் பாஞ்சாலியைத் தெருவில் தரதரவென்று இழுத்துக்கிட்டுப் போகிறான்; நீங்களெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு - என்ன செய்கிறது? நெஞ்சு பொறுக்கு தில்லையே! என்று அழுது வடிஞ்சிக்கிட்டு இருக்கிறீர்களே! எவனாவது 10 பேர் சேர்ந்து போய் அந்தச் துச்சாதனனை இரண்டு மிதி மிதித்து, அவனைத் தள்ளிவிட்டு, அந்தப் பாஞ்சாலியை அந்தப்புரத்தில் கொண்டு போய் விட ஒரு பயலுக்கும் எண்ணம் வரவில்லையே! நீங்களெல்லாம் மனிதர்களா! இல்லை! நாய்கள்! என்ன செய்திருக்க வேண்டும்!

**"வீரமிலா நாய்கள்; விலங்கா மிளவரசன்.**
**தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,**
**பொன்னையவ ளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,**
**நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.**
**பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"**

போங்கடா நீங்களும் மனிதர்கள் தானா? இந்த வேகம் வருவதற்கு என்ன காரணம், இப்படிப்பட்ட அநீதிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று பாரதி கருதினான். சமூக சீர்திருத்தத்திற்கு வந்து விட்டான். ஏனென்றால் அவனுடைய காலத்திலேதான் உடன்கட்டை ஏறுதல் போன்ற பழக்கங்களெல்லாம் இந்தியாவில் இருந்தன. இராசராசாம் மோகன்ராய் இதை முதலில் ஒழித்தார். பெண்டிங் பிரபுவின் துணையோடு. மெல்ல மெல்லத்தான் அந்தச் சமூக அநீதிகள் இந்தியாவில் ஒழிந்தன. எனவே, சமூக சீர்திருத்தம். மெல்லப் பரவி இருந்ததே தவிர வெகுவாக வந்து விடவில்லை என்று சொல்லலாம். ஆனால் பாரதிதாசன் காலத்தில் சமூகச் சீர்திருத்தம் பெரிதாக வந்து விட்டது. கலப்பு மணம், காதல் மணம் எல்லாம் வந்து விட்டன. ஆனால் இரண்டுபேருக்கும் உள்ள ஓர் ஒற்றுமையைப் பாருங்கள்! இன்றைக்கும் சங்க இலக்கியத்திலே காதலைப் பற்றி - வீரத்தைப் பற்றிப் பாடினான் என்றால் அந்த வீரமும் காதலும் இன்றைக்கும் இருக்கின்றன. வீரம் இன்றைக்கு இல்லை, வீரமெல்லாம் நமக்கு எதற்கு! செய்தித்தாளில் பார்க்கிறோம்! 'சண்டையை விலக்கப் போனவன் குத்துப்பட்டுச் சாவு" சண்டையிலே சண்டை போட்டவன் குத்துப்பட்டுச் செத்தால் அது நியாயம்! இவன் ஏன் போனான்; அடுத்த நாள் நம்ம வீட்டில் செய்தித்தாளைப் பார்த்து விட்டுச் சொல்வார்கள்! நாம் புறப்பட்டுப் போகும் போதே! என்னங்க! காலையிலே செய்தித்தாளிலே எல்லாவற்றையும் படித்தீர்களா? பார்த் தீங்களா! போனோமா! வந்தோமா! வேலையைப் பார்த்தோமா! வந்தோமா! என்று வாருங்கள்! இந்தப் பஞ்சாயத்துப் பண்ணப் போகிறேன்; இந்தச் சண்டையை விலக்கப்

போகிறேன் என்ற இந்த வேலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். நமக்கு ஒத்து வராது; பத்திரிகையைப் பார்த்தீங்களா? "குத்துபட்டுச் சாவு"! அதுதான் நமக்கு எச்சரிக்கை! எனவே, அடுத்தநாள் இவன் சமாதானத்திற்குப் போக வேண்டும் என்று நினைக்கிறவன் கூடப் போகாமல் நின்று விடுவான்! பின்னுக்கு இழுத்து விடுவார்கள்! அதுதானே நிலைமை! ஆனால், சமுதாயப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு எவ்வளவு இடர் வந்திருக் கும் சொல்லுங்கள்! இன்றைக்குத் தமிழ்க்குடிமகன் மீது கல்வீசுவோர் யாருமில்லை; ஆனால், இதே பெரியாருக்கும்; அண்ணாவுக்கும்; பாரதிதாசனுக்கும் கல் வீசியவர்கள் ஏராளம் பேர் உண்டு; இன்றைக்கு நான் எந்தச் செய்தியைச் சொன்னாலும் பொறுமையோடு கேட்டுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை இந்தச் சமுதாயம் பெற்றிருக் கிறது. மாறுபட்ட கருத்தாக இருந்தாலும் கூட! ஆனால் அன்றைக்கு அப்படி இல்லை! அவர்கள் பேசும்போதே கல்; பேசும்போதே 10 மாட்டை விட்டு விடுவார்கள் - கூட்டத்திற்குள்ளே! பேசும்போதே 2 பாம்பை விட்டு விடுவார்கள்! எல்லாமே நடந்த காலம் ஒன்று உண்டு!

எனவே, அந்தச் சீர்திருத்தம் வருவதற்கு அடிப்படையாக இருந்த நிலையில், பாஞ்சாலி சபதத்தை அவர் பாடினார். பாரதிதாசன் என்ன பாடினார்! அப்படி ஒரு தேவை அவருக்கு வரவில்லை! அவர் புராணக் கருத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை! அவர் "குடும்ப விளக்கை" எடுத்துக்கொள்கிறார்! தாய்மார்களுக்கு வாய்ப்பிருக்கும் போது, "குடும்ப விளக்கு" படிக்க வேண்டும்! ஏனென்றால் ஓர் அற்புதமான விளக்கம்! எப்படி ஒரு பெண்! பெண்ணைத்தானே பாராட்டுகிறார். நம்மளும் காலையிலே எழுந்து சுறுசுறுப்புடன் எப்படியும் நீங்கள் 8.00 மணிக்குள்ளே எல்லோரும் அலுவலகத்திற்குப் போக வேண்டும்; 9.00 மணிக்குப் பள்ளிக் கூடம் போக வேண்டும். எல்லோரும் சுறுசுறுப்பாகத்தான் இயங்கியாக வேண்டும். என்னைக் கேட்டால் வீட்டிலே இருக்கின்ற பெண்கள் கூடக் கொஞ்சம் நேரங்கழித்து எழுந்துகொள்ளலாம்; ஆனால் நீங்கள் போயாக வேண்டும். இங்கே 8.00 மணிக்கு! ஆனால், நாங்கள் அங்கே 9.30 மணிக்கு என்று போடுவோம்! 10.00 மணிக்குத்தான் வருவோம்! 10.30 மணிக்கு மேசையைத் துடைத்துவிட்டு, ஒரு காப்பி குடித்துவிட்டு, 11.30 க்குத் தான் உட்காருவோம். 5 மணித்துளிகள் வேலையைப் பார்த்து விட்டு, சாப்பிடப் போய்விடுவோம் எங்கள் ஊரில்! ஏனென்றால் உழைக்கிறதை விட "டேக்கா" விடுவதுதானே அங்கே அதிகம்! உழைத்திருந்தால்தான் நாடு முன்னேறியிருக்குமே! உழைக்க விரும்பாத நாடு என்றால் அது நம்ம ஊரில்தான். இப்போது கூட அண்மையில் அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடந்தது. நாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்றார்கள் பொதுமக்கள் கேட்டார்கள். "நீங்கள் என்றைக்கு வேலை செய்தீர்கள்! - வேலை நிறுத்தம் செய்வதற்கு! வேலை செய்திருந்தால்தானே! எனவே, பொதுமக்களிடம் அது எடுபடாமல் போய்விட்டது. வேலை நிறுத்தம் பொதுமக்களிடம் வரவேற்புப் பெறவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டில் 50 இலட்சம் பேர் படித்துவிட்டு வேலை இல்லாமல் வேலை

வாய்ப்பகத்தில் பதிந்து கொண்டு காத்திருக்கிறார்கள். ஆனால், வேலை பார்ப்பவர்கள் 13 இலட்சம் பேர்! இன்னும் எங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும்! அதைக்கொடு! இதைக்கொடு என்று கேட்கும்போது ஓர் எரிச்சல் வருமா? வராதா? எனவே இப்படிப்பட்ட கிளர்ச்சி எண்ணங்கள் மறு ஆய்வு எண்ணங்கள் வந்துவிட்டன. அதே நேரத்தில் குடும்ப விளக்கில் அழகாக எழுதுகிறார்". "இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை; விடியற் காலம்! இரவு போர்த்த இருள் நீங்கவில்லை; ஆயினும். கேள்வியால் அகலும் மடமை போல் நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது. கேள்விச் செல்வம் பெறப் பெறத்தானே நமது அறியாமை நீங்கும்! நான் பாவாணருடைய நூலை 1957 இல் வாங்கிப் படித்ததனாலே தான் எனக்கு 'வீண்' வடசொல் எது என்று அப்போது தான் தெரிய வந்தது. வடசொல் என்றால் என்ன? தென்சொல் என்றால் என்ன? என்ற அறிவு எனக்கு அப்போதுதான் வருகிறது. அதற்கு முன்னாலே அந்த அறிவு எனக்கு இல்லை. எனவே, ஒவ்வொன்றையும் படிக்கப்படிக்கத்தானே ஒருத்தன் புதியதாக அறிய முடியும்! அதனாலே நான் முழு அறிஞனாக முடியாது. இன்னும் நிறையப் படிக்க வேண்டியிருக்கிறது! அது தான் நாலடியார் சொல்கிறது!"

**கல்வி கரையில; கற்பவர் நாள் சில;**
**மெல்ல நினைக்கின் பிணி பல**

எனவே, ஓர் அன்னம் எப்படிப் பாலையும் தண்ணீரையும் பார்த்து விட்டு, பாலை மட்டும் பிரித்துக் குடிக்கிறதோ! (அது குடிக்கிறதா? இல்லையா என்று தெரியவில்லை குடிக்கிறதாகச் சொல்கிறேன். வைத்துக் கொள்வோம்). அது மாதிரி படிடா என்கிறான். எனவே, நாம் படிக்கிறதுக்கு எத்தனையோ, இருக்கும்! ஏனென்றால் வாழ்க்கை என்பது 'டக் டக்' என்று போய்விடும்.

உமர்கய்யாம் சொல்லுவான். The Bird of time has but a little way to fly and Lo! the bird is on the wing - கவிமணி அதை அழகாக மொழிபெயர்த்தார். தேரா வாழ்வின் பறவை இனும் செல்லும் தூரம் சிறிதேயாம் பாராய்! பாராய்! பறவை அதோ பறக்கச் சிறகை விரித்ததடா! பேசிக் கொண் டிருக்கும் போதே பறவை பறக்கத் தொடங்கி விடுகிறது. இது தாண்டா வாழ்க்கை! எனவே, அழகாகச் சொல்லுகிறார். "கேள்வியால் அகலும் மடமைபோல் நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருக்கிறது". இருட்டாக இருக்கிறது. கும்மிருட்டு! அந்தக் கும்மிருட்டு எப்படி மாற வேண்டும்? வெள்ளையாக மாற வேண்டும், அப்போது தானே வெளிச்சம் வரும், விடிவெள்ளி அப்போதுதானே வரும்! எப்படித் தெரியுமா? தொட்டி நீலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ணாம்பு ஊற்றிக் கொண்டேயிருந் தால், நீலம் மாறி - சுண்ணாம்பு நிறத்திற்கு - வெள்ளை நிறத்திற்கு வந்து விடும்!

**"தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பென**
**இருள் தன் கட்டுக் குலைந்தது"**

அதோட நிறுத்திக் கொண்டார். இப்போது குடும்பத் தலைவிக்கு வருகிறார். அவள் எழுந்திருக்கிறாள். என்ன அழகாகச் சொல்லுகிறார்.

"தூக்கத்தோடு தூங்கியிருந்த ஊக்கமும் - ஏனென்றால், பெண்களுக்கு ஊக்கம் அதிகம்! சுறுசுறுப்பு அதிகம்! இந்த இரண்டையும் சொல்கிறார். தூக்கத்தோடு தூங்கியிருந்த ஊக்கமும், சுறுசுறுப்புள்ளமும் மங்கை எழுந்ததும் எழுந்தன! இரு கை வீசி! என்றான். இவள் மட்டும் எழுந்து கொள்ள வில்லையாம்".

ஊக்கமும் சுறுசுறுப்பும் சேர்ந்து எழுந்தனவாம். எனவே, அன்று முழுவதும் உழைப்பார்கள்! நமக்கு யாரும் எழுதவில்லையே! பெண்களுக்குத்தானே எழுதியிருக்கிறார்கள். எனக்கு ஆண் கவிஞர்கள்மேல் ரொம்ப வருத்தம் உண்டு. எல்லோரும் பெண்களைத்தான் வருணித்திருக்கிறார்களே தவிர, நம்மளை ஒருபயலாவது வருணித்திருக்கிறானா! ஒன்றும் வேண்டாம். விழியை வருணிக்கிறான். ஒருத்தன் மான்விழி என்கிறான். கேட்டால் அது மருட்சிமிக்கது என்கிறான். பெண்களுக்குத்தான்! (நம்ம கண்களை எவன் சொல்லித் தொலைத்தான்) மான் விழி என்கிறான்; இன்னொருத்தன், மீன்விழி என்கிறான். அது மீன் மாதிரி கெண்டை மாதிரி இருக்கிறதாம். இன்னொருத்தன் வேல் விழி என்கிறான். ஏனென்றால் அவ்வளவு கூர்மையானதாம். இன்னொருத்தன் வாள்விழி என்கிறான். அவ்வளவு பளபளப்பானதாம்! அப்போது இவ்வளவும் சொல்கிறான். நமக்கு தூங்குமூஞ்சி! எவனும் எழுதவில்லை; எவனும் கவலைப்படவும் இல்லை; அதுதான் உண்மை! எனவே இப்படிப்பட்ட நிலையில், இந்த இடத்தில் நான் சொல்கிறேன். பாரதி தொடக்கம் செய்த "பாஞ்சாலி சபதத்தை" வடிவமெடுத்து, இதே பெண்களுக்கு உரிமைக்குரல் பாடல்கள் எழுதி அதைத் தொடர்ச்சியாகக் கொண்டு வந்த பெருமை பாரதிதாசனுக்கு உண்டு! அதேபோல புரட்சிக் கவியிலே பெண்ணுக்கு உரிமை! அதைப் பற்றியெல்லாம் பேசுகிறார் நிறைய இருக்கிறது! இந்தப் பெண் உரிமையை மீட்பதில், பெண்ணுக்கு உரிமை தர வேண்டும்; பெண் அடிமை நீக்க வேண்டும் என்பதில் இரண்டு பேருக்கும் ரொம்ப வேகம்!

> ***"பெண்மை வாழ்கவென்று கொட்டடா முரசம்!***
> ***பெண்மை வெல்கென்று கொட்டடா முரசம்! - பாரதி!"***
> ***பாரதிதாசன் சொன்னான்***
>
> ***"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டில்***
> ***மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!"***
>
> ***ஊமையென்றே பெண்ணை உரைக்கு மட்டும் இந்நாட்டில்***
> ***ஆமை நிலைதான் ஆடவர்க்கும்!***

எல்லாம் உள்ளுக்குள்தான் இருக்கும்; மேலே வராது என்றான். எனவே, அவர்களுக்கு உரிமை கொடுடா! என்றான். பாரதி சொல்ல வில்லையா! "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

படிக்க வைங்கடா! பெண்ணைப் படிக்கக் கூடாது என்கிறான்; வீட்டுக்குள்ளேயே இருக்கட்டும் என்கிறான்; அதுவும் கொஞ்சம் பருவம்

எய்திவிட்டால் சுத்தமாக நிறுத்திவிடுவான். காலாகாலத்தில் ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுப்பதற்கு என்ன மாடா? - சந்தை மாடா? கையில் பிடித்துக் கொடுப்பதற்கு நம்ம சந்தையில் என்ன செய்வான். இங்கேயிருந்து ஒரு மாட்டைப் பிடித்துக் கொண்டு போவான்; அங்கே அவன் ஒருத்தன் மாடு வாங்குகிறவன் ஒரு கயிறு கொண்டு வருவான்; இவன் கயிற்றை மட்டும் கொடுத்துவிட்டு, மாட்டை அவன் கயிற்றிலே கட்டிக் கொண்டு போய்விடுவான். அதுதானே திருமணம்! அப்படித்தானே இருந்தது! அதை யெல்லாம் மாற்ற விரும்பினானா இல்லையா!

**"பட்டங்களாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்**
**பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காண் என்று கும்மியடி"**

அறிவிலே யார் இளைப்பு; இரண்டு பேருக்கும் ஒன்று. தங்கப் பதக்கம் வாங்கினால் பல்கலைக்கழகத்தில் ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகம் வாங்குகிறார்கள். இப்போது தமிழ்நாட்டினுடைய நிலைமை என்ன? 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவா? பெண்கள் அதிக விழுக்காட்டில் வெற்றி பெற்றார்கள்! 10 ஆம் வகுப்புத் தேர்வு முடிவா? பெண்கள் அதிக விழுக்காட்டில் வெற்றி பெற்றார்கள்! எம்.பி.பி.எஸ். தேர்வில் தங்கப் பதக்கமா? பெண்கள் 7 பேர் வாங்குகிறார்கள். ஆண்கள் 3 பேர் வாங்கி னார்கள் என்பதுதான் வரும்! ஏனென்றால் நம்ம பையன் களுக்குப் பல வேலைகள்! பல பொறுப்புகள்! அதையெல்லாம் முடித்து விட்டுத்தான் படிக்க முடியும்! அவங்களுக்கு அப்படி இல்லை; அப்படித்தான் படிப் பார்கள்! அவர்கள் எல்லாம் போட்ட வித்துதானே இன்றைக்கு வருகிறது. அன்றைக்குப் பாரதிதாசன் பெண்களுக்காக - இன்னும் சொல்லப் போனால் ஒருபடி மேலே போகிறான். இளமைக் காலத்தில் ஒரு பெண் திருமணம் செய்து கொள்கிறாள்; எதிர்பாராமல் கணவன் இறந்து விட்டால், அதோடு மூடி வைத்துவிடுகிறீர்கள்! கைம்மை நோன்பு ஏற்கச் சொல்லி அது நியாயமா? என்று கேட்கிறான்.

யாருக்கும் வெட்கமில்லை; சாத்திரம் பார்க்காதே! ஒரு கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திடச் சாத்திரம் பார்க்காதீர்! ஒரு படிமேலே போய்ச் சொல்லிவிட்டான். ஏனென்றால், "கணை விடு பட்டதும் லட்சியம் தேடும், நம் காதலும் அவ்வாறே" ஏண்டா! அவுங்க கைம்மை நோன்பை நோற்கச் சொல்லி காலி பண்ணுகிறீர்கள்! மறுமணம் செய்து வைக்கச் சொல் என்று சொன்னவன். நேரடியாக, பாரதி சொல்லவில்லை. ஆனால் அவர் விரும்புகிறார். "காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்; காதலினால் மானிடர்க்குக் கலவி யுண்டாம்; உங்களுக்குப் போடுகிற கட்டளையிது! ஆதலினால், மானிடரே! காதல் செய்வீர்! அஃதொன்றே இவ்வுலகத்தின் தலைமையின்பம்!" என்று எல்லோரையும் காதல் செய்யக் கூப்பிடுகிறான். நமக்குத்தான் நேரமில்லையே தவிர, அவன் கூப்பிடுகிறான்.

**"ஆதலினால், மானிடரே! காதல் செய்வீர்!**
**அஃதொன்றே இவ்வுலகத் தலைமையின்பம்!"**

என்று எவ்வளவு தெளிவாக இருக்கிறான் பாருங்கள்! அவனும் காதல் உணர்ச்சியைப் பாடுகிறான்; இவனும் பாடுகிறான். அதிலே யாருக்கும் வேறுபாடு கிடையாது; இரண்டு பேருக்கும் ஒத்த கருத்திருக்கிறது.

அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில், இரண்டு பேரும் பழகிக் கொண்ட அந்த முறைகளில், சில இயக்கங்கள் எல்லாம் வந்துவிடுகின்றன. விடுதலை இயக்கத்திற்காக அவர் பாடுபட்டார், இவர் கொஞ்சம் தீவிரமாக இயக்கத்திற்காகப் பாடுபட்டார். ஆனாலும் எந்தக் காலத்திலும் பாரதி பாரதிதாசனைக் கண்டித்ததில்லை. பாரதிதாசன் பாரதியார் வழியில் குறுக் கிட்டதில்லை. அவருக்கு என்ன வருத்தம்! பாரதி இன்னும் பாராட்டப்பட வேண்டும் என்று பாரதிதாசன் கருதினார். அவருடைய கனவு இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது. உள்ளபடியே பாராட்டப்படுகிறான். எங்கேயோ இருக்கிற மலேசிய நாட்டில் நான் இப்போது பாரதியைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது அவருக்குப் பாராட்டுதானே! அதே நேரத்தில் உள்ள படியே பாரதிதாசன் பாராட்டப்பட்டார். மறந்துவிடக் கூடாது. அவருக்குத் திராவிட இயக்கங்கள் பின்னணியில் இருந்தன. பெரியார் பின்னே இருந்தார். அண்ணா அந்தக் காலகட்டத்தில் 25,000 ரூபாய் நிதி திரட்டி, ஒரு பொற்கிழி நல்கினார் - பாரதிதாசனுக்கு! அப்போது பெரியார் கூடச் சொன்ன துண்டு! பாரதிதாசன் எல்லாம் ஒரு கவிஞன்; அவனுக்கு எல்லாம் ஒரு பொன் முடிப்பா என்று கேட்டவர் அவர்! அவருக்கு அதெல்லாம் பிடிக்காது, ஆனால் அண்ணா அதை விரும்பினார், ஏனென்றால் வாழுங் காலத்திலேயே பாராட்டக் கூடிய மனப்பாங்குககள் வந்துவிட்டன! அதற்காக இல்லை என்று சொல்லவில்லை! இன்றைக்குப் பாவேந்தருடைய நூல்களை நாட்டுடைமையாக்கி இருக்கிறோம். பாவாணருடைய நூல்களை நாட்டுடைமை யாக்கியிருக்கிறோம்; மறைமலையடிகள் நூல்களுக்கு ரூ.30 இலட்சம்; பாவேந்தர் நூல்களுக்கு ரூ.10 இலட்சம்! முடியரசனுக்கு ரூ.10 இலட்சம்; அப்பாதுரையாருக்கு ரூ.10 இலட்சம்; பாவாணருக்கு ரூ.20 இலட்சம்; கல்கிக்கு ரூ.20 இலட்சம்; திரு.வி.க.வுக்கு ரூ.20 இலட்சம் என்று கொடுத்ததனால்தான் இன்றைக்கு இளவழகன் இவ்வளவு புத்தகங்களை வெளியிட முடிகிறது. இதெல்லாம் எங்கள் காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள்! நாங்கள் நினைக்கிறோம்! நாட்டுக்கு உடைமையாகட்டும்! பாரதியாருடைய நூல்கள்தான் தமிழ்நாட் டிலே முதலில் நாட்டுடைமையானது மறந்து விடக்கூடாது. காங்கிரசுக் கட்சிக்காலத்தில் அவர்கள் நாட்டுடைமையாக்கியது. ஒரே ஒருவருடைய நூல் பாரதியாருடையது மட்டும்தான். ஏ.வி.எம் என்று சொல்லப்படுகிற மெய்யப்ப செட்டியார் அவர்களிடத்தில் அந்த உரிமை இருந்தது. அவர் அரசிலே பணம் வாங்கிக் கொள்ளாமலேயே நாட்டுடைமையாக்கிக் கொள்ளுங்கள் என்று அறிவித்தார். காங்கிரசு கட்சிக் காலத்தில். அதற்குப் பிறகு 1967க்குப் பின்னால் வந்த கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஒன்றும் செய்யவில்லை. அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலம் வருகிறபோது. 1976 க்குப் பிறகு அவர் ம.பொ.சி. நூல்களுக்கு மட்டும் ரூ. 1 இலட்சம் கொடுத்தார். அதுவும் சுருக்கம்தான். பின்னால் தி.மு.க. வருகிறபோது,

பாரதிதாசனுடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டன. 1989-90 இல் நான் அப்போது பேரவைத் தலைவராக இருந்தேன். அதற்குப் பிறகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த போது பட்டுக்கோட்டையினுடைய நூல்கள்; பிறகு அண்ணா அவர்களின் நூல்களுக்கு ரூ.75 இலட்சம்! ஆனால், இப்போது கிட்டத்தட்ட 2 கோடியே 20 இலட்சம் ரூபாயில் ஒருத்தரையும் பாக்கி வைக்கவில்லை! வ.உ.சி. வ.ரா. ஜீவானந்தம், சாமி சிதம்பரனார், மயிலை சீனி வேங்கடசாமி என்று எல்லோருடைய நூல்களும் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. நீங்கள் வாங்கி, நூலைப் படிக்க வேண்டியதுதான்! ஆனால், இரண்டு பேருடைய வாழ்க்கை! என்னைக் கேட்டால், பாரதிதாசனுடைய வாழ்க்கையில் சில குறைகள் உண்டு! அவை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாத - செரித்துக் கொள்ள முடியாத குறைகள்! இன்னும் சொல்லப்போனால் அவை குற்றங்கள். ஆனால், அவற்றை நான் புறந்தள்ளுகிறேன். குணம் நாடிக் குற்றமும் நாடி என்பதனால் அதனைப் புறந்தள்ளுகிறேன். ஆனால், நான் உள்ளபடியே சொல்கிறேன்! பாரதி - தமிழைப் பற்றி, தமிழ்நாட்டைப் பற்றி, தமிழினத்தைப் பற்றி, இந்திய விடுதலையைப் பற்றி அவருக்கிருந்த சிந்தனைதான் நிரம்பியிருந்ததே தவிர அவர் வேறு எதையும் சிந்திக்கவில்லை! ஒரு பக்கம்! அவர் வாழத் தெரியாத கவிஞர்! - வாழத் தெரியாதவர்! அவருக்கு எப்படி வாழவேண்டும் என்ற தெரியவில்லை. காரணம் என்ன தெரியுமா? அவருடைய அந்த நெஞ்சார்ந்த வாழ்வு! நான் சாதாரண மனிதனல்லன்! மற்றவர்களைப் போலத் திடீரென்று செத்துப் போவேன்; அமுங்கிப் போவேன் என்று யாரும் நினைக்காதீர்கள்!

**தேடிச் சோறு நிதம் தின்று - பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவம் எய்தி - வெறும்**
**கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வேன் என்று நினைத்தாயோ?**

பாரதி நான் வேடிக்கை மனிதனல்ல; இலட்சிய மனிதன் என்று அந்தப் பாட்டிலேயே சொல்லிவிடுவான்; சோற்றைத் தின்கிறது; வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகிறது, அதற்குத் தான் ஒரு பெரிய கூட்டம் இருக்கிறதே! எனவே, அப்படி இருக்க முடியாது என்று சொன்னான். அதே நேரத்தில் பாரதிதாசன் ஒரு படிமேலே போய், அவர் தன் வாழ்வைப்பற்றிச் சொன்னார். இவர் தன் வாழ்வு அல்ல; தமிழின் வாழ்வுதான் என் வாழ்வு என்று சொன்னார்.

**செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!**
**செயலினை மூச்சினை உனக்களித்தேனே!**
**நைந்தாய் எனில் நைந்துபோகும் என் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!**

நீ நைந்தால் நானும் நைந்து போவேன்! உனக்கு நல்லது என்றால் எனக்கும் நல்லதுதான்! தமிழுக்கு வாழ்வா? தமிழ்க்குடிமகனுக்கு வாழ்வு! தமிழ் நலிகிறதா தமிழ்க்குடிமகன் ஒழிகிறான் என்று பொருள் என்று அவர் கருதினார். அதனால்தான்


"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்றூது சங்கே!"
திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின கூட்டமென்று சிறியோர்க்கு ஞாபகம் செய்
முழங்கு சங்கே!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்!
கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!

என்று சொல்லி ... ஆர்ப்பாட்டத்தோடு முடிக்கின்ற ஆற்றல் பாரதி தாசனுக்கு உண்டு! எனவே, இரண்டுபேரும் தமிழுக்காக வாழ்ந்தவர்கள்! தமிழைப் பேணியவர்கள்; தமிழ்நாட்டை நினைத்தவர்கள்! இந்தியாவை நினைத்தவர்கள்! தமிழன் எல்லாவித மூட நம்பிக்கைகளிலிருந்தும் விடுதலை பெறவேண்டும். ஆனால் பாரதி அப்படிக் கருதினார். இவ்வளவு தெய்வங்களைப் பாடினாலும், ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி அலைந்திடும் அறிவிலிகாள்! என்று சொன்னவனும் அவன் தான். மறந்து விடக்கூடாது நீங்கள்! அவனும் சொல்கிறான்! அவனுக்குக் கிடைத்த வாய்ப்புகள் அதிகம்! சமூக சீர்திருத்தமா? பாரதிதாசனுக்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் பாரதியாருக்குக் கொஞ்சம்தான் வாய்ப்புக் கிடைத்தது. எனவே, அவருடைய காலம் அது! எனவே, அவருடைய காலத்தில், அவருடைய சூழலில், அவர் உச்சத்தில் நின்றார். ஆனால், பின்பற்றி வந்த பாரதிதாசனுக்குக் கிடைத்த இயக்கப் பின்னணி, அவருக்குக் கிடைத்த தமிழ் வாய்ப்புகள்! சமூக சீர்திருத்தம் போன்ற இயக்கங்களோடு கொண்ட தொடர்புகள் அவரைத் தூக்கி நிறுத்தின. எனவே, இதில் யார் சிறந்தவர் என்ற கோணத்தில் நான் பேசவில்லை. எப்போதுமே அதைச் சொல்லக் கூடாது! இரண்டு மாணவர்களில் இவன் ஒரு கோணத்திலே சிறந்தவன்; அவன் ஒரு கோணத்திலே சிறந்தவனாக இருக்க முடியும்! ஏனென்றால்,

எனை வகையான் தேறியக் கண்ணும் வினைவகையான
வேறாகும் மாந்தர் பலர்.
இதுதானே இலக்கணம்! திருக்குறளும் அதுதானே!

எனக்கும் ஸ்ரீதரனுக்கும் என்ன வேறுபாடு; எனக்கும் சரவணனுக்கும் என்ன வேறுபாடு என்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அவர் அவர் கடமையை இங்குச் செய்கிறார்; நான் என் கடமையைத்தான் செய்கிறேன். அவ்வளவுதான்! அவர் இங்கே பாராட்டப் பெறுகிறார்; நான் அங்கே பாராட்டப் பெறுகிறேன். அவ்வளவுதான்! அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும்! பிறகு வரலாறு எழுதுகிறபோது, இந்தத் துறையில் என்ன செய்கிறோம், அது அப்படித்தான் வரும். எனவே, இந்த வகையில், ஒரு தன்னலமற்று, தூய சிந்தனை மட்டுமே படைத்து, தன் காலத்தில் தன் வாழ்க்கையைச் சரியாக நடத்த முடியாமல் திண்டாடி, தடுமாறி, வறுமைக்கு ஆட்பட்டு, அவ்வளவு தூரம் வாழ்ந்த பாரதி! நம் நினைவில் நிற்கிறான். பிற்காலத்தில் பாவேந்தர் போன்றவர்கள் வறுமைக்கு ஆட்படவில்லை என்றாலும் பெருமைக்கு ஆட்பட்டார்கள்! அவருடைய காலம் அவருக்குக் கை கொடுத்தது. எனவே, அவர் விட்டுச் சென்றதை இவர் தொடர்ந்தார். இன்றைக்கு நாங்கள் இந்த இரண்டுபேர் விட்டுச் சென்றதைத் தொடருகிறோம்! நீங்களும் தொடருங்கள்!

நன்றி!



8

# போகிற போக்கில் ... சோகூர்பாரு

## 04.12.2002

தமிழகத்தில் கட்சிக் கூட்டங்கள் ஏராளமான நடைபெறுகின்றன. அதுவும் நேரிடையாகத் தெருவில் போட்டு விடுவோம். இங்கே தெருவில் போட்டு நடத்துவதற்கு அனுமதி கிடையாது என்று நினைக்கிறேன். எங்கேயும் அனுமதி இல்லை. ஆனால், எங்கள் நாட்டைத் தவிர; ஏனென்றால் ஓர் அரங்கத்தில் போட்டால் நீங்கள் ஒழுங்காக வருவதில்லை என்று நாங்கள் தெருவுக்கே வந்துவிடுவோம்; அப்படி வைத்துக் கொள்வோம்! அப்படித் தெருவிலே கூட்டம் போடுவதைப் பார்த்தால், உள்ளபடியே சில நேரம் 5,000; 10,000 பேர் கூடியிருப்பார்கள்! அதையும் நீங்கள் பார்க்க வேண்டும்; பேசுகிறவர் யார் என்பதை நம்ம ஆளு கண்டு பிடிப்பான்! அதிலே தெளிவாக இருப்பான்! அதில் இன்னொரு பெரிய வியப்பு என்ன வென்றால், இதில் முன்னாலே பேசுகின்ற பேச்சாளர்கள் அவரவர்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள்! அப்போதெல்லாம் யாரும் முன்வந்து நிற்பதில்லை. அந்தப்பக்கமாக நின்று கடைசிப் பேச்சாளர் பேசும் போது பெருங்கூட்டம் வந்து நிற்கும்! ஏனென்றால் அதற்காகத்தான் எல்லோரும் வந்திருக்கிறார்கள்! அந்த மாதிரி தெருவிலே வந்து பேசுவதைக் குறைக்க வேண்டும் அல்லது அறவே நிறுத்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும், அது எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து, இன்னும் சொல்லப் போனால் இந்தியா முழுவதும் சேர்ந்து முடிவெடுக்கவேண்டும்; இப்போது இந்தப் பிறவியில் நடக்கப் போவதில்லை. அதனால் இதுபோன்ற ஓர் அரங்கத்தில் பேசுகின்ற ஒரு மகிழ்ச்சி என்ன என்றால் வெளிச் சிதைவுகள் இல்லாமல், உள்ளம் ஒன்றி, மொழிபற்றி, இனம்பற்றி, நாடுபற்றி இவற்றை நமக்கு அடையாளம் காட்டுகின்ற இலக்கியங்கள் பற்றி எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பை உங்களுக்கு நான் தரமுடியும். காரணம்! வெளியுலகத்திலே நான் நடத்துவது பாடமல்ல. அது பேச்சு; ஆனால் அதே நேரத்தில், அதே அரங்கத்தின் உள்ளே ஒரு கல்லூரி முதல்வராக, ஒரு கல்லூரிப் பேராசிரியராக 23 ஆண்டுகள் பணியாற்றியவன் என்ற முறையில், மாணவர்களை வைத்துக் கொண்டு பேசுவதில் இருக்கின்ற மகிழ்ச்சி வேறு எதிலும் இருக்க முடியாது. அதுவும் உங்களைப் போன்று வளர்ந்து ஏற்கெனவே கேட்டு, பயிற்சி பெற்ற - தமிழின்பால் உண்மையான அன்பு கொண்டவர்களிடத்தில், அதுவும் சோகூர்பாரில் இருக்கின்ற பெருமக்களிடத்தில் பேசுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 1987 இல் ஒருமுறை நான் இங்கு வந்து பேசி இருக்கிறேன் என்பது உங்களில் ஒரு சிலருக்காவது

நினைவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். உலகத் தமிழ் மாநாட்டின் போது, சோகூர்பாரில் ஒரு முக்கிய உரை நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப் பிறகு 15 ஆண்டுகள் கழித்து இன்றைக்குத்தான் வந்திருக்கிறேன்.

பொதுவாகவே, எனக்கு வருத்தம் என்னவென்றால், புதிய புதிய நாடுகள் தங்களுடைய மொழி அழிந்துபோன நிலையில்கூடக் கவன மெடுத்து, மீண்டும் அதை ஆக்க மொழியாக்கியிருக்கின்றன. நம்முடைய இளம்பாரி மென்மையாகத்தான் சுட்டினார்; நான் அதை உண்மையாகவே சொல்ல வேண்டும்! உலகத்தின் தொன்மை மொழிகள் 6. கிரேக்க மொழி, இலத்தீன் மொழி, சீனமொழி, இப்போது இசுரேலில் புழக்கத்திலே இருக்கிறதே ஈப்புரு என்று சொல்லப்படுகிற எபிரேய மொழி; இந்தியாவில் இருக்கின்ற தமிழ், சமற்கிருதம் இந்த 6ம் தான் தொன்மையான மொழிகள்! அதாவது நம்முடைய மொழியினுடைய தொன்மை கடைசி வரைக்கும் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் அதற்கு இலக்கணம் இருந்திருக்க வேண்டும்! இலக்கியம் இருந்திருக்க வேண்டும்; அதைவிட முக்கியம் மக்களுடைய பேச்சுவழக்கில் இருந்திருக்க வேண்டும். காரணம் இப்போது சமற்கிருதம் இருக்கிறது! ஆனால் சிறு சிறு சூத்திரங்களாக, சுலோகங் களாக இருக்கிறதே தவிர நேருக்கு நேர் உரையாடுகின்ற நிலைமையில் இல்லை. எனவே, இலக்கண ஆசிரியர்களின் நோக்கில், அது இறந்த மொழி; It is a dead language. அது போல இலத்தீன்கூட இப்போது பெரிய அளவில் பேச்சு வழக்கில் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கிறது. உரோமாபுரியினுடைய தெருக்களில் போய்ப் பார்த்தால் நமக்கு ஒரு மகிழ்ச்சி இருக்கும். நாம பேசுகிற ஆங்கிலச் சொற்களெல்லாம் அங்கு இருக்கும். அங்கிருந்துதானே எடுத்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலே பெரும் பாலான சொற்கள் இலத்தீனத்திலிருந்து எடுக்கப்பட்டவை. அடடே! இதிலிருந்துதான் எடுக்கப்பட்டிருக்கிறது என்பது பிறகுதான் நமக்குத் தெரியும். எனக்கு வியப்பு என்னவென்றால், இந்த ஈப்புரு மொழியினுடைய வளர்ச்சிதான்; அதுவும் இறந்த மொழிதான்! ஏசுபெருமான் பேசிய மொழி அராமிக் மொழி; அதற்குப் பிறகு 'விவிலியம்' என்று சொல்லப்படுகிற பைபிள் முதன்முதலாக எழுதப்பட்டது ஈப்புரு மொழியில்! அதுதான் தொன்மை மொழி! அதற்குப் பிறகு இலத்தீன் மொழியில்! அதற்குப் பிறகு மார்ட்டின் லூதர் போன்றவர்கள் எல்லாம் போராடி, அதை ஆங்கில மொழிக்குக் கொண்டு வந்தார்கள்! அப்போது பெரிய எதிர்ப்பு எல்லாம் இருந்தது; இலத்தீன் மொழியிலிருந்து மாற்றக் கூடாது; இலத்தீன் ஒரு தெய்வமொழி! நாம எப்போதுமே மேலே தூக்கி வைத்துத்தான் அதைக் 'காலி' பண்ணுவது! சமற்கிருதத்தை அப்படித்தான் காலி பண்ணினார்கள்! தேவமொழி என்று சொல்லித்தான் காலி பண்ணினார்கள்! எனவே, தேவ மொழி என்றார்கள்! மக்கள் மொழியில் அது வரவேண்டும் என்றார்கள்! ஆங்கிலத்தில் வந்தது; பிறகு ஆங்கிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்குத் தமிழில் வந்து விட்டது. எனவே, தேவாலயங்களில் போய்த் தமிழில் கேட்கலாம், விவிலியம் தமிழில்தான் சொல்லப்படுகிறது. அவர்களுடைய வழிபாடு தமிழில் நடைபெறுகிறது! அவர்கள் ஒன்றும் ஆங்கிலத்தில். இலத்தீனத்தில் நடத்தவில்லை. ஆனால், இந்த ஈப்புருக்காரர்களுக்கு என்ன பாருங்கள்!

இடையில், அந்த மொழி இறந்து, அறவே போய்விட்டது. ஆனால், எனக்கு வியப்பு என்னவென்றால், எங்கேயோ சிதறிக்கிடந்த யூதர்களெல்லாம் ஒருங்கிணைந்து ஓர் ஆறு (6) மாவட்டங்களைக் கொண்ட சிறு நாட்டை - இசுரேல் நாட்டை உருவாக்கி, அமெரிக்கா மற்றும் மற்ற நாடுகளுடைய ஆதரவோடு உறுதுணையோடு உருவாக்கி - உருவாக்கிய பிறகு தங்க ளுடைய ஈப்புரு மொழியை எப்படி வளர்க்கலாம் என்று திட்டமிட்டு, இறந்துபோன ஒரு மொழியை மீண்டும் உயர் கல்வி வரைக்கும் பயிற்று மொழியாகக் கொண்டு வந்த பெருமை அவர்களுக்கு உண்டு. இன்னும் சொல்லப்போனால், முற்றிலும் ஆட்சி மொழியாக்கிய பெருமையும் அவர்களுக்கு உண்டு! எனவே, இறந்துபோன மொழியையும் தூக்கி நிறுத்த முடியும்! அதை வாழும் மொழியாக்க முடியும் என்று மெய்ப்பித்தவர்கள் - உலகத்திற்கு மெய்ப்பித்தவர்கள் யூதர்கள் மட்டும்தான்! நமக்குத்தான் ஏற்கெனவே இருக்கிறதே! நாமும் 2500 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறோம்! இன்னும் சொல்லப்போனால், அடிக்கடி அதற்கான பாட்டை நாம் வைத்திருக்கிறோம்! "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி - தமிழ்க்குடி என்று சொல்லிக் கொண்டே அப்படிக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பாவேந்தர் போன்றவர்கள் என்ன கருதினார்கள் என்றால், நம்மகிட்டே பெரிய குறை இருக்கிறதே! அதை நாம் ரொம்பநாள் உணரவில்லையே! என்று சொன்னார்கள்;

> **"எமது தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்**
> **தலைமுறைகள் பல கழித்தோம்;**
> **குறைகளைந்தோமில்லை"**

என்று சொன்னான். நம்ம தமிழ் உயர வேண்டும்; அது வேறு! தமிழ் உயர்வு என்று இப்போது பேசச் சொன்னால் நான் தனியாகப் பேசுவேன்! இலக்கணச் செழுமை! என்ன? இலக்கியச் செழுமை என்ன? தொல் காப்பியத்திலிருந்து தொடங்கி, சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிறு காப்பியங்கள், பெருங்காப் பியங்கள், கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம், சிற்றிலக்கியங்களில் 96 வகை! இக்கால இலக்கியங்களில் புதினம், உரைநடை, சிறுகதை, நாடகம் எல்லாம் பேசி, மொத்தமாகப் பார்த்தால் அது 4,5 நாட்களாகிவிடும்! எட்டு மொத்தப் புத்தகங்களுடைய செய்தி அது! அது தமிழினுடைய சிறப்பு! ஆனால் தமிழினுடைய சிறப்பு ஒரு பக்கம் இருக்கிறது; அதை யாரும் இனிமேல் மாற்ற முடியாது! என்று மட்டும் மறந்து விடக்கூடாது. நாம் அந்தப் பாதையையெல்லாம் கடந்து வந்துவிட்டோம். இனிமேல் தமிழ் எப்படி வந்துவிட்டது என்றால்,

> **"முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமை;**
> **அதே நேரத்தில்,**
> **பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமை!"**

என்னைக் கேட்டால், இணையத்தில் தமிழ் நிமிர்ந்து நிற்கிறது! என்று சொன்னால், அதற்குச் சிங்கப்பூர்த் தமிழர்களும், மலேசியத்

தமிழர்களும்தான் காரணம்! சிங்கப்பூரில் கோவிந்தசாமி போன்றவர்கள்! இங்கே முத்து நெடுமாறன் போன்றவர்கள்; அவர்கள்தான் ஒரு மென் பொருளைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகப்படுத்தினார்கள் என்னைக் கேட்டால், எங்களுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் அவர்கள் இரண்டு பேரும்தான். நான் இணையத்தை முதலில் சிங்கப்பூரில் வந்துதான் பார்த்தேன். ஆனால், தாய்த்தமிழகம் அதை ஒப்புக் கொண்டு வந்தால்தான் அது மேலே வரும்! எனவே, முதல் மாநாட்டுக்குச் சிங்கப்பூருக்கு அரசின் சார்பில் நான் வந்தேன். கலைச்செல்வன் இருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அதற்குப் பிறகு சென்னை சென்ற பிறகு நாங்கள் கலந்து பேசி, அதைப் பெரிய மாநாடாகப் போட்டு, இதில் ஏற்கெனவே இருக்கின்ற விசைப் பலகையைத் (keyboard) தரப்படுத்தினோம். முத்து நெடுமாறனின் விசைப் பலகை வேறு; கோவிந்தசாமியினுடைய விசைப்பலகை வேறு! இரண்டும் வெவ்வேறாக, வெவ்வேறு எழுத்துகள் இடம் பெற்றிருக்கும்! இதையெல்லாம் ஒருமுகப்படுத்தினால்தான் தமிழ் வளரும்! எனவே, standardisation of the keyboard என்று தமிழக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது! அதற்கு முன்னால் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டில் தமிழ் மென்பொருள் 12 கோடிக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. உங்களுக்கு செய்தியாகச் சொல்கிறேன். இன்றைக்கு 5.223 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. வளர்ந்திருக்கிறோம்! இன்னும் சொல்லப்போனால், இந்தியாவில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடி இணையத்தில் - மின்னஞ்சலில் - கணினியில் முழுமையாக இடம் பெற் றிருக்கிற மொழி உண்டு என்றால் அது தமிழ்தான்! எனவே, அதை யாரும் மாற்றி அழிக்கமுடியாது! எனவே, கவலையில்லை! நாம் வந்து விட்டோம்! ஆனால், பாவேந்தர் ஒவ்வொன்றையும் கவனிக்கிறார். நம்முடைய வாழ்வியலில் மொழியைக் கொண்டு வந்தோமா? வரவர நாம பேசுவது குறைந்துபோய்விட்டது. அதுவும் தமிழில் பேசுவது குறைந்து போய் விட்டது! பிறகு தமிழில் பேசினாலும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவது குறைந்து போய் விட்டது! "அப்படியே என்னுடைய friend ஐ meet பண்ணி, அப்படியே Railway station ஐ Reach பண்ணி, Train ஐ Catch பண்ணி, இப்படிப் பேசிக் கொண்டிருப்பவர்கள் தமிழ்நாட்டில் ரொம்ப பேர் இருக் கிறார்கள்! அதற்காக நான் ஒரு பெயர் வைத்திருக்கிறேன் - "பண்ணித் தமிழ்". ஏனென்றால் தமிழில் முத்தமிழ்தான் இருக்கிறது! இப்படி ஒரு தமிழ் இருக்கிறது! ஏனென்றால் 'பண்ணி' 'பண்ணி' என்ற சொல்லை மட்டும் சேர்த்து, என்ன வேண்டுமானாலும் பேசிக் கொண்டேயிருக்க லாம். அப்படித்தானே வரும் உங்களுக்கு! நான் என்ன சொல்லுகிறேன்! ஆங்கிலத் தில் பேசுகிறீர்களா? முழுமையாகப் பேசுங்கள்! இல்லை தமிழில் பேசினால் முழுமையாகப் பேசு! அதுதான் என்னுடைய கோட்பாடு! நான் ஆங்கிலத்தில் பேசுவேன். ஏனென்றால், ஒரு கல்லூரி முதல்வராக இருந்த ஒருவனுக்கு முதுகலை முடித்த முனைவர் பட்டம் பெற்ற, சட்டப் பேரவைத் தலைவராக இருந்து, கவுல், சக்தார் போன்ற எத்தனையோ பேருடைய சட்ட நூல்களை யெல்லாம் அலசி ஆராய்ந்து, தீர்ப்பு வழங்கிய தமிழ்க்குடிமகனுக்கு ஆங்கிலத்தில் பேசுவதில் இடர்ப்பாடு இல்லை!

ஆனால் ஆங்கிலம் தேவைப்படுகிறபோதுதான் நான் பேசுவேன்! அதனால்தான் பாவேந்தர் சொன்னார்; கவிதை வடிவில்; ஆங்கிலத்தைக் கற்கையிலும், அயல் மொழியைக் கற்கையிலும் எந்தநாளும் தீங்கனியை. செந்தமிழை தென்னாட்டின் பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்! அது முக்கியம்! தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளுங்கள்! இன்னும் எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் படியுங்கள்! நான் வேண்டா மென்று சொல்ல வில்லை! அப்பாத்துரையார் பன்மொழிப் புலவர் என்று சொன்னால் பெருமைதானே தவிர நமக்குச் சிறுமை என்ன? பாவாணர் பல மொழிகளை அறிந்ததனால்தானே நமக்கு இவ்வளவு செய்திகள் கிடைத்தன! 'அரிசி' என்ற சொல்தானே மெல்ல மெல்லப் போய் இலத்தீன் மொழியில் Riza! அந்த Riza தானே அப்படியே Rice ஆகிறது! Rice தானே நம்ம வீட்டுக்கு. வருகிறது! நம்ம ஆளுங்க Rice என்றால் அரிசி என்று சொல்வதா? சோறு என்று தெரியாதா? இரண்டும் Rice தான்! நம்ம ஊரில் கிராமத்தில் - 'சோறு' என்று சொல்வதால், இதுதான் தமிழனை உதைக்க வேண்டும் என்று சொல்வது! சோறு என்று சொன்னால் அவன் என்ன நினைக்கிறான்! இது என்னங்க தாழ்த்தப்பட்ட வீடுகளில் பேசுகிறமாதிரி பேசுகிறீர்களே என்கிறான். ஏனென்றால் rice என்று சொல்வதுதான் மேட்டுக்குடி! அட மேட்டுக்குடி என்றால் என்ன? தாழ்ந்த குடி என்றால் என்ன? அடிப்படை அறிவே அவர்களுக்கு இல்லை! சோறு என்பதை நாம மறந்துவிட்டோமே தவிர மலையாளத்தில் மூளையைத் 'தலைச்சோறு' என்று சொல்கிறார்கள்! அவன் பயன்படுத்திக்கிட்டிருக்கிறான்; ஒழுங்காக வைத்திருக்கிறான்; நாம் 'சோறு' என்று சொன்னால் இழிவாம்! அதையே சிலபேர் வடமொழியில் 'சாதம்' பிறகு rice! அவன் என்ன சோற்றைக் கொண்டு வந்து கொட்டுவானா? இல்லை அரிசியைக் கொண்டு வந்து கொட்டுவானா? Rice என்றால் அரிசிதானே! பொருள் விளங்காமல் பேசினால் ஏற்றுக் கொள்கிற தமிழன், பொருளோடு பேசுகிற போது ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், கோளாறு மொழியில் இல்லை; இவனிடத்தில் இருக்கிறது! கோளாறு இவனிடத்தில் இருக்கிறது! அது ரொம்பமுக்கியம்! ஏனென்றால் நமக்கு இருக்கிற சொல் வளம் வேறு எதிலும் இல்லை. தொன்மை யான சொல்லையும் எடுத்துக் கொள்வோம்! போர்ச்சுகீசியர் வருவதற்கு முன்னால், நாம வீட்டில் சன்னலை வைத்துக் கட்டவே இல்லையா? எவனும் காற்று வாங்கவே இல்லையா? நான்கு பக்கமும் சுவரை அடுக்கி வைத்திருப்போமா? இப்போது எதையெல் லாம் வைத்திருக்கிறோமா அதெல்லாம் சங்ககாலத்தில். தொல்காப்பியர் காலத்தில் இல்லவே இல்லையா? மற்ற காலத்தில் இருந்ததே! கோவலனும் கண்ணகியும் தங்களுடைய முதல் இரவிலே ஒரு மாடத்திற்குள் அறையில் புகுகின்றபோது, எழுநிலை மாடத்து இடைநிலத்தில் உள்ள கட்டிடத்திற் குள் போகிறபோது, அந்த அறைக்குள் தென்றல் நுழைந்தது. அதுமட்டும் தான் நுழைய முடியும்! எதன் வழியாக? சாளரத்தின் வழியாக நுழைந்தது என்று இளங்கோவடிகள் போட்டார். "கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து"! அப்போது வைத்துக் கட்டியிருக்கிறான்! பட்டினப்பாலையில் வளி நுழையும் வாய் என்றான். வளி என்றால் காற்று! காற்று வருகிற போகிற

வழி! இன்னும் சொல்லப்போனால் "பலகணி! கண் கண்ணாக இருக்கும்! இப்போது நம்ம ஊரில் என்ன பெயர் வைத்திருக்கிறார்கள் என்றால் ஜாலி வொர்க் அது என்னடா ஜாலி வொர்க் ஜல்லி வொர்க்! ஜல்லியிலே கண் கண்ணாக வைக்கிறான் பாருங்கள்! அது ஜாலி வொர்க்! நம்ம ஆளு நினைத்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவான்! ஜாலி வொர்க் என்கிறான். அதற்குத்தான் பல கண்களை உடையது பலகணி என்று பேர்! அப்புறம் காற்று வாரி என்றிருக்கிறது; காலதர் என்று இருக்கிறது. 5 சொற்கள் இருந்தாலும் நாம் சன்னல் என்ற சொல்லைப் பிடித்துக் கொண்டோம். போர்ச்சுகீயன் வந்த பிறகு தந்த சொல். மிஞ்சிப் போனால், தனித்தமிழ்ப் பற்றுள்ளவர்கள் ஜன்னல் என்று எழுதாமல், சன்னல் என்று எழுதுவார்கள்! ஆனால், பல அறிஞர்கள் இப்போது சாளரம், பலகணி என்றெல்லாம் பயன்படுத்துகிறார்கள். இது எதனால் வந்தது! இதெல்லாம் பாவாணர் தமிழர்களுக்குச் சொன்ன பிறகுதானே தெரியும்! நாங்களும் படிக்கிறோம்; இலக்கியம் எல்லாம் படிக்கிறோம்! மேற்கோள் காட்டுகி றோம்! எனவே, நம்முடைய செல்வங்கள் உள்ளன! முதலில் எடுத்துப் பயன்படுத்தத் தெரிய வேண்டும்! ஏங்க! உங்கள் முன்னோர் ஒரு புதை பொருள் புதைத்து வைத்துப் போயிருக்கிறார். உங்கள் வீட்டு மூலையில்! 20, 30 ஆண்டுகளாக உங்களுக்குத் தெரியவில்லை. யாரோ உங்கள் அப்பாவோடு பழகினவர்; முன்னோருடைய தாத்தாவோடு பழகினவர் எதிர்பாராமல் உங்களைச் சந்தித்து, ஏப்பா! உங்கள் வீட்டுக்குள் ஏதாவது புதைச்சு வைச்சிட்டுப் போனான் என்று சொன்னானே அதை நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்ட உடனே நீங்கள் என்ன பண்ணுவீர்கள்? இல்லீங்க. தரையைத் தோண்டுவது முறையல்ல! என்றா சொல்லுவீர்கள்! அன்றைக்கு ராத்திரியே கதவைப் பூட்டி விட்டு, என்ன ஆனாலும் சரி! எத்தனை அடி ஆழமானாலும் சரி! தோண்டி எடுத்து விட்டுத்தானே மறுவேலை பார்ப்பீர்கள்? அந்த முன்னோருடைய புதையலை மட்டும் தோண்டி எடுத்துப் பார்க்கிறீர்கள்! இதெல்லாம் புதை பொருள் நூல் தானே! நீங்கள் தோண்ட வேண்டாம்; நாங்கள் தோண்டி எடுத்துத் தருகிறோம் பயன்படுத்துங்கள் ஐயா! அதுதான் என்னுடைய கருத்து! எனவே அது ரொம்ப முக்கியம்! அந்தக் கோணத்தில் இருக்கின்ற நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும் தமிழ்ச் சமுதாயம் என்பது, இப்போது மலேசியாவில் வாழ்கிறவர்கள் மட்டுமல்ல! இன்னும் 39 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்கள் ஈழம், மலேசியாவில் பெரும்பான்மை எண்ணிக்கையோடு சேர்த்து, கிட்டத் தட்ட ஒரு கோடி. தமிழ்நாட்டில் வாழுகின்ற தமிழர்களின் எண்ணிக்கை 6 கோடியே 21 இலட்சம்! இது தான் அடிப்படை! நாங்கள் அதைக் கூடச் சரியாகச் சொல்லமாட்டோம்! நம்ம ஆளுங்க மேடையில் என்ன சொல்வான் உலகத்தில் வாழுகிற 25 கோடி தமிழர்கள் என்பான் எவன் கேட்டான்? விட வேண்டியது தானே! பெருமிதமாகப் பேசுவது! உலகத்தில் வாழுகிற 25 கோடி தமிழர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். எங்கேயிருந்து. சிந்தாதிரிப்பேட்டையிருந்து சொல்வான்! ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் என்றால் தன்னிலையில், முதலில் தன்குற்றம்

நீக்கி, பிறர் குற்றம் காண வேண்டும், அதுதான் வள்ளுவன் நெறி! நீங்கள் தமிழைப்பற்றிக் குறை சொல்வதற்கு முன்னாலே, உங்களிடத்தில் என்ன குறை என்று பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்! தமிழால் எதுவும் முடியும்! மறந்து விடக்கூடாது! ஏனென்றால் நாங்கள் அதை மெய்ப்பித்துக் காட்டியவர்கள்! எல்லாத் துறைகளிலும் எல்லா வற்றையும் உருவாக்கிக் காட்டியவர்கள்! நான் ஒரு முறை சட்ட மன்றத்திலே பேசுகிறபோது 58 மணித் துளிகள் மானியக் கோரிக்கையில் பேசிவிட்டு உட்கார்ந்த போது "தினகரன்" இதழ் கட்டம் கட்டி எழுதியது. தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் 58 மணித்துளிகள் பேசினார்! எந்த இடத்திலும் ஒரு பிறமொழிச் சொல்லைக் கூடக் கலவாமல் இவ்வளவு விறுவிறுப்போடு 58 மணித் துளிகள் பேசியிருக்கிறார் என்று கட்டம் கட்டி எழுதியது. எனவே முடியும்! முடியும்!! எனவே, தமிழ்க் குடிமகனால் முடியும் என்றால் தமிழால் முடியாதா? தமிழால் முடிந்ததனால் தான் தமிழ்க்குடிமகனுக்கு முடிந்தது? அந்தத் தன்னம்பிக்கை உங்களுக்குத் தேவை! அதற்காக நீங்களே எல்லாவற்றையும் உடனே ஒரே நாளில் கற்றுக் கொண்டீர்கள் என்று சொல்ல முடியாது; கற்றுக் கொள்ளவும் முடியாது. மெல்ல மெல்லத்தான் வளரும். எனக்கு எத்தனை ஆண்டுக் காலம் பயிற்சி தெரியுமா உங்களுக்கு! 1957 இல் பாவாணருடைய ஒப்பியன் மொழி நூலை ஓர் உரூபாய் கொடுத்து வாங்கினேன். (இப்போது அந்த நூல் வந்திருக்கிறது. மேடையில் உள்ளது). நான் அன்றைக்கு வாங்கின போது எனக்கு ஒரே உரூபாய்! அதை எவனோ ஒருத்தன் பழைய புத்தகக் கடையில் போட்டுவிட்டுப் போயிருக்கிறான். அவன் 50 காசுக்கு விற்றிருக்கிறான். அவன் வாழ்க! ஏனென்றால் அவன் அதை விற்காமலிருந்தால், நான் வாங்கியிருக்க முடியாது! அதைப் படித்த பிறகுதான் சம்பந்தம், சங்கடம், சந்தேகம், சம்பவம் இவையெல்லாம் வடமொழிச் சொற்கள் என்ற அறிவு அப்போதுதான் தமிழ்க்குடிமகனுக்கு வருகிறது! அதுவரைக்கும் எனக்குத் தெரியாது; நானும் அதைக் கலந்து பேசிக் கொண்டிருந்தவன் தான்! சரி! இனிமேல் நாம் நல்ல தமிழில் பேசவேண்டும்! பிறமொழிச் சொல்லைக் கலந்து பேசக்கூடாது! எப்படி வந்தது? மறைமலையடிகளும் அவருடைய மகள் நீலாம்பிகையும் பேசிக் கொண்டிருக்கும்போது, வள்ளலாருடைய பாட்டைப் பாடுகிறபோது எல்லாம் எழுதின வள்ளலார், எதற்காக யாக்கை என்று எழுதாமல் தேகம் என்று எழுதினார் என்று கேள்வி கேட்டதனாலேயே தனித்தமிழ் இயக்கம் வந்தது! "உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், பெற்ற தாய் தனை மக மறந்தாலும் (பாட்டைச் சொல்லிக் கொண்டு வரும் போது 'டக்' என்று மறைமலையடிகள் கேட்கிறார். எல்லாம் நல்ல தமிழிலே இருக்கிறது! இந்தத் 'தேகம்' மட்டும் மாற்றினால் சரியாக இருக்குமே என்று நினைக் கிறார். பிறகுதான் தனித்தமிழ் இயக்கம்! அதுமட்டுமல்ல! மறைமலை யடிகளின் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! கிட்டத்தட்ட 10 நூற்றாண்டு காலமாக வடமொழி பாதி; தமிழ் பாதிதான் என்று எழுதுவான்! மணிப்பிரவாள நடை என்று பெயர். எனக்கு இப்போது அந்த நடையைப் படித்துச் சொல்ல முடியாது; எனக்கு வரமாட்டேன் என்கிறது! படித்துச் சொல்ல முடியவில்லை. ஆனால்,

அப்படித்தான் கலந்து எழுதுவான். ஒரு பயலும் கண்டு பிடிக்க முடியாது; தமிழ் எந்த இடத்தில் ஒளிந்திருக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டும்! இவ்வளவு அழுத்தந் திருத்தமாக, ஈட்டுரை, பல்வேறு வடமொழியாளர்களுடைய வலிந்த உரைகளிலெல்லாம் இடம்பெற்ற மணிப்பிரவாள நடையை ஒரு மறைமலையடிகள் தோன்றி, வடமொழிச் சொற்களை விலக்குங்கள்! நல்ல தமிழ்ச்சொற்களைப் பெய்து பேசுங்கள்! என்று கட்டளையிட்டு, அதற்குப் பிறகு தேவநேயப் பாவாணர் போன்றவர்கள் இயக்கமாக்கி, எங்களைப் போன்றவர்கள் தொண்டர்களான பிறகு, வெற்றி பெற்றோமா? இல்லையா? அன்றைக்கு அது 3 உருபாய் விலை; நான் ஒரு ரூபாய்க்கு வாங்கினேன். இதோ இருக்கிறது பாருங்கள்! உங்களுக்குக் காட்டுவதற்காகக் கையில் வைத்திருக்கிறேன்! "இசையரங்கு - இன்னிசைக் கோவை" இது 1969 இல் உலகத் தமிழ்க் கழக மாநாட்டைப் பரமக்குடியில் நான் நடத்தி, பாவாணருக்குச் சிறப்புச் செய்த காலத்தில், நான் சொல்வது 1969 இல் சிறப்புச் செய்த காலத்தில் நான் வெளியிட்ட நூல்! 50 காசுக்கு! இதுதான் என்னால் முடிந்தது, ஆனால் மேடையில் இருக்கிறது இளவழகனால் முடிந்தது! எனவே, என்னைவிட அவர் பன்மடங்கு உயர்ந்து இன்றைக்குப் பாவாணருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். அப்படித் தான் சொல்ல வேண்டும்! எனவே, வடமொழியை நீக்கிப் பேச முடியும்! இப்போது என்ன சிக்கல் வந்து விட்டதென்றால், வடமொழியை விட்டு விட்டோம்! ஆங்கிலத்தைப் பிடித்துக் கொண்டோம்! இப்போது மணிப்பிரவாளத்திலிருந்து தமிங்கிலம்! தமிழ் மற்றும் ஆங்கிலம், என்ன எழுதுகிறான்! தொலைபேசி மணியடித்தது என்று எழுத மாட்டானாம்! தொலைபேசி டிரிங்கியது! டிரிங் டிரிங் என்று அடிப்பதால் அது டிரிங்கியது. எப்படி எழுதுகிறான் பாருங்கள்! வேண்டுமென்றே சில பேர். அதெல்லாம் நிற்காது; அது வேறு; ஆனால் எழுதுகிறான்; காசு போட்டு விற்கிறான் உங்களுக்கு, எனவே இதுபோன்ற கோணம்! நீங்கள் ஏதாவது எழுதுங்கள்! சில தேவையில்லாத தவிர்க்கமுடியாத பிறமொழிச் சொற்களை நாம் கலந்து கொள்வது வேறு! சில தவிர்க்கமுடியாத சொற்கள் தேவைப்பட்டால் அறிவியலில் நாம் கலந்து கொள்ளலாம்! தப்பு ஒன்றும் கிடையாது! நான்கூடக் கல்லூரி முதல்வராக இருந்தவன்; பேராசிரியர்களுக்கும் சொல்வேன்! அது உண்மையும் கூட! 192 பேர் பி.காம். என்று சொல்லப்படுகிற வணிகவியல் பட்ட வகுப்பில் சேருவான்! 64, 64, 64 - 3 ஆண்டுகளுக்கு. நான் என் கல்லூரியில் சொல்கிறேன். அவன் படிப்புக்குப் பயிற்று மொழி ஆங்கிலம்! ஆனால், கடைசியில் தேர்வெழுதும் போது, பார்த்தீர்களேயானால், அங்கே பல்கலைக்கழகத்தில் ஓர் இசைவு உண்டு! மாணவர் விரும்பினால், தேர்வைத் தமிழில் எழுதலாம்! இவன் சேர்ந்தது ஆங்கிலத்தில்! கடைசியில் தேர்வு எழுதினவர்கள் 192 பேர்களில் 160 பேராவது தமிழில்தான் எழுதுவான்! ஏனென்றால் அதுதான் அவனுக்கு எளிது! 40, 50 பேர்தான் விடாப்பிடியாக ஆங்கிலத்தில் எழுதுவான்! பிறகு, பின்னால் பார்த்துக் கொள்வோம் என்று தமிழில் எழுதுவான். ஔரங்கசீப் killed Akbar என்று எழுத வேண்டும் (அது வரலாறு அல்ல! சும்மா செய்திக்காகச் சொல்கிறேன்) நீங்கபாட்டுக்கு அக்பரையா ஔரங்கசீப்


கொன்றார் என்று கேட்கக் கூடாது) Aurangaship killed Akbar என்று முதலில் எழுதுவேன்; பிறகு எழுத்து spelling தகராறு வந்துவிடும் அவனுக்கு! Aura (அல்லது) Oura என்று வந்துவிடும்! ஆமாங்க! ஆங்கிலத்தில் அந்த சிக்கல் இருக்கிறதா? இல்லையா? ஒரு தடவை எழுதிப்பார்ப்பான்; சரியாக வராது. மறுபடியும் Ouru என்று எழுதுவான். 'டக்' என்று அடித்துவிட்டு தமிழில் ஔரங்கசீப் அக்பரைத் தூக்கிப்போட்டுக் கொன்றான் என்று எழுதுவான். ஏனென்றால் தமிழில் வீராப்போடு எழுதுவான்! வெறுமனே killed என்ன ஆகிப்போச்சு! தூக்கிப் போட்டுக் கொன்றான் என்று எழுதுகிற அளவுக்கு! ஏனென்றால் அவனுடைய மொழி வளம் அவன் கைவசம் இருக்கிறது; இதுதான் உண்மை! கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! நான் ஒன்று சொல்கிறேன்! எந்தமொழியும் உலகத்தில் இழிந்த மொழியோ தாழ்ந்த மொழியோ அல்ல! காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு! எங்கேயோ இருக்கின்ற அந்தமான் தீவுகளில் சாரவாக்கள் என்று இருக்கிறார்கள்! சாரவாக்கள் - மலைவாழ் மக்கள்! நாகரிகம் இல்லாத மக்கள்! உடையே அணியாத மக்கள்! ஆனாலும் அவர்கள் ஒரு மொழி பேசுகிறார்கள்! அது இழிந்த மொழி அல்ல; அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! அதற்கு இலக்கியம் கிடையாது; இலக்கணம் கிடையாது; நம்மைப் போன்று எடுத்துப் பேசச் சொற்கள் இல்லை; எனவே, அந்த எல்லையில் உள்ள காட்டுக்குள்ளேயே நிற்கிறது! அதேபோல தமிழிலிருந்து பிறந்த பிற திரவிட மொழிகளிலேயே திருந்திய திராவிட மொழிகளும் இருக்கின்றன; திருந்தாத திராவிட மொழிகளும் இருக்கின்றன; துதவம், கோதகம் என்ற மொழிகளெல்லாம் இருக்கின்றன. எனவே, மொழி எதுவும் இழிந்ததில்லை. அதை நான் நினைவில் வைத்துக் கொண்டு இப்போது திறனாய்வு செய்கிறேன்! ஆங்கிலத்தைப் பெரும்பான்மையோர் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை! நான் அண்மையில் சீனாவுக்குப் போனபோது நான் கண்ட உண்மை! ஒரு பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர்! அவரிடத்தில் 24000 மாணவர்கள் இருக்கிறார்கள்! பொறியியல் சீன மொழியில், மருத்துவம் சீன மொழியில்! சட்டம் சீன மொழியில்; மூன்றையும் சீனமொழியில் நடத்துகிற பல்கலைக்கழகத் துணை வேந்தருக்கு, என்னோடு ஆங்கிலத்தில் உரையாட முடியவில்லை. நானே பெரிய வல்லமை படைத்தவன் அல்ல! ஆனால் அவரோ I can read but I cannot speak என்று சொல்லிவிட்டார். ஏனென்றால் அனைத்தும் சீன மொழியில் சொல்லப்படுகிறது நான் சொல்வது சீனநாட்டில்! உங்க நாட்டுச் சிக்கலுக்குள் நான் பேசமாட்டேன்; கருத்து தெரிவிப்பது முறையாகாது. எதுவாக இருந்தாலும்! அப்படி வருகிறபோது, அவன் தன் மொழியில் வீறு கொண்டு விளங்குகிறானா? இல்லையா? 3 ஆவது வகுப்பில் தொடங்கி மாணவர்களுக்கு ஓரளவுக்கு ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்து இப்போது அண்மைக் காலத்தில் அவர்களும் கொஞ்சம் பயிற்சி பெறட்டும் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள்! அவ்வளவு தானேதவிர அந்தத் துணை வேந்தரால் பேச முடியவில்லை! எனவே, இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டால், நாம அதில் மிகவும் உயர்ந்தவர்கள்! நான் கேட்கிறேன் ஆங்கிலத்தில் எத்தனையோ குறைபாடுகள் இருக்கலாம்!

தமிழிலும் குறைபாடுகள் இருக்கலாம்! நம்ம மொழியை நாம் குறை சொல்லிப் பேசலாம்! தாய் சில நேரம் கருப்பாக இருக்கலாம்! அதற்காக, கருப்பாக இருக்கிறார் என்று நீங்கள் தாய் என்று சொல்லமாட்டீர்களா? கருப்பாக இருக்கிறதால் தாய் என்று சொல்லமாட்டேன். பிறகு ஏன் அந்த ஊரில் பிறந்தாய்! புறப்பட்டு வந்துவிட வேண்டியதுதானே! சிவப்பாக இருக்கிற இடங்களைப் பார்த்து! no நோ ஆங்கிலத்தில், now நௌ; know நோ மறுபடியும் நோ! அதுதான் ஏன் என்று கேட்கிறேன்! உடனே என்ன சொல்கிறான் இங்கிலீஷ்காரன் என்ன சொல்கிறானோ அதைத்தான் நாம் பின்பற்ற வேண்டும்! ஏண்டா! இங்கிலீஷ்காரன் சொன்னால் பின்பற்ற வேண்டும்! தமிழ்க்குடிமகன் சொன்னால், தமிழிலே பின்பற்றக் கூடாதா? அதுதான் என் கேள்வி! தமிழ்க்குடிமகன் இதிலே அதிகாரம் பெற்றவன்! சொல்வதற்குத் தகுதி பெற்றவன்! எல்லோரும் தமிழில் சொல்கிற மாதிரி, உயர்ந்ததெல்லாம் உயர்ந்தவர்கள் சொன்னால்தான் சட்டம்! paid பெய்டு; laid - லெய்டு; சரி said = ? செய்டு என்றா சொல்கிறீர்கள்? செட் என்று சொல்கிறீர்களே! ஏன்! இங்கிலீஷ்காரன் சொல்லிக் கொடுத்தது! அதை மட்டும் ஒழுங்காகச் சொல்லி விடுகிறீர்களே! எத்தனை இடத்தில் எழுத்துகள் ஒலிக்காமல் இருக்கின்றன; தமிழில் அந்தக் குறையே கிடையாது! நான் ஒப்பிட்டெல்லாம் பேசவில்லை. எனவே, நம்முடைய தாய்மொழி எல்லா வகையிலும் உயர்ந்தது என்ற எண்ணம் முதலில் உங்களுக்கு வேண்டும்! நம்முடைய தாய்மொழி எந்த மொழிக்கும் தாழ்ந்த மொழி அல்ல; இது வேண்டும்! தனித்தியங்கும் தன்மை தமிழுக்கு உண்டு; பாரதிதாசன் வரி - தமிழே ஞாலத்தின் தாய் மொழி பண்டு" என்றான். பாவாணர் போன்றவர்களுடைய கூற்றுப்படி; மற்றவர்களின் கூற்றுப்படி குமரிக் கண்டம் தான். தமிழன் பிறந்த தொட்டில்; மனிதன் பிறந்த தொட்டில்; இதை மேல் நாட்டு அறிஞர் சொல்கிறான்; நான் சொல்ல வில்லை! Heckhel என்பவர் சொல்கிறார். Lemuria is the cradle of mankind என்று! குமரிக்கண்டம் தான் மனிதன் பிறந்த தொட்டில்! பாவாணர் அதை யொட்டித்தான் தன் கருத்துகளை வைக்கிறார். நாம் ஏற்கெனவே பார்க்கி றோம்; குமரிக்கண்டம் ஏற்கெனவே கடல் கொண்டது. கடல் கொண்டது உண்மை; என் கண்முன்னால், இராமேசுவரத்திற்குப் பக்கத்திலிருக்கிற தனுக்கோடி கடல் கொண்டதை நான் பார்த்திருக்கிறேன்.

இராமேசுவரத்திற்குப் பக்கத்திலிருக்கின்ற தனுக்கோடிக்குப் போன தமிழ்க்குடிமகன் இப்போது போக முடியாமல் இருப்பதற்குக் காரணம் அது கடல் கொண்டது தான் காரணம்! எனவே கடல் கொண்டது என்பது இயல்பு! நாம் பார்க்கிறோம். எனவே, தொன்மை யான மொழி மெல்ல மெல்ல இன்றைக்கு நிலை பெற்றிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. எனவே, நம்முடைய மொழியைப் பற்றிய தாழ்வு மனப்பாங்கு கூடாது! எந்த மொழி எந்த மக்களைச் சந்தித்தாலும் நம்ம தமிழ் மக்களைச் சந்திக்கிற போது, தமிழில் பேசிவிடுங்கள்! அதிலே என்ன இடர்ப்பாடு! அதிலே நம்ம ஆளு என்ன பண்ணுகிறான்! தெரியுதோ! தெரியவில்லையோ 4 ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறான். சிற்றூர்ப்பகுதிகளில் தேநீர்க்கடை வைத்துக் கொண்டிருப்பவனை, நம்ம ஆளுங்க சேர்ந்து கெடுத்து

விட்டார்கள்! படித்தவன் பூரா சேர்ந்து; அவன்கிட்டே போய், ஒரு தேநீர் போடு என்றால், என்னங்க! தேநீர் என்றால் அதுதான் என்ன? பிறகு, ஒரு 'டீ' கொடு என்றால் சொல்கிறான் அப்படித் தமிழில் முதலில் சொல்ல வேண்டியதுதானே! அவனை எவ்வளவு தெளிவாக நாம் ஆக்கி வைத்திருக் கிறோம். அவனுக்குத் தெரியுமா இதெல்லாம்! பிறகு கேட்பான் சிங்கிளா? டபுளா? தேநீர் உங்களுக்கும் தெரியும் அல்லவா? சிங்கிள் டீ டபுள் டீ நம்ம ஊரில் சிங்கிள் டீ அடிப்பவர்கள் தான் அதிகம்! சிங்கிளா! டபுளா? என்பான்! ஏனென்றால் அது தமிழ் என்று நினைத்துக் கொண்டு நம்மிடம் சொல்கிறான். அப்புறம் half ஆ full ஆ அது ரொம்ப பேருக்குத் தெரியும், இவ்வளவும் அவன் பேசுகிறான். இவனைக் கெடுத்தது யாருங்க! இவன் முதலில் தேநீர்க் கடை திறக்கின்ற போது இவ்வளவும் தெரியுமா? நம்ம படித்த பயல்கள் போய் இப்படிச் சொல்லிச் சொல்லிக் கெடுத்துவிட்டான். இவன் முதலிலேயே கற்றுக் கொடுத்திருந்தால், அவன் ஒழுங்காகக் கற்றுக் கொண்டிருப்பான். எனவே நாம் செய்கிற தவறுகள்! ஒழுங்காக இருக்கிற வனையும் கெடுத்துவிடக்கூடாது. அதுதான் எச்சரிக்கையோடு! நாங்க ளெல்லாம் தமிழில் பேசுகிறோம். உங்களுக்குச் செய்திகளைச் சொல்கி றோம்! அந்தச் செய்திகளை நீங்கள் மனத்தில் வாங்குவதன் வாயிலாக, கண்டிப்பாக சில சீர்திருத்தங்களைச் செய்து கொள்வீர்கள்! என்ற நம்பிக்கையில் சொல்கிறோம். உள்ளபடியே எத்தனையோ மொழிகளுக்கு இலக்கணம் இருக்கிறது! எழுத்து, சொல், யாப்பு, அணி இவைதான் இருக்கின்றன. தமிழுக்கு மட்டும்தான் பொருள் இலக்கணம் இருக்கிறது. அகத்திணை யியல், புறத்திணையியல் என்று. வாழ்வதற்கு இலக்கணம் சொன்னவன் தமிழன்! வாழ்வதற்கு இலக்கணம்! இலக்கியத்திலேயே ஓர் எடுத்துக்காட்டுச் சொல்கிறேன். தமிழ் எவ்வளவு சிறந்தது என்று சொல்கிறேன். ஒரு கணவன் மனைவி; காதலன் காதலி; காதலனுடைய குடும்பம் வறுமைபடைத்த குடும்பம், காதலியினுடைய குடும்பம் மிகப் பெரிய செல்வம் படைத்த குடும்பம். மழை பெய்தவுடன் அந்தக் காதலியி னுடைய குடும்பம் என்ன செய்கிறது என்றால், மழை பெய்தவுடன் உழவு செய்ய வேண்டும். அதற்கு யானையை உழவுமாடாக வைத்து, பனை மரத்தை நுகத்தடியாக வைத்து உழவு நடக்கிறது. வெள்ளி விதைக் கிறார்கள்! பொன் விளைகிறது! (கொஞ்சம் கற்பனைதான்) ஆக தலைவி யின் வீட்டில் யானை ஏர் பூட்டிப் பனை நுகம் கொண்டு வெள்ளி விதைத்துப் பொன் விளைகிறது. எவ்வளவு வசதி இருக்கும் என்று நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்! காதலித்த தலைவன் வீடு எப்படிப்பட்டது தெரியுமா? வீட்டிலே அரிசிப்பானை இருக்கிறது; ஆனால் அரிசிதான் இல்லை! வரகஞ் சோறுதான். அதுவும் அன்றாடம் போய் வரகுத் தோட்டத்தில் அந்த முற்றிய கதிர்களை அறுத்துக் கொண்டு வந்து காயப்போட்டு ஆக்க வேண்டும்! சாப்பிடுகிற போது சொந்தத்தில் ஏதாவது தட்டாவது வேண்டாமா? தாலம் வேண்டாமா? அதுவும் இல்லை! எதிர் வீட்டில் இரவல் வாங்க வேண்டும், அவன் என்ன எவர்சில்வர் தட்டையா தூக்கிக் கொடுத்து விடுவான்? எவனும் பயன்படுத்தாத ஒன்று இருக்கும், அதைத்தான் கொடுப்பான். வேகவைத்துச் சாப்பிடுகிறானே குப்பைக் கீரை

அதற்கு உப்புப்போட வழியில்லாதவன்! கிழிந்து போன துணியைத் தையல் கடையில் கொடுத்துத் தைக்க முடியவில்லை. இழை வாங்கியால் இரண்டையும் தைப்பான்! கிராமப்புறத்து வாழ்க்கை அவனுக்கு; இழை வாங்கி கொண்டு கூடத் தைக்க முடியவில்லையாம். சோற்றால் பசையைத் தடவி இரண்டையும் ஒட்டுகிறான் - துணியை! “சோறு கொண்டு பீறல் அடைத்தான்” என்றான். “இரவல் தாலம் பரிவுடன் வாங்கினேன்” இப்போது இந்த மாதிரி ஒரு தலைவன் வீட்டில், பெண் கொடுப்பதற்கு எந்தப் பெற்றோராவது ஒப்புக் கொள்வார்களா? இந்தக் காலத்தில்! சும்மா ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அந்தத் தலைவியே சூழ்நிலையைப் பார்த்து விட்டு, ஏம்மா இப்படிப் போய் துன்பப் படவேண்டுமா? இவ்வளவு வசதியாக இருந்துவிட்டு என்று சொன்னால், அவளும் யோசித்து, சரி, அதுவும் சரிதான், அப்பா சொல்வதைத் தான் கேட்க வேண்டியிருக்கிறது! என்று கேட்டுவிட்டுப்



போவதும் இருக்கிறது. ஆனால், இது சங்க இலக்கியத்தின் பாடல்! அவள் சொல்கிறாள்.

> “பனைநுகம் கொண்டு யானை ஏர் பூட்டி,
> வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும்
> வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே”

நான் என்னுடைய பிறந்த வீட்டிலிருந்து வாழுகின்ற வாழ்க்கையை விரும்பவில்லை.

> “செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
> கன்று காத்துக் குன்றின் உணக்கி

ஊடுபதர் போக்கி முன் உதவினோருக்கு (அந்தவரகிலும் ஏற்கெனவே கடன் வாங்கி இருப்பதைக் கொஞ்சம் கொடுக்க வேண்டும். ஊடுபதர் போக்கி)” உதவி.

அந்தத் தலைவி இப்போது இருக்கிற தலைவியாக இருந்தால், (நீங்கள் யாரும் வருத்தப்படக்கூடாது; நீங்களெல்லாம் நல்லவர்கள்; என்ன

சொல்வாள்! நல்லா என் அப்பன் உன்னைத் தேடிப்பிடித்துக் கட்டி வைத்தானே! ஊரிலே ஒருத்தன் கிடைக்கவில்லை என்று! எப்படித்தான் எங்கப்பன் தேடினானோ! இதற்கு 7 பேரைத் தேடினாங்க; 20 பேரைத் தேடினாங்க! கடைசியில் உன்னைப் பிடித்துக் கட்டியிருக்காங்க என்று சொல்லிவிட்டு, இதோ பாரு! ஒழுங்காக எனக்கு 3 வேளை சோறு போடுவது என்றால் போடு! இல்லையென்றால் பின்னால் புறப்பட்டுவா! எங்கப்பன் வீட்டிலிருந்து சாப்பிட்டுவிட்டு, ஒழுங்காக வேலையைப் பார்த்துகிட்டு இரு! என்று சொல்லக்கூடிய காலமும் இருக்கிறது; சிலபேர் கிட்டே அந்த மனமும் இருக் கிறது. ஆனால் இந்தச் சங்க இலக்கியக் காலத்துத் தலைவி சொல்கிறாள்.

**"ஒன்றுவிட்டு ஒரு நாள் தின்றுகிடப்பினும்,**
**நன்றே தோழி! நம் கணவன் வாழ்வே!"**

ஒருநாள் விட்டு ஒருநாள் தான் சாப்பிடக்கூடிய நிலை இருந்தாலும், நான் பிறந்தகத்திலிருந்து வாழ்வதைவிட என் காதலன் வீட்டில் வாழ்வதையே நான் விரும்புகிறேன் என்று சொல்லுகிற மனப்பாங்கு படைத்த காப்பியத்தை நம்முடைய சங்க இலக்கியம் தருகிறது. நம்ம கவிஞர் வடிவேலு போன்றவர்களுக்காக இந்தச் செய்தியைச் சொல்லு கிறேன்! இந்தப்பாடல் எந்தச் சங்க இலக்கியத்திலும் இடம்பெறவில்லை. எந்தத் தொகுப்பிலும் வரவில்லை. ஆனால், பாவாணர் அவர்கள் "தமிழர் திருமணம்" என்ற நூலில் இந்தப்பாட்டை மேற்கோள் காட்டியிருக்கிறார். நான் கல்லூரியிலிருந்த காலத்தில் இந்தப் பாட்டைப் படித்து, எழுத்தாளராகிய கலைஞர் அவர்களிடத்தில் இந்தப் பாட்டைச் சொன்னேன். இது சங்க இலக்கியப் பாட்டு, நீங்கள் இப்போது சங்கத் தமிழ் பற்றி எழுதிக் கொண் டிருக்கிறீர்கள்! இதை எழுதலாமே! என்று! யார் சொன்னது என்றார். பாவாணர் சொன்னார் என்றேன். அந்த நூலை என்கிட்டே காட்டுங்கள் என்றார்! அப்புறம் நூலை எடுத்துக் கொண்டு போய்க் காட்டினேன். அவர் ஒப்புக் கொண்டார். ஒப்புக்கொண்டு இந்தப் பாடலை, புகுந்த வீடும் பிறந்த வீடும் என்ற தலைப்பில் எழுதி இருக்கிறார். சங்கத் தமிழில் இருக்கிறது. எழுதிவிட்டு கீழே இதை எடுத்து உதவிய தமிழ்க் குடிமகனுக்கு நன்றியும் தெரிவித்திருக்கிறார். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், சங்க இலக்கியம் நாம் படைத்த பாடலைப் படைக்கக் கூடியது, மற்ற சங்க இலக்கியமெல்லாம் இருக்கிறது. ஆனால், அந்த அளவோடு நாம் நின்று விட்டோமா! பின்னாலே சிலப்பதிகாரத்தை முழுமையாகப் படிக்க முடியாவிட்டாலும் சில சில வரிகள் இருக்கின்றன, அதைப் படிக்க வேண்டும்! அது 3 பெண்களைப் பற்றியது. எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள். கண்ணகி கடைசி வரைக்கும் காதலனிடத்தில் - தலைவனிடத்தில் பேசவே இல்லை. பூம்புகார் படத்திலே பார்ப்பீர்கள் 'மாசறு பொன்னே! இவள் ... (ராகம்) அப்படித்தானே இழுத்தாளே தவிர இவள் ஒரு வரியாவது பாடவேண்டாமா? அதுதானே டூயட் இருவர் பாடல்! பாடவில்லை! கடைசியாக எங்கே பேசுகிறாள்! மாதரி வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது கேட்கிறான்! ஐயோ! இவ்வளவு தூரம் நடந்து வந்து விட்டாய் 250 கி.மீ. இப்போது பூம்புகாரிலிருந்து

மதுரை ஏனென்றால் இப்போதுதானே நாம் அளக்கிறோம். "நான் எழுகென எழுந்தாய் என்செய் தனை" யென்று வருத்தப்பட்டான் பாருங்கள்! அப்போதுதான் பேசினாள்; நம்ம வீட்டுக்கு ஒரு விருந்தினர் வந்தால் என்னால் விருந்தாக்க முடியவில்லை. அதை இழந்துவிட்டேன் நான்; மற்றதுக்கெல்லாம் வருத்தப்படவில்லை. எனக்குப் பிள்ளைப்பேறு இல்லை. அது இல்லை என்றெல்லாமா வருத்தப்பட்டாள் இங்கே! "அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்" என்னால் முடிய வில்லை என்று சொல்லிவிட்டு, "நீங்கள் போற்றாவொழுக்கம் புரிந்தீர்" என்று சொல்கிறாள். ஆனால், நான் எப்படிப் பட்டவள்! இது தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது! அடித்தாள் பாருங்க! கண்ணகி. "யாவதும் மாற்றாஉள்ள வாழ்க்கையேனாதலின் ஏற்றெழுந்தனன்" என்றாள். நான் எந்தவகையிலும் மாற்றாத உள்ளம் படைத்தவள்! என் கணவன்தான் வாழ்வு; என் கணவன்தான் எனக்குத் துணை! எனவே, பின்வந்தேன் என்றாள். இப்படிக் கொஞ்சமாகப் பேசியவள் வழக்குரை காதையில் பின்னி விட்டாளே! அரசனைத் தீர்த்துக்கட்டி விட்டுத்தானே மறுவேலை பார்த்தாள்! எனவே, தேவை ஏற்பட்டால், இளங்கோ அடிகள் சொல்வார். கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான் என்று கேட்டவுடன் கண்ணகி என்ன ஆனாள்! பொங்கி எழுந்தாள்! அப்படிப் பொங்கி எழுந்தவுடனே எழுந்துவிட்டாளா என்றால் இல்லை! உடனே விழுந்தாள் என்றார் இளங்கோவடிகள். ஏனென்றால், கொல்லப்பட்டது கொலை செய்யப்பட்டது என்பது தவறான முறையில்தான்! ஆனால் இறந்தது கணவன் அல்லவா? உடனே இவள் விழுந்தாள்! எப்படி விழுந்தாள். நீலவானம் என்பது நிலவோடு சேர்த்துப் பெயர்த்துக் கொண்டு தரையில் விழுந்தது போல் விழுந்தாள்! அவளுடைய கூந்தல் நீலவானத் திற்குச் சமம்! அவளுடைய முகம் நிலவுக்குச் சமம்! அப்படி விழுந்து புரண்டாள்!

> **"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்**
> **திங்கள் முகிலொடுஞ் சேண்நிலங் கொண்டெனச்**
> **செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை**
> **எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்"**

என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் சொல்கிறது. அதே போல மாதவியும் தவறு செய்யவில்லை. மறந்துவிடக்கூடாது! அந்தக் கால மரபுப்படி,... அவள் கோவலனுடன் வாழ்ந்தாள்; முறைப்படி பார்த்தால் கோவலன் போனவுடன் இன்னொரு கேவலன்! யாரோ ஒரு some x or y அப்படித்தானே பொருள்! இல்லை என்ன நினைக்கிறாள்! இந்தப் பிறப்பினுடைய இழிவு இதோடு போகட்டும்! என்று தானும் துறவு பூண்டு; தன் மகள் மணிமேகலையும் துறவு பூணச் செய்தாள். எனவே, அவள் மீதும் எந்தத் தவறுமில்லை! அதேபோல கோப்பெருந்தேவி இறந்துபோகிறாள் உடனடியாக! அழகாக ஒரு வரியைச் சொல்வான்! "கணவனை இழந் தோர்க்குக் காட்டுவதில்லென்று" யாருக்கு வேண்டுமானாலும்; இது பொருந்தும் இப்போது மறுமணம் எல்லாம் வந்துவிட்டது. பாரதிதாசன் காலத்தில் வந்துவிட்டது! ஆனால், அன்றைக்கு நெடுஞ்செழியன் இறந்த

பிறகு கோப்பெருந்தேவி! மறுபடியும் எனக்கு ஒரு மாப்பிள்ளை பாருங்கள்! என்றா சொல்லியிருக்க முடியும்! முடியாது; எனவே ஒரே வரியில், "இணையடி தொழுது வீழ்ந்தனள்" என்று வருகிறது இவையெல்லாம் நமக்குக் கிடைத்த செல்வங்கள்! அதேபோலக் கம்ப இராமாயணத்தில் எத்தனை வரிகள்! வாலி வதைப்படலத்தில் எனக்குச் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் சொல்லுவார். இந்த இடத்தில் வாலி வைக்கிற வாதத்தைக் கேட்டுவிட்டு இராமனால் பதில் சொல்ல முடியவில்லை. வாலி வைக்கிற வாதத்தைக் கேட்டுவிட்டு ... அவன் அவ்வளவு அழகாக வாதம் செய்கிறான். கம்பன் தான் பண்ணுகிறான். இராமனால் பதில் சொல்லமுடியவில்லை. கடைசியில் இலட்சுமணன் தானே அதற்குப் பதில் சொல்கிறான். ஏண்டா எங்கேயோ ஒரு அரக்கன் உன்னுடைய மனைவியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால், ஒரு குரங்கைப் போட்டுக் கொல்கிறாயேடா நீ! தூக்கி விட்டுப் போனவன் அரக்கன்! "அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரங்கினத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றோ?" என்று கேட்பான். பதில்சொல்லமுடியவில்லை. நியாயமான கேள்வி! நான் என் தம்பிமனைவியைக் கவர்ந்துவிட்டேன் என்று சொல்கிறீரே! நாங்கள் குரங்கு! எங்கள் ஒழுக்கமே அதுதான் என்றான் அவன். எங்கள் குரங்கு இனத்தில் இதுதானே ஒழுங்கு! நீ என்னடா அதையெல்லாம் எங்களிடத்தில் சுமத்துகிறாய்! அருமையான கேள்விகள்! எங்களுடைய பேராசிரியர் சொல்வார். கம்பனும் கைவிட்டான்! என்றார். அதே நேரத்தில் வில்லிபுத்தூரார் பாரதத்தில் கர்ணன்! நன்றிக்கு எவ்வளவு உணர்ச்சியோடு சொல்கிறார். இவை யெல்லாம் நம்முடைய செல்வங்கள்! குந்தி வந்து கூப்பிடுகிறாள்! உண்மையைச் சொல்கிறாள். தாய் என்பதை உணர்த்துகிறாள்! எதிரே நிற்பவர்கள் எல்லோரும் உன் உடன்பிறப்புகள் என்கிறாள். தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும் இல்லையா! உண்மையிலேயே எதிர்த்துச் சண்டைபோடும்போது அம்புவிடும் போது கொஞ்சம் துணுக்குறத்தானே செய்வான்! ஆனால், நான் அந்தப் பக்கம் வரமாட்டேன்! இரண்டு உறுதி மொழிகளை அளிக்கிறான். அந்தப் பக்கம் வரமாட்டேன்! நான் இவனுக்காக நிற்கவேண்டும்! ஏன் தெரியுமா? ஒரு கட்டத்தில் துரியோதனனைப்பற்றி நாம் என்ன நினைக்கிறோம்! மோசமானவன்; அயோக்கியன் என்றுதானே நாம் நினைக்கிறோம். இல்லையே! நட்புக்குச் சிறந்தவன் என்றுதானே காட்டுகிறான். அவனுடைய மனைவியோடு சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கும் போது, எதிர்பாராமல் துரியோதனன் வருவதால் மனைவி எழுந்து நிற்கிறாள்! ஒருவேளை தோற்று ஓடுகிறாளோ என்று நினைத்து அவளுடைய மேகலையைப் பற்றுகிறான். அந்த மேகலைகள் உதிர்ந்து விடுகின்றன. அந்த நேரத்தில் துரியோதனன் வந்து விட்டான். நமக்கெல்லாம் எப்படி இருக்கும் கர்ணா! எவ்வளவு நாளாக நடக்கிறது இது என்றுதானே கேட்போம். என்ன! எவ்வளவு நாளாக நடக்கிறது பரவாயில்லை! இன்றைக்கு நான் பார்த்து விட்டேன்! பார்க்காமல் ரொம்ப நாளாக நடக்கிறது. அப்படிக் கொண்டு வந்து இல்லாததையெல்லாம் ஆக்கி ஒரு வழி பண்ணிவிடமாட்டோமா? துரியோதனன் எப்படிப்பட்டவன்! ஆனால் சொன்னான். எடுக்கவோ!

கோக்கவோ என்றான். ஏப்பா இந்த மேகலையெல்லாம் உதிர்ந்து ஓடுகின்றனவே! எடுத்துத்தரவா? கோத்துத்தரவா? என்று கேட்டான்.

"திடம் படுத்திடவே விராச ராசனுக்குச்
செஞ் சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும் என்றான்"

என்று அப்படிப்பட்ட ஒரு நண்பனுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்! உயிரையும் கொடுப்பேன். அதுதான் நன்றிக்கடன்! எனவே, அப்படிப்பட்ட சிறப்புகளையெல்லாம் படைத்த இலக்கியங்கள் இருக்கின்றன. இன்னும் பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திற்கு வரலாம்; பாவேந்தர். பாரதிதாசனுக்கு வரலாம். பாரதிதாசனில் மூன்றும் சேர்ந்து வருகிற காவியம் புரட்சிக்கவி! அழகாகச் சொல்கிறானே! ஒரு கவிஞன் அரசருடைய மகளுக்குக் கவிதை சொல்லிக் கொடுக்க வேண்டும்! ஏற்பாடு செய்கிறார்கள்! ஆனாலும் இரண்டு பேரும் அழகாக இருப்பார்கள். என்பதற்காக எச்சரிக்கை! ஒரு திரையைப் போட்டுவிடுகிறார்கள்! அதிலே என்ன சொல்லி வைக்கிறார்கள். கவிஞன் கண் தெரியாதவன்; கண் தெரியாத ஆசிரியர் கிட்டே படித்தால் உனக்கு இரக்கமாக இருக்கும்! வேண்டாம் எதற்கு! திரையைப் போட்டால் பரவாயில்லை! என்று திரையைப் போட்டு விடு கிறார்கள். அவள் தொழுநோய் பிடித்தவள்! நீ பார்த்தால் நன்றாக இருக்காது என்று இவனிடத்தில் சொல்லி வைத்துவிடுவார்கள்! இரண்டு பேரிடையில் பாடம் ஒழுங்காக நடந்து கொண்டு வருகிறது; திரையிலேயே! அப்புறம் ஒவ்வொரு நாளும் பாடம் முடித்துவிட்டுப் போகிறவன் - எதிர்பாராமல் அன்றைக்கு நிலவு வானத்தில் தோன்றுகிறது; கவிஞனுக்கு நிலவைப் பார்த்தவுடனே கவிதை பீறிட்டுவிடும்! அந்தக் காலத்திலிருந்து நிலவுக் கவிதைதான். அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவு என்று பாடுகிற காலத்தி லிருந்து இந்தக் காலத்திலே கூடத் திரைப்படங்களில் பாருங்கள்! நிலவே! என்னிடம் நெருங்காதே! நீ நினைக்குமிடத்தில் நான் ... இல்லை என்று அந்த அளவுக்கு வருகிறான்; நிலாவைப் பார்த்தால் பாடாத எவனும் கிடையாது. அதனாலே சுரதா ஒரு தொகுப்புப் போட்டார். "நிலா நானூறு" என்று ஒரு நூலைப் போட்டார். எத்தனை கவிஞர்கள் இதைப் பாடி இருக்கிறார்கள் என்று தொகுப்புப் போட்டார். நிலவைப் பற்றி இவன் பாடினவுடனே இவள், யார்ரா ஒருத்தன் எவனோ கவிதை பாடிக்கிட்டு இருக்கிறான் என்று இவள் பார்த்தாள்!

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே
நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழுவதும்! காட்டிவிட்டால், காதற்
கொள்ளையிலே ... பாற்குடமோ! அமுத ஊற்றோ!"

என்று பாடிவிட்டான்.

இவள் மேலேயிருந்து மாடத்திலிருந்து பார்க்கிறாள். எவனோ ஒருத்தன் பாடிக்கிட்டுருக்கிறானே! யார் என்று கேட்டாள், உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற கவிஞன் என்றனர். அவனுக்குக் கண்

தெரியாது என்று சொன்னார்களே, அவன் எப்படி நிலாவைப் பார்த்துப் பாட்டுப் பாடினான்; பிறகு உண்மை தெரிகிறது; பிறகு காதல் முற்றிவிடும்! உங்களுக்குத் தெரியும்! தடுத்தால் முற்றிவிடும்! ஆனால் அவன் சொல்லு கிறான்! நீ காதலிப்பதை ஏற்றுக்கொண்டு நானும் காதலிக்கிறேன். ஆனால் நம்முடைய திருமணம் நிறைவேறாது. அது தாங்க பாரதிதாசனுக்கு இருக்கின்ற பெரிய சிறப்பு! இப்போது தான் சமுதாய சீர்திருத்தம் வருகிறது!

> ***காதல் நெருப்பால் கடல் உன் மேல் தாவிடுவேன்;***
> ***சாதி எனும் சங்கிலி என் தாளைப் பிணித்ததடி!***
> ***பாளைச் சிரிப்பில் நான் இன்று பதறிவிட்டால்,***
> ***நாளைக்கு வேந்தன் எனும் நச்சரவுக்கு என் செய்வேன்!***
> ***ஆணிப் பொன்மேனி! அதில் கிடக்கும் நல்லொளியைக்***
> ***காணிக்கை நீ வைத்தால், காப்பரசர் வாராரோ!***
> ***பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன் சிரிப்புக்***
> ***கட்டாணிமுத்துக்குக் காலில் விழமாட்டாரோ***

என்று அழுதான் இளையோன்! என்றார். என்னால் முடியாது! உன் சாதி மேல் வர்ணம்! மேதினியை ஆள் வருணம்! மேதினியை ஆளுகின்ற மேல்வர்ணம், நான் கீழ்வர்ணம் என்றான்! முடியாது; நடக்காது என்றான்! கடைசியில் இரண்டுபேருக்கும் தூக்குத்தண்டனை! மரண தண்டனை! அப்போதுதான் பிடித்தான் பாருங்க! இப்போது முதலில் காதல் வந்து விட்டது. அடுத்தது காதலுக்குள் சமூகசீர்திருத்தம் வந்துவிட்டது. இப்போது தமிழ் வரவேண்டும்! கடைசியாக உங்களையெல்லாம் பார்த்துக் கேட்கிறான். ஐயா! அரசன் வந்து என்னைக் கொல்ல வேண்டும் என்கிறான்! நான் தப்புச் செய்தேனா? தமிழ் படித்ததனால் வந்து மாட்டிக்கிட்டேன் தமிழ் படிக்காம லிருந்தால் என்னைக் கூப்பிட்டிருப்பானா? (நான் இங்கிலீஷ் படித்திருந்தால் என்னைக் கூப்பிட்டிருப்பானா? தமிழ் படித்ததால் கூப்பிட்டான் கவிதை சொல்லிக் கொடுத்தேன். கடைசியில் என்னை வெட்டுகிறான். அவன் என்ன சொல்கிறான்:

> ***"தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்;***
> ***தமிழ்க்கவி என்று எனை அவளும் காதலித்தாள்;***
> ***அமிழ்து என்று சொல்லும் இந்தத் தமிழ் என் ஆவி***
> ***அழிவதற்குக் காரணமாய் அமைந்த தென்று***
> ***சமுதாயம் நினைத்திடுமோ ஐயகோ! என்***
> ***தண்டமிழ்க்குப் பழி வந்தால் சகிப்பதுண்டோ!"***

என்றான். பழி என்மேலே இல்லை ஐயா! நாளைக்கு ஊரில் என்ன சொல் வான்! எதற்கு ஐயா அவனைக் கொன்றாங்க! காதலித்தானாம்! இவனுக்கு எதற்கு அந்த வேலை! இது தேவையா இவனுக்கு என்றுதான் சொல்வார்கள் எதற்காக அங்கேபோய் காதலித்திருக் கிறான்! தமிழ் சொல்லிக் கொடுக்க! அதுதானே தமிழ் படித்ததனால் வந்த வினைதானா? கடைசியில் தமிழுக்கு அல்லவா இழுக்கு! என்றான்.

இப்படி எண்ணுகின்ற கவிஞர்கள் நம்முடைய காலத்துக் கவிஞர்கள்! புதினங்கள்! சிறுகதைகள், உரைநடைகள், நாடகங்கள் என்று எத்தனை! எத்தனை! அறிஞர் அண்ணாவினுடைய எத்தனையோ நடைகளைப்

பார்த்திருக்கிறோம்! எத்தனையோ அழகுகளைப் பார்த்திருக்கிறோம். நிலையும் நினைப்பும் என்ற ஒரு நூலை எழுதினார். ஒருத்தன் திருட்டுத்தன மாகத் தேங்காய் பறிப்பதற்காகத் தென்னை மரத்தில் ஏறிவிட்டான்! அவன் இருப்பது உச்சியில்! ஆனால் அவன் நினைப்பெல்லாம் தரையில்! தோட்டக்காரன் வந்தால் உதைப்பானே என்று! ஏனென்றால் திருட்டுத் 7தனமாகத் தேங்காய் பறிப்பதற்காக, தென்னை மரத்தில் ஏறி இருப்பது உச்சியில்! ஆனால் நினைப்பெல்லாம் தரையில்! அடிச்சார் பாருங்கள்! "எனவே, நிலையில் உயர்ந்தவர்களெல்லாம் நினைப்பில் உயர்ந்த வர்களல்ல!" இதற்கு மேலே அண்ணாவாலே எப்படிச் சொல்லமுடியும்! விளையாட்டுக்குச் சொல்லவில்லை. அண்ணாவை நீங்கள் ஒழுங்காகப் படித்தீர்கள் என்றால் அற்புதமான அறிஞர், நான் இன்றைக்கும் சொல் கிறேன், எனக்கு மதுரைப் பல்கலைக்கழகம் பட்டம் கொடுக்கின்றபோது, நான் 614 கவிதை நூல்களை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற போது, எனக்குப் பல்கலைக்கழகம் என்ன பட்டம் கொடுத்திருக்கிறது தெரியுமா? படைக்கப்பட்ட இந்த நூலுக்காக திரு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு அறிஞர் பட்டம் வழங்கப்படுகிறது என்று கொடுத்திருக் கிறது. சட்டப்படி என்னை நீங்கள் அறிஞர் என்றுதான் சொல்லவேண்டும்! நான் அறிஞர் என்று போட்டுக் கொள்ளலாம். ஏனென்றால் சட்டப்படி சான்றிதழ் என்கையில் இருக்கிறது. அப்போது இன்றைக்கு வந்திருக்கிற எல்லா டாக்டர்களும் அறிஞர் தான், அப்படி ஆகிவிடும். ஆனால், நாங்கள் என்ன கருதுகிறோம்! அண்ணா ஒருவரைத் தவிர அறிஞர் என்ற பட்டம் வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாது. எனவே, முனைவர் என்பதைக் கொண்டு வந்து பெரு வழக்காக்கியிருக்கிறோம். டாக்டர் என்பது முனைவர், அறிஞர் என்றால் அண்ணாதான்; அதாவது முறைப்படி அவர் தமிழ் படித்தவர் அல்லர். நீங்கள் என்னமோ தமிழ் படித்தால்தான் தமிழ்ப்பற்று! அதெல்லாம் கிடையாது. அவர் படித்தது அரசியல் அறிவியல் (Political Science) பொருளியல், வரலாறு, இந்த மூன்றும் 3 majors in B.A. (Honours) in Pachaiyappa's. எனக்கு ஒரு மகிழ்ச்சி! அண்ணா படித்த அதே கல்லூரியில் படித்த தமிழ்க்குடிமகன், பச்சையப்பன்கல்லூரி! எனவே, அவர் படித்தது அது. ஆனால், அவருக்குத் தமிழ்ச் சிந்தனை இருந்தது! பெரியாருடைய கருத்துகளைக் கேட்டுக் கேட்டு தன்மான இயக்கத்தினுடைய ஈர்ப்பு இருந்தது! பாவேந்தர் போன்றவர்களின் கவிதைகளைப் பார்த்துப் படித்துத் தமிழின் மேல் ஈடுபாடு இருந்தது! எனவே அடுக்கு நடையில் அற்புதமாகப் பேசக்கூடிய ஆற்றல் பிறந்தது, எனவே, அவர் அறிஞரானார். எல்லோரும் அடுக்கு நடையில் பேச ஆரம்பித்தால் சறுக்கிவிடுவான். டி. இராசேந்தர் பேசற மாதிரியெல்லாம் பேசக்கூடாது. நல்ல நண்பர். அவர் பேசுவது வேறு; அண்ணா பேசுவது வேறு! அண்ணாவினுடைய சொற்கள் அப்படிப் போகும்! ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் அந்த அளவுக்கு ஆற்றல் படைத்த அண்ணாவையும் பார்க்கிறோம், எத்தனையோ எழுத்தாளர்கள்! கலைஞரும் சாதாரணப்பட்டவர் அல்ல! அருமையான எழுத்தாளர்! இப்போது நான் அரசியலுக்கு அப்பாற்பட்டுத்தான் பேசிக் கொண்டிருக்

கிறேன்! உங்களுக்குத்தான் முதலிலேயே சொல்லிவிட்டேன். குறளோவியம் எழுதியிருக்கிறார். உங்களுக்குத் தெரியும். எத்தனையோ பேர் எத்தனையோ எழுதியிருக்கிறார்கள். குறளோவியம் அற்புதமான படைப்பு! ஒரு பெண் என்ன நினைக்கிறாள். நல்ல பருவம் எய்திவிட்டாள், அழகாக இருக்கிறாள் ஆனால், என்னமோ நினைக்கிறாள்! இந்த அழகு கடைசி வரைக்கும் அப்படியே இருக்க வேண்டும்; அதற்கு என்ன வழி! என்று பார்த்தாள். திருமணமாகாமல் இருப்பதுதான் அந்த வழி என்று பார்த்தாள். ஏனென்றால் திருமணம் என்று வந்தால், குழந்தை, குட்டி, பல பிரச்சனை ஆகி உடம்பெல்லாம் மாறிப் போய்விடும். திருமணமாகாம லிருந்தால், கடைசி வரைக்கும் இந்த அழகு நிலைக்கும் என்று நினைத்துக் கொண்டு திருமண மாகாமல் இருந்து விட்டாள். ஆனால் திருமணம் ஆகாமல் இருந்து விட்டதால் அழகு அப்படியே நின்றதா? இல்லை. இவ்வளவுதான் செய்தி! ஒருத்தரிடம் செல்வம் இருந்தால் அவன் என்ன செய்ய வேண்டும்! அடுத்த ஆளுக்குக் கொடுக்க வேண்டும்! அப்போதுதான் அந்தச் செல்வத்திற்குப் பயன், அழகிய இளம்பெண் என்ன செய்ய வேண்டும், திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும்! அதுதான் இல்லறப்பயன். இதுதான் கருத்து!

> **அற்றார்க் கொன்று ஆற்றாதான் செல்வம் மிக நலம்**
> **பெற்றாள் தமியள்மூத் தற்று.**

கலைஞர் சொன்னார்பாருங்க! நான் அற்புதமாக இதை ரொம்ப காலமாகப் பேசிக்கிட்டு வருகிறேன். இன்றைக்கும் சொல்கிறேன்.

"காளை ஒருவன் கரம்பட்டால், கட்டழகு கெட்டொழியுமே என்று கவலைப்பட்டாள்! அவள். ஆனால், காலத்தின் கரம்பட்டு அவள் கரைந்து போனாள், அழகு குறைந்து போனாள், பிறகு மறைந்து போனாள்!" ஆனால் காலம்! அழகான நெளி நெளியான நம்முடைய முடி என்ன ஆகிறது; நம்முடைய அழகான உடல் அழகான தொடை என்ன ஆகும் என்பதை வேறு எங்கும் பார்க்க வேண்டாம், மணிமேகலையில் பாருங்கள்! தெரியும்! அப்படிப் புரட்டிப் போட்டு காண்பிப்பார்கள்! என்ன அழகாக எழுதியிருக்கிறார் பாருங்கள்.

"காளை ஒருவன் கரம்பட்டால், கட்டழகு கெட்டொழியுமே என்று கவலைப்பட்டாள் அவள்! ஆனால் காலத்தின் கரம்பட்டுக் கரைந்து போனாள்; அழகு குறைந்து போனாள்; பிறகு மறைந்து போனாள். அடுத்தவரிதான் ரொம்ப அழகு."

> **அவள், மணவிழாப் பருவம் எய்தாமலேயே**
> **மணிவிழாப் பருவம் எய்திவிட்டாள்.**

20லே சிந்தித்தாள். அப்படியே ஓடிப்போய்க் கடைசியாய் 60 ஆகிவிட்டது 'ண' வை 'ணி' யாக மாற்றினால் 40 வயது கூடும் என்பது கலைஞர் ஒருத்தருக்குத் தான் தெரிந்திருக்கிறது. அவள் பழமானாள், நரை திரை மூப்புடன் கூடிய கிழமானாள், இதைவிட என்ன எழுதமுடியும். இதனால் ஆங்கிலத்தில் சொல்வான்! இலக்கியம் என்பது சும்மா எழுதுவ தில்லை! எப்படிப் புலப்படுத்துவது என்பதுதான் இலக்கியம்! Whatever literature may be communication it must be; if there is no communication, there is

no literature. அதை எடுத்துச் சொல்கிறோமே அதுதான் இலக்கியம்! 'அவள் அழுதாள்' என்று எழுதிவிட்டுப் போக வேண்டியதுதானே! அதற்கு எதற்கு 1000 வருணணை! அவள் அழுதாள் என்பதை இன்னும் கொஞ்சம் பெருமையாக அவள் கண்ணீர் சிந்தினாள்; அழுதாள் என்பதோடு நிறுத்தாமல் கண்ணீர் சிந்தினாள் என்று எழுதினான். இன்னொருத்தன், "கடல் போன்று கண்ணீர் சிந்தினாள்". அவ்வளவு கையிருப்பு வைத்திருக்கிறாள்! ஏங்க கண்ணீரைக் கடல் அளவு சிந்தமுடியுமா? கண்ணீர் அந்த அளவு இருக்குமா? கற்பனைதான்! கை வண்ணம் தான்! கடல்போன்று கடல் சிந்தினாள், இன்னொருத்தன் வந்தான்! அவள் கண்ணீர்க் கடலில் நீந்தினாள்; ஏண்டா கண்ணீரை வேறு சிந்தி, அதிலே அவள் நீந்துகிற அளவுக்குக் கையிருப்பு அவளிடம் இருக்குமா? எல்லாமே பொய்! எல்லாமே தவறு! ஆனாலும் அழகு! அதுதான் expression அதுதான் சொல்லுகிற முறை! எனவே, சொல்லுகிற முறை மட்டுமல்ல; அந்தச் சந்தங்கள்; தமிழில் இருக்கின்ற பெரிய சந்தங்கள்! அதை முதலில் சொன்னேனே அரசன் மகளைக் காதலித்தானே அரசன் மகளை அவையில் நிறுத்தி வைத்து, கவிஞனைப் பார்த்துக் கேட்கிறான் அரசன்! இப்படிக் கேட்டதாகவே வைத்துக் கொள்ளுங்கள்! ஏப்பா! என்னப்பா கவிதைகளைச் சொல்லிக் கொடுக்கச் சொன்னேன், நீ பாட்டுக்கு என்னென்னமோ சொல்லிக் கொடுத்து கெடுத்துப்புட்டியே! இது நல்லாவா? இருக்கிறது, தயவு செய்து என் மகளை விட்டுவிடு! அதோட நான் ஏதாவது பார்த்து வேற இடத்தில் கல்யாணம் பண்ணிவிடுகிறேன். வேற ஊரு பார்த்துப்போ! பொருளாகத் தான் தருகிறேன்! அப்படியா சொல்லியிருப்பான் அரசன்! இப்படியா கெஞ்சியிருப்பான். அவன், இல்லீங்க தோதுப்படாது, எனவே கெஞ்சித் தானே கேட்கிறேன்! அதிலே அவள் உறுதியாக இருக்கிறார்கள், நானும் உறுதியாக இருக்கிறேன், அவன் என்ன கேட்கிறான் தெரியுமா? பாவேந்தர் சொற்களை வீசுகிறார் பாருங்கள்!

> **கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கவி**
> **கற்க உன்பால் விடுத்தேன் - அட!**
> **குற்றம் புரிந்தனையா இல்லையா - அதை**
> **மட்டும் உரைத்து விடு.**

அந்தச் சினம் கொப்புளிக்கிற மாதிரி வரிகள் வரவேண்டும்! அதுதான் ஒரு கவிஞனுக்கு இருக்கிற சிறப்பு; சந்தம் மாறவேண்டும்! ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், எத்தனையோ இலக்கியங்களில் உங்களைத் தமிழ் ஆட்கொண்டிருக்கிறது, எனவே, நீங்கள் முதலில் நெஞ்சில் நிறுத்துங்கள் தமிழ் உயர்ந்த மொழி, அது நம் தாய்மொழியாக நமக்குக் கிடைத்த பேறு. என்ன அழகாகச் சொல்கிறான் பாரதி!

> **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல**
> **இனிதாவ தெங்கும் காணோம்"**

இன்னொன்றைக் கூட நீங்கள் நினைக்க வேண்டும்! ஒருமைப் பாட்டுக்காகப் பாடுகிற பாரதி என்ன பாடுகிறான்!

*"சிந்து நதியின்மிசை நிலவினிலே*
*சேரநன் நாட்டிளம் பெண்களுடனே*
*சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்தே*
*தோணிக ளோட்டி விளை யாடிவருவோம்"*

படகைச் சிந்து நதிக்கு பாகிஸ்தானுக்குக் கொண்டுபோய் விட்டான். அப்புறம் படகில் யாரை ஏற்றிக் கொள்ளலாம். கேரளப் பெண்களைப் பார்த்து ஏற்றிக் கொள்ளலாம், ஏனென்றால், அவர்கள் தான் அழகாக இருப்பார்கள்! பாட்டு எதிலே பாடவேண்டும், தெலுங்கிலே பாட வேண்டும், அப்போது தமிழை அங்கு காணோம், இவ்வளவும் பாடுகிற பாரதி அதுதான் அவனுடைய உள்ளமா என்றால் இல்லை என்கிறான் பாரதிதாசன்! "சாதி ஒழித்திடல் ஒன்று; நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று" இதில் பாதியை நாடு மறந்தால் மற்ற பாதி துலங்குவதில்லை; ஒன்று சமூக சீர்திருத்தமும் வேண்டும், இன்னொன்று தமிழ் வளர்ச்சியும் வேண்டும்! அதுதாண்டா பாரதி என்றான். இந்தப் பாரதி உரைநடையிலே என்ன சொன்னான் தெரியுமா? இந்த உரைநடையை நாம் படிக்கிறதே கிடையாது! நம்ம தமிழ்நாட்டில். உரைநடையில் என்ன சொன்னான் தெரியுமா? இவ்வளவு தூரம் கேரளப் பெண்களைச் சொன்னவன்; என்னுடைய தமிழ்ச் சாதிப் பெண்ணைவிட இன்னொரு சாதிப்பெண் அழகாக இருப்பதை நான் சகித்துக் கொள்ள மாட்டேன்!" என்று சொன்னான் பாரதி! மறந்து விடக்கூடாது! எப்படிப் பாருங்கள்! அவனுடைய மனசில் என்ன இருக்கிறது! அதைச் சொல்லி விடுகிறான் உரைநடையிலே. ஆனால் கவிதையில் மட்டும் ஒருமைப்பாட்டைப் பாடிவிடுகிறான்.

எனவே எல்லார்க்கும் உள்ளம் இருக்கிறது. அந்த உள்ளத்திற்குள் தமிழ் இனம் இருக்கிறது, நான் உங்களை எல்லாம் விரும்பிக் கேட்பது இது தான்! இந்த மண்ணில் உங்கள் நிலை என்ன என்று எனக்கு நன்றாகத் தெரியும்! ஆனால் நாம் வீட்டில் தமிழ் பேசுவதை வெளியில் தமிழ் பேசுவதை பள்ளியில் தமிழ் பயிலுவதை நாம் தவறவிட்டால். பிறகு மொரீசியசு தமிழர்களைப் போல நீங்கள் ஆகிவிடுவீர்கள்! அது ஓர் எச்சரிக்கை, மொரீசியசில் இருக்கிற தமிழர்களுக்கு நான் இப்படித் தமிழில் பேசினேன் அல்லவா! அவர்களெல்லாம் தமிழர்கள்தான் எல்லோரும்! விளங்க மாட்டேன் என்கிறது! ஏனென்றால் அவர்கள் பேசுவது கிரியோல் மொழி! பிரெஞ்சும் ஆங்கிலமும் கலந்த கிரியோல் மொழி பேசுவதால், நான் சொல்வது விளங்கமாட்டேன் என்கிறது! அண்ணே! இங்கிலீஷில் அதை விளக்கிச் சொல்லிவிடுங்கள் அண்ணே! என்கிறார்கள். எதை? நான் பேசியதை. ஆங்கிலத்தில் வேறு விளக்கிச் சொல்ல வேண்டும்! மொரீசியசில் இருக்கும் தமிழர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்! கோயிலில் நாம் உருவாக்கிக் கொடுத்தோம் பாருங்கள்! போற்றி நூல்கள், அர்ச்சனை நூல்கள், அந்த 22 நூல்களிலும் 1000 படிகள் வீதம் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்தார் அதன் குடியரசு துணைத் தலைவர் ஏவி. செட்டியார் என்கிற தமிழர். கோயிலில் பார்த்தீர்களேயானால் 'திருமால் போற்றி' என்பதைக் கையில் வைத்துக் கொண்டு தமிழில் ஓதுவார் ஓதினால், கூட இருந்தவர்களெல்லாம் சேர்ந்து ஓதுகிறார்கள். நான் அந்த நாட்டில் மட்டும்

தான் பார்க்கிறேன். அதற்குச் சொல்ல வருகிறேன். நாம் ஓதினால், அதற்குக் கேட்கும்! தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் .. என்றால் விளங்காதா என்ன? ஆனால் தமிழ்நாட்டில் சிலபேர் என்ன செய்கிறார்கள். வடமொழியில் ஓதினால்தான் சாமிக்குக் கேட்கும்! ஏன் அவர் சமஸ்கிருதமா படித்துவிட்டு வந்தார்! ஏசு அராமிக் மொழி பேசிவிட்டு, எவ்வளவு தூரம் தாண்டி வந்திருக்கிறார். இன்னும் பேசிக் கொண்டிருக் கிறானே! ஒருத்தன் வழக்கே போட்டுவிட்டான்! Devanagari is supposed to be the language to be heard by the goddesses or God என்றான். பிறகு ஆகமத்தைக் காட்டி அச்சுறுத்தினார்கள். உங்களுக்காகச் சொல்கிறேன். நீதியரசர் மகாராசன் குழு ஒன்றை முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் உருவாக்கினார். அந்தக்குழு அறிக்கையில் நீதியரசர் மகாராசன் சொல் கிறார். எந்த ஆகமத்திலும் எந்த மொழியில் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படவே இல்லை. எனவே, ஆகமத்தைக் காட்டி தமிழ் அச்ச்சனை மறுப்பது ஏற்றுக் கொள்ளத்தகாதது என்பது எங்கள் நாட்டு வழக்கு, அதற்காக நாங்கள் நிறைய நூல்களைக் கொண்டு வந்து, நிறைய போராட்டம் நடத்தி அதைக் கொண்டு வந்துள்ளோம். அங்கே என்ன நிலை! யாராவது ஒருவர் தமிழில் வழிபாடு செய்யுங்கள் என்று கேட்டால், எந்த அர்ச்சகரும் மறுக்கக் கூடாது. அது தான் சட்டம்! ஏனெ னில் வெளியில் தமிழில் வழிபாடு செய்யப்படுகிறது என்று போட்டாச்சு! பிறகு தெரியாது என்றால் வெளியில் தூக்கிவிடுவோம்! சட்டப்படி தூக்கிவிடுவோம்! எனவே, தமிழில் கேட்டால் செய்ய வேண்டும்! முடியும்! நான் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன். அருமையாகப் பாடுவார்கள். நான் தமிழ் அமைச்சர் அல்லவா அப்போது! 108 வரியை அடிப்பான் பாருங்கள்! எப்படி முடிந்தது, நினைத்தால் முடிந்தது அல்லவா! சுந்தரமூர்த்திநாயன்மாரும், திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசரும் மாணிக்கவாசகரும் 7 ஆவது நூற்றாண்டுக் காலகட்டங்களில் தமிழில் ஊர்தோறும் சென்று எத்தனையோ தலங்களில் தமிழைப் பாடி யிருக்காவிட்டால், இன்றைக்குத் தமிழே கூட நிலைத்திருக்குமா என்பது ஐயமே! அவர்கள் வாழவைத்த தமிழ்! அதை வாழ வைக்க வேண்டியது உன் பொறுப்பா? இல்லையா?

நீங்கள் ஆங்கிலத்தைப் படியுங்கள் நன்றாக. நான் நிறைய ஆங்கில மேற்கோள்களைக் காட்டுவேன். ஏனென்றால் படிக்கிறேன். அதிலே ஒன்றும் தப்புகிடையாது. அது தமிழுக்குத் தீங்கா? இல்லையா! தமிழுக்கு ஆக்கம்! மேலும் ஆக்கம்! அவ்வளவுதான். என்னாலே கீழேயும் பேசமுடி யும், தத்துவமும் பேசமுடியும், உமர் கய்யாம் பாரசீகக் கவிஞன் - சொன்னான். இப்போது இங்கே நீங்கள் இருக்கிறீர்கள். இன்றைக்குக் கேட்கிறோம். நீங்கள் எல்லோரும் 100 ஆண்டுகள் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். அதற்கு மேலே, நீங்கள் இருந்தால் இருங்க! நானா வேண்டாம் என்று தடுக்கப் போகிறேன். இருந்தாலும் 100 ஆண்டுகள் என்று சொல்வது நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்கள் என்பதற் காகச் சொல்கிறேன். நானும் 100 ஆண்டுகள் வாழ்வதாக வைத்துக் கொள் வோம்! இன்னும் 100 ஆண்டுகள் கழித்து இந்த சோகூர்பாரு தமிழ்ப்பள்ளி

இருக்கும்! ஆனால் கேட்கிற நீங்களும் பேசற நானும் மாறியிருப்போம்! ஆள் மாறியிருப்போம்! அதைத்தான் சொல்கிறான். "இருந்து சென்ற முன்னோரின் இடத்திலெல்லாம் யாம் இன்று விருந்து செய்து வாழ்கின் றோம்; விகடம் சொல்லி மகிழ்கின்றோம்! இருந்த இடம் விட்டு யாமும் இனி எழுந்து சென்றால், இங்கிருந்து விருந்து செய்வார் யார் யாரோ! விகடம் சொல்வார் யார்யாரோ!" இது தாண்டா வாழ்க்கை. எனவே, இருக்கும் காலம் சிறிதேயாம்; இதற்குள் இன்பவாழ்வை நாம் பெருக்கு மளவுக்குப் பெருக்கிவிடுவோம் என்றான்! காலம் ரொம்ப கொஞ்சம்! வேகமாக முடி! பணிகளைமுடி! அது உண்மை. வாழ்க்கையில் எல்லாவற்றி லும் ஒரு முறை இருக்கிறது. தமிழ்நெறிக் கழகத்தை இன்று எதற்காக வைக்கிறார்கள். தமிழ் நெறிகள் பரவ வேண்டும் என்பதற்காக, நெறி என்றால் ஏதோ ஒன்று இருக்கிறது. ஒரு அம்மாவைப் பார்த்துக் கேட்கிறான், நான் கேட்கிறேன் அம்மா உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? இரண்டு குழந்தைகள் என்கிறார். நான் எத்தனை குழந்தைகள் என்று கேட்டதால் அப்படித்தானே சொல்வார்கள். நான் உடனே, உங்களுக்கு கல்யாணம் ஆகிவிட்டதா? என்றால் என்ன ஆச்சு! நெறி போய் விட்டது, என்னுடைய நெறி மாறிவிட்டது! முதலில் அதைக் கேட்டுவிட்டு, இதைக் கேட்க வேண்டும். அப்போது முறை மாறினாலும் நெறி மாறுகிறது! அதுதானே நெறி! நெறி என்பது எங்கோயிருந்து வரவில்லை. ஒரு சொல்லில் கூட நெறி இருக்கிறது! நம்ம ஊரிலே கண்ட மேனிக்கும் பேசுவான்; கிராமத்தில் பேசுகிற நடையை எல்லாம் கண்ட மேனிக்கும் பேசுவான், கிராமத்தில் பேசுகிற நடையை எல்லாம் நீங்கள் கேட்டிருக் கிறீர்களா? கிராமத்திலே சண்டை அடித்துக் கொள்ளும்போது! அடேயப்பா! சொந்த வசனங் களைப் பேசுவான்; காது கொடுத்துக் கேட்கமுடியாது; யாராவது ஒரு பெரியவர் போவார். ஊரிலே சண்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். அதுவும் பெண்கள் வேறு சேர்ந்தால் கேட்க வேண்டியதேயில்லை. அடேயப்பா, அவளைப்பற்றிய கதைகள்! இவளைப்பற்றிய கதைகள்! பிறகு ஊரில் இருக்கின்ற கதைகள் எல்லாம் சேர்ந்து, ஒரு அரை மணிநேரம், முக்கால் மணிநேரம் சரமாரியாக சொல் வீச்சு நடக்கும். நாம இதெல்லாம் பேசமுடியாதுங்க! பேசின பிறகு அந்தப் பெரியவர், சே! பொம்பளைங் களா நீங்கள், மனுஷன் காது கொடுத்து கேட்க முடியவில்லையே என்பார். எவ்வளவு நேரம் கழித்து ¾ மணி நேரம் கழித்து! இவர் என்ன நினைக்கிறார்; அவர்கள் என்னதான் பேசுகிறார்கள் என்று கேட்போமே! அத்தனையும் ¾ மணிநேரம் கேட்டுவிட்டுப் பிறகா சொல்வது! நீ பார்த்த உடனே முதலில் சொல்லியிருக்க வேண்டும்! அப்போது மனதுக்குள் ஊர்க்கதைதானே நாமும் கேட்போம்! அப்போது இவன் நெறி சொல்பவன் அல்ல! மனத்திற்குள் அந்த அசிங்கங்களைத் தனக்கும் கொஞ்சம் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கின்ற தப்பிலித்தனம் படைத்தவன் என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும்; அது நெறியல்ல; நெறி என்றால் என்ன என்று மு.வ.சொல்கிறார். 'பாவை' என்ற ஒரு புதினத்தில் சொல்கிறார்; ஒரு வீட்டுக்கு விருந்துக்குப் போனேன், அந்த அம்மா உணவு படைத்தார்கள்! அந்த உணவில் நிறைய கல் கிடந்தது! சரி இருக்கத்தானே

செய்யும், உணவிலே கல் கலந்திருந்தது, ஆனால் அந்தக் கல்லை ஒவ்வொன் றாக ஓரமாகப் பொறுக்கி வைத்து, அம்மா, இந்த மாதிரி நிறைய கல் இருக்கிறது, சாப்பிடச் சிரமமாக இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் மனம் புண்படும் என்று சொல்கிறார் அவர்! அந்தக் கல்லை ஓர் ஓரத்தில் பொறுக்கி வைத்து நான் அடையாளங் காட்டினால், அந்த உணவு சமைத்த மனம் புண்படுமே என்பதற்காக அந்தக் கல்லையும் சேர்த்து விழுங்கினேன்! என்கிறார். அது நடக்கிறதா இல்லையா? அது கதையாகக் கூட இருக்க லாம்! ஆனால் அது ஓர் அருமையான நெறி அல்லவா உங்களுக்கு! நான் யாதவர் கல்லூரியில், ஆடவர் கல்லூரியில் பணியாற்றியவன். எனக்கு எதிரே மகளிர் கல்லூரி மீதியை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! 8.30 மணிக்கு வண்டி புறப்படும், பையன் வண்டியிலே ஏறமாட்டேன், 9.00 மணிக்கு ஏற மாட்டேன், 9.30 மணிக்கு அவாள் வந்த பிறகுதான் இவாள் வண்டியில் ஏறுவான். அப்புறம் பேசி - வந்து - பிறகு பாடம் எங்கே உருப்படும்! சாயந்திரம் அதே வண்டியில் போக வேண்டுமே! இதிலே இருக்கிற கவனம் பாடத்திலே இருக்காது. ஆனால் அந்த உணர்வுகள் தவறு என்று சொல்லவில்லை. பாரதி சொன்னான்.

**"ஆதலினால் மானிடரே காதல் செய்வீர்"**

எனவே, அந்த உணர்வை நான் குற்றம் சொல்லவில்லை. பாரதிதாசன் சொன்னான். "கணை விடுபட்டதும் இலட்சியம் தேடும் நம் காதலும் அவ்வாறே" என்றான். ஏனென்றால் அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் உலகியல் நடைமுறை அப்படி இருக்கிறது, இங்கே தவறான திசையை நோக்கிப் போகிறது.



சோகூர்பாரில் பேசுகிறபோது... படத்தில் 'கலைச்செல்வன்' உள்ளார்.

9

# இலக்கிய இன்பம்

## காசாங் - 6.12.2002

நண்பர் சாமி அவர்களே! அறிமுக உரை ஆற்றிய - எங்களை யெல்லாம் இந்த மண்ணுக்கு வரவழைத்துக் கடந்த மாதம் 26 ஆம் நாள் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களுடைய தலைமையில் இங்கே மேடையில் காட்டப் பட்டிருக்கின்ற பாவாணருடைய நூல்களுடைய வெளியீட்டு விழாவிலிருந்து தொடங்கி, இன்று உரையாற்றுகிற இந்த உரை வரைக்கும் தொடர்ந்து 9 நாட்களும் கூட்டங்களை ஏற்பாடு செய்து சிறப்புச் சேர்த் திருக்கின்ற மலேசியத் தமிழ்நெறிக் கழகத்தினுடைய தலைவர் அன்புத் தம்பி திருமாவளவன் அவர்களே! காசாங் இலக்கியக் கழகம் ஒன்றை அமைத்து இன்றைக்கு எதிர்பாராமல் ஒரு நிகழ்ச்சியை அமைக்கக்கூடிய வாய்ப்புப் பெற்று சட்டமன்றத்திலே நாங்கள் எல்லாம் சொல்வதைப் போல, முதலில் யார் பேசினாலும் யாரும் குறுக்கிடக் கூடாது என்று அந்தப் பேச்சுக்கு 'கன்னிப்பேச்சு' என்று நாங்கள் பெயர் வைத்தோமோ அதைப் போல இன்றைக்குக் காசாங் இலக்கியக்கழகம் முதலில் ஒரு கன்னி முயற்சியை மேற்கொண்டு, இந்த நிகழ்ச்சியை அமைத்துச் சிறப்புச் செய்திருக்கின்ற அருமை நண்பர் பச்சைபாலன் அவர்களே!

பாவாணருடைய நூல்களை நாட்டுடைமையாக்கக் கூடிய வாய்ப்பு நான் அமைச்சரானதும் எனக்குக் கிடைத்தது! இன்னும் சொல்லப் போனால், அமைச்சர் பதவி ஏற்றது 13.5.1996 என்றால், சட்ட மன்றத்தில் முதலில் அறிவிக்கப்பட்டது என்றால் பாவாணருடைய நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டது என்பதுதான். 23.8.96 இல் அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. நாட்டுடைமை என்பதில் ஒரு வசதி இந்த நூலை இப்போது இளவழகன் வெளியிட வேண்டுமென்றால், ஒரு 10 பேரிடம் ஒப்புதல் பெறவேண்டும்! ஏனென்றால் சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம் ஒரு நூலை வெளியிட்டிருக்கும்! பாவாணருடைய மகன் 4 நூல்களை வெளியிட்டிருப்பார்! பரமக்குடியில் இருக்கின்ற நான் 2 நூல்களை வெளியிட்டிருப்பேன், எங்கள் எல்லோரிடத்திலும் கேட்டுத் தான் இவர் வெளியிடவேண்டும்! அப்புறம் எங்களுக்கும் ஏதாவது பணம் கொடுத்தால்தான் நாங்கள் ஒத்துக்கொள்வோம்! இதுதான் நடைமுறை உண்மை! ஆனால், இப்படி நீங்கள் யாருக்கும் பணம் கொடுக்க வேண்டிய தில்லை. அரசே அவர்களுக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டது, நாட்டுடைமை ஆக்கிவிட்டது. அதுவும் பாவாணருடைய குடும்பத்துப் பிள்ளைகளுக்கு பாவாணருடைய நூல்களுக்காக ரூ.20 இலட்சம்

வழங்கப்பட்டது. எனவே, இதை யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் என்பதுதான் நாட்டுடைமையினுடைய அடிப்படைக் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டைப் பின்பற்றி, எத்தனையோ பேருடைய நூல்களை நாட்டுடைமையாக்கி இருக்கிறோம்! பாரதியாருக்கு வெளியிட வேண்டு மென்றால் 2,3 நூல்கள் தான்! அதில் ஒன்றும் பெரிய இடர் இல்லை. அதே போல, அறிஞர் அண்ணாவினுடைய நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. வேறு சிலருடைய நூல்களும் ஒன்று இரண்டுதான். குறிப்பாகச் சொல்லப் போனால் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் என்பது ஒரே ஒரு தொகுப்புதான்! எனவே, அதை வெளியிடுவதில் எந்த இடரும் இல்லை. ஆனால், பாவாணருடைய நூல்கள் அப்படிப்பட்டவை அல்ல, அவர் காலத்தில் வெளியிடப் பட்டவை 38 நூல்கள்! அவரால் எழுதப் பட்டும், தொகுக்கப்பட்டும், வைக்கப்பட்டிருந்த அல்லது வெளிவந்திருந்த கட்டுரைகள் எல்லாம் சேர்ந்து 15 நூல்கள்! எனக்குத் தெரிய நாங்கள் எத்தனையோ பேருடையதை நாட்டுடைமை யாக்கியிருக்கிறோம். குறிப்பாகவே, சொல்கிறேன் பாவாணருடைய மகனே பணத்தை வாங்கிக் கொண்டு போனாரே தவிர, பாவாணருடைய நூலை வெளியிடவில்லை. அவருக்குக் கிடைத்தது இலாபம். அவ்வளவுதான்! அப்பா உழைத்தார்; மகனுக்குப் பயன் கிடைத்தது. அப்பா வறுமைவாய்ப் பட்டார்! மகன் வளமாக வாழ்ந்தார்! இதுதான்! ஒரே ஒரு காரணம் அவர் மகன் என்பது தான்! மற்றபடி அவர் எந்த நூலையும் வெளியிட்டு விடவில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு நான் 2 நூல்களை வெளியிடுகிறேன்; எனக்கு ரூ.2 இலட்சம் கொடுத்திருக்கிறீர்கள்! அதில் ரூ.50,000 செலவழித்து நூல்களை அவரால் வெளியிட முடியவில்லை! அவர் மட்டுமல்ல! எந்த நாட்டுடைமை யாக்கப்பட்டவர்களினுடைய புதல்வர்களும் யாருமே வெளியிட வில்லை. அந்த வகையில், இளவழகன் ஒருவர் தான் தனித்தமிழ் மீது பற்றுக் கொண்ட காரணத்தினால், பாவாணர் மீது பற்றுக் கொண்ட காரணத்தினால், அந்தத் தனித்தமிழ் இயக்கத்தின் மீது பற்றுக் கொண்ட காரணத்தினால், ஏற்கெனவே வெளியான 38 நூல்களும், வெளியாகாத 15 நூல்களும் என்று 53 நூல்களை வெளியிட்டு வரலாற்று முத்திரை படைத்த ஒருவர் உண்டென்றால் அது இங்கே வருகை தந்திருக்கின்ற இளவழகன் ஒருவர்தான்! அதனால்தான் நமது தமிழ்நெறிக் கழகம் அவருக்கு "பதிப்பியல் வேந்தர்" என்று ஒரு பட்டம் கொடுத்திருக் கிறது! இப்போது என்ன ஒரு சின்ன சிக்கல், எனக்கு என்ன ஏற்பட்டுவிட்ட தென்றால் அவர் இப்போது வேந்தர், நான் குடிமகன்! அது ஒன்று தான் சிக்கல்! இருந்தாலும் வேந்தர் குடிமக்களுக்காக வாழ்கிறார், குடிமக்கள் வேந்தனுக்காகக் கடமைகளைச் செய்கிறார்கள் என்ற அளவிற்கு இந்த நிகழ்ச்சியில் நான் பங்குகொள்வது குறித்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அடுத்து நன்றியுரை நல்கவிருக்கின்ற மக்கள் ஓசையினுடைய பொறுப்பாளர் அன்பு நண்பர் தேவேந்திரன் அவர்கள இங்கே வந்திருக்கிறார். நன்றியுரை நல்க இருக்கிறார்! வருகை தந்திருக்கின்ற பெருமக்க ளெல்லாம் இருக்கிறீர்கள்! உங்களைச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

இந்த 9 நாளும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு தலைப்பில் பேசி வருகிறேன். 'தமிழன் எப்படிக் கெட்டான்' என்று ஒரு ஊரில் பேசியது! அதுவும் நல்ல தலைப்புதான்! பிறகு கம்போங் பாண்டாங்கில் "பாரதியும் பாரதிதாசனும்" என்று பேசினேன். ஆனால், இன்றைக்கு உங்களுக்கு எல்லாவற்றையும் பொதுமைப்படுத்தி, ஓர் இலக்கிய இன்பமாகத்தான் பேசப் போகிறேன்? எல்லாமே உண்டு! ஆனால் எல்லாம் பரவலாக உண்டு! என்ற நிலையில் இந்தப் பேச்சு அமைய வேண்டும் என்று நண்பர்கள் விரும்பினார்கள்! அதன்படியே பேசி விடுவோம் என்று சொல்லியிருக்கிறேன். எனவே, உங்களுக்குக் கிடைக்கப் போவது பொதுவான இன்பம்! அதிலே பாரதியும் உண்டு; பாரதிதாசனும் உண்டு; அண்ணாவும் உண்டு! மறந்து விடாமல் அதையும் சொல்லுவேன்! ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தமிழ் நாட்டிலே இலக்கியச்செல்வம் என்பது ஏராளமாக ஆகிவிட்டது. ஒரு காலத்தில் கவிதையில் தான் எழுத வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்த காலத்தில் உதிரி உதிரியாகப் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்புதான் எட்டுத்தொகை எல்லாம்! சற்றுப் பெரிதாகப் பாடப்பட்டவைதான் காப்பியங்கள்! சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் போன்றவை; ஆனால் ஒரு காலகட்டம் போய்த் திரும்பிக் கீழே இறங்குகிறபோது. பெரிய நூல்களைப் படிப்பதற்கு நம்முடைய மக்களுக்கு நேரமில்லை! எனவே, புதினங்களைப் படிப்பதற்கு மாறாகச் சிறுகதைகளைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள்! பெரிய கவிதையைப் படிப்பதற்கு மாறாகப் புதுக்கவிதையைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள்! நேரம் எனக்கு அவ்வளவு தான்! அதற்குத் தகுந்த மாதிரி கொடுங்கள் என்றால், நம்ம ஆட்கள் அதற்குத் தகுந்த மாதிரி கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்! எனவே, அது தளர்ச்சி என்று நான் சொல்ல மாட்டேன்! ஒரு வகையில் வளர்ச்சிதான்! கவிஞர் சுரதா அடிக்கடி சொல்வார்! நெட்டைக் கவிதைகள் நேரத்தை வீணாக்குவன! என்று! எனவே, இப்போது மதுரைக்காஞ்சி மாதிரி 782 வரிகள் எழுதிக் கொண்டிருக்க முடியாது; அப்போதே முல்லைப்பாட்டில் 103 வரிகள் தான் எழுதியிருக்கிறான். அந்தக் காலகட்டத்திலேயே சுருக்கமாக எழுதியவனும் இருக்கிறான். இப்போதெல்லாம் 4 வரி; 3 வரி; குறுந்தொகையில் பார்த்தீர்களென்றால், 782 வரிகளை எழுதிய மதுரைக் காஞ்சியினுடைய ஆசிரியன் பெயரை என்னால் பட்டென்று சொல்ல முடியவில்லை! ஆனால், ஐந்தேவரி எழுதிய ஒரு குறுந்தொகைக் கவிஞனுடைய பெயரை என்னால் சொல்லமுடியும்! 5 வரியில் அழகான ஒரு கருத்தைச் சொல்லி, ஒரு காதலன் காதலியினுடைய அன்பு எப்படி இருக்கிறது; எப்படி இரண்டறக் கலந்தார்கள் என்றால் வானத்திலிருந்து பெய்கிற மழை எந்த மண்ணில் விழுகிறதோ அந்த மண்ணின் நிறத்தைப் பெறும்! இது செம்மண் நிலத்தில் விழுகிறது, எனவே செந்நிறத்தைப் பெறுகிறது; எனவே செம்மண் நிலத்தில் பெய்த மழை எப்படி இரண்டறக் கலந்து செந்நிறமாகி விட்டதோ அதே போல இந்த இரண்டு உள்ளங்களும் ஒன்றாகி அன்பு கலந்தன என்பதுதான் குறுந்தொகை!

*யாயும் ஞாயும் யாரா கியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறி தும்?*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே!*

*ஐந்தே வரிகள் தான்! இப்போது நாம் விளம்பர உலகத்தில் வாழ்கிறோம்! அளவுக்கு மிஞ்சிய புகழை விரும்புகிறோம்; அது முறையாக வராவிட்டால் வரவைக்கிறோம்! சில பேர் புகழை வரவைத்துவிடுவான்! பல்வேறு கொலைகளில் ஈடுபட்டு ஒருவன் சிறைச்சாலைக்குப் போயிருப்பான்; பெரிய அளவில் அவனுக்குத் 'தாதா' என்று பேர் இருக்கும்! அவனே வெளியில் வந்து விடுதலையான பிறகு அவன் ஒரு நற்பணி மன்றம் வைத்துக் கொண்டு, கடைசியில் இவன் எப்படி என்றால் தொண்டர் தலைவர்! அங்கே குண்டர் தலைவராக இருந்தவர் கடைசியில் இங்கே வெளியில் வந்து தொண்டர் தலைவர் என்று போட்டான். கடைசியில் நமக்கு கிடைக்காத புகழ் பெரிய கொட்டை எழுத்தில் வந்துவிடும்! இதுவும் தமிழ் நாட்டில் நடந்து கொண்டேயிருக்கிறது! எனவே, புகழுக்காக எல்லோரும் அலைகின்றார்கள். என்னுடைய பேராசிரியர், அறிஞர் மு.வரதராசனார் அடிக்கடி சொல்வார்! திருக்குறளில் தனக்குப் பிடிக்காத அதிகாரம் ஒன்று உண்டு என்று சொல்வார், அது உங்களுக்கும் ரொம்ப பேருக்கும் சொல்லவில்லை; இன்றைக்குத்தான் சொல்கிறேன். அது 'புகழ்' என்ற அதிகாரம்! ஏனென்று கேட்டால், அதை நினைக்கிறபோது, மனிதன் தடுமாறி விடுகிறான்! யாராவது ஒருத்தர் மு.வ.வைப் பேசுவதற்குக் கூப்பிட்டால், நீ அங்கேயிருந்து வாசல் படி வரும்போதே, பேச மட்டும் கூப்பிட வராதீங்க! அப்படி வந்தால் நான் வரமாட்டேன் என்று இங்கேயே சொல்லிவிடுவார்! அதிகம் பேசுவதை அவர் விரும்புவதில்லை. எனவே, ஏராளமான எழுத்துகள்! ஆனால் பேச்சில் ஒன்றும் தவறு இல்லை! என்னைக் கேட்டால் செய்திகளை உங்களுக்கு உணர எடுத்துச் சொல்லாவிட்டால், இந்தச் செய்திகள் கூடத் தமிழ் மக்களுக்குத் தெரியாமல் போய் விடும்! தந்தை பெரியாருடைய பேச்சினால்தான் சமூகச் சீர்திருத்தம் விளைந்தது! மறைமலையடிகளின் பேச்சினால்தான் தனித்தமிழியக்கம் வளர்ந்தது! அறிஞர் அண்ணாவினுடைய பேச்சினால்தான் 1967 இல் ஆட்சிக்கு வந்தது மட்டுமல்ல; திராவிட இயக்கத்தினுடைய மறுமலர்ச்சி வந்தது! இன்னும் சொல்லப் போனால், சிறந்த பேச்சாளர்களெல்லாம் அந்த இயக்கத்தில் இருந்த காரணத்தினால்தான் இத்தனை செய்திகளையும் சொல்ல முடிந்தது! எனவே, பேச்சு ஓர் அருமையான சுவை! அவருக்குப் பிடிக்காது அவ்வளவுதான்! ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அந்தப் பாட்டுச் சொன்னேனே அவர் தன் பெயரை எழுதி வைக்கவில்லை! எழுதி வைத்திருப்பான்; ஆனால் நமக்குக் கிடைக்கவில்லை! ஏட்டில் மறைந்து போயிருக்கலாம்; அல்லது கரைந்து போயிருக்கலாம்; அல்லது கரையான் அரித்திருக்கலாம்; கடைசியில் அவனுக்கு நாம் ஏதாவது பெயர் வைக்க வேண்டுமே என்பதற்காக அந்த உவமையையே எடுத்து செம்புலப் பெயல் நீர் என்பதை வைத்தே அவனுக்குப் பெயர்*

வைத்து விடுவோம்! செம்புலப்பெயல் நீரார் எழுதிய பாட்டு! இது மாதிரி நிறைய பெயர் இருக்கின்றது! அணிலாடு முன்றிலார்! என்றெல்லாம் நாம் பெயர் வைத்திருக்கிறோம்! எனவே, அந்தக் கவிஞன் வாழ்க! புகழுக்குக் கவலைப்படாமல் தன் கருத்தை மட்டும் அழகாக 5 வரிகளில் சொல்லிச் சென்றானே அவனிலிருந்து தொடங்கித்தான் நாம் இன்றைய புதுக்கவிதை வரைக்கும் பார்க்க வேண்டும்.

**"பனைநுகம் கொண்டு யானை ஏர்பூட்டி**
**வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும்**
**வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே!"**

என் சொந்த வீட்டில் - பிறந்த வீட்டில் வாழ்வதை நான் விரும்ப வில்லை. ஆனால், தலைவன் வீடு எப்படி?

**செங்கேழ்வரகுப் பசுங்கதிர் கொய்து**
**கன்று காத்து குன்றின் உணக்கி**

இது வேறு! ஏற்கெனவே; கடன் வேறு வாங்கி வைத்திருப்பான்; அதை வேறு கொடுத்துவிட வேண்டுமாம் அன்றாடம்! வாங்கின கடனைக் கொடுக்கவேண்டுமல்லவா? வரகரிசி வாங்கி இருப்பாளே? ஊடுபதர் போக்கி, முன் உதவினோர்க்கு உதவி!

**"சோறது கொண்டு பீறல் அடைத்தே;**
**குப்பைக் கீரை உப்பின்றி வெந்ததை;**
**இரவல் தாலம் பரிவுடன் வாங்கி**
**ஒன்றுவிட்டு ஒருநாள் தின்று கிடப்பினும்**
**நன்றே தோழி! நாம் கணவன் வாழ்வே"**

இது சங்க இலக்கியப் பாடல்! வேடிக்கை என்னவென்றால், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எதிலும் இல்லை! இந்தப் பாடலை முதலில் கண்டு பிடித்து, தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் தேவநேயப் பாவாணர்! அவருடைய "தமிழர் திருமணம்" நூலில் இருக்கிறது.

எனவே ஒரு மனப்பாங்கு! இந்த மனப்பாங்கு அமைவது என்பது அவ்வளவு எளிதன்று! ஏனென்றால் செல்வ வளத்துடன் வாழும் ஒரு பெண் அத்தனையும் உதறித் தள்ளிவிட்டுத் தன் தலைவனுடன் வாழ்வதே வாழ்வு என்று கருதுகிற - வறுமையாக இருந்தாலும் தான் பங்கிட்டுக் கொள்வ தற்குப் பெரிய துணிச்சல் வேண்டும்; பெரிய ஆற்றல் வேண்டும்! அந்தச் சிறப்பை இந்தத் தலைவி பெறுகிறாள் என்று சங்ககாலம் சொல்கிறது!

சங்ககாலத்தை ஒட்டித்தான் திருக்குறள்! இப்போது 2033 ஆவது ஆண்டு 2002 என்றால் 31 ஐக் கூட்டிக் கொள்ள வேண்டும். அதுதான் மறைமலையடிகள் போன்றவர்கள் கணித்த ஆண்டு! எத்தனையோ பாடல்கள்; 1330 க்கும் தனித்தனியாக உரை சொல்லலாம், தனித்தனியாக நயம் சொல்லலாம், அந்த அளவுக்குச் சிறப்பாக இருக்கும்! ஒருத்தன் சொன்னானே எல்லாப் பொருளும் இதன்பால் உளது இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லை, அவன் தான் சொல்லி விட்டானே! எல்லாமே இதில் இருக்கிறது. அப்புறம் எதற்கு இன்னொரு நூலைப் போய்ப் படிக்க வேண்டும்! "1330 அருங்குறளும் பாயிரத்தினோடு பகர்ந்ததன் பின் போய்

ஒருத்தர் வாய்க் கேட்க நூல் உளதோ!'' இந்த 1330 ம் சொன்ன பிறகு, இன்னொருத்தனிடம் போய் ஏன்? பாடம் கேட்கிறாய், இதைப் படித்தாலே போதும் என்பது தான்! அந்த அளவுக்குச் சிறப்பு!

இதே போன்ற காலகட்டத்தில் வந்தது "சிலம்பு" இந்தச் சிலம்பில் கோப்பெருந்தேவி சிறந்தவளா? கண்ணகி சிறந்தவளா; மாதவி சிறந்தவளா! என்று நாங்களெல்லாம் பட்டி மன்றம் எல்லாம் நிறைய போட்டிருக் கிறோம். தமிழ்நாட்டில் எங்களுக்கு அது தானே வேலை! நானே 3 தலைப்புகளிலும் பேசி இருக்கிறேன்! ஒரு ஊரிலே கண்ணகி சிறந்தவள் என்று நான் பேசி விட்டேன், இன்னொரு ஊரில் மாதவி சிறந்தவள் என்று பேசிவிட்டேன். இந்த இரண்டு கூட்டமும் ஒருத்தன் கேட்டிருக்கிறான்! அந்த கூட்டத்திற்கும் வந்திருக்கிறான், இந்தக் கூட்டத்திற்கும் வந்திருக் கிறான்! நேரே கூட்டம் முடிந்தவுடனே வந்தான்! என்னங்க இது நியாயம்! நேற்றைக்கு கம்போங் பாண்டாவில் கண்ணகி சிறந்தவள் என்று பேசினீங்க! இன்றைக்கு காசாங்கில் மாதவி சிறந்தவள் என்று பேசுறீங்க! ஏதாவது ஒன்றில் நில்லுங்கள்! நான் பேசுவது பட்டிமன்றம்! அவன் என்ன நினைக்கிறான்; ஒரு இடத்தில் என்று சொல்லி இன்னொரு இடத்திலே பொய் சொல்கிறார் என்று நினைக்கிறான். பட்டிமன்றம் என்பது எடுத்துக் கொண்ட தலைப்பில், சிறப்பைப் பேசுவது; பின்னால் போகப் போகத்தான் புரியும். இது உண்மையிலே நடந்தது! ஏனென்றால் தொடக்க காலத்தில் பட்டிமன்றம் என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரியாதல்லவா! அப்புறம் எந்த அளவுக்குக் கொண்டு போய்விட்டான். தமிழ்நாட்டுப் பட்டிமன்றம்! இந்த நாடு இனி உருப்படவே உருப்படாது! எனும் தலைப்பு. அந்த அளவுக்குக் கொண்டு வந்துவிட்டோம், அது சமுதாய சீர்திருத்தம்! எனக்கு என்னவென்றால் நான் சிலப்பதிகாரத்தை வகுப்பில் நடத்தியவன்; நானே படித்தவன்; நானே வகுப்பில் பல ஆண்டுகளாக 20 ஆண்டுகள் நடத்தியவன்! மறந்து விடக்கூடாது! அதிலே மாதவி சிறந்தவளா? கண்ணகி சிறந்தவளா! கோப்பெருந்தேவி சிறந்தவளா? யாரும் யாருக்கும் விஞ்சிய வர்கள் அல்லர்; யாரும் யாருக்கும் குறைந்தவர்கள் அல்லர்! கோப்பெருந் தேவிக்கு ஒரு கடமை இருந்தது! கணவன் இறந்தான்; அவனுடைய இணையடி தொழுது விழுந்தாள்! சுருக்கமாக முடித்துவிட்டான்! அதுவும் எப்படி என்றால் ஒரு வரி சொல்லிவிட்டு முடித்துவிட்டான்! இளங்கோ வடிகள்! "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" வேற இடத்தை நிரப்பலாம். இப்போது மறுமணம் எல்லாம் வந்துவிட்டது? நான் அந்தக் கோணத்திற்கே போகவில்லை! அன்றைக் கிருந்த வரம்பு என்பது, கோப்பெருந்தேவி, நெடுஞ்செழியன் இறந்தவுடன், அரசவையைக் கூட்டி, என்னுடைய கணவன் இறந்து போய்விட்டதால், நீங்கள் எனக்கு வேறு ஒரு மாப்பிள்ளையைப் பார்க்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன் என்றா சொல்லியிருப்பாள்! சொல்லமுடியாது; அவள் அதைப்பற்றிச் சிந்திக்கக் கூடிய இடமே இல்லாமல், கணவனுக்குப் பின் தனக்கு வாழ்க்கை இல்லை என்று கருதினாள்; மடிந்து போனாள். ஆனால், இதையே வற் புறுத்தி உடன்கட்டை ஏற்றியவர்கள் இந்தியாவில் உண்டு! அதனால்தான் இராசாராம் மோகன்ராய் சீர்திருத்தம் செய்ய வேண்டியிருந்தது! உடன்

கட்டை ஏறுதலைத் தடுத்து நிறுத்த வேண்டி யிருந்தது! அவள் விரும்பா விட்டாலும் தூக்கி நெருப்பில் போட்டுவிடுவான்; நம்ம ஆளு அதிலே தெளிவாக இருக்கிறான். அதோடு போகட்டும் என்று விட்டு விடுவான்! அதெல்லாம் முடிந்தது இன்றைக்கு இந்தியாவில் இல்லை! இன்னும் சொல்லப் போனால் இராசராசசோழன் காலத்திலேயே வானவன் மாதேவி என்ற ஒரு அரசி உடன்கட்டை ஏறியிருக்கிறாள் 10 ஆம் நூற்றாண்டில்! பின்னால் அதெல்லாம் தமிழ்நாட்டில் இல்லை! எனவே, கோப்பெருந்தேவி கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று ஒரு வரியிலேயே கணவன் இழந்த பிறகு, தனக்கு எந்த வழியும் இல்லை, வாழ்வும் இல்லை என்று கருதி மடிந்து போனாள், இது அவளுக்கிருக்கின்ற பெரிய சிறப்பு!

கண்ணகிக்கு இருக்கிற பெரிய சிறப்பு, முதலிலெல்லாம் அவள் பேசவே இல்லை! உங்களுக்குத் தெரியும்

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!"

எல்லாம் பாடுவானே! அப்போதெல்லாம் பேசாமல்தான் இருந்தாள்! உம் .. உம் .. என்று கேட்டுக் கொண்டு இருந்தாளே தவிர, இவள் ஒரு வரி பாடவில்லை. எனவே, வாய்திறந்து. ஒரு கணவன் மனைவி தனித்திருக்கிற போது கூடத் தன் வாய்திறந்து பேசாதவள்! அப்படிப்பட்ட அடக்கமானவள்! அப்புறம் எங்கே பேசுகிறாள்! கடைசியில் கோவலன் மதுரைக்கு அழைத்துக் கொண்டு வந்து, கடைசியில் மாதரி வீட்டுக்கு அடைக்கலமாகி, ரொம்ப நாளைக்குப் பிறகு முதல் தடவையாகச் சமைத்து உணவு படைக்கிறாள் அந்த உணவைச் சாப்பிடும் போது நீங்கள் இல்லாத நேரத்தில் வீட்டில் இல்லாத நேரத்தில் நான் மட்டும் எப்படி விருந்து படைக்க முடியும்? அது நல்ல மரபில்லையே! எனவே, நான் அந்த வாய்ப்பையெல்லாம் இழந்து விட்டேன்! நீங்கள் இல்லாததனால் என் புன்னகையை நான் இழந்து விட்டேன்! எத்தனையோ வகையான இழப்புகள் எனக்கு! ஏன் தெரியுமா? நீங்கள் போற்றா வொழுக்கம் புரிந்தீர்! என்று ஒரு வரியில் அடித்தாள். இந்தப் பெருமக்களோ! உங்கள் வீட்டாரோ யாரும் போற்ற முடியாத ஓர் ஒழுக்கம் உங்களுக்கு! போற்றா ஒழுக்கம் புரிந்தீர் என்று நச்சென்று அடித்தாள் பாருங்கள்! இது வரைக்கும் பேசாமலிருந்துவிட்டு ஒரே அடி! அடுத்த வரிதான் சொன்னாள்! நான் ஏன் உங்கள் கூட வந்தேன் தெரியுமா உங்களுக்கு! "யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையே னாதலின் ஏற்றெழுந்தனன்" இது தாங்க கண்ணகிக்குச் சிறப்பு! நான் எப்போதும் மாற்றாத உள்ள வாழ்க்கை படைத்தவள், எனவே, என் கணவன் எங்கு அழைத்தாலும் வரவேண்டியது என்னுடைய கடமை! வருவேன்! வந்தேன்! என்றாள்! உள்ளடிபயே உருகிப் போய் விட்டான்! அப்புறம் அடுத்த நாள் வந்து உருகுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது! அதுதான் போட்டுத் தள்ளிட்டாங்களே! இதுதான் கடைசி! எனவே, கடைசியாக அவள் பேசி அனுப்புகிறாள். அதற்கப்புறம் போனான்! கொலையாச்சு! வந்தாங்க! வழக்குரை காதைக்குப் போனார்! நீங்க ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்! 1800 ஆண்டுகளுக்கு

முன்னாலே, சிலப்பதிகாரத்திலே, வழக்குரை காதையில் அவள் எடுத்து வைக்கிற வாதங்கள் அற்புதமானவை! அப்படி எந்தப் பெண்ணும் தமிழ்நாட்டில் பேசியதாக எந்த இலக்கியமும் எழுதவில்லை. அதற்குப் பின்னாலே வாதம் பண்ணுவது கம்பராமாயணத்தில் வாலிதான். அந்த அளவுக்கு, சிலப்பதிகாரத்தின் உச்சக்கட்டம் அந்த வழக்குரை காதை. இன்னும் சொல்லப் போனால், "தேரா மன்னா செப்புவது உடையேன்" ... என்ன அழகான வாதங்கள்! கடைசியில் இவளுடைய வாதத்தைக் கேட்டவுடனே முடிவுக்கு வந்து விட்டான். நாம் தவறு செய்துவிட்டோம்!

**"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட**
**யானோ அரசன் யானே கள்வன்"**

நான் அரசனில்லை; நான் தான் திருடன் என்று அவனே ஒப்புக் கொண்டு கீழே விழுந்தான். எனவே தன்னுடைய தண்டனையை அவனே அடைந்தான். அந்த அளவுக்கு அவனே தண்டனை அடையக்கூடிய அளவுக்கு, அவளுடைய வாதம் அமைந்திருந்தது தான் பெரிய சிறப்பு! பேசா மடந்தையாக இருந்த கண்ணகி, கொஞ்சமாகப் பேசிக் கோவலனுக்கு உணர்த்திய கண்ணகி, கடைசியில் ஒரு வழக்குரை காதை நடக்கக் கூடிய அளவுக்குத் திறம்பட்டாள்! இதுதான் - அடங்கிக் கிடந்த உணர்ச்சிகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டிய நேரம் வந்தால், வடிவம் யாரும் கொடுப்பார்கள்! அதுதான் காரணம்! ஆனால், மாதவி மீது யாரும் குற்றம் சொல்ல முடியுமா என்றால் முடியாது; மாதவியோடு கோவலன் வாழ்ந்ததில் எந்தத் தப்பும் கிடையாது; ஏனென்றால் அன்றைய மரபு அது! பிரிவு வகைகளில் சொல்லுகிறபோது, தூது செல்வதற்காக ஒரு தலைவன் பிரியலாம்; படிப்பதற்காக ஒரு தலைவன் பிரியலாம்; ஓதல் பிரிவு - போர்க்களத்திற்குப் போவதற்காக ஒரு தலைவன் பிரியலாம், ஏனென்றால், அரசன் கூப்பிட்டுக் கொண்டு போய்விடுவான்! பொருள் தேடுவதற்காக ஒரு தலைவன் பிரியலாம், பொருள் வயிற் பிரிவு; பரத்தை காரணமாகவும் பிரியலாம், நம்ம ஆளுங்க அப்பவே வசதி செய்து வைத்திருக்கிறான், அதிலே நம்ம ஆளுங்க தெளிவானவர்கள்! பரத்தை காரணமாகப் பிரியலாம் என்பதால் கோவலன் பிரிந்ததில் யாரும் தவறு சொல்ல முடியாது! ஆனால், மாதவி எடுத்த முடிவு இருக்கிறது பாருங்கள்! கோவலன் பிரிந்துபோன பிறகு, கண்ணகியிடம் போன பிறகு, இனிமேல் இந்த வாழ்க்கை கூடாது, முறைப்படி அவளுடைய வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்றால், கோவலன் போனால் அடுத்து ஒரு கேவலன், யாரோ ஒருத்தன்! வசதி படைத்தவன் யார் என்று தேடு! அதற்குத்தான் இருக்கிறார்களே வசந்தமாலை, கூனி எல்லாம் இருக்கிறார்களே தேடிப் பிடித்துக் கொண்டு வந்து விடுவார்கள்! இதே மாலையை தெருவில் வைத்து நின்றபோது வாங்கினவன்தான் பின்னர் சேர்ந்தான்! எனவே, அப்படி நினைக்காமல், இந்த வாழ்க்கை என்பது தன்னோடு நிற்கட்டும்! எனவே, தானும் துறவு பூண்டு, தன் மகள் மணிமேகலையையும் துறவு பூண வைத்த பெருமை மாதவிக்கு உண்டு! கோவலனுக்கு கடிதம் எழுதும் போது கூட அவன் மேலே வருத்தப்படவில்லை. ஆனால், இந்த இரவு நேரத்தில் நீங்கள் கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரை போகக் கூடிய அளவுக்கு நான்

என்ன குற்றம் செய்தேன்! என்ற வரி அந்த வரியில் முதல் வரிதான் ரொம்பப் பிடிக்கும்! "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்!" அவள் கோவலனை சாதாரண ஆளாக, கணவனாகப் பார்க்கவில்லை, அடிகள்! எழுதுவது இளங்கோவடிகள்! மாதவியினுடைய வரிகளில் 'அடிகள்' என்கிறான். ஏனென்றால் அந்த அளவுக்கு உயர்த்திப்பாடி, அந்த அளவுக்கு யாரும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை, யாரும் குறைந்தவர்கள் இல்லை! என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! இதுதான் சிலப்பதிகாரம்!

அதற்கப்புறம் கம்ப இராமாயணத்தில் பார்த்தீர்களேயானால், கும்பகர்ணன்! எனக்குப் பிடித்த பாத்திரம்! தூங்கிக் கொண்டே ஆறுமாதம் இருப்பான்; விழித்துக்கொண்டு 6 மாதம் இருப்பான் என்பார்கள்! அதையெல்லாம் விட்டுவிடுவோம்! உண்மையிலேயே கம்பன் அதற்கு ஒரு சந்தம் போட்டிருக்கிறான். எப்படி எழுப்புகிறார்களாம்! இப்போதெல் லாம் லேசா தட்டி எழுப்பினால், எழுப்பணும்! இல்லை தண்ணீரை ஊற்றுவார்கள், அல்லது காதைத் திருகி, காலை மிதித்து எழுப்பலாம்! ஆனால், அந்தக் காலத்தில் கும்பகர்ணனை எழுப்புவதற்கு உலக்கையைக் கொண்டு இடித்து இடித்து எழுப்பினார்களாம். அப்போது எவ்வளவு தாங்கியிருப்பான் என்பது தெரியும்! சரி விட்டு விடுங்க! அவனுடைய அந்தப் பாத்திரம் எப்படிப்பட்டது தான் தெரியுமா? கும்பகர்ணனை எழுப்பி இராவணன் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொல்கிறான். அப்போது நீ போருக்குச் செல்ல வேண்டும். ஏனென்றால் என்ன நடந்தது என்று அவனுக்குத் தெரியாது. எப்போது தூங்கினவன்! - சீதையை இவன். அழைத்துக் கொண்டு வந்தானே அசோகவனத்திற்கு அப்போது வந்தான் பாருங்க! அப்போது தூங்கினவன். சொல்லிப் பார்த்தான் கேட்கவில்லை. விட்டு விடுங்கள் என்று சொன்னான். கேட்கவில்லை! போய்த் தூங்கி விட்டான்! அதற்குள் இராமன் வந்து எல்லோரையும் உதைத்துப் போர்க் களத்திற்குப் போக வேண்டிய கட்டம் வந்துவிட்டது! எழுப்பிவிட்டு வந்தவுடனே என்ன கேட்கிறான். சீதையை இன்னும் நீ அனுப்பவில்லையா? அவ்வளவு தூரம் தெரியாமல் தூங்கி இருக்கிறான். சரி! என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறான்! நீ போர்க்களத்திற்குப் போகவேண்டும் என்கிறான்! சரி! என்று புறப்பட்டு விடுகின்றான்! அவ்வளவுதான்! வீடணன் குறுக்கே வந்து நீ போகக்கூடாது என்கிறான்! அண்ணன் தப்பு செய்கிறான்; நாம் எல்லோரும் சேர்ந்து எதிர்க்கவேண்டும் என்று! அதுதான் வீடணன். அப்போது இவன் சொல்வான்! அவன் எனக்குச் சோறுபோட்டு வளர்த்திருக்கிறான், என்னை எத்தனையோ காலம் வளர்த்து ஆளாக்கியவன். ஒரே வழிதான் எனக்கு ரொம்பப் பிடித்தது. அவனுக்கு முன்னால் நான் போர்க்களத்திற்குச் சென்று சாகவேண்டியது என் கடமை! "ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க் குரியதம்மா! இதற்கு மேலே கம்பன் என்ன சொல்ல முடியும்? ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்குரியதம்மா. அண்ணனுக்கு முன்னால் நாம் சாக வேண்டும்! அது என் கடமை! நீ உன் வழியைப் பார்த்துக்கொள்! உனக்குச் சரி என்று பட்டால் நீ போ!" நான் வர மாட்டேன்! என்று சொல்லி இந்தப் பக்கத்தில்

நின்று, சொன்னமாதிரியே போனான், சாவான்! அப்போது கம்பன் சொல்வான்! இவன் போர்க்களத்திற்குப் போகவில்லை! விதி அவனுடைய பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது! அப்படித்தானே பொருள்! விதி பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது என்கிறான். அவனைத் தள்ளிக் கொண்டு போகிறது. இவனா போகிறேன் என்று சொன்னான்! இராமனோடு சண்டை போடவேண்டும் என்றான்; இவன் எழுந்து வந்தான்; அண்ணன் சொல்கிறான், இவன் போகிறான், அவ்வளவுதான்.

அப்படியே கர்ணனுக்கு வாருங்கள்! வில்லிபுத்தூரார் பாரதத்தில் வாங்க! சண்டையெல்லாம் வருகிறது, குந்தி வந்து சொல்கிறாள்! எதிரே நிற்கிறவர்கள் பூராவும் உன் சகோதரர்கள்! - தருமன் பீமன் எல்லோரும்! அப்புறம் தான் இவனுக்கு விவரம் தெரியும்! இவள் தாய்! அந்த விவரமும் தெரிகிறது; எனவே, நீ அவர்களைக் கொன்று விடக்கூடாது என்று வரமெல்லாம் கேட்கிறாள்! அவன் நாகாஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் விட மாட்டேன்! அது ஒன்று; ஏனென்றால் அர்ச்சுனன் தானே குறி! பிறகு கண்ணன்தான் உங்களுக்குத் தெரியுமே! தேர்ச் சக்கரத்தை அரை அடி கீழே இறக்கிவிடுகிறான்! நாகாஸ்திரம் மேலே போய்விடுகிறது; ஆனால், இதில் கர்ணனுடைய பாத்திரம்! நான் அந்தப்பக்கம் வரமாட்டேன்! நீ சொல்வது எல்லாம் சரி! ஆனால் நான் வரவில்லை! இதிலே பெண்கள் பார்க்கவேண்டிய அருமையான பகுதி! பானுமதி என்று சொல்லப்படுகிற துரியோதனனுடைய மனைவியும், கர்ணனும் சொக்கட்டான் விளை யாடிக் கொண்டிருக்கிறார்கள்! அந்தக் காலத்து மரபுப்படி! அப்போது துரியோதனனுக்கு நாம் என்ன பெயர் வைத்திருக்கிறோம். அரவக்கொடி யோன்! அரவம் என்றால் பாம்பு! பாம்பைக் கொடியாக வைத்திருக்கிறவன் எப்படியிருப்பான்! பாஞ்சாலியை துச்சாதனனை விட்டுத் தெருவில் இழுத்துக் கொண்டு வரச் சொல்லித் துகில் உரியச் செய்தவன்தானே இவன்! அப்போது கைகொட்டிச் சிரித்தவன்தானே இவன்! அப்போது இவன் இவ்வளவு மோசமானவன் என்று நினைத்தால், அவனுக்குள் பாருங்கள்! ஒரு நட்பு இருக்கிறது! அப்போது இரண்டுபேரும் உட்கார்ந்து ஆடிக் கொண்டிருக்கும் போது அங்கேயிருந்து துரியோதனன் வருகிறான்; பானுமதி பார்த்துவிட்டு எழுந்து நிற்கிறாள்! கர்ணன் என்ன நினைத்து விட்டான்! தோற்றுப் போனதால் இவள் எழுந்து ஓடப் பார்க்கிறாள் என்று அவளுடைய முந்தானையைப் பிடித்து இழுக்கிறான் அப்போது அவள் கட்டியிருந்த மேகலை அறுந்து கீழே விழுகிறது! அதிலிருந்து முத்துகள் எல்லாம் சிதறுகின்றன! அதற்குள் துரியோதனன் வந்துவிட்டான்! அப்புறம்தான் கையைக் காட்டுகிறாள்! இவள். அவன் திரும்பிப்பார்க் கிறான். இந்த நேரம் நம்ம காலத்தில் இருந்தால், நம்ம ஆளு என்ன பண்ணுவான்! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! கர்ணா எவ்வளவு நாளா இது! நான் அப்பவே 'நோட்' பண்ணினேன்! இருந்தாலும் 'கன்பார்ம்' பண்ணணுமில்லே நம்ம ஆளு தமிழ் நடைவேறு! வாளை எடுத்து உருவு வான்; பிறகு காலி பண்ணி விடுவான்! அப்படித்தானே இருக்கவேண்டும்! ஆனால், துரியோதனன் என்ன செய்தான்! எந்த வகையிலும் கர்ணனுக்கு ஏற்பட்ட அந்தப் பரபரப்பு! எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள்

யோசித்துக்கொள்ள வேண்டும்! அந்தப் பரபரப்பிலும் துரியோதனன் சொன்னான்! கர்ணா! மேகலை எல்லாம் சிதறி இருக்கிறது. அதை எடுத்துத் தரவா! இல்லை கோத்துத் தரவா என்று கேட்டான்! எடுக்கவோ கோக்கவோ என்றான்! கர்ணன் அப்படியே திகைத்தான்! இது பெரிய நட்பு இல்லையா? என்ன ஆகியிருக்க வேண்டும். ஆனால் என்ன ஆச்சு! இதை மனத்தில் வைத்துக் கொண்டு, தாய்க்குச் சொல்கிறான்! இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது; அதை அவன் இப்படிச் செய்தான்; எனவே அப்படிப் பட்ட வேல் இராசராசனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்கு இனிப் புகழும் தருமமும் கருமமும்! என்றான். நான் வரவில்லை; அவனுக் காக நான் உயிர் கொடுக்க வேண்டும். அவன் எனக்குப் பண்ணினான் பாருங்க! அந்த இராசராசனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழிக்க வேண்டும் என்று சொன்னான், எனவே, அந்த செஞ்சோற்றுக் கடனை அழுத்தம் திருத்தமான வரிகளில் வில்லிபுத்தூரார் பாடுகிறார். அற்புதமான இடம்! எனவே, அது வில்லிபுத்தூரார் பாரதத்தில்!

நிறைய சிற்றிலக்கியங்கள் தமிழில்! இந்த வகை இலக்கியத்தில் எனக்கு மிகவும் பிடித்தது குற்றாலக்குறவஞ்சிதான். எல்லாமே சந்தங்கள்! அதிலும் பாட்டை சிதம்பரம் ஜெயராமனே பாடியிருக்கிறார். குறவஞ்சி படம் வந்தது பாருங்க! அந்தப் படத்திலே சிதம்பரம் ஜெயராமனே பாடியிருக்கிறார். அந்த வரிகள்! அற்புதமான சந்தம்!

**“இருண்ட மேகம் சுற்றிச் சுருண்டு சுழி எறியும்**
**கொண்டையாள் - குழை**
**ஏறி ஆடி நெஞ்சைச் சூறையாடும் விழிக்**
**கெண்டையாள்**
**திருந்து பூ முருக்கின் அரும்பு போலிருக்கும்**
**இதழினாள் - வரிச்**
**சிலையைப் போல் வளைந்து பிறையைப் போல் இலங்கு**
**நுதலினாள்”**

சொற்களை அப்படி அடுக்கிட வேண்டும்! இப்போது கவிதை எழுதுகிறவர்களெல்லாம் என்ன எழுதுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்! அவன் - அவள் - அது - புழு - பூச்சி - முடிந்து போச்சு என்று எழுதுகிறான். கேட்டால், புதுக் கவிதையினுடைய உச்சத்தைத் தொடுகிற மாதிரி! என்ன சொல்ல வருகிறான் என்று உனக்கும் தெரியவில்லை! எனக்கும் தெரிய வில்லை! என்னடா எழுதுகிறீர்கள்! பாருங்கள்! அவன் சொற்களை “இருண்டமேகம்.......... நுதலினாள்” ஒரு அழகான பாட்டில் அழகான சந்தத் தில் ஒருத்தியை வர்ணிக்கிறான் பாருங்கள்! இது குற்றாலக் குறவஞ்சி இது மாதிரி பிற்கால இலக்கியங்களில் சந்தங்கள் விருத்தங்களாக வந்துவிட்டன; கம்பனே கொண்டுவந்துவிட்டான் விருத்தம்! விருத்தம்! 96 வகை விருத்தத்திற்கும் அவன்தான் தலைவன்!

**“விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்”**

பாட்டை அந்த வேகத்திலேதான் போடுவான் கம்பன்! எத்தனை பாட்டு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க"

எப்படி வேண்டுமானாலும் பாடுவான்; அதுதான் கம்பனுடைய பெரிய சிறப்பு; எனவே, குறவஞ்சியில் அப்படி!

நாம நேரா இக்காலத்திற்கு வந்துவிடுவோம். புதினம், சிறுகதை, நாடகம், உரைநடை எல்லாம்! அறிஞர் அண்ணா அவர்கள் இதில் பெரிய முன்னோடி! உங்களுக்குத் தெரியாததல்ல! நிறையப் படித்திருப்பீர்கள்! எனக்கு ரொம்பப் பிடித்தது என்னவென்றால், இதற்கு முன்னாலே எழுதியவர்கள் பலபேர் அவன் ஒரு கலம்பகம் எழுதினால், இவன் ஒரு கலம்பகம்! அவன் ஒரு பள்ளு எழுதினான். இவன் ஒரு பள்ளு! அவன் ஒரு பிள்ளைத் தமிழ் எழுதினால் இவன் ஒரு பிள்ளைத் தமிழ் என்று இப்படி எழுதிக் கொண்டிருந்தார்கள்! அதைத்தான் பாரதியாரைப் பற்றிப் பாரதிதாசன் சொல்லும்போது சொல்வான்!

**கலம்பகம் பார்த்தொரு கலம்பகம் செய்தார்**
**பள்ளு பார்த்து பள்ளு செய்தனர்**

ஆனால் அதையெல்லாம் பாரதிதான் மாற்ற வந்தார் என்று சொல்வான்! எனவே, அண்ணா வந்து என்ன பண்ணினார்! தன்னுடைய வாழ்க்கைக் குறிக்கோள் என்ன? அரசியல் குறிக்கோள் என்ன? சமுதாயச் சீர்திருத்தக் குறிக்கோள் என்ன? சமுதாய சீர்திருத்தம் - இந்த சமுதாயச் சீர்திருத்தம் தோன்றும் படிதான் அவருடைய இலக்கியங்கள் எல்லாமே இருக்கும்; மறந்து விடக்கூடாது! கதைக்காகக் கதை எழுதாத அண்ணா! கதைக்காக, கதை சொல்லாத அண்ணா! கதைக்காக புதினம் எழுதாத அண்ணா! பார்வதி பி.ஏ. என்று எழுதுகிறார் என்றால் படித்த பெண்ணை எப்படியெல்லாம் பணக்காரர்களெல்லாம் வளைத்துப் போட முயலு கிறார்கள்! எப்படி இவளும் அவர்களை ஏமாற்றிப் புரட்சிக் காரியாக மாறுகிறாள்? இது பார்வதி பி.ஏ. இரங்கோன் ராதா என்று வரும்போது, இரங்கோன் ராதாவில் தருமலிங்க முதலியார், அக்காளைத் திருமணம் செய்து கொள்கிறார். பிறகு தங்கையையும் கணக்குப் பண்ணுகிறார்! அக்காளைத் திருமணம் செய்து கொண்டு விட்டார்! சொத்து போகாம லிருக்க தங்கையைக் கணக்குப் பண்ணுகிறார்! கணக்குப் பண்ணும் போது அக்காவை ஏதோ ஒரு காரணம் சொல்லி, அப்பா ஏதாவது பேய் பிடிச்சுப் போச்சு! அப்படி இப்படிச் சொல்லித்தான், தங்கையைக் கணக்குப் பண்ணிக் கட்ட முடியும்! ஊர்க்காரர்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமே! எனவே, அவளுக்கு பேய் பிடித்திருக்கிறது என்று சொல்வான்! அதில் உள்ளபடியே படத்தில் அண்ணா எழுதியது ஒருபுறம் இருக்கட்டும்! அண்ணா எழுதி, கலைஞர் வசனம் எழுதி எல்லோரும் நடித்தபோது, இந்த பானுமதியும் சிவாஜிகணேசனும் நடிப்பது உச்சம்! இரண்டுபேரும் பரிசு வாங்கினார்கள் அந்தக் காலத்தில்! அந்தப் படத்திற்காக! அவ்வளவு அருமையான நடிப்பு! அப்போது அண்ணா என்ன சொல்ல வருகிறார்! ஒரு பெண்ணை - அவளுக்குப் பேய் பிடித்திருக்கிறது என்று சொல்லிச் சொல்லியே அவளுடைய உண்மையான நலன்களை, அவளுக்கிருக்கின்ற உணர்ச்சிகளைக் கொல்கிறார்கள். அவளை அறையில் அடைத்துப்

போட்டு விடுவது பேய் பிடித்து விட்டது என்று! அந்த அறையில் ஏதாவது தேள் வந்து விட்டது என்று கத்தினால் கூட, ஐயா, பார்த்தீர்களா பேய் கத்துது, பேய் கத்துது! என்று வெளியிலிருந்து கத்துவதுதானே இது! இப்படிச் சொல்லிச் சொல்லி நாட்டை ஏமாற்றுவதாகத் தான் அந்தப் பாத்திரம்! மேலும், அண்ணா என்ன எழுதுகிறார்! "இரு பரம்பரைகள்" என்று சிறுகதை எழுதுகிறார்! அது நாய்க்குட்டி கதைதான்! பணக்காரன் வீட்டு நாய் என்ன பண்ணுது மகிழுந்தில் போகிறது! நம்ம ஊரு நாய் என்ன பண்ணுது தெருப் பொறுக்குகிறது! அப்போது இது ஒரு பரம்பரை! அது ஒரு பரம்பரை! அவர் பணக்கார நாய்; இவர் ஏழை நாய்! ஒரு நாள் வரும்போது இந்த ஏழைநாய் தெருப் பொறுக்கிக் கொண்டிருந்தது! அப்போது பணக்காரன் வரும்போது அதன் மேல் காரைவிட்டு ஏற்றி விட்டான். தெருப்பொறுக்கி போய்விட்டார்! பணக்கார நாய் வண்டியில் போகிறது, தெருப்பொறுக்கி நடுவிலே உயிரை விட்டுவிட்டார்! அப்படிச் சொல்லிவிட்டு, அண்ணா என்ன எழுதப்போகிறார். கதைதான் சிறுகதை அழகாக எழுதிவிட்டு என்ன எழுதுவார் என்றால், மனிதர்களில் மட்டுமல்ல, சகல ஜீவராசிகளிலும் இரு பரம்பரைகள் உண்டு! அதுதான் பணக்காரன்! அப்போது ஏற்கெனவே ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது; பொதுவுடைமைப் போராட்டம் Haves and Have nots இல்லோர் உள்ளோர் இந்தப் போராட்டம் நடக்கின்ற காலத்தில் அண்ணா எழுதுகிறார் அதை! எனவே, ஒரு பணக்காரருடைய ஆடம்பரம் எப்படி இருக்கும், ஒரு ஏழை வீட்டு இடம் எப்படியிருக்கும் என்பதற்கு எடுத்துக் காட்டு இந்தக் கதை! அப்படி நிறைய இருக்கிறது! ஆனால், "நீதிதேவன் மயக்கம் என்று எழுதினார் பாருங்க!" அப்போது மூட நம்பிக்கையிலிருந்து அகல வேண்டும் என்று நினைப்பார்! கம்பராமாயணம் சொன்னேன் பாருங்க! அதைத் திருப்பிப் பிடிப்பார்! கம்பன் என்ன சொல்கிறார் இராவணனைப் பற்றி!

அரக்கன் அதுவும் இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன் என்றான் கம்பன்! அவன் என்ன பண்ணுகிறான் ஒரு நீதி மன்றத்தை வைக்கிறான்! நீதி மன்றத்தில் கம்பனைப் பதில் சொல்லச் சொல்கிறான்! அப்போது கேட்கிறான். ரொம்ப ஜுரிகள் வந்திருக்கிறார்கள்! துணை அதிபதிகள் எல்லாம் வந்திருப்பார்கள்! யார் யாரு - பரசுராமர், விசுவாமித்திரர், எல்லோரும் வந்திருக்கிறார்கள். இவன் கேட்கிறான்! ஏன் ஐயா! நான் இரக்க மில்லாதவன் என்கிறார்கள்! நான் சீதையைத் தொட்டேனா! அவளுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டதா? ஒன்று மில்லையே! ஆனால் இந்த விசுவாமித்திரர் என்ன பண்ணினார்! எதற்கு மேனகையைத் திரும்பிப் பார்க்கிறார்! அப்புறம் எதற்குக் குழந்தை! சரி முடிந்துவிட்டது! இவன் குடும்பம் நடத்த வேண்டியதுதானே! அப்புறம் எதற்கு நான் பார்க்கவே யில்லை; எனக்குத் தெரியவே தெரியாது என்கிறான்! நீங்கள் அந்தப் படம் பார்த்திருப்பீர்கள்! விசுவாமித்திரர் இப்படிக் கை காட்டுவதை! என்ன சொல்வான்! இவன் அந்தப் பெண் மேல் இரக்க முள்ளவனா? இவன் இரக்கம் இல்லாமல் நடந்து கொள்கிறான்! அதை மட்டும் நீ எழுதமாட்டேன் என்கிறாய்! "ஆனால் நான் மட்டும் அரக்கனாக

இருப்பதால் எழுதுகிறாய் நீ! அடுத்து பரசுராமனைக் கேட்பான், பரசுராமன் என்ன பண்ணினான்? அவன் அம்மாவின் தலையை வெட்டினான்! ஏன்? அப்பா சொன்னார் என்று! ஏண்டா அப்பா சொன்னால் அம்மா தலையை வெட்டிவிடுவதா? இது என்னடா நியாயம்! ஆனால் அவரை அவதாரங்களில் ஒருவராகச் சேர்த்து விடுகிறீர்கள்! கேட்டால் மாபெரும் 9 வீரர்களில் ஒருத்தர் என்கிறீர்கள்! ஏண்டா அம்மா தலையை வெட்டியவன் வீரன்! நான் வந்து சீதையை அழைத்துக் கொண்டு வந்தேன்! அவன் போர்க்கோலம் பூண்டு திரும்பிக் கூப்பிட்டுக் கொண்டு போய்விட்டான்! இதில் ஒரு மரபாக இருந்தது; நான் ஏதாவது அரக்கத்தனமாக நடந்தேனா? என்று கேட்டுக் கேட்டுப் பார்த்தான். கடைசியில் நீதிதேவனுக்கே மயக்கம் வந்து நீதிதேவன் தீர்ப்புச் சொல்லாமல் மயங்கி விழுந்துவிட்டான்! இதில் உண்மையான நாடகம் என்ன தெரியுமா? என்றால் கதை சொல்லப்போகிறேன்! உண்மை யாக நடந்தபோது அண்ணா அவர்கள் இந்த நாடகத்தில் நடித்தார்! அவர்தான் வாதிடுகிறார்! இப்போது இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்தான் நீதி தேவனாக நடித்தவர், அவர்தான் மயங்கிக் கீழே விழுந்த வரும் கூட! சொல்லுவாங்க! அப்ப ஒரு கோணத்தில் சிந்தித்தால், அவர் சொல்வது நியாயம் தானே! அவர் சொல்லும் வாதம் நியாயந்தானே! இப்படி யெல்லாம் கடும் முயற்சி எடுத்து சமுதாய சீர்திருத்தங்களை ஏராளமாகத் தந்தவர் அண்ணா!

பிற்காலத்தில் பாரதியார்! எத்தனையோ பாடல்கள்! அதில் நயமானது "பாஞ்சாலி சபதம்" தான்! பாஞ்சாலி சபதத்தில் தான் பெரிய சிறப்பு! என்ன சிறப்பு நம்மைத் திட்டுவதற்காக ஒரு வாய்ப்பு! இப்போது நம்ம தெருவிலே 2 பேர் சண்டை போட்டுக் கொள்கிறார்கள்! இரண்டு பேரும் நம்ம ஊர்க் காரர்கள்! 2 பேரும் காசாங்காரர்கள்; பச்சை பாலன் போகிறார்! என்னப்பா நம்ம ஊர்க்காரர்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொள்கிறீர்களே! விலக்கி விடவேண்டும்! நல்லது! இல்லை ஏதோ ஒரு தெருவில் கோலாலம்பூரில் சண்டை போட்டுக் கொள்கி றார்கள்! பச்சை பாலனுக்கு இவர்கள் தெரியாமலிருந்தால், இரண்டு பேருக்கும் நடுநிலைமையோடு நின்று விலக்க வேண்டும் என்று நினைப் பார். அது நல்ல பழக்கம்தான்! ஆனால், நாடு அப்படி இருக்கிறதா? இதழில் செய்தி எப்படி வரும் தெரியுமா உங்களுக்கு! சண்டை விலக்கப் போனவன் குத்துபட்டுச் சாவு! யாரு! சண்டையை விலக்கப்போனவன்! சண்டை அடித்தவன் செத்திருந்தால் ஒருத்தன் தொலைந்தான் என்றால் விடலாம்! ஆனால், பாரதிக்கு என்ன கோபம் வருகிறது! துச்சாதனன் பாஞ்சாலியைத் தெருவில் இழுத்துக் கொண்டு வருகிறபோது, எல்லா மக்களும் நின்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக்காலத்தில் மட்டுமா? இப்போதும் கண்ணீர்தான் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்! உடனே எதிர்த்துவிட முடியாது; காவல்துறை எல்லாம் இருக்கிறது! இப்போதும் கதை அதுதான்! ஒன்றும் பெரிய அளவில் மாறிவிடவில்லை! உடனே தெருவில் இறங்கிப் புரட்சியா பண்ணிவிடப் போகிறார்கள்! பேசுவது தான்; ஆனால், அந்தக் காலத்தில் பாரதி கருதுகிற காலத்தில் அவன்

எழுதுகிறான். துச்சாதனன் வந்து தெருவில் பாஞ்சாலியை இழுத்து வருகிறான்! மக்களெல்லாம் கூடி நின்று கண்ணீர் விடுகிறார்கள்! ஐயோ! இப்படி இழுத்துக்கிட்டுப் போகிறார்களே! ஒரு பொம்பளையை இப்படிச் செய்யலாமா? கூந்தலைப் பிடித்து இப்படி இழுக்கலாமா? ஐயோ! இப்படி இருக்கிறதே! பார்க்கிறதுக்கு நல்லா இல்லையே! கேவலமா இருக்கிறதே! என்று எல்லோரும் புலம்புகிறார்கள்; கண்ணீர் விடுகிறார்கள்! அப்போது பாரதி பேசுகிறான்! ஏண்டா அவன் இழுத்துக் கொண்டு போகிறான்; நீங்களெல்லாம் சேர்ந்து என்ன பண்ணனும்! ஒட்டு மொத்தமாகத் திரண்டு அவனை இரண்டு மிதி மிதித்து, போடா என்று அவனை வெட்டிவிட்டு, அவளை அந்தப்புரத்தில் சேர்ப்பீர்களா? அதை விட்டுவிட்டுப் புலம்பிக் கொண்டிருக்கீறீர்களே! அதோட விட்டிருந்தால் நான் கூட விட்டிருப் பேன்! போட்டானே ஒரு போடு நமக்கு

"வீரமிலா நாய்கள்; எனக்குத் தெரிய எவனும் நம்மை இந்த அளவுக்குத் திட்டியது கிடையாது.

> **வீரமிலா நாய்கள். விலங்கா மிளவரசன்**
> **தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே**
> **பொன்னையவளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்**
> **நெட்டை மரங்களென நின்று புலம்பினர்**
> **பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"**
> **எவ்வளவு வேகம் இருக்கும்!**

கட்டளை அவ்வளவுதான்! எனவே, அந்த வேகத்தில் பாடுகிறான்!

பாரதிதாசன் பின்னால் வருகிறான்! அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது; சமூகசீர்திருத்தம்! தந்தை பெரியாருடைய கோட்பாடுகள்; அண்ணாவின் பக்கத்துணை! திராவிட இயக்கத்தினுடைய துணை இருந்ததனால், ஏராளமான இலக்கியங்கள்! அந்த இலக்கியங்களில் 'குடும்ப விளக்கு' அருமையாக எழுதுவான்! அது பெண்களுக் காகத்தான் எழுது கிறான்! அற்புதமான நூல்! எத்தனையோ எழுதியிருந்தாலும் அதிலும் உச்சக்கட்டத்தில் நிற்கிறது; பாராட்டப் படுவது - அதுவும், தமிழியக்கமும் தான்! அப்புறம் மற்றதெல்லா வற்றையும் பாராட்டுகிறோம்! அப்புறம் எங்கே வேண்டுமானாலும் பேசலாம்!

கவிமணியில் எனக்குப் பிடித்த பகுதி! "புத்தர்"! புத்தரைப் பற்றி உங்களுக்குத் தெரியும்! இந்த நாட்டிலே புத்தர் நன்றாக இருக்கிறார். தாய்லாந்தில் இருக்கிறார்; சிங்கப்பூரில் இருக்கிறார். ஜப்பானில் இருக்கிறார்; ஏனென்றால் நாங்கள் அங்கேயிருந்து அனுப்பிவிட்டு, பார்ப்பதற்காக வந்தோம்! வந்து, எப்படி இருக்கிறார் என்று பார்த்து விட்டு, அப்போதைக் கப்போது சொல்வேன்! நன்றாக இருக்கிறார்; ஒன்றும் பிரச்சினை இல்லை; தாய்லாந்தில் கூட ஒரு பெரிய சிலையாக இருக்கிறார்; பார்த்தேன்; ஒரு படம் பிடித்துக் கொண்டேன்! ஏதோ நம்மால் முடிந்தது! ஏனென்றால் அங்கே பிறந்த புத்தரை நாம் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, நாம் சுத்தமாகத் துடைத்து விட்டோம்; தமிழ்நாட்டிலே இல்லையே! தமிழ்நாட்டில் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை; ஆனால்

சமணத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இருக்கின்றனர்! ஆனால், ஒரு தாய் தன்னுடைய இறந்துபோன குழந்தையை உயிர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லிப் புத்தரிடம் கேட்கும் போது, "எந்த வீட்டில் இறப்பு நிகழ வில்லையோ அந்த வீட்டிலிருந்து கடுகு வாங்கி வா"! என்று சொல்வார்! அந்தக் கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும்! எந்த வீட்டில் இறப்பு நிகழவில்லை! இவள் எல்லா வீட்டிலும் கேட்பாள் இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஒருத்தன், போன ஆண்டுக்கு ஒருத்தன்! ஏதோ ஒன்று நடந்து கொண்டுதான் இருக்கிறது! எல்லா வீட்டிலும் அதுதான் நடக்கப் போகிறது! அப்படிச் சொல்லிவிட்டு அந்தக் குழந்தையைப் பார்த்து வருத்தப்படுவாள்! ஐயோ! இப்படிக் கிடக்கிறதே குழந்தை! அதுதான் கவிமணி, அந்தக்குழந்தை என்ன சொல்லுமாம்!

"பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூ சூட்டிடம்மா
என்னும் மொழிகள் இனி
எக்காலம் கேட்பேன் ஐயா!
வாய்முத்தம் தாராமல், மழலை உரையாடாமல்,
சேய்கிடத்தல் கண்டெனக்குச் சிந்தை தடுமாறுதய்யா?
அவ்வளவு பெரிய விரிவான நூலில் உருக்கமான இடங்கள்!"

கவிமணி இதுமாதிரி ஏராளமாகப் பாடியிருக்கிறார்!

பிற்காலக் கவிஞர்களில், இவர்களுக்கெல்லாம் அடுத்த தலைமுறை.

பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் எனக்கு மிகவும் பிடித்த பாவலர். தமிழைப் பற்றி எவ்வளவு உணர்ச்சியோடு பாடுகிறார் பாருங்கள்!

"இன்பத் தமிழ் மொழிக்கு என்றுமென் மூச்சும்
இனிய தமிழ்நாட்டைப் பற்றியென் பேச்சும்
அன்பின் பிணைப்பினுக்கு என்றன்கை வீச்சும்
அடங்காமல் என்றுமித் தரையில் நின்று ஓச்சும்".

இப்படி எத்தனையோ படைப்புகள் : சொல்லிக் கொண்டே போகலாம். எனினும் நேரத்தின் அருமை கருதி நிறைவு செய்கிறேன். அனைவர்க்கும் நன்றி! வணக்கம்.

ооо

---

தொடர்புக்கு

**முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**

**81, கார்மேகனார் தெரு, தல்லாகுளம்,**

**மதுரை - 625002 தொ.பே. 2568048**

**3/497, குப்பம் சாலை, கொட்டிவாக்கம்,**

**சென்னை - 600 041. தொ.பே. 24510505**



## முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பயிலும் காலத்திலேயே **பாவாணர்** மேல் பற்றுமை கொண்டு தம்மொத்த உணர்வாளரொடு தமிழியக்கமாக இயங்கி, **உ.த.க. அமைப்பு** உருவாகிய நாளில், அதன் பொறுப்பில் சிறந்து உ.த.க. வரலாற்றில் முத்துப் பதித்த முதல் மாநாட்டை அரசியல் மாநாடும் கொள்ளாப் பொலிவுடன் நடத்திக் காட்டி, பாவாணரால், 'இவர் எதிர்கால அமைச்சர்' என்னும் புகழ்ப் பட்டயம் பெற்றவர்.

- இரா.இளங்குமரன்

தமிழ்மண் பதிப்பகம்
2. சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை - 600 017